# உதயன்

31 °C|°F
தெளிவான
வானம்

சுடர் 30 கதிர் 263 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 31. ஞாயிற்றுக்கிழமை 16.08.2015

## முறைப்பாடுகள் பதிவு செய்ய விசேட இலக்கம்


கொழும்பு, ஓக. 16
நாளை நடைபெற உள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக பொது மக்கள் தமது முறைப்பாடுகளை குறுந்தகவல் மூலம் முன்வைப்பதற்காக சிறப்பு இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஈ.சி இடைவெளி ஈ.வீ இடைவெளி முறைப்பாடு தொடர்பான மாவட்டம் இடைவெளி பின்னர் முறைப்பாடு என்பவற்றை பதிவுசெய்து ( EC space EV space District Concerned space complaint ) 2343 என்ற இலக்கத்துக்கு அனுப்ப முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பக்கம் 21

## ஐ.தே.க.வின் ஆதரவாளர் சூட்டில் சாவு

மட்டக்களப்பு, ஓக. 16
வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஹு்தா பள்ளி ரயில் வீதிக்கு அருகில் நேற்றுச் சனிக்கிழமை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. நண்பகல் 12.15 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஐ.தே.கவின் ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஓட்டமாவடி பிறைந்துரைச்சேனை பகுதியைச் சேர்ந்த 37 வயதான ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளரான முகம்மட் அமீன் என்பவரே பக்கம் 21

# முக்கிய தேர்தல் நாளை

## வடக்கிலும் தெற்கிலும் பலமுனைப் போட்டி



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 16
கடந்த ஜனவரி 8ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாட்டின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடாளுமன்றத் தேர்தல் நாளை 17 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தல் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கிலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தேர்தலில் அதிகூடிய ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டினால் அடுத்த ஆண்டில் தீர்வு நிச்சயம் என்ற கோஷத்துடன் ஒரு தரப்பினரும், அவ்வாறு இல்லை என மற்றொரு தரப்பினரும் போட்டியிடுகின்றனர். இதனால் கடந்த காலங்களை விட வடக்கு - கிழக்கில் இம்முறை பல முனைப் பக்கம் 21

## இடம்பெயர்ந்தோர் வாக்களிக்க விசேட போக்குவரத்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 16
நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு வாக்களிப்பதற்காக இடம்பெயர்ந்தவர் களுக்குப் போக்கு வரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.செயலகம் தெரிவித்துள்ளது. இதன்படி உடுவில் பிரதேச செலயகத் திலிருந்து பஸ் சேவை பிரதேச சபைக்கு அருகில் ரொட்டி யாலடிச் சந்தி யிலிருந்து ஆரம்பித்து கே.கே.எஸ் வீதியூடாக மல்லாகம் பக்கம் 21

## அச்சப்படாமல் வாக்களியுங்கள்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16
யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை ஒரு போதும் எவராலும் கண்டுபிடிக்க முடியாது. அதனால் வாக்காளர்கள், தமக்கு விரும்பியவர்களுக்கு வாக்களிக்க முடியும் என்று, யாழ்.மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான நா.வேதநாயகன் தெரிவித்தார். யாழ்.மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தேர்தலில் யாருக்கு வாக்களிக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள பக்கம் 21

## இரு கட்டங்களாக தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 16
நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் இரண்டு கட்டங்களாக வெளியிடப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. முதலில் தபால்மூல வாக்கு முடிவுகள் வெளியிடப்படவுள்ளன. இதனையடுத்து, தொகுதிவாரியாகத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. இதன் பிரகாரம், இம்முறை தேர்தலின் முதலாவது தபால்மூல வாக்கு முடிவை நாளை இரவு 11 மணி முதல் நள்ளிரவுக்குள் வெளியிட முடியும் என்றும் பக்கம் 21

## ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் வாக்களிக்க முடியும்

யாழ்ப்பாணம், ஓக.16
நாளை இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை கிடைக் காவிட்டாலும், ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட ஆவணத்துடன் சென்று வாக்களிக்க முடியும் என்று, யாழ்.மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான நா.வேதநாயகன் தெரிவித்தார். நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் தபால்மூலம் விநியோகிக்கப்பட்டது. வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாத வர்கள், ஆளடையா ளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் சென்று வாக்களிக்க முடியும். கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது பயன்படுத்தப்பட்ட 2014 ஆம் ஆண் பக்கம் 21

## வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் பெற்றுக் கொள்க

யாழ்ப்பாணம், ஓக. 16
வாக்காளர் அட்டையை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள், உங்கள் பெயர் எந்தக் கிராமத்தில் பதியப்பட்டுள்ளதோ அந்தப் பகுதி அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்று அதனைப் பெற்றுக் கொள்ளுங்கள். நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிவரை அஞ்சல் அலுவல கத்தில் அதனைப் பக்கம் 21

## மாவையின் வீட்டுக்கு இரவு குண்டு வீச்சு



யாழ்ப்பாணம், ஓக. 16
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டத் தலைமை வேட்பாளரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதி பக்கம் 21

## நாளை நேரத்துடன் சென்று வாக்களிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக.16
வாக்குரிமை உள்ள ஒவ்வொருவரும் நாளைய தினம் நேரத்துடன் தமது வாக்களிப்பை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ள, யாழ்.மாவட்ட அரச அதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான நா.வேதநாயகன், மக்களின் வாக்களிப்பை வலியுறுத்தி இன்று தொடக்கம் நாளை மாலை 3 மணி வரை ஒலிபெருக்கியூடான அறிவிப்புக்களும் செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்தார். நாடாளுமன்றத் தேர்தல் நாளை இடம்பெற பக்கம் 21

## சர்வதேச கண்காணிப்பாளர் 172 பேர் இலங்கை வருகை

கொழும்பு, ஓக. 16
நாளை நடைபெறவுள்ள 8ஆவது நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக சர்வதேச கண்காணிப்பாளர்கள் 172 பேர் இலங்கை வந்துள்ளனர். ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்பாளர்கள் 80 பேரும், தெற்காசிய தேர்தல் அதிகாரிகள் சங்கத்தின் 29 கண் காணிப்பாளர்களும், ஆசிய தேர்தல் அதிகாரிகள் ஒன்றியத்தின் 3 கண்காணிப்பாளர்களும், பொது நலவாய நாடுகள் அமைப்பின் 15 கண்காணிப்பாளர்களும் இலங்கை வந்துள்ளனர் என்று தேர்தல்கள் செய பக்கம் 21




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



இந்தியாவின் 69 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் எ.நடராஜனின் வாசஸ்தலத்தில் நேற்று சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் துணைத் தூதருடன் தூதரக அதிகாரிகளும் பங்கேற்றனர். (த-20)

## கூட்டெரு உற்பத்தித் திட்டம் தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 16

நாடு முழுவதும் கூட்டெரு உற்பத்தி வேலைத்திட்டத்தை மேற்கொண்டு முன்னேற்றம் அடைவது தொடர்பான விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு மகாவலி நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பாலிசரு கருத்திட்ட நிதி உதவியின் கீழ் நாடளாவிய ரீதியில் மாகாண ஆட்சிப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தை சிறப்பான முறையில் மேற்கொள்வது, பெரிய பிரச்சினையாகவுள்ள கழிவுப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது போன்றவை தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி கூட்டெரு உற்பத்தி அலகுகளை வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்கதாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளர் நிமல் ரூபசிங்க, மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபைத்தலைவர் லால் மேர்வின் தர்மசிறி, பணிப்பாளர் நாயகம் கே.எச்.முத்துக்குடா ஆராய்ச்சி மற்றும் பிலிசரு திட்டப் பணிப்பாளர் ஆர்.வெல்பொல ஆகியோர் கலந்து கொண்டனர். (த-ரி5)

# தேர்தல் ஆணையாளரால் வீடுகளின் மதில்கள் தப்பின

தென்மராட்சி, ஓக. 16

பொதுத் தேர்தலின்போது கடும் நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டதால் தமது வீட்டு மதில்கள் இந்த முறை காப்பாற்றப்பட்டதாக மதில் உரிமையாளர்கள் மகிழ்ச்சி தெரிவிப்பதுடன் தேர்தல்கள் ஆணையாளருக்கு நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு முறை தேர்தல் வேளையிலும் கட்சி வேட்பாளர்களின் துண்டுப் பிரசுரங்களை ஒட்டவும், தேர்தல் தொடர்பான விபரங்களை எழுதவும் வீதிகளில் காணப்பட்ட மதில்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் விதிமுறைகளைத் தேர்தல்கள் திணைக்களத்தினர் கடுமையாக நடைமுறைப்படுத்தியதால் மதில்களில் சுவரொட்டிகளோ தேர்தல் வாக்குறுதிகளோ வேட்பாளர்களின் பெயர்களோ காணப்படவில்லை. ஒரு சில இடங்களில் தேர்தல் சுவரொட்டிகள் காணப்பட்ட போதிலும் மறுநாள் மதில் உரிமையாளர்களால் அவை அகற்றப்பட்டன.

கடந்த தேர்தல்களில் தேர்தல் சுவரொட்டிகள் காணப்பட்ட மதில்கள் கழிவு ஓயிலால் நிறம் மாற்றப்பட்ட நிலையில் தேர்தல் முடிந்த பின்னர் மதில்களைப் புனரமைக்கும் பணிகளை அவற்றின் உரிமையாளர்கள் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது

பொது மக்களின் மதில்களை பரப்புரைக் களமாகப் பயன்படுத்தாமைக்குத் தேர்தல்கள் ஆணையாளரின் கடுமையான நடவடிக்கையே காரணம் என்பதால் அவருக்கு நன்றியைத் தெரிவிப்பதாக மதில் உரிமையாளர்கள் தெரிவித்தனர். (த-9)

## சிங்கள மொழி நூல் வெளியீட்டு விழா

கொழும்பு, ஓக. 16

நன்நெறி சமூகத்திலிருந்து மைத்திரி ஆட்சிக்கு என்ற சிங்கள மொழி நூல் வெளியீட்டு விழா கடந்த 11ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் அரசியல் சபை உறுப்பினர் ராஜா உஸ்வெட்ட கெய்யாவால் எழுதப்பட்ட இந்த நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டு உரையை பேராதனைப் பல்கலைக்கழக அரசியல்துறை பேராசிரியர் வீ.எம். நவரத்தின பண்டா நிகழ்த்தினார். நூலின் முதற்பிரதியை ஜனாதிபதி பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கலந்து கொண்டார். (த-ரி3)

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உலருணவு பெறுவதில் சிரமம்



வவுனியா, ஓக. 16

வவுனியா மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மாருக்கு வழங்கப்பட்டு வரும் உலர் உணவு விநியோகத்தில் சீர்கேடு இடம்பெற்று வருவதுடன் கர்ப்பிணிகள் அங்கும் இங்குமாக அலைய வைக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுச் சனிக்கிழமை காலை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்துக்கு முன்னால் தமக்கான உலர் உணவுப் பொருள்களைப் பெறுவதற்காகப் பெருமளவான தாய்மார்கள் காலை 6 மணியிலிருந்து காத்திருந்தனர். எனினும் உலர் உணவை விநியோகம் செய்யும் அதிகாரிகள் முற்பகல் 10 மணிக்குப் பின்பே தமது கடமைகளை ஆரம்பித்துள்ளனர்.

முதலில் பதிவை மேற்கொண்டதுடன் பொருள்களை ஏற்றிவரும் வாகனம் வந்ததும் பொருள்கள் விநியோகம் பின்னர் இடம்பெறும் என அவர்கள் கூறினர். கடந்த வாரமும் இவ்வாறு பதிவை மேற்கொண்டதுடன் தனியார் விற்பனை நிலையத்தில் குறித்த உலருணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிகாரிகள் பணித்துள்ளனர்.

பதிவை மேற்கொள்வது ஒரு இடம். பொருள்களை பெற்றுக்கொள்வது வேறு ஓரிடம். அத்துடன் மாதாந்தம் வழங்கப்படவேண்டிய உலர் உணவுப் பொருள்கள் 2,3 மாதங்கள் ஒன்றாகச் சேர்த்தும் வழங்கப்படுவதாகக் கர்ப்பிணித் தாய்மார்கள் கூறினர்.

ஓரிடத்தில் பதிவை மேற்கொண்டு பொருள்களை விநியோகம் செய்தால் தடையின்றி பெற்றுக் கொள்ள முடியும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த)

## இரவில் புகுந்த திருடரை நீதிமன்றில் அடையாளம் காட்டிய வீட்டுக்காரர்

இரவு வேளையில் வீட்டினுள் புகுந்து திருட்டில் ஈடுபட்ட மூவரையும் அடையாளம் காட்டினார் வீட்டுக்காரர்.

கடந்த முதலாம் திகதி வரணி வடக்கில் உள்ள வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட மூவரைத் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்து தங்க மோதிரம் மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது பெண்கள் கூக்குரலிடவே அயலவர்கள் ஓடிவரத் திருடன் ஒருவரால் கைவிடப்பட்டுச் சென்ற சேர்ட் மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்துப் பொலிஸாரின் மோப்ப நாய் மூலம் அப்பகுதியைச் சேர்ந்த மூவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து கடந்த நான்காம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். இந்த மூவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டபதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ள மாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதன் பிரகாரம் கடந்த 13ஆம் திகதி நீதிமன்ற வளாகத்தில் உள்ள கட்டடத்தில் அடையாள அணிவகுப்பு பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் இடம்பெற்றபோது இவர்களை வீட்டுக்காரர் அடையாளம் காட்டினார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மூவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-9)

## மாருதப் புரவீகம் மலருக்கான ஆக்கம் கோரல்

யாழ்ப்பாணம், ஓக. 16

வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் கலாசார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வெளியிடப்படவுள்ள மாருதப் புரவீகம்11 பண்பாட்டு மலருக்கான ஆக்கங்களை வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் ஜே. சிறிமோகனன் கேட்டுள்ளார்.

இந்த பண்பாட்டுமலர் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி2)

## போதையால் வந்த 80 மணித்தியாலய சமூகப் பணி

தென்மராட்சி, ஓக. 16

மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட இருவரை 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் இருவரையும் எச்சரிக்கை செய்து தலா 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்து 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயச் சீர்திருத்தப்பிரிவில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

## வாக்களிப்பு நிலையங்களுக்கு நிகாப் அணிந்து செல்லலாம்

கொழும்பு, ஓக. 16

முஸ்லிம் பெண்கள் நிகாப் அணிந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல முடியும். இருப்பினும் ஆள் அடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்காகப் பெண் அதிகாரிகள் மூலம் நிகாப் அணிந்துள்ளவர்கள் சோதனைக்குட்படுத்தப்படுவர் எனத் தெரிவித்துள்ளார் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட்.

நிகாப் அணிந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல முடியாது என்று வெளிவந்த வதந்திகளுக்குப் பதிலளிக்கும் முகமாகவே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சமூக ஊடகங்களில் நிகாப் அணிந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வது தொடர்பில் தவறான பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறித்த பரப்புரைகளை மேற்கொள்ளும் சமூக ஊடகங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முஸ்லிம் பெண்கள் நிகாப் அணிந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லமுடியும். ஆயினும் அங்கே ஆள் அடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்காகப் பெண் அதிகாரிகள் மூலம் நிகாப் அணிந்துள்ளவர்கள் பரிசோதிக்கப்படுவார்கள் என்றார். (த-10)

## 4 சாரதிகளுக்கு அபராதம்


தென்மராட்சி, ஓக.16

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்திய நான்கு சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 26 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு 10 அயிரத்து 500 ரூபாவும், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 5 ஆயிரத்து 500 ரூபாவும், அளவுக்கு அதிகமான ஆள்களை வாகனத்தில் ஏற்றிச் சென்ற சாரதிக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுவில் நேற்றுப் பக்தர் வெள்ளம்





மன்னார், ஓக. 16
மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாதத் திருவிழா நேற்றுச் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு பாப்பரசரின் இலங்கைக்கான தூதுவர் பேராயர் நியுயான் வன் டெட் ...ண்டகை தலைமையில் இடம்பெற்றது.
பாப்பரசரின் தூதுவருடன் கண்டி மறை மாவட்ட ஆயர் வியன்னி பெர்னாண்டோ, குருநாகல் மறை மாவட்ட ஆயர் ஹறால்ட் அன்ரனி பெரேரா, காலி மறைமாவட்ட ஆயர் றேமன்ட் கிங்சிலி விக்கிரமசிங்க, ஓய்வு பெற்ற திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆகியோர் இணைந்து திருவிழா கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.
திருவிழாத் திருப்பலி தமிழ், சிங்களம், ஆங்கிலம், இலத்தீன் ஆகிய நான்கு மொழிகளிலும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம்பெற்றது.
நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் மடுத்திருத்தலத்துக்கு வருகை தந்திருந்தனர்.
பக்தர்களின் நலன் கருதி மதவாச்சியில் இருந்து மடுவுக்கு விசேட ரயில் சேவைகளும் இடம்பெற்றன.
(த-56)

## தேர்தல் பிரசுரம் விநியோகித்த இருவர் கைது

தென்மராட்சி, ஓக 16
பிரசுரித்த அச்சகம் மற்றும் பிரசுரித்தவரின் பெயர் குறிப்பிடாத தேர்தல் துண்டுப்பிரசுரங்களை வாகனத்தில் சென்று விநியோகித்த இருவரை சாவகச்சேரி பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.
நாவற்குழி மகா வித்தியாலயத்தை அண்டிய பகுதிகளில் தேர்தல் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த இருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இந்த இருவரையும் நேற்று சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான மருத்துவர் சிவசங்கரின் பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் விநியோகித்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.
(த-9)

## மூத்த பிரசைகளுக்கான கொடுப்பனவு வழங்கல்

அச்சுவேலி ஓக.16
70 வயது மூத்த பிரசைகளுக்கான 2 ஆயிரம் ரூபா ஓகஸ்ட் மாதத்துக்கான கொடுப்பனவு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நேற்றுச் சனிக்கிழமை முதல் வழங்கப்படுகின்றது.
இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு நேற்றுச் சனிக்கிழமை தொடக்கம் அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்படுகின்றது. ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவு நேற்றில் இருந்து 22ஆம் திகதி சனிக்கிழமை வரையான 7 தினங்களுக்கு அஞ்சல் அலுவலகங்களின் கடமை நேரத்தில் வழங்கப்படவிருப்பதால் சம்பந்தப்பட்ட பயனாளிகளை உரிய வேளையில் பெற்றுக்கொள்ளுமாறு வலிகிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார்.
(த-11)

# 6 இடங்களில் தேர்தலன்று வன்முறை இடம்பெறலாம்

### கபே அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 16
தேர்தல் தினமன்று வன்முறைகள் அல்லது விதிமுறை மீறல்கள் இடம்பெறும் என அம்பாந்தோட்டை, புத்தளம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.
நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரைகள் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந் துள்ளன.
நாடாளுமன்றத் தேர்தல் சட்ட விதிகளின் படி தேர்தலுக்கு இரு நாள்களுக்கு முன்பாக அனைத்துப் பிரசாரங்களும் முடிவடைந்துள்ளன.
தேர்தல் தொடர்பில் கபே அமைப்பின் தேசிய அமைப்பாளரான அஹமட் மனாஸ் மக்கீன் கூறுகையில்,
கடந்த மூன்று நாள்களாக அமைதியான முறையில் அரசியல் கட்சிகளும் ஆதரவாளர்களும் தேர்தல் செயல்பாடுகளில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் தேர்தல் தினமன்று வன்முறைகள் அல்லது விதி மீறல்கள் இடம்பெறும் என அடையாளம் காணப்பட்டுள்ள அம்பாந்தோட்டை, புத்தளம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் கூடுதல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த உத்தேசித்துள்ளோம். குறித்த இடங்களில் கூடுதல் பொலிஸாரைப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்த தேர்தல் ஆணையாளர் இணக்கம் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்டார்.
இதற்கிடையில் தேர்தல் வன்முறைகள் அல்லது விதி மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெறுவதற்குத் தேர்தல் செயலகத்தினால் இம்முறை குறுஞ்செய்தி அனுப்புவதற்கான இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முறைப்பாடு கிடைத்தவுடன் தேர்தல் செயலகத்தினால் அதனைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். அத்துடன் வெள்ளிக்கிழமை தொடக்கம் தேர்தல் சட்ட விதிகளை மீறுபவர்களுக்குப் பொலிஸ் பிணை வழங்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். (த-10)

## மின்சாரம் தாக்கி பெண் சாவு

வவுனியா, ஓக. 16
வவுனியா தாலிக்குளம் பகுதியில் கடந்த 14 ஆம் திகதி மாலை 4மணியளவில் மின்சாரம் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
வவுனியா தாலிக்குளம் பகுதியில் வசித்து வந்த வேலாயுதம் ஜெயராணி என்ற 54 வயதுடைய குடும்பப் பெண்ணே மின்சாரம் தாக்கி உயிரிழந்தவராவார். அயல் வீட்டுக்குச் செல்லும் மின்சாரக் கம்பி அறுந்து வேலியில் விழுந்திருந்தவேளை குறித்த பெண் கம்பி மீது கை வைத்ததால் மின்சாரம் தாக்கி வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(த)



## பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16
பொது நலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் யாழ். ச...வாதயத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.
நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைக் கண்காணிக்கும் பணிக்காகத் தேர்தல் ஆணையாளர் சர்வதேசக் கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இதற்கமைவாகத் தேர்தல்கள் தொடர்பிலான சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.
தாய்லாந்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சுயாதீன தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பு உள்ளிட்ட சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே இங்கு வந்துள்ளனர். இந்த நிலையில் தற்போது பொது நலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களும் வருகை தந்துள்ளனர்.
குறித்த குழுவின் பிரதிநிதிகள் யாழ்.மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு நேற்று இங்கு வந்திருந்தனர். லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பொது நலவாய நாடுகளின் தேர்தல்கள் கண்காணிப்புக் குழுவின் லிண்டா மற்றும் லோறன்ஸ் உள்ளிட்ட பிரதிநிதிகள் சர்வோதயம் அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் யுகேந்திரனுடன் கலந்துரையாடினர்.
இந்தச் சந்திப்பில் யாழில் தேர்தல்கள் தொடர்பில் இதுவரை இடம்பெற்றிருக்கும் வன்முறைகள், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.
(த-10)

## ஜயவர்த்தனபுரப் பல்கலையின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக. 16
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடங்கள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குத் தெளிவுபடுத்தும் விசேட சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.
தொழிற்கல்விப் பாடநெறியை அறிமுகப்படுத்தும் நாட்டின் செயற்றிட்டத்தின் கீழ் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வசதிகளை விரிவுபடுத்தி இந்தத் தொழில்நுட்ப பீடங்கள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது.
இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி எதிர்கால உலகின் தொழிற்சந்தையை விளங்கிக் கொண்டு நாட்டின் தேவைக்கேற்ப பிள்ளைகளின் கல்வி வசதிகளை உயர்த்தும் அரசின் பொறுப்பை நிறைவேற்றும் வகையில் மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்றிட்டத்தை மதிக்கிறேன் – என்றார்.
இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.அபயக்கோன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் டி சில்வா, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.
(த-ரி6)

## ஓட்டோவால் மோதி மைல் கல்லை உடைத்தமைக்கு சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி ஓக. 16
வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நடப்பட்டிருந்த மைல் கல்லுடன் மோதிச் சேதப்படுத்திய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதிக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மைல் கல்லை உடைத்தமைக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு இழப்பீடாக 14 ஆயிரத்து 411 ரூபா 33 சதம் செலுத்துமாறும் சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.
கடந்த ஜூன் மாதம் தனங்களப்பு பகுதியில் ஆபத்தான நிலையில் வாகனத்தைச் செலுத்தியமை, விபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் வாகனத்தைச்செலுத்தியமை, அரச சொத்துக்குச் சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து முதல் இரு குற்றங்களுக்கு தலா 3 அயிரம் ரூபா வீதம் 6 ஆயிரம்ரூபா அபராதம் விதித்ததுடன் மூன்றாவது குற்றத்துக்காக இழப்பீடும் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (த-9)

## 305 பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை

தென்மராட்சி, ஓக 16
தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வாரம் 305 பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அந்தந்தப் பிரிவுப் பொது சுகாதார பரிசோதகர்களின் வழிகாட்டுதலில் அறிவிக்கப்பட்ட நிலையங்களில் பொதுமக்களால் கொண்டுவரப்பட்ட பெண் நாய்களுக்குக் கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளபட்டதென தெரிவிக்கப்பட்டது.
(த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாக்களிப்பதைத் தவிர்க்காதீர்; அது உங்கள் பெரும் கடமை

நாளை விடிந்ததும், தற்போது நாட்டில் நடைமுறையிலுள்ள அரசமைப்பின் கீழ், நாடாளுமன்றத்துக்கான எட்டாவது பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. நாளை காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகும் வாக்களிப்பு மாலை நான்கு மணிவரை இடம்பெறும்.

நாடு முழுவதிலுமுள்ள இருபத்தி இரண்டு தேர்தல் மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு கோடி ஐம்பது லட்சத்து நாற்பத்து நாலாயிரத்து தொண்ணூறு வாக்காளர்கள் தமது பொன்னான வாக்குகளைப் பயன்படுத்தத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்கெடுப்பின் பிரகாரம் தெரிவு செய்யப்படும் 196 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் 29 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் இருந்து மொத்தம் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். ஒருவர் தேசியப் பட்டியலில் சேர்க்கப்படுவார்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் இருந்து மொத்தம் ஆறு பேர் தெரிவு செய்யப்படுவர். ஒருவர் தேசியப் பட்டியலில் சேர்க்கப்படுவார்.

வடக்கில், யாழ்.தேர்தல் மாவட்டத்திலும் சரி, வன்னி தேர்தல் மாவட்டத்திலும் சரி வாக்காளர் மத்தியில் வாக்களிப்பில் அக்கறையும் ஆர்வமும் குறைவாகவே உள்ளதாக பொதுவான கருத்தும், அதனை ஊதிப் பெருப்பிக்கும் தன்மையும், அண்மைய நாள்களில் மேல் எழுந்துள்ளன.

வாக்காளர்களாகிய நீங்கள் அவற்றை நம்பி, உங்களுக்கு உரிய கடமையில் இருந்து தவறிவிட மனம் கொள்ளக் கூடாது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 210 வேட்பாளர்களும், வன்னி மாவட்டத்தில் 252 வேட்பாளர்களும் போட்டியிடுகிறார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில் பதினைந்து அரசியல் கட்சிகளும், ஆறு சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 21 குழுக்களின் வேட்பாளர்கள் ஊதிப் பெருத்துள்ளார்கள். வன்னி மாவட்டத்தில் 18 அரசியல்கட்சிகளும் 10 சுயேச்சைக் குழுக்களுமாக 28 குழுக்களின் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அதனை நாடி, உங்களது பெறுமதியான வாக்கை கைகழுவ கிஞ்சித்தும் நினைக்காதீர்கள். அது உங்களது பெரும் சொத்து என்ற உணர்வுடன், வாக்களிப்பு நிலையத்துக்குத் தவறாது சமுகமளியுங்கள். உங்களுக்கு உள்ள பொறுப்பை நிறைவேற்றுங்கள்.

போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவர் குறித்தும் சமன் செய்து சீர்தூக்கி உங்களுடைய சொந்த (Personal) முடிவைக் கைக்கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்து வசிக்கின்ற வாக்காளர்கள் தத்தமக்குரிய வாக்களிப்பு நிலையங்களில் தமது வாக்குகளைச் செலுத்துவதற்கு வசதியாக யாழ்.மாவட்டச் செயலகத்தினால் இலவசப் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை காலை 7 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை இந்தப் போக்குவரத்துச் சேவைகள் கரவெட்டி, கோப்பாய், பருத்தித்துறை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று திரும்பும் வகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இந்த வாய்ப்பை தவறவிடாது பயன்படுத்துங்கள்.

வாக்காளர்கள், தமது பாதுகாப்புத் தொடர்பாக எவ்வித அச்சமோ தயக்கமோ இன்றி தமது உரிமையான வாக்களிப்பை மேற்கொள்ளத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையாளர் இந்தமுறை மிகச் சிறப்பாக ஒழுங்கமைத்துள்ளார். எனவே, உங்களது உரிமை என்பதற்கும் மேலாக தவிர்க்கமுடியாத, தவிர்க்கக் கூடாத ஒரு கடமையாகவும் கருதி நீங்கள் உங்களது வாக்குகளைப் பதிவு செய்தாக வேண்டும். அதற்கான மன வைராக்கியத்துடன் நாளைய தேர்தலில் வாக்களிக்க வேண்டியது மிக முக்கியம், இன்றியமையாதது.

தேர்தலில் வாக்களிக்கும் வாய்ப்பு அடிக்கடி வந்து போவதில்லை. ஆசை அருமையாக ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான், உங்கள் உள்ளக் கதவைத் திறக்கிறது. நாட்டின், பிரதேசத்தின் வளர்ச்சிக்கு நீங்கள் உதவக் கூடிய வாய்ப்பு எப்போதும் கிட்டுவதில்லை. அதனை மனதில் ஊன்றி விதையுங்கள். விளைவு, வாக்குரிமையின் பெறுமதி உங்களுக்கு மனதார விளங்கும், புரியும்.

# வாக்கெடுப்புப் பணியாளர் மத்திய கல்லூரியில் கூடுவர்

### சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு இன்று கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 16

நாடாளுமன்றத் தேர்தலில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலராக நியமிக்கப்படவுள்ளவர்களுக்கான நியமனக் கடிதம் இன்று காலை 7.30 மணிமுதல் யாழ்.மத்திய கல்லூரியில் உள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் த. அகிலன் அறிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் உதவித் தேர் தல் ஆணையாளர் த.அகிலன் மேலும் தெரிவிக்கையில்,

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலராக நியமிக்கப்படவுள்ளவர்கள் தங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அடையாள அட்டையுடன் காலை 7.30 மணிக்குப் பிந்தாமல் யாழ்.மத்திய கல்லூரிக்கு வருகை தர வேண்டும்.

இன்று காலை சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கான முறையான நியமனக் கடிதம் வழங்கப்படும்.

அத்துடன் வாக்கெடுப்பு நிலையம், பஸ் இலக்கம் என்பவற்றுடன் வாக்கெடுப்பு நிலையத்தில் பணிபுரியவிருக்கும் அலுவலர்கள் விவரம், வாக்குப் பெட்டி பெறுதல் ஒப்படைத்தல் தொடர்பான விவரங்களுடன் பொலிஸார், வாக்கெடுப்பு நிலையத்துக்குச் செல்வதற்கான வரைபடம் என்பன இன்று வழங்கப்படும்.

இதேவேளை இன்று மாலை மூன்று மணிக்கு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் தலைமையில் வாக்கெடுப்பு நிலையத்தில் தனது வாக்கெடுப்புப் பணியாளர்களுடன் ஒத்திகையில் ஈடுபடுதல் வேண்டும். உரிய நேரத்துக்கு வாக்கெடுப்புப் பணியாளர்கள் அனைவ[ரும்] நிலையத்துக்குச் செல்ல வேண்டும். வாக்களிப்பு நிலையத்தைக் கிராம அலுவலர்கள் சகல வசதிகளையும் ஒழுங்குபடுத்தல்களையும் மேற்கொண்டு உதவுவார் – என்றார். (த-50)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் உர மானிய நட்டஈடு வழங்கல்



முல்லைத்தீவு, ஓக 16

ஒட்டசுட்டான் கமநல சேவைகள் நிலையத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2014 மற்றும் 2015 பெரும் போகத்தில் பெருமழையால் ஏற்பட்ட வெள்ள அழிவில் பாதிக்கப்பட்ட கமக்காரர்களுக்கான உரமானியக் காப்புறுதியின் கீழான உர மானிய நட்டஈடு வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நட்டஈட்டை முல்லைத்தீவு கமநல சேவைகள் உதவி ஆணையாளர் ஆர். விஜயகுமார் தலைமையில் கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபை பதில் உதவிப் பணிப்பாளர் பு. பூரணச்சந்திரன் வழங்கினார். இந்நிகழ்வில் 73 கமக்காரர்களுக்கு 4லட்சத்து 92ஆயிரத்து 911ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டது. (த)

## ஆழியவளை பஸ்களில் அதிகளவு பொருள்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து ஆழியவளை செல்லும் தனியார் பஸ்களில் அதிக அளவு வர்த்தக நிலையப் பொருள்கள் ஏற்றிச் செல்வதால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பஸ்ஸின் பின் ஆசனங்களில் ஆழியவளை, கட்டைக்காடு, தாளையடி போன்ற இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குரிய பொருள்களைச் சாவகச்சேரி, பளை, கொடிகாமம் போன்ற இடங்களில் இருந்து ஏற்றிச் செல்வதால் பஸ்ஸில் பயணிக்கும் பயணிகள் ஆசனங்களில் பொருள்கள் வைக்கப்பட்டிருப்பதால் நீண்ட தூரத்துக்கு நின்ற வண்ணம் பயணிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

நேற்றுமுன்தினம் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவிட்டு பஸ்ஸின் பின்பக்க வாசலுக்கு அருகில் அமர்ந்திருந்த பயணி மீது பின் ஆசனத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த தேங்காய் மூடை வீழ்ந்துள்ளது. அருகில் நின்ற பயணிகளால் அவர் காப்பாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையப் பொருள்களை அதற்குரிய வாகனங்களில் கொண்டு செல்வதற்குப் பதிலாகப் பயணிகள் வாகனத்தில் அவற்றை ஏற்றிச் செல்வதால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்த மார்க்கத்தில் ஓரிரு பஸ்களே சேவையில் ஈடுபடுவதால் பெரும்பாலான பயணிகள் தனியார் மற்றும் இ.போ.ச. பஸ்களை போக்குவரத்து சேவைக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக தனியார் பஸ் சங்கப் பிரதிநிதிகள் கண்காணித்துப் பயணிகள் வாகனத்தில் வர்த்தக நிலையப் பொருள்கள் எற்றுவதைத் தடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (த-9)

## போலியான விவரங்களுடன் உணவுப் பண்டம் விநியோகம்

### உற்பத்தியாளர்களுக்கு அபராதம்

தென்மராட்சி, ஓக. 16

போலியான விபரங்களுடன் உணவுப் பொருள்களை வியாபார நிலையங்களுக்கு விற்பனைக்கு வழங்கிய உற்பத்தியாளர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

மக்களை தவறான வழியில் இட்டுச் செல்லக்கூடியவாறு பல பொதுப் பெயர்களில் சுட்டுத்துண்டிடப்பட்ட மிக்ஸர் பைக்கற்றுக்களைக் கொண்ட அட்டையை வியாபார நிலையத்துக்கு வழங்கியமை, உணவுப் பொருள்களின் சேர்மானப் பொருள்களின் முழுமைய[ான] பட்டியல் அச்சிடப்படாத மிக்ஸர் பைக்கற்றுக்களைக் கொண்ட அட்டையை வியாபார நிலையங்களுக்கு வழங்கிமை ஆகிய குற்றங்களுக்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உற்பத்தியாளர்களுக்கு எதிராகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக் கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதவான் உற்பத்தியாளருக்கு தலா 10 ஆயி ரம் ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபாவும், மிக்ஸர் எனப் பொதி செய்யப்பட்ட பைக்கற்றில் மரவள்ளிப் பொரியல் விற்பனைக்கு வழங்கி[ய] உற்பத் தியாளருக்கு 10 ஆயி[ர]ம் ரூபாவும், திகதி காலாவதியான பிஸ்கட் பைக் கற்றுக்களை விற்பனைக்கு வைத்திருந்த வரணி வர்த்தகருக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார். (த-9)

## பொது இடத்தில் சண்டை மூன்று பேருக்கு அபராதம்

தென்மராட்சி ஓக. 16

பொது இடத்தில் சண்டை பிடித்து மக்களுக்கு இடைஞ்சல் விளைவித்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டதையடுத்து அபராதம் விதித்தார்.

இதேவேளை, மது போதையில் பொது இடத்தில் அசிங்கமாக நடந்து கொண்ட ஒருவரை எச்சரிக்கை செய்த நீதிவான் 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஸ்கெலியா நீர்தேக்கத்தில் நீரில் மூழ்கி இரு இளைஞர்கள் பலி

நுவரெலியா, ஓக. 16

மஸ்கெலியா – மவுஸாக்கலை நீர்தேக்கத்தில் நீராடச் சென்ற இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக மஸ்கெலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் மஸ்கெலியா குயின்ஸ்லன் பகுதியைச் சேர்ந்த ரஜேந்திரன் யோகேஸ்வரன் (வயது–19) மற்றும் விஜயரட்ணம் கிருஷ்ண குமார் (வயது–17) ஆகியோரே உயிரிழந் துள்ளனர்.

இரு இளைஞர்களும் நீர்தேக்கத்தில் குளித்துக் கொண்டு இருக்கும் போது, ஒருவர் நீரில் மூழ்கியமையால்அவரை காப்பற்ற மற்றொருவர் முயற்சிசெய்த சந்தர்ப்பத்திலேயே இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் சம்பவ இடத்திற்கு சென்ற பிரதேச மக்கள் நீர்த்தேக்கத்திலிருந்து சடலங்களை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியாபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த–4)

உதயன்
advt@uthayan.com
0215671111

மாபெரும் ஆடித் தள்ளுபடி

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

ஸ்தாபனத்தின் புடைவை தினுசுகளுக்கு மாபெரும் ஆடித் தள்ளுபடி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது

சாறி
கொட்டன் சாறி
பஞ்சாபி சில்க்
பஞ்சாபி கொட்டன்
ஜின்ஸ்
சேட்

மேலும் அனைத்து புடைவைகளுக்கும் சிறப்புத் தள்ளுபடி

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் சீ.சிவநேசன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி புவனேஸ்வரி சிவகாருணியம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன் னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

பாடசாலை சமூகம்
யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை.

## மரண அறிவித்தல்



**ஆனந்த குமாரசாமி சர்மா பாலகிருஷ்ணசர்மா**

இலங்கைநாயகி அம்மன் கோயில் கல்வியங் காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ண சர்மா நேற்று (15.08.2015) சனிக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தகுமாரசாமி சர்மா-நவரட்ணம்மா தம்பதியரின் மகனும், விமலராணியின் அன்புக் கணவரும், கஜீவ குருக்கள் கஜதீப சர்மா, கயிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், மேனகாவின் அன்பு மாமனும், கார்த்திகேய சர்மா, கஜீலா, கயானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அரியாலை கிழக்கு எனும் முகவரியில் இன்று (16.08.2015) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அரியாலை கிழக்கு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக் காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரியாலை கிழக்கு,
அரியாலை.

தகவல்: குடும்பத்தினர்,
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



**திருமதி சசிகலாதேவி விக்னேஸ்வரன்**

முல்லைத்தீவு குமுழமுனை யைப் பிறப்பிடமாகவும், வதிவிட மாகவும் கொண்ட சசிகலாதேவி விக்னேஸ்வரன் 13.08.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கனகசுந்தரம், பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், துரைசிங்கம் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமக ளும், விக்னேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், வினுசன், திலக்ஷன், அபிசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசிலாதேவி, ரதிமலாதேவி(ஜேர்மனி), காலஞ்சென்ற ஞானசேகர்(G.S), சந்திரசேகர் (லண்டன்), திவாகரன்(லண்டன்), கலைச்செல்வி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராசா, யோகரட்ணம், துஸ்யந்தி, நளினி, சாந்தகுமார், விக்னேஸ்வரி, ஜெகதீஸ்வரன், சர்வேஸ்வரன், காலஞ்சென்ற ஜெகரூபன், ஜெகரூபி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிந்துஷா, ரேனுஷா, சுவித்துசன், யஸ்மி, யதுர்சன் ஆகியோரின் அன்புச் சித்தியும், சன்சிகா, துசாரன், சுருதிகா ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், சாருஜன், சயானா, சவுமிகா, சதுன், சஸ்விகா, சஞ்சீவன் ஆகியோரின் அன்பு மாமியும், லட்சிகாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் குமுழமுனை தாமரைக்கேணி மையவாடியில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி:
05ஆம் வட்டாரம், குமுழமுனை,
முள்ளியவளை, முல்லைத்தீவு

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி யோசப்பின் (பூட்டியம்மா)**



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கூழாவடி கிழக்கு, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி அந்தோனிப்பிள்ளை மேரி யோசப்பின் (பூட்டியம்மா) நேற்று (15.08.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்க ளான மடுத்தீன்-மதலேனம் தம்பதியரின் மக ளும், காலஞ்சென்றவர்களான இராசப்பு-அனாசி தம்பதியரின் மருமகளும், ஜெரோம் (லண்டன்), ஞானமலர் (கனடா), காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் அல்போன்ஸ் (லண்டன்), மரியமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான ஜெய்சி, பிரான்சிஸ், நடராசா மற்றும் மரியநாயகி (லண்டன்), கலா (லண்டன்), அகஸ்ரீன் (துரை-லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், வின்சன் நீலா (கனடா), மல்லிகா லக்ஷ்மன் (கனடா), அன்ரன் ராஜசேகரன் மாலினி (Mary Construction, Engineers and contractors) மஞ்சுளா சீலன் (நீர் கொழும்பு), மைதிலி யோண்சன் (கனடா), மாலதி நேசன் (கனடா), றொபின் சன் றூபினா (கனடா), நெல்சன் மயூரி (கனடா), வினோஜன் (லண்டன்), தர்ஷிகா (லண்டன்), லோறன்ஸ், சாந்தி (லண்டன்), பாஸ்கரன் சுகந்தினி (கனடா), சுதர்சன் மடோனா (லண்டன்), றாஜா (லண்டன்), கிரிஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மெல்சியா, கிறிஸ்ரீனா, ஆன் கொலன் சியா (ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்), கிஷோன், திஷானி, சில்வியா, விதுஷனா, காலஞ்சென்ற மேருஜா மற்றும் ஜெருஷன், நிதுஷன், ஜெசியா, அமண்டா, சுமன் ராஜா, ஒக்ஸானா, ஷான், அஸ்னா, அன்றூ, அன்ரியா, யோகானா, விவிலி, லோகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான ஜோன் பொஸ்கோ, அருளானந்தம் ராசா மற்றும் இந்திராணி காலஞ்சென்றவர்களான விசுவாசம், கிறிஸ்தோப் பிள்ளை, பர்னாந்து ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம், மரியம்மா, லூர்த்தம்மா மற்றும் அருளப்பு, அன்னக்கிளி, ஜேக்கப் காலஞ்சென்றவர்களான பிளைசம், சிலுவைராசா மற்றும் ராணி ஆகியோரின் மைத்துனியும், சொர்ணம், மரியம்மா, திரேசம்மா ஆகி யோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.08.2015) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மானிப் பாய் புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, காக்கைதீவு பொது சேமக்காலையில் இறுதி நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்புகளுக்கு:
அன்ரன் ராஜசேகரன் (Mary Construction)
T.P: 0777448076

தகவல்:
குடும்பத்தினர்,

## மரண அறிவித்தல்

**லக்ஸ்மன் யோசப்**

பிறப்பு
16 . 03 . 1954



இறப்பு
15 . 08 . 2015

பதுளையை பிறப்பிடமாகவும் முருக மூர்த்தி கோவிலடி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட உடையார் வம்சாவளி லக்ஸ்மன் யோசப் 15.08.2015 சனிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லக்ஸ்மன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் யோசப் மரியம்மாவின் அன்புக் கணவரும் ஞான பூரணி, பிரதீபன், ஞானதீபன் (MLT, MCC Medicheck clinic center சுன்னாகம்), யோசப்பின் தர்சினி (லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரி இரண்டாம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.08.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப 11.30 இற்கு நடைபெற்று மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நல்லடக்க ஆராதனை இடம்பெற்று பூதவுடல் மல்வம் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மல்வம்,
உடுவில்.

தகவல் -
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் தர்மகுலேந்திரன்

(ஒய்வு பெற்ற உத்தியோகத்தர், ஏற்றுமதி, இறக்குமதி திணைக்களம், புனர்வாழ்வு திணைக்களம்)



சுதுமலையை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, மஞ்சவனபதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மகுலேந்திரன் நேற்று (15.08.2015) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ராதா (ரதி) யின் அன்புக் கணவரும் தர்சிகா (கனடா), திலக்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரின் (கனடா) அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தர்மலிங்கம் - காந்திமதி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கொக்குவில் தம்பு திருநாவுக்கரசு தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும் சுபீட்சா, ஆதித் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான வர்ணகுலேந்திரன், ராஜ குலேந்திரன் மற்றும் சரோஜினி தேவி, ராமச்சந்திரன், மதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2015) திங்கட் கிழமை மு.ப 10.00 மணியளவில் கொக்குவிலில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமுப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு.
0775977166

தகவல் - மைத்துனர்கள் -
தி.சண்முகராஜா, தி.தவராஜா,
தி.புஸ்பராஜா

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கத்திரவியம் நாகராஜா



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, யாழ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கத்திரவியம் நாகராஜா 15.08.2015 சிவபதம் அடைந்தார்.

அன்னார் ஓய்வு பெற்ற முன்னைநாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் காலஞ்சென்ற நாகராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சீதேவன் தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - லக்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் ஸ்ரீபாமா (ஆசிரியர் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), ஸ்ரீபானு (சட்டத்தரணி - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கொலின் ஜேசுவா (பொறியியலாளர்), முரளிதரன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சபரிஸ் டியுக்சன், சபரிஸ் விளிக்சன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் காலஞ்சென்றவர்களான இராசரட்ணம் (ஓய்வு பெற்ற அதிபர்), பவளமணி, செல்லம்மா, அழகம்மா, தங்கராஜா (முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.08.2015 இன்று அன்னாரின் வவுனியா யாழ் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பி.ப 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யாழ் வீதி,
வவுனியா.

தகவல் -
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சாவித்திரி தம்புசாமி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

தோற்றம் : 07.03.1927 மறைவு: 14.08.2015



யாழ். மானிப்பாய் நவாலி சிந்தாமணிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப் பிடமாக வும் கொண்ட சாவித்திரி தம்பு சாமி 14.08. 2015 வெள்ளிக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற தம்பு-பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி யும், காலஞ்சென்ற துரைச்சாமி (மலே சியா), இரத்தினாபரணம் தம்பதி களின் அன்பு மருமகளும், தம்புசாமி (ஓய்வு பெற்ற P.H.I- கனடா) அவர் களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற ரவீந்திரன், ரஜனி(கனடா), ரமணி (கனடா), அசோகன் (A & T Human Resources- கனடா) ஆகி யோரின் அன்புத் தாயாரும், உதயராணி(கனடா), கருணானந்தன் (கனடா), ரஞ்சி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான விஜயரட் ணம், கனகசபை, சந்திரசேகரம், அகிலாண்டேஸ்வரி, மகேந் திரன், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியபாமா (மலேசி யா), பகிரதி (மலேசியா), ஞானேஸ்வரி(மலேசியா), கமலா (மலே சியா), பராசக்தி(மலேசியா), பூபதி(மலேசியா), சாவித்திரி (நெதர் லாந்து), சந்திரா(சுவீடன்), சகுந்தலாதேவி (சிங்கப்பூர்), காலஞ்சென்ற ரட்ணசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுரேஸ்குமார், அருண் குமார், பரதன், காயத்திரி, ரூபினி, அகிலன், அரவிந், அபிராமி, அர்யுன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2015) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
அசோகன்- கனடா +14168370927,
அகிலன் கனடா +16479895328,
ரஜோ கனடா +16472612873

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### உமாதேவி மகாலிங்கம்



கரவெட்டி மத்தி தும்பியான் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கண்ணன் கோயிலடியை வசிப்பிடமாக வும் கொண்ட உமாதேவி மகாலிங்கம் நேற்று (15.08.2015) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், மகாலிங்கத்தின் (தமிழ் ஐயா தலைவர்-கிளிநொச்சி திருநெறிக் கழகம்) அன்பு மனைவியும், குமரன், மீனாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயும், கௌசியாவின் அன்பு மாமியும், காசினியின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணிக்கு இலகடி வீதி, கரவெட்டி மத்தி, கரவெட்டி என்ற முகவரியில் நடைபெற்று. சோனப்பூ இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொ.பே: 077 2947104

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னையா மோகன்

(உரிமையாளர் லதினா ரயர் வேக்ஸ் சொப்)



வைமன் வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மோகன் (உரிமையாளர் லதினா ரயர் வேக்ஸ் சொப்) நேற்று (15.08. 2015) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - ரத்தினம் தம்பதியரின் அன்புமகனும் புஸ்பலதாவின் அன்புக் கணவரும் லதினா, நியூட்டன், ஜோயில் ராஜ், கிருஷிகேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று நாளை (17.08.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

50/11, வைமன் வீதி,
நல்லூர்.

தகவல் -
குடும்பத்தினர்.
0771630096

## மரண அறிவித்தல்

### விபுலானந்தன் (விபுல்)



நீராவியடியைப்பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட நுசாயினி லொட்ஜ் 112டாம் ஸ்ரீட் கொழும்பு 12 இன் உரிமையாளர் விபுலானந்தன் (விபுல்) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - அன்னபூரணம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற திருவேங்கடம் - சரஸ்வதி தம்பதி யரின் மருமகனும் சுலோஜனா அவர்களின் பாசமிகு கணவரும் திலீபனின் (கனடா) அன்புத் தந்தையும் அனுசியாவின் (கனடா), வின் பாசமுள்ள மாமனாரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கனகாம்பிகை, சிவானந்தன், சறோஜினிதேவி, நவரட்ணராஜா, தவநீதராஜா, உருத்திராணி, திருச்செலவம் (பிரான்ஸ்), யோகராணி ஆகியோரின் சகோதரரும் மகேஸ்வரி, யோகேஸ்வரி, இராசரெத்தினம், கோகிலாம்பாள், செல்வலோஜினி (பிரான்ஸ்), கேமலதா, இராசலிங்கம், காலஞ்சென்ற நடராஜா, சிவகடாச்சம், திலகவதி (கனடா), வனிதாதேவி, அரியமலர், சந்திரசோதி, சாந்தா, சசிரேகா, சிறிலதா, வசந்தா (கொழும்பு), ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் குஞ்சிதபாதம், யோகேஸ்வரன், சித்ரா, றொபேட், சுத்தானந்தன் (S.P.S ரான்ஸ்போட்), வரேந்திரன், மனோ ராகவன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மடம் ஒழுங்கை திருநெல்வேலி சந்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடம் ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
0777877241, 0771147520

தகவல் -
மனைவி, மகன்,
மருமகள்.

# இலங்கைத் தமிழ் மருத்துவருக்கு ஆபிரிக்காவின் நட்சத்திரம் விருது

இலங்கைத் தமிழரான பல் மருத்துவர் மார்க்கண்டு கனகசபைக்கு லைபீரியாவின் அதியுயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியாவின் தலைநகர் மொன்றோவியாவில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் இவருக்கு ஆபிரிக்காவின் நட்சத்திரம் என்ற விருது வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த 37 வருடங்களாக லைபீரிய மக்களுக்கு மருத்துவர் கனகசபை அர்ப்பணிப்புடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் ஆற்றிய சேவையினைக் கௌரவிக்கும் வகையில் இந்த அதியுயர் விருதை அந்நாட்டின் ஜனாதிபதி வழங்கினார். கடந்த 15 வருடங்களாக லைபீரியாவில் உள்நாட்டு மோதல்கள் தீவிரமடைந்திருந்ததுடன் அண்மைய நாட்களில் எபோலா தொற்று நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. லைபீரியாவின் இடர்மிகுந்த இந்த நாட்களிலும் மருத்துவர் கனகசபை தனது பணியினை மேற்கொண்டார்.

கடந்த 40 வருடகால வரலாற்றில் ஆபிரிக்காவின் நட்சத்திரம் என்ற விருதினைப் பெற்ற இரண்டாவது வெளிநாட்டு மருத்துவர் இவரே.

யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான கனகசபை, லண்டன் பல்கலைக்கழகத்தின் மருத்துவத் தேர்விலும் சித்தி பெற்றிருக்கிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1969ஆம் ஆண்டு தனது இளமானிப் பட்டத்தினைப் பெற்ற இவர் பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையிலும் தெஹிவளை ஆதார வைத்தியசாலையிலும் (1971-73) பல்மருத்துவராகப் பணியாற்றினார்.

லைபீரிய மக்களுக்கும், ஆபிரிக்க மக்களுக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் லைபீரியர்களையும் வெளிநாட்டவர்களையும் கௌரவிக்கும் வகையில் 1920 ஆம் ஆண்டு தொடக்கம் ஆபிரிக்காவின் நட்சத்திரம் விருது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# சட்டவிரோத குடியேறிகள் பிரிட்டனுக்குள் இனி இல்லை

லண்டன், ஓகஸ்ட் 16

சட்டவிரோத குடியேறிகள் பிரிட்டனுக்குள் அத்துமீறி நுழைவதை அரசு தடுத்து நிறுத்தும் என பிரதமர் டேவிட் கமரூன் தெரவித்துள்ளார்.

தஞ்சம் அளிக்கும் விடயத்தில் பிரிட்டன் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்வதாகவும் கமரூன் தெரிவித்திருக்கிறார்.

அகதித் தஞ்சம் கோருபவர்களில், குறிப்பிடத்தக்க அளவினரை பிரிட்டன் ஏற்று கொள்வதாகத் தெரிவித்திருக்கும் டேவிட் கமரூன், அனுமதியில்லாமல் நுழைபவர்களைத் தடுத்து நிறுத்த விரும்புவதாகக் கூறியுள்ளார்.

மக்களை இழிவுபடுத்தும் நோக்கம் தனக்கு இல்லை என்றும் அதிகளவில் குடியேறிகள் வருவதை விளங்கப்படுத்துவதே தனது நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பிரிட்டனில் குடியேறிகளை கட்டுப்படுத்தும் தனது கொள்கையையும் கமரூன் நியாயப்படுத்திப் பேசியுள்ளார். மக்களுக்கு தஞ்சம் அளிக்கும் விஷயத்தில் தாராள மனப்பான்மையுடன் பிரிட்டன் எப்போதும் நடந்துவந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளதாக பிபிஸி செய்தி வெளியிட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### நாய்க்குட்டி விற்பனைக்கு

கிறேடன் (களிகுயின்) 2 மாதம் 10 மாதம் குட்டி, 3 வயது தாய் நாயும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 621 6690

### கார் விற்பனைக்கு

Peugeot 404 டீசல் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:இல 10, ஒஸ்கா லேன், உரும்பிராய்.
077 177 2869 (62269) (9.3.7)
பார்வையிடும் நேரம் 9.30am - 5.30 pm

### காணி விற்பனைக்கு

No.17, Uduvil Road, Manipay வீதியில் அமைந்துள்ள (5) ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
ரவி: 077 727 0310

### வீடுவளவு விற்பனைக்கு

ஆனந்தன் வடலி வீதி (Av Road) அரியாலை கிழக்கில் ஒரு பரப்புக்காணியில் 2 அறைகள், ஹோல், சமையலறை,கிணறு, மலசலகூடம் மற்றும் சுற்றி வர மதில் கட்டிய சகல வசதியும் கொண்ட வீடு வளவு விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 -2.30 வரை.
நிறுவனங்களும் விரும்பத்தக்கது) தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
(62002) (3.5.7) தொ.பே: 077 154 7488

### விற்பனைக்கு

சுப்பமாக்கற்றுக்கு பயன்படுத்தக்கூடிய இத்தாலியிலி ருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய கூலர் (fridg open)
தொடர்பு: 077 962 8950, 021 221 7252

### விற்பனைக்கு

60 நாள் நிரம்பிய பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும், 9மாத ஆண், பெண் பொமேரியன் நாயும், வான்கோழி, மணிதாரா, கினிக்கோழி, வன்ரம், வாமஸ், வெள்ளடியன், ஊர்க்கோழிக் குஞ்சுகளும், கோழிகளும்.
தொடர்பு: மயூரன் பாம் சென்ரர், நீர்வேலி கந்தசாமி கோயில் பின்வீதி. (62279) (9.3.7)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,ஆஸ்பத்திரி வீதி , இல.625/5 இல் அமைந்துள்ள பழைய வீட்டுடனான ஒருபரப்பு 16.23 குளி நிலம் விற்பனைக்கு.
தொடர்பு:
ரவி: 077 727 0310
வசந்தன்: 077 281 2796

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, யாழ். பிரதான வீதியில் கிராமக்கோட்டில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
22 644 57 ,077 668 5002

### வீடு விற்பனைக்கு

மல்லாகம் சந்தியிலிருந்து 200 யார் தொலை வில் கட்டுவன் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய புதிய வீடு 2¾பரப்புக் காணியுடன் விற்பனைக்கு.
தொடர்பு: (62287) (9.3.7)
077 962 8950, 077 271 9229

### விற்பனைக்கு

கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம்(இத்தாலி) விற்பனைக்கு உண்டு.
ஒரே தடவையில் 1200 குஞ்சுகள் பொரிக்கும்.
T.P: 077 465 0087

## வாடகைக்கு

### வீடு வாடகைக்கு

பருத்தித்துறை நகரில் அமைதியான வீதியில் விசாலமான காணியிலுள்ள பெரிய வீடு பிரயோசனத்தோடு வாடகைக்கு. அரச, வங்கி, அரசசார்பற்ற நிறுவனம், மாதவருமானம் உள்ளவர்களுக்கு வழங்கப்படும்.
தொடர்பு: 077 921 8408 (18219) (9.3.7)

### வீடு வாடகைக்கு

யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில் ஒரு சிறிய குடும்பத்துக்கான 2 அறைகளுடன் கூடிய வீடு (A/C) உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 076 601 8862 (62257) (3.5.7)

### வாடகைக்கு

யாழ். கோண்டாவில் பாடசாலை ஒழுங்கையில் சகலவசதிகளுடன் மாடிவீடு கீழ் மேல்தளங்களிலும் தலா 3 Bedroom, Hall Diningroom, Kitchen Bathroom) கீழ் மேல் வீடு ஒன்றாகவும் தனித்தனி வீடாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 071 999 2099,071 306 5262

### வீடு வாடகைக்கு

சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, Main Carpet வீதி முகப்பு, சித்தன்கேணி சந்தியிலிருந்து ஒருகிலோமீற்றர். சமையலறை, சாப்பாட்டறை அடங்கலான 6 அறைகள் மற்றும் Garage உடன் வசதியானவீடு. உடன் குடிபுகலாம்.
தொடர்பு: 077 203 5419 (18229) (9.3.7)

## தேவை





### தேவை

வன்னிப் பகுதியில் வேலை செய்வதற்கு டோசர், JCB வாகனம் தேவை.
தொடர்பு: 077 498 0404

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில், கஸ்தூரியார் வீதியில் இயங்கும் பிரபல்ய எலக்ரோனிக் கடைக்கு வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 077 160 7757 (62267) (3.5.7)

### ஆசிரியர் தேவை

கொக்குவில் பகுதியில் தரம்7 இல் படிக்கும் பிள்ளைக்கு தமிழ், ஆங்கில பாடம் வீடு வந்து கற்பிக்கக் கூடிய பிரபல்யமான ஆசிரியர் தேவை.(பெண் ஆசிரியை/ பகுதிநேர பல்கலைகழக பெண் மாணவிகள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 385 1645

### பெண் உதவியாளர் தேவை

இருவர் மட்டும் உள்ள குடும்பத்திற்கு, வீட்டில் தங்கி இருக்கக்கூடிய 40-50 வயதுக்கு உட்பட்ட பெண் உதவியாளர் தேவை. நேர்மையுடன் கண்ணியமாக நடத்தப்படுவார் .வேதனம், விடுமுறை, கைத்தொலைபேசி பாவனை யாவும் நேரில்.
Missed call- 078 674 7347

### மணமகள்கள் தேவை

* பிரான்ஸ்P.R உள்ள 1987 ஆயிலியம் நட்சத்திரத்தில் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை . (இந்து கௌரவ குடும்பம்)
* அமெரிக்கா (P.R) உள்ள 1979 உத்தரட்டாதி 4ஆம் பாதம் நட்சத் திரத்தில் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.(இந்து கௌரவ குடும்பம்)
* ஆசிரியராகப் பணிபுரியும் 1982 ஆயிலியம் 2ஆம் பாதம் நட்சத்திரத்திலும் உதயச்செவ்வாய் உள்ள மணமகனுக்கு ஆசிரியராகப் பணிபுரியும் மணமகள் தேவை.(இந்து கௌரவ குடும்பம்)
* சொந்த தொழில் புரியும் 1978 விசாகம் 2ஆம் பாதம் நட்சத்திரத்தில் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.(இந்து கௌரவ குடும்பம்)
* சொந்த தொழில் புரியும் 1980 அனுஷ நட்சத்திரத்தில் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.(இந்து கௌரவ குடும்பம்)

தொடர்பு:
077 979 1457

### தேவை

கோட் மெசின் இயக்குநரும், கணினியில் அனுபவமுள்ளவர்களும், பயிலுநர்களும் தேவை.
தொடர்பு: 077 5553918, 077 8286497

### வேலையாள் தேவை

80 வயது வயோதிபரையும், வீட்டு வேலைகள் செய்வதற்கும் தகுந்த ஆண்வேலையாள் தேவை.
தொடர்பு: 077 362 7043 (62275) (9.3.7)

### வாகனம் தேவை

வடமராட்சி பிரதேசத்தில் பாவித்த மோட்டார் சைக்கிள் (CT100/ Delex) உடன் தேவை.
தொடர்பு: 075 268 4555 (58513)(3.5.7)

### Pharmacist தேவை

Pharmacyஒன்றில் வேலை செய்வதற்கு Pharmacist, A/L Commerce or Bio படித்தவர்களும் மற்றும் சாரதி தேவை.
தொடர்பு: 077 500 6769 (62257) (3.5.7)

### வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் கட்டட நிர்மாண பணிகளுக்கு மேசன் பாஸ் மற்றும் உதவியாள்கள் உடன் தேவை. தினந்தோறும் முற்பணம் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 722 9747

### வேலையாள்கள் தேவை

தளபாட விற்பனை நிலையத்திற்கு
01.காசாளர்(பெண்)
02 . தச்சு வேலையாள்கள்
உடன் தேவை.
தொடர்பு : ஸ்ரீரா தளபாட நிலையம்
286, ஸ்டான்லி, வீதி
077 300 1763

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1985, சுவாதி நட்சத்திரம்,7 இல் செவ்வாய் , A/L படித்து டிப்ளோமா பட்டம் பெற்ற மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தரகர் வேண்டியதில்லை.
(62001) (3.5.7) தொடர்பு: 077 403 5146

### தேவை

கொழும்பில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை பார்க்கக் கூடிய சுத்திகரிப்பாளர் ஒருவர் தேவை. சம்பளம் 15,000 ரூபா. மேலதிக கொடுப்பனவுகள் உண்டு. (18228) (9.3.7)
தொடர்பு: 077 772 7654/ 071 025 7502

## ஏனையவை

USA, CANADA, ITALY SINGAPOREயில்
கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்பு
SINGAPORE TOTAL COST - Rs.70,000/-
USA TOTAL COST - Rs.140,000/-
CANADA TOTAL COST - Rs.98,000/-
ITALY TOTAL COST - Rs.73,000/-
CAN APPLY O/L
BANK BALANCE
வங்கியில் 100% பணவைப்பு
max adz
RATHA - 0778824524
MEERA - 0770085028
KAVISKA - 0778850315




வெள்ளவத்தையில் சகல நாடுகளுக்குமான
Online Visa Applications
UK, CANADA, USA, AUSTRALIA
▸ SWEDEN ▸ ITALY
▸ DENMARK ▸ NEW ZEALAND
▸ NORWAY ▸ HOLLAND
▸ GERMANY ▸ SWITZERLAND
▸ FRANCE ▸ INDIA
Air Ticketing, Translation, Travel Insurance, Valuation, Dual Citizenship Applications ஆகியன செய்து தரப்படும்.
IELTS A1 B1 Life Skills Classes
JANA COMPUTER TECH
No. 385-1/ 1, Galle Road, Colombo- 06
Tel: 0773 480 494, 2 360494 | E-mail : visaonline5@gmail.com



* பல் முக சிறப்புகல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் டெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் டென்டல் சென்ரர்
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☏ 021- 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

### SHERINA MULTIMEDIA SOUND'S

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு Sounds and Lights குறைந்த வாடகையில் கொடுக்கப்படும். அத்தோடு மின் பிறப்பிக்கும் இயந்திரமும்.
தொடர்பு: 077 790 6224 (62278)(9.3.7)

### A/L இரசாயனம்/ உயிரியல்

இவற்றிற்கான Exampool பரீட்சை தடாகம் விற்பனைக் குண்டு. றோயல்/ விசாகா இம் முறை வினாத்தாள்கள் மற்றும் தனி/குழு வகுப்புக்கள்
சிங்கம் மாஸ்டர் : 077 773 0840

### வேலைவாய்ப்பு

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள சூரியா ஹோட்டலுக்கு கொத்து,பிறைற்றைஸ்,சோட்ஈற்ஸ் செய்யக்கூடியவர் தேவை. தேசிய அடையாள அட்டை, வதிவிடசான்றிதழ் என்பவற்றுடன் வரவும். உடன் வேலைதரப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்
தொடர்பு: 076 679 2632
077 447 1644

### வேலைவாய்ப்பு

யாழ் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
1. வரவேற்பாளர் - (ஆங்கிலம் கணணி அறிவுடையவர்)
2. முகாமையாளர் - (அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
தொடர்பு:
077 972 5772 (62276) (9.3.7)
Oldparkvilla@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களை கட்டுப்படுத்த எவருக்கும் அனுமதியில்லை

கொழும்பு, ஓக. 16
தேர்தலில் வாக்களிப்பதற்காக எந்தவித சந்தேகத்தையும் அல்லது பயத்தையும் வாக்காளர்களுக்கு ஏற்படுத்தக்கூடாது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
வாக்காளர்களை கட்டாயப்படுத்துவதற்கு எந்த தரப்பினருக்கும் அனுமதி இல்லை என்று ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் முகங்கொடுக்கின்ற சவால்கள் இந்தமுறை குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த)

# எக்னெலிகொட கடத்தல் குறித்த விசாரணையை நிறுத்த உத்தரவு

***ராணுவத்தினரின் அழுத்தத்தால் பிரதமர் பிறப்பித்தார்***

கொழும்பு, ஓக. 16
இராணுவத்தினரின் அழுத்தங்களால், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்டது தொடர்பான விசாரணைகளை உடனடியாக நிறுத்தும்படி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதால், படையினருக்குள் குழப்பங்கள் ஏற்படக் கூடும் என்று இராணுவ உயர் மட்டத்தில் விடுக்கப்பட்ட எச்சரிக்கையை அடுத்தே, பிரதமர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக கூறப்படுகிறது.
பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்டது குறித்த விசாரணைகளில், பல புலனாய்வு அதிகாரிகளுக்கும், இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் நேரடித் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. ஒரு இராணுவ அதிகாரி ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மற்றொரு உயர்மட்ட அதிகாரி விரைவில் கைது செய்யப்படவுள்ளார்.
எனினும், குறிப்பிட்ட இராணுவ அதிகாரியை விசாரணைக்காக ஒப்படைக்க முடியாது என்று இராணுவ அதிகாரிகள், குற்றப்புலனாய்வு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.
அந்த இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டால், போரின் போது உருவாக்கப்பட்ட சிறப்பு இராணுவப் புலனாய்வுப் பிரிவு பற்றிய தகவல்கள் வெளிவரக் கூடும். 650 பேரைக் கொண்ட இந்த சிறப்பு இராணுவப் புலனாய்வுப் பிரிவு, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினால் உருவாக்கப்பட்டது.போர் முடிவுக்கு வந்த பின்னர், இந்தப் புலனாய்வுப் பிரிவு, கோத்தபாய ராஜபக்ஷவின் படைப்பிரிவு போலச் செயற்பட்டது. எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்டது இதன் ஒரு நடவடிக்கையே ஆகும்.
இதுபோன்ற பல செயற்பாடுகளில் இந்த இராணுவப் பிரிவு ஈடுபட்டுள்ளதாகவும், இதுபற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டால், இராணுவத்துக்குள் பாரிய குழப்பம் ஏற்படுவதுடன், மிலேனியம் சிற்றி காட்டிக் கொடுப்பு போன்ற சர்ச்சையாக உருவெடுக்கலாம் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவின் கீழ், முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, பிரிகேடியர் வன்னிநாயக்க உள்ளிட்ட பல அதிகாரிகள் இந்த சிறப்பு புலனாய்வுப் பிரிவில் இருந்துள்ளனர்.
இந்தச் சூழ்நிலையிலேயே, எக்னெலிகொட கடத்தல் குறித்த விசாரணைகளை இடைநிறுத்துமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார். (த)




**துயர் பகிர்கின்றோம்**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில்
எம்மோடு சேவையாற்றி தற்போது
வேலணை மேற்கு நடராஜ வித்தியாலய
விஞ்ஞான ஆசிரியையாகப் பணிபுரிந்த

**திருமதி சர்வாஜினி சுரேஷ்**

16.07.1971 – 12.08.2015

அவர்கள் மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், துயரும் அடைகின்றோம். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**சமகாலத்தில் யூனியன் கல்லூரியில் கடமையாற்றி இடம் மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்கள்.**

**கண்ணீர் அஞ்சலி**



எமது பிரதேச செயலகத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராகக்
கடமையாற்றும் **இ.ஜெயக்குமார்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா இரகுபதி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையில் விஞ்ஞான
ஆசிரியராகக் கடமையாற்றிய
திருமதி
**சர்வாஜினி சுரேஸ்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்.
யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்
வேலணை.

**17 ஆம் வருட நினைவு நாள்**

தோற்றம் 05.05.1968 — தோற்றம் 10.04.1980
மறைவு 25.07.1998





அ.இந்துமதி — திரு துதிமை — த.சிவகெங்கா

கடல்நீர் அலையினில் சென்றீர்கள் எம் நெஞ்சலையோ ஓயவில்லை
காலங்கள் பதினாறு கடந்தன - எம் காயங்கள் இன்னும் ஆறவில்லை
விதியென நொந்துகொள்வோம் உங்கள் ஆத்மா சாந்தியடைக!

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (82070) (45.3.7)

என்றும் "உங்கள் நினைவில் வாழும்:
ஆ.த.அருணகிரோசா - குடும்பத்தினர்.

**31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்**



அமரர் **பாலன் சாமிக்கண்டு** (சாமி)
(கோபால் சவுண்ஸ் உரிமையாளர்)

பிறப்பு 20.11.1956 — இறப்பு 17.07.2015

கடந்த 17.07.2015 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத் தின் மறைவுச்செய்தியைக்கேட்டு எமக்குஅனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் இல்லத்தில் இன்று (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

பாலவத்தான்,
யூனியனடி, இமையாணன்,
உடுப்பிட்டி.

ஜெகன் (மருமகன்)
மற்றும் குடும்பத்தினர்.

**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 17 . 07 . 1940



உதிர்வு 16 . 08 . 2010

அமரர் **தர்மலிங்கம் தர்மராஜா**
(ஓய்வுபெற்ற உதவித் தொழில் ஆணையாளர்,
தொழில் திணைக்களம்-வவுனியா)
திதி: 23.07.2015

பாசம் வைத்த உறவு நீங்கள்
பாதி வழி வந்துவிட்டு - எம்மைப் ,
பரிதவிக்க விட்டுவிட்டு
பரனுலகம் சென்றதேனோ - அப்பா!

கடமைகள் அனைத்தும் செய்து
கரையேற்றி எம்மை விட்டு - உங்களை
நாம் காக்கும் பொழுதினிலே
கரை கடந்து சென்றதேனோ - அப்பா!

ஆதாரம் நீங்கள் இன்றி
ஆறுதல் என்ன அப்பா!
ஐங்கரனின் பாதங்களில்
சாந்தி பெற்றிடுங்கள் - வேண்டுகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"தேவி மகால்", கோப்பாய் மத்தி. — குடும்பத்தினர்.

**நீங்காத நினைவுகளில் ஏழாம் ஆண்டு**



செல்வன்
**வீரசிங்கம் செந்துஷன் (துஷன்)**
(மாசார் - பளை)

அகம் மகிழ 11.12.1987
மனம் நெகிழ 16.08.2008

என் அன்புச் செல்வமே துஷாக் குட்டியே
நீ மறைந்து ஏழாண்டாக்கனதையா - ஆனால்
என் செல்வமே ஏழாயிரம் ஆண்டுகளானாலும் உனை மறவோமே
என் செல்வமே என் கடைக்குட்டியே!
நீ அம்மா எனக் கூப்பிட்ட வார்த்தை
என் காதில் நேற்றுப் போலிருக்குதையா
உன் அப்பா அண்ணாக்களும் உனை நினைத்து உருகுகிறார்கள்
எங்கள் பாசம் நிறைந்த துஷாக்குட்டி மீண்டும்
எம்மிடம் ஓடி வந்திடய்யா.........

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணாமார், அண்ணியார்,
பெறாமக்கள், தம்பி, அக்கா, அக்காமார்
மாசார், பளை.


# மலேசியாவில் புலிகளுக்கு நிதி சேகரித்தவர் நாடு கடத்தப்பட்டார் அந்நாட்டுப் பொலிஸ் தெரிவிப்பு

கோலாலம்பூர், ஓக. 16
மலேசியாவில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்து, நிதிசேகரிப்பு நடவடிக்கைகளில் இரகசியமாக ஈடுபட்டதாக, கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் ஒருவரை நேற்று இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளதாக மலேசிய பொலிஸார் அறிவித்துள்ளனர்.
இலங்கையைச் சேர்ந்த 37 வயதான இந்த நபர், கடந்த 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சமூக விருந்தினர் அனுமதிப் பத்திரம் மூலம் மலேசியாவுக்குப் நுழைந்திருந்தார். மலேசிய தீவிரவாத முறியடிப்பு பிரிவின் புகிட் அமான் சிறப்பு பிரிவினர் கோலாலம்பூரில் மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கை ஒன்றின் போது இவர் கடந்த 7ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.
இவர் மலேசியாவில் தங்கியிருந்து, விடுதலைப் புலிகள் இயக்கத்தை புதுப்பிக்க நிதி திரட்டினார் என்று தாம் நம்புவதாக, மலேசிய பொலிஸ் அதிகாரி தான் சிறி காலித் அபூபக்கர் தெரிவித்துள்ளார். இவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், கடனட்டை மோசடிகளில் ஈடுபட்டு வந்துள்ளதும், அதில் வெளிநாட்டவர்களை ஈடுபடுத்தியுள்ளதும் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
மலேசியாவின் குடிவரவுச் சட்டங்களை மீறி மேலதிக நாட்கள் தங்கியிருந்த அவரைக் கைது செய்து, நேற்றுமுன்தினம் திருப்பி அனுப்பியதாகவும் மலேசிய பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.
எனினும் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டவரின் பெயர் விபரங்களை மலேசிய பொலிஸ் வெளியிடவில்லை. (த)

# தலதா மாளிகை பெரஹர ஆரம்பம்

கண்டி, ஓக. 16
கண்டி தலதா மாளிகையின் எசல பெரஹரா நேற்று சதர மகா கோயிலில் இருந்து ஆரம்பமாகியது.
நாடு சாமி, விஷ்ணு, முருகன் மற்றும் பத்தினி ஆகிய தெய்வங்களை கண்டி எசல பெரஹராவில் ஊர்வலமாக கொண்டு சென்றனர்.
அதனைத் தொடர்ந்து, எதிர்வரும் 20ஆம் திகதி வீதி உலா வைபவமும் 25ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை ரன்தொலி பெரஹராவும் நடைபெறவுள்ளன.
ஓகஸ்ட் 30ஆம் திகதியுடன் எசல பெரஹரா நிறைவுபெறும் என்பதை தலதா மாளிகையின் பரிபாலகர்கள் அறிவித்துள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தீக்காயமும் பாதிப்புக்களும்

இன்றைய நவீன யுகத்திலே காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுள் மருத்துவ ரீதியாகப் பெரிய பிரச்சினையாக விளங்குவது தீக்காயங்கள் எனலாம். மக்கள் தமது பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. அதற்குத் தீர்வாக சிலர் தமக்குத் தாமே தீமூட்டி உயிரை மாய்த்துக் கொள்வது சுலபமான வழி எனக் கருதிச் செயற்படுகின்றனர். இது இன்று குடாநாட்டைப் பொறுத்தவரை அதிகரித்துக் காணப்படுகிறது எனலாம். படித்தவர்கள், சிறுவர், பெண்கள், ஆண்கள் எனப் பலதரப்பட்டோரும் எடுக்கின்ற திடீர் முடிவு பெரிய பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்கிறது. நாம் சிந்திப்பது போல தமக்குத் தாமே தீ மூட்டி உயிரை மாய்த் துக் கொள்வது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. அதன் மூலம் அனுபவிக்க வேண்டிய வேதனைகள், வலிகள், கொடுமைகள் ஏராளம்.

அதாவது தீக்காயம் என்பது, வெப்பத்தினாலோ, நீராவி போன்றவற்றினாலோ, மின்சார அதிர்ச்சியினாலோ ஏற்படுகின்ற தோலின் தொடர்ச்சித் தன்மை பாதிக்கப்படல் என வரையறுக்கப்படுகிறது. இது மேற்பரப்பான காயமாகவோ, ஆழமான காயமாகவோ ஏற்படலாம். தீக்காயத்தினால் ஏற்படுகின்ற வலி தாங்க முடியாததாகவும், அதிகமானதாகவும் காணப்படுகின்றது. ஆழமான தீக்காயம் நோ அற்றதாகவோ அல்லது குறைவானதாகவோ காணப்படும். இது ஆபத்தான நிலையாகும். தோலில் உள்ள நரம்பு முடிவிடங்கள் அழிவடைந்திருப்பதாலேயே ஆழமான தீக்காயங்கள் வலி குறைவாக அல்லது இல்லாமற் காணப்படுகிறது.

தீக்காயம் ஏற்படும்போது, உடலில் நிகழுகின்ற உடலியல் தொழிற்பாடு காரணமாக நீர்க்கட்டிகள் (கொப்பளங்கள்) ஏற்படல், வீக்கமடைதல், கிருமித்தொற்று போன்றன ஏற்படுகின்றன. இவை பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. தீச்சுவாலை சுவாசிக்கப்படுவதால் சுவாசப் பாதையிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

தீக்காயங்கள் வெப்பத்தோடு சம்பந்தப்பட்ட சுடுநீர், நீராவி, சூடான உலோகங்கள், தீமூட்டல் போன்றவற்றாலும் இரசாயனப் பாதிப்புக்களாலும், மின்தாக்குவதாலும், கதிர்வீச்சினாலும் ஏற்படுகின்றது. கூடுதலாக இவை வீடு மற்றும் தொழிற்சாலைகளிலேயே ஏற்படுகின்றன. அதிகபட்சமாக விபத்தாகவும் சிலவேளைகளில் தற்கொலை முயற்சியாகவே அன்றி கொலை முயற்சியாகவோ ஏற்படுத்தப்படுகின்றது. அதிகமாக வறியவர்களே இதனால் பாதிக்கப்படுவதை தரவுகளிலிருந்து அறிய முடிகின்றது. தீக்காயங்கள் மூலம் என்பு உடைவுகள், என்பு விலகல்கள் போன்றன ஏற்படலாம். ஏனெனில் உடனடியாகச் செய்யப்படுகின்ற முதலுதவிகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் இந்த நிலைக்கு இட்டுச் செல்லலாம்.



தீக்காயங்கள் மூலம் உடலின் பாதுகாப்புக் கவசமான தோலின் தொடர்ச்சித் தன்மை பாதிக்கப்படுவதால் கிருமிகள் சுலபமாக உடலுக்குள் உட்செல்கின்றன. மேலும் தோலினால் செய்யப்படுகின்ற ஏனைய உடல் நீர்ச் சமநிலை போன்ற தொழிற்பாடுகளும் பாதிப்படைகின்றன. கூடியளவு திரவம் தோலினால் பாதிக்கப்பட்ட பகுதியினூடாக வெளியேறுகின்றது. இதனால் திரவ சமநிலை பாதிக்கப்பட்டு சிறுநீரக பாதிப்புக்கும் இட்டுச்செல்லலாம். தீக்காய நிலையில் அதிகளவான நீராகாரம் உள்ளெடுக்கப்படல் வேண்டும். வைத்தியசாலைகளில் நாளமூடாக அதிகளவு திரவம் வழங்கப்படும்.

இவ்வாறான பாதிப்புக்கள், விரும்பத்தகாத பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் கிருமித்தொற்று, சுவாசம் சம்பந்தமான மற்றும் சலவழி சம்பந்தப்பட்ட கிருமித்தொற்று என்பன ஏற்படுகின்றன. காலில் ஏற்படுகின்ற ஆழமான தீக்காயம் குருதிக் குழாய்களில் கட்டிபடும் தன்மையை ஏற்படுத்தி சுற்றயல் கலங்களுக் குரிய குருதி விநியோகத்தை, சுற்றோட்டத்தை பாதிப்படையச் செய்கின்றது. கடுமையான தீக்காய நிலைமையில் வலி காரணமாக ஆழமாக மூச்சுவிடுவதில் கஷ்டம் இருப்பதால் அதனை நோயாளர்கள் தவிர்ப்பதால் சுவாசத்தொற்று நிலைக்கு இட்டுச்செல்கிறது.

தீக்காயங்கள் குணமடைந்தாலும் பாதிக்கப்பட்ட தோலுக்கு பதிலாகப் புதிய தோல் உருவாக்கம் இடம்பெறாது, மாறாக தழும்புகள் ஏற்படுகின்றன. இது மூட்டுக்களின் அசைவுகளை மட்டுப்படுத்துகின்ற கழுத்து, கமக்கட்டு, முழங்கை, விரல்கள் என்பவற்றின் அசைவுகள் மட்டுப்படுத்தப்படுவதால் அவற்றினால் உரிய தொழிற்பாடுகளை ஆற்றமுடியாமல் போய்விடும். இதனால் நாளாந்தக் கடமைகளை ஆற்றுவதற்குக்கூட, பிறரை நம்பியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம். மேலும் வரவு வழிகள் பாதிப் படைந்து பொருளாதார நிலை பாதிப்படைகின்றது.


சிலவகையான தீக்காயங்கள், கூடுதலாக மின்சாரம் தாக்கி ஏற்படுகின்ற தீக்காயங்கள், தசைக்கலங்களை அழிவடையச் செய்வதால் சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. மேலும் தீக்காயங்கள் மூலம் அதிகளவு நீர் தோலினூடாக வெளியேறுவதால் சிறுநீரகப் பாதிப்பு நிலை ஏற்படலாம். தீக்காயங்களினால் ஏற்படுகின்ற தழும்புகள் அடையாளங்கள் போன்றவை, உடல் அமைப்பையும் தோற்றத்தையும் மாற்றிவிடும். இது சமூகவடுவுக்குக் காரணமாகிறது. சமூக அங்கத்தவர்கள் இழிவாகப் பார்க்கின்ற நிலையும் தாமாகவே சமூகத் தொடர்புகளிலிருந்து விலகி ஒதுங்கிக் கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலையும், ஏற்படுகிறது. இது ஒரு வகையான உளநோய் நிலைக்கு இட்டுச்செல்லும்.

மேலும், குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்ற, பாரபட்சம் காட்டப்படக் கூடிய நிலையைக் கூட ஏற்படுத்தலாம். இவ்வாறான தீக்காயங்களைத் தற்கொலை முயற்சியாகவோ, அன்றி கொலை முயற்சியாகவோ ஏற்படுத்தப்படுதலை நிறுத்த வேண்டும். விபத்தாக ஏற்படுவது தவிர்க்க முடியாவிடினும், பாதுகாப்பு நடை முறைகளைக் கடைப்பிடித்து விபத்து மூலம் தீக்காயங் கள் ஏற்படுவதை தவிர்க்கலாம். பாதுகாப்புக் கவசங்கள், நிதானமாகச் செயற்பாடுகள், விழிப்புணர்வு நடைமுறைகள் போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும். வீட்டில் விபத்து தீக்காயங்கள் ஏற்படாமல் பாதுகாக்கக் குழந்தைகள் மீது அவதானமாக இருத்தல். குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் சுடுநீர் வெப்ப பதார்த்தங்களை வைத்தல். மேசை விரிப்புக்கள் மேல் சுடுகறிகள், சூடான பதார்த்தங்கள் வைத்தல், என்பவை மூலம் குழந்தைகள் அவற்றை இழுப்பதன் மூலம் விபத்து தீக்காயம் ஏற்பட வாய்ப்புண்டு. அதிக முக்கியமாகத் தற்கொலை தீமூட்டல் என்பதைத் தவிர்க்க வேண்டும். அதனால் ஏற்படுகின்ற வலிகள், நோக்கள், உணர்வுகள் தனிமனிதனுக்கு மட்டுமன்றி, அவனது குடும்பத்தினர், உறவி னர், சமூகம் என எல்லோரது உடல், உள, சமூக ரீதியான, பொருளாதார ரீதியான பாதிப்பை ஏற்படுத்திவிடும். அரசுக்குக் கூட பெரியளவான செலவுத்தானத்தை ஏற்படுத்தி விடுகிறது. எனவே அறிவுத் தன்மையுடன் சிந்தித்துத் தற்கொலை நோக்கில் தீ மூட்டலில் உள்ள பாதிப்பை உணர்ந்து செயற்படு வோம். எமது உடல், உள, சமூக ஆத்மிக பொருளாதார நிலையைப் பேணுவோம்.

**திருமதி பரமேஸ்வரி பாலசூரியர்,**
**பொறுப்பு விடுதி தாதிய சகோதரி**
**விபத்து சேவை விடுதி,**
**யாழ்.போதனா வைத்தியசாலை,**

# வயிற்றுப்புண் பற்றி விழிப்பாயிருப்போம்

இன்றைய நவீன, இயந்திரமய வாழ்வியலில் பலரது முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக விளங்குவது இரப்பை அழற்சி(அல்சர்) என்பதாகும். அதாவது இரைப்பைச் சுவரில் ஏற்படுகின்ற அழற்சி அல்லது சீதமென்சவ்வின் சுரண்டலினால் இரப்பைச் சுவரின் போர்வை பாதிக்கப்படுதலாகும். இது நீண்ட நாள் செயற்பாட்டிலும், உடனடியாகவும் இடம்பெறலாம். கூடுதலாக அளவுக்கு மேற்பட்ட மதுபாவனை, புகைப்பிடித்தல், நீண்ட நாள் வாந்தி, மனஅழுத்தம் போன்றவற்றாலும், சில வகை மருந்துகளின் பக்கவிளைவாகவும் இரைப்பை அழற்சி ஏற்படுகின்றது. மேலும் ஒருவகை பக்ரீரியா தாக்கத்தினாலும் இரப்பை அழற்சி ஏற்படுவதாக அறிப்படுகின்றது. குருதிச்சோகை நிலையிலும் இரைப்பைச் சுவருக்குரிய போசணைக் குறைபாட்டினால் அழற்சி நிலை ஏற்படலாம். இரைப்பை அழற்சி நிலை முறையாகத் தீர்க்கப்படாவிடின், அது அதிகளவு இரத்தப்போக்குக்கு காரணமாகலாம்.




Peptic Ulcer Disease

அதிகமாக இரைப்பை அழற்சிக்குரிய குணங்குறியாக வயிற்றுப்போக்கு, பசிகுறைவு, வயிறு நிறைந்தது போன்ற உணர்வு சமிபாடின்மை போன்ற உணர்வுகள் காணப்படுகின்றன. இரைப்பை அழற்சி நிலையில் அதன் காரணத்தைக் கண்டுபிடித்து அதற்குத் தீர்வு காண்பதன் மூலம் இதனைக் குறைக்கலாம். அந்தவகையில் பக்ரீரியா தொற்றி னால் ஏற்பட்ட நிலைமை அதற்கு வைத்திய ஆலோசனையின் பேரின் குறிப்பிட்ட அளவுகளில் நேரம் தவறாது மருந்துகளை உட்கொள்ள வேண்டும். வயிற்றுச்சுவரில் பாதிப்பை ஏற்படுத்தும் மருந்துகளை உட் கொள்ளும் போது அமிலத்தை நடுநிலையாக்கும் மருந்துகளையும் சேர்த்து உட்கொள்ள வேண்டும் எமது நாளாந்த வாழ்க்கை நடைமுறைகளை மருத்துவ உலகுக்கு ஏற்ப மாற்றியமைப்பதன் மூலமும் இரைப்பை அழற்சி நிலையிலிருந்து பாதுகாக்கலாம்.

அதாவது மதுபாவனையை இயலுமான வரையில் குறைத்தல் அல்லது பாவனையைத் துண்டித்தல் நல்லது. மேலும் புகைத்தலை நிறுத்துதலும் இரைப்பைச் சுவரை பாதிக்கக்கூடிய இரசாயனப் பொருள்கள் மருந்துகளின் பாவனையை குறைத்தலும் அவசியம். மேலும் நாளாந்த சுகாதார நடவடிக்கைகளான கை கழுவுதல், உடற்சுத்தம், உணவுச் சுத்தம், உணவு உட்கொள்ளும் நேர இடைவெளி என்பவற்றில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். போதுமான அளவு நீராகாரம் உள்ளெடுப்பது நல்லது. சுத்தமான மருந்து கலப்பற்ற பழங்கள் உட்கொள்ளல், வீட்டுத்தோட்டத்தில் பயிரிடப்பட்ட மரக்கறிகளை அதிகளவு உட்கொள்ளல் போன்றவற்றால் இரைப்பை அழற்சி நிலை ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

உணவு உட்கொள்ளும் போது நிதானமாக போதியளவு நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். இது எல்லாச் சுரப்புக்களையும் தூண்ட உதவி செய்யும். நாளாந்தம் போதுமான உடற்பயிற்சி மற்றும் மனஅழுத்தத்தை குறைக்கும் செயற்பாடுகளான தியானம், யோகா, கலை நிகழ்வுகளில் ஆர்வம், ஏதாவது பயனுள்ள பொழுது போக்குகளில் ஈடுபடல் போன்றவற்றை மேற்கொள்ளல், போதுமான உறக்கம் என்பன இரைப்பை அழற்சி நிலை ஏற்படு தலைத் தடுக்கும். உணவு உள்ளெ டுத்த உடனே படுக்கைக்கு செல்வது, இரைப்பைச் சாற்றை களத்துக்கு கொண்டு வருவதால் அழற்சி நிலை ஏற்படலாம். எனவே உணவு உட்கொண்ட உடனே படுக்கைக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். இந்த வகையில் எமது நாளாந்த வாழ்க்கை நடைமுறைகளில் சிறந்த பழக்கங்களை வழக்கமாக்கிகொள்வதன்மூலம் இரைப்பை அழற்சி நோய் நிலையையும், அதனால் ஏற்படும் பாதக விளைவுகளையும் தடுக்கலாம்.

***திரு.பத்மராசா பத்மநிருபன்,***
***தாதிய உத்தியோகத்தர்,***
***சத்திர சிகிச்சைப் பிரிவு,***
***யாழ்.போதனா வைத்தியசாலை***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cmyk

# இன வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்றுகூடும் ஒரேயிடம் மடுத்திருப்பதியாகும்



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் – யாழ்.பல்கலைக்கழகம்

**ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இலங்கைவாழ் சிங்கள தமிழ் கத்தோலிக்க மக்கள் அனைவரும் இணைந்து மடுப்பதியில் கொண்டாடும் அதி முக்கிய பெருவிழாவையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து கிட்டத்தட்ட 300 கிலோ மீற்றர் தொலைவில் – மன்னார் மறைமாவட்டத்தின் வடக்கு கிழக்கு பகுதியில் – அடர்ந்த காட்டின் நடுவில் கானகத்துச் செல்வியாக அருள்மழை பொழியும் மருதமடு அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டு – கம்பீரமாக தலை நிமிர்ந்து காட்சி தரும் யாத்தரைத்தலமே மடு அன்னையின் யாத்தரைத்தலமாகும். 400 ஆண்டு கால பழைமை மிக்க – இலங்கையின் மிகப் பிரச்சித்தி பெற்ற மருதமடு அன்னையின் யாத்திரைத்தலமானது – சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை இனவேறுபாடுகளை மறந்து ஒன்றுகூட்டும் ஒரே ஒரு யாத்திரைத்தலமாக விளங்கி வந்துள்ளது. இலட்சக்கணக்கான மக்களை இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் ஈர்த்து வந்த இந்த யாத்திரைத்தலமானது – கடந்த மூன்று தசாப்த கால கொடிய போரினால் தென்னிலங்கை யாத்திரீகர்கள் வருகை தடைப்பட்டிருந்தாலும் – இப்போது திரும்பவும் யாத்திரீகர்களைத் தன்பால் ஈர்க்கத் தொடங்கியுள்ளது. மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே கருணை அருட் செபமாலை கனிந்திட நாம் செய்தாயே – என்ற நெஞ்சைவிட்டு அகலாத மருதமடு அன்னையின் கீதத்தை இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கிலும் பரந்து வாழும் அன்னையின் பக்தர்கள் அனைவரும் பாடி திருவிழா கொண்டாடி வருகிறார்கள். மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே என்ற பாடல் சிங்களத்திலும் தமிழ் மொழியிலும் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக பாடப்பட்டு வருகின்றது. மேற்படி இப்பாடலை 1948 ஆம் ஆண்டு மருதமடு அன்னையின் முதல் யாத்திரையின் போது யாழ்.அடைக்கல அன்னை ஆலய வாத்தியக்கருவி மீட்டுநராகவும் பாடகர் குழாம் பொறுப்பாளராகவும் இருந்த காலஞ்சென்ற யோசவ் அன்றூ என்பவர் இயற்றி இசையமைத்தார் என சி.யே.அன்ரனி பாலா அடிகளாரின் திருவழிபாடும் திரு இசையும் என்ற கட்டுரைத் திருத்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுரைக்கான தகவல்கள் மன்னார் மறைமாவட்ட குருவான மரியதாசன் சீமான் அடிகளார் தேடி வழங்கிய – மருத மடுத் திருப்பதியின் சரித்திரச் சுருக்கமும் அதன் ஞான வளர்ச்சியும் (ஆண்டு இல்லை) – என்னும் நூலில் இருந்து பெறப்பட்டன.

மடுப்பதியின் வரலாறு இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தோடு ஆரம்பமாகிறது. மன்னாரில் இருந்து பத்துக் கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் மாந்தை என்கின்ற கிராமத்து ஆலயமே மருதமடு அன்னையின் திருச்சொரூபத்தின் ஆதி இருப்பிடம் ஆகும். செபமாலை மாதா என இவர்கள் கொண்டு வந்த அன்னையின் சொரூபமே இன்று மருதமடு மாதாவாக மாறியுள்ளது. இலங்கைத்தீவை ஒல்லாந்தர் கைப்பற்றியதும் 1670 ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஒரு கொடூரமான வேதகலாபனை தொடங்க மாந்தையில் இருந்து இருபது கத்தோலிக்க குடும்பங்கள் திருச்செபமாலை அன்னையின் திருச்சொரூபத்துடன் பாதுகாப்புத்தேடி கண்டி இராச்சியத்தினுள் பிரவேசித்து வந்து சேர்ந்த கிராமமே மருதமடு ஆகும். அங்கு மாந்தை கத்தோலிக்க மக்கள் முதல் முதலாக வேத வித்தை விதைத்தனர்.

அதே காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து 700 கத்தோலிக்க குடும்பங்கள் வேதகலாபனையில்இருந்துதப்பித்துக்கொள்ள வன்னிக்காடுகளுக்கு இடம்பெயர்ந்தார்கள். பூநகரியைக் கடந்து வன்னிக்காட்டில் அலைந்து திரிந்த பின்னர் ஆச்சரியமான விதமாக மருதமடுவிற்கு வழிநடத்தப்பட்டார்கள். மாந்தையில் இருந்து வந்த இருபது கத்தோலிக்க குடும்பங்களும் யாழ்ப்பாணத்தில் இருந்த வந்த 700 கத்தோலிக்க குடும்பங்களும் மடுப்பதியில் சந்தித்து ஒரு சிறிய ஆலயத்தை அன்னையின் பெயரில் கட்டியெழுப்பியதாகவும் அதுவே மருதமடு அன்னையின் ஆரம்ப வரலாறாக அமைந்தாகவும் கூறப்படுகின்றது.

ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்ததும் வேதகலாபனை ஒழிந்து இலங்கையில் கத்தோலிக்கம் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது. கோவைக் குருமார் காலம் தொடக்கம் மன்னாரிலும் அதனை அண்மியுள்ளபிரதேசங்களிலும் இருந்து கத்தோலிக்கர்கள் மடுவிற்கு யாத்திரையாக சென்று வந்திருக்கிறார்கள். கோவில் சிறியதாக இருந்தமையால் மன்னார் கோட்டில் சக்கிடுத்தாரராய் இருந்த பறங்கியரான சிறி மோயிஸ் என்பவர் 1823 இல் ஒரு சிறிய குடிசைக்கோவிலைகளிமண்ணால்கட்டுவித்தார். ஆரம்பம் முதல் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் கீழும் பின்னர் 1981 முதல் மன்னார் மறைமாவட்டத்தின் கீழும் பரிபாலிக்கப்பட்டு வரும் மருதமடு அன்னையின் யாத்திரைத்தலமானது ஆயர்களின் அன்னை மீதான பக்தியை பற்றிப் பிடித்தே வளர்ந்துள்ளது.



1846 இல் முதல் அப்போஸ்தலிக்க ஆளுநராக பெற்றக்கினி ஆண்டகை (1846 – 1857) நியமிக்கப்பட்டார். அவர் தமக்கு உதவி புரிய அமலமரித் தியாகிகள் சபையை அழைத்திருந்தார். பெற்றக்கினி ஆண்டகையைத் தொடர்ந்து இரண்டாவது அப்போஸ்தலிக்க ஆளுநராக எஸ்.செமேரியா அ.ம.தி ஆண்டகை (1857 – 1868) நியமிக்கப்பட்டார்.இருப்பினும் இக்காலப் பகுதியில்மடுப்பதியில்அதிகதிருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. 1868 இல் மூன்றாவது அப்போஸ்தலிக்க ஆளுநராக (1868 – 1883) ஆயர் மேதகு கி.பொன்ஜின் அ.ம.தி ஆண்டகை நியமிக்கப்பட்டார். இவரின் காலத்தில் ஆலய கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு மடுப்பதி வளர்ந்து வந்ததாக அறிய வருகின்றது. 1870 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி முதல் மருதமடு அன்னையின் வருடாந்தப் பெருவிழா ஆரம்பிக்கப்பட்டதாக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தெரிவிக்கிறார்.

1872 ஆவணி எட்டாம் நாள் நாம் இப்போது காணுகின்ற மடு ஆலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டது. இவரைத் தொடர்ந்து நான்காவது அப்போஸ்தலிக்க ஆளுனராகவும் (1883 – 1887) பின்னர் யாழ் .மாவட்டத்தின் முதல் ஆயராகவும் (1887 – 1893) விளங்கிய ஆயர் மேதகு அன்ரூ மெலிசன் அ.ம.தி ஆண்டகை காலத்தில் கட்டடப்பணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு யாழ் மறைமாவட்ட இரண்டாவது ஆயராக கென்றி யூலன் அ.ம.தி ஆண்டகை (1893 – 1919) காலத்தில் முற்றுப் பெற்றது. மடுப்பதியை நாடும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கென தண்ணீர்த்தடாகம் ஆழமாக்கப்பட்டு அணை கட்டப்பட்டு உறுதியாக்கப்பட்டதுடன் குடிதண்ணீருக்குப் பல கிணறுகளும் வெட்டப்பட்டன. பின்னர் யூலன் அ.ம.தி ஆண்டகை மரணமானார்.

யாழ் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயரான எ.புறோ அ.ம.தி (1920 – 1923) ஆண்டகை 1920 ஆம் ஆண்டு அன்னைக்கு முடிசூட்டு விழா ஒன்றை நிகழ்த்த விரும்பி பாப்பரசரின் அனுமதியை வேண்டினார். 1921 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி தமது பொதுச் சந்திப்பின் போது பாப்பரசர் பதினோராம் பத்திநாதர் இதற்கான அனுமதியை வழங்கினார். இருப்பினும் ஆயர் மேதகு புறோ அ.ம.தி ஆண்டகை மரணமடைந்தமையால் யாழ் மறை மாவட்டத்தின் நான்காவது ஆயரான மேதகு ஜே.ஏ.கியோமர் அ.ம.தி ஆண்டகை (1924 – 1950) அன்னையின் முடிசூட்டு வைபவத்துடன் தம் பணியை ஆரம்பித்தார். 1924 ஆம் ஆண்டு பாப்பரசர் பதினோராம் பத்திநாதரின் பிரதிநிதி ஒருவர் அதிகார பூர்வமாக அன்னைக்கு முடிசூட்டு விழாவை மடுப்பதியில் நடத்தி வைத்தார். 1949 ஆம் ஆண்டு மருதமடு அன்னைக்கு முடிசூட்டிய 25 ஆவது வருட நிறைவும் ஆயர் மேதகு கியோமர் ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளிவிழாவும் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

ஆயர் மேதகு ஜே.ஏ.கியோமர் அ.ம.தி ஆண்டகையின்காலத்தில்மடுப்பதி சிறப்புமுக்கியத்துவம் பெற்று வளர்ந்தது. கியோமர் அ.ம.தி ஆண்டகை யாழ் மறைமாவட்டப் பணிப்பொறுப்புக்களை ஆயர் மேதகு ஜே.எமிலியானுஸ் பிள்ளை அ.ம.தி ஆண்டகையிடம் 1950 இல் ஒப்படைத்தார். யாழ் மறைமாவட்டத்தின் ஐந்தாவது ஆயராகவும் – முதலாவது சுதேச ஆயராகவும் நியமிக்கப்பட்ட ஆயர் மேதகு ஜே.எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகை காலத்தில் (1950 – 1972) மடுப்பதி விசேட முன்னுரிமை பெற்று வளர்த்தெடுக்கப்பட்டது. இதன் பின்னர் யாழ் மறைமாவட்டத்தின் ஆறாவது ஆயராகவும் இரண்டாவது சுதேச ஆயராகவும் மறைமாவட்டக் குருக்களில் இருந்து முதலாவது ஆயராகவும் நியமிக்கப்பட்ட ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையில் காலத்தில் (1972 – 1992) மடுப்பதி இன்னும் சிறப்புப் பெற்று வளர்ந்தது. மடு அன்னையின் திருச்சொருபமானது 1948 – 1974 – 2001 ஆகிய ஆண்டுகளில் மூன்று தடவைகள் மடுப்பதியை விட்டு யாத்திரையாக இலங்கையின் மறைமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அமலமரித் தியாகிகள் சபையினர் இலங்கை மண்ணுக்கு வந்த நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் விதமாக 1948 ஆம் ஆண்டு மடு மாதாவின் திருச்சொரூபம் திருயாத்திரையாக முதல் தடவையாக மறைமாவட்டத்தின் பங்குகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. மருதமடு அன்னையின் மகுடாபிசேக பொன்விழாவில் அனைவரும் பங்குகொள்ளும் பொருட்டு 1974 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக மருதமடு அன்னையின் திருச்சொரூபம் யாத்திரையாக மறைமாவட்டப் பங்குகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த மகுடாபிசேக பொன்விழாத் திருப்பலி 1974 ஆம் ஆண்டு ஜூலை இரண்டாம் நாள் கொழும்புப் பேராயரும் ஆயர் குழுவின் தலைவருமாகிய கர்தினால் தோமஸ் கூறே ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது யாத்திரையின் போது மடு அன்னையின் திருச்சொருபமானது தென் இலங்கைக்கு யாத்திரையாக எடுத்துச் செல்லப்பட்டது. 3 தசாப்தங்களாக நடைபெற்று வந்த போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் நாட்டின் அமைதிக்குச் செபிக்கும் படியான விசேட வேண்டுதலுடன் இது மேற்கொள்ளப்பட்டது. இந்த யாத்திரையின் பின்னர்தான்இலங்கையின்நீண்டகாலப்போருக்கு ஓர் இடைவெளி கொடுக்கும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயரான தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் காலத்தில் (1981 – 1992) மடுப்பதி விசேட முன்னுரிமை பெற்று வளர்ந்து வந்தது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை (1992 முதல் இன்றுவரை) காலத்தில் போரின் காரணமாக பல தடைகள் ஏற்பட்டாலும் போரின் பின்னர் மடுப்பதி புதுப்பொலிவு பெற்றது. 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அன்று இரவு 10 மணி யளவில் நடத்தப்பட்ட செல் தாக்குதலினால் 18 பேர் பலியாகினர். 65 பேர் காயமடைந் தனர். திரு இருதநாதர் ஆலயம் பலத்த சேதத் திற்கு உள்ளாகியது.

மடுப்பதியின் தற்போதைய பரிபாலகராக எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் பணியாற்றி வருகிறார்.மடுப்பதியில்யாத்திரிகர்களாகசென்று தங்க விரும்புவோர் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்னதாக பரிபால கர் மடுத் திருப்பதி மடு என்னும் விலாசத்திற்கு கடிதம் மூலமாகத் தொடர்புகொள்ளலாம். இலங்கை வாழ் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் இன மத பேதங்களைக் கடந்து தன் பாதத்தில் ஒன்று சேர்க்கின்ற மருதமடு அன்னை இலங்கை மண்ணில் எல்லா மக்களும் சமத்துவத்துடனும் சகோரத்துவத்துடனும் வாழ எதிர் வரும் தேர்தலின் பின் வழி சமைப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவினரால் அண்மையில் குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஜ)



யாழ். பல்கலைக் கழக விவசாய பீட மாணவர் ஒன்றியம் கிளிநொச்சி வைத்தியசாலை யுடன் இணைந்து ஒழுங்கு செய்த இரத்ததான நிகழ்வுகள். (ஜ-21)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் நாடாளுமன்றத்தின் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் சத்தியப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வும், அமைச்சர்களுக்குப் பெற்றோர் சின்னம் சூட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும், நாடாளுமன்ற முதலாவது அமர்வும் அண்மையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஸ்ண குமார் கலந்து சிறப்பித்தார். அமைச்சர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் சத்தியப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வு மற்றும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டவர்கள் தமது கொள்கை விளக்க உரையை முன்வைப்பதையும் காணலாம். (ஜ)



காரைநகர் அரசடிக்காடு கதிர்காம வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த திரு விழாவின் தேர்த்திருவிழாக் காட்சிகள். (ஜ-[illegible])



ஆசியா சட்ட மாணவர்கள் ஒன்றியத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட சர்வதேச சட்டக் கருத்தமர்வு மற்றும் பயிற்சிகள் கடந்த வாரம் மணிலா, பிலிப்பைன்ஸில் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. இந்தக் கருத்தமர்வில் இலங்கைப் பிரதிநிதியாக இலங்கை சட்ட மாணவர் ஒன்றிய அங்கத்தவரான யாழ். பல்கலைக்கழக சட்ட [illegible] இலங்கை சார்பாக இவர் மாத்திரமே பங்கு பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)



ச. முருகானந்தனின் "கோடை மழை" சிறுகதைத் தொகுதியின் [illegible]யீட்டு விழா அண்மையில் அல்வாய் கலையகத்தில் இடம்பெற்றது. [illegible] எழுத்தாளர் தெணியானின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்[illegible] பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடா[illegible] கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கோட்டை முனிஸ்வரன் ஆலய அலங்கார உற்சவத் தின்போது 25ஆம் திருவிழாவான தேர் உற்சவக் காட்சியைக் காணலாம். (ஐ-51)



பிரான்ஸ் நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் குருநகரைச் சேர்ந்த டேமியன் சூரியால் எழுதப்பட்ட 'யாழ்ப்பாணக் கூத்துக்கள்' நூல் வெளியீட்டு நிகழ்வு குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. எழுத்தாளர் கு.இராயப்பு தலைமையில் இடம் பெற்றது. (ஐ-51)







இணுவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் 150ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நடைபவனி, மருதனார்மடம் பல்லப்பர் வைரவர் ஆலயத்தில் இருந்து பூசையுடன் ஆரம்பமாகியது. கல்லூரி யின் பழைய மாணவ சங்க போஷகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினராக வடமாகாண சபை விவசாய அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன், பிரதேசசபை தலைவர் பிரகாஷ், வடமாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார், இலங்கை தமிழ் ஆசிரிய சங்க பொதுச் செயலாளர் சரா.சிவனேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஐ)



குருநகர் தொடர்மாடி முன்பள்ளி விளையாட்டு விழா நிகழ்வில் இடைவேளை நிகழ்ச்சியாக நடைபெற்ற முன்பள்ளி சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்வைக் காணலாம். (ஐ-51)

சங்கானை மீன் சந்தை வளாகத்தில் 'வேர்ட் விஷன்' நிறுவனத்தினரால் 2.2 மில்லியன் ரூபா செலவில், 5 தொடர் மலசல கூடங்கள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. (ஐ-29)





குருநகர் தொடர்மாடி முன்பள்ளி விளையாட்டு நிகழ்வின்போது விருந்தினர் அரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் அ.மி.இ.மகேந்திரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஜே / 68 கிராம சேவையாளர் க.நித்தியானந்தன், யாழ்.தூய மரியன்னை பேராலய உதவிப் பங்குத் தந்தை வண.பிதா எஸ்.சுதர்சன் அடிகளார் உள்ளிட்ட விருந்தினர்களைக் காணலாம். (ஐ-51)



வட்டுக்கோட்டை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலைய வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ உபகரணத்தை ப. ஸ்ரீதரன் புதிதாக நியமனம் பெற்ற வைத்தியர் திருமதி ரி.பிரிந்தாவிடம் கையளிப்பதையும் அருகே வைத்தியர் செல்வநாயகம் நிற்பதையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் உள்ளூர் முன்னேற்றங்கள் இந்தியாவுடனான உறவைப் புதுப்பிக்கும்

### இந்திய உயர்ஸ்தானிகர் நம்பிக்கை

கண்டி, ஓக. 16

இலங்கையின் உள்ளூர் விடயங்களில் ஏற்படும் முன்னேற்றங்கள், இந்தியாவுடனான அதன் உறவை புதுப்பிக்க உதவும் என்று இந்தியா தெரிவித்துள்ளது. இந்திய உயர்ஸ்தானிகர் வை கே சிங்ஹா இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இந்திய 69வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தியாவும் இலங்கையும் மிகவும் நெருங்கிய உறவுக்குரிய அயல் நாடுகள் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியா, இலங்கையுடனான உறவை பலப்படுத்திக் கொள்ள அர்ப்பணிப்புக்களை செய்து வருவதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார். (த)

## தாஜுடீன் குடும்பம் ஜனாதிபதியை சந்தித்தனர்

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுடீன் குடும்பம் ஜனாதிபதியைச் சந்தித்து, பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் தமது குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2012ம் ஆண்டு தாஜுடீன் கொல்லப்பட்டிருந்தார். ஆரம்பத்தில் வாகன விபத்தில், வாகனம் எரியுண்டு தாஜுடீன் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், இந்த மரணம் ஓர் கொலை என தற்போது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அண்மையில் தாஜுடீனின் சடலம் மீட்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

IELTS Special Class
12th September யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்
ஆரம்பம் 19-08-2015

* 60 மணி நேர வகுப்பு
* UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
* WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
* MORE THAN 10 YEARS EXPERIENCE
* VOCABULARY and GRAMMAR
* EXTENDED SPEAKING PRACTICE
THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5
BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384, 0778803887

உங்கள் உயர்கல்விக்கு யாழில் உடன் தீர்வு
நாங்கள் 200க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்களின் பிரதிநிதி
இலவச நுழைவு
துணை முகவர்கள் தேவை
Campus Direct
Your Trusted Partner in Education
www.cduk.lk

நியமனங்கள்
077 220 8030
ஆகஸ்ட் 22ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2 முதல் பி.ப 6 மணி வரை
ஆகஸ்ட் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 முதல் பி.ப 12 மணி வரை
யாழ் TILKO HOTELலில் நடைபெறுகிறது
UK: Middlesex University, Anglia Ruskin University, University of Bolton
NEW ZEALAND: nmit, IPC, Ntec
CANADA: ARBUTUS COLLEGE, CAPILANO, NOTTINGHAM TRENT UNIVERSITY, University of the West of England
MALAYSIA: SEGi University & Colleges
AUSTRALIA: Southern Cross University, CAMBRIDGE INTERNATIONAL COLLEGE

அர்ச்சகர், முகாமையாளர் தேவை
இணுவில் திருப்பதி- வேங்கடேஸ்வரர் ஆலயத்திற்கு உதவி அர்ச்சகர் தேவை, அத்துடன் ஆசாரமுள்ள முகாமையாளர்,மற்றும் கோயில் வேலை தெரிந்தஅண்மையில் வசிக்கின்ற உதவியாளரும் தேவை. தகுதி உடையவர்கள் எதிர்வரும் (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் 11 மணிவரையும் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.
கே.கே.எஸ் வீதி,
இணுவில்,
மருதனார்மடம். தொடர்பு: 077 857 6896

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்

பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை
கையிருப்பு உள்ளவரை மட்டுமே... இன்றே முந்துங்கள்!
Free! Key & Odal
0777 614 186
Gold Plated
Sri Lanka. 4, IBC, Wellawatte.
CAPTAIN TV MEGA TV

வெளிநாட்டு உயர்கல்வி
பகுதி நேர வேலைவாய்ப்புடன்
ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூர் மலேசியா
ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L
→ 2 வருட கற்கைநெறிக்கட்டணம் 350,000/=
→ கவர்ச்சிகரமான மாதாந்த கொடுப்பனவுகள்
100% விசா உத்தரவாதம் வழங்கப்படும்

ICS Study Overseas
Hotline: 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம். 021-4926222


## அறிவித்தல்

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கான புகைப்படங்களை அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட நிலையங்களூடாக அனுப்பி வைக்கும்படி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. கடந்த 10.08.2015 தொடக்கம் கீழ்வரும் 07 புகைப்பட நிலையங்கள் முதல் கட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

* www.immigration.gov.lk எனும் இணையத்தினூடாக மேலதிக விவரங்களை அறியலாம்.

### குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட நிலையங்களின் பெயர்ப்பட்டியல்

| | | |
|---|---|---|
| BOBY STUDIO | 33, GURUSOLT ROAD, JAFFNA | 077 314 4952 |
| KUMARAN STUDIO | 124,PALALY ROAD, JAFFNA | 021 222 4833 |
| OLLIYARUVI VIDEO & PHOTO | 91/2.1/1, MAIN STREET, NELLIYADY | 021 226 2850 |
| KUGAN STUDIO | 298,MAIN STREET, POINTPEDRO | 021 226 3218 |
| NIDUSHA STUDIO | MAIN STREET, NELLIYADY, KARAVEDDY | 021 226 2512 |
| KUGAN STUDIO | 019, KANDY ROAD, CHAVAKACHCHERI | 077 3039450 |
| DIGITAL OLLIYARUVI VIDEO & PHOTO | SAMIYAN ARASADY, KARAVEDDY | 021 226 3132 |

தகவல் - புகைப்பட நிலையங்கள் சார்பில்
கி.சுரேஸ் (BOBY STUDIO.)


யாழ்ப்பாணத்தில் காண்டம்
ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (Pvt) Ltd
P. ஜெய்சங்கர்
கொழும்பில் கடந்த 25 வருடங்களாக கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம் தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்பு, வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறி புகழ்பெற்ற சோதிடர் களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கிணங்கி கீழ்க் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.
தொடர்புகளுக்கு:
384A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
கைலாசபிள்ளையார் கோயில் அருகில்
தொலைபேசி: 021 2217944
கொழும்பு முகவரி:
19 1/1, கொத்தலாவல மாவத்தை,
பம்பலப்பிட்டி.
0112 586180, 0112 586208


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபல ஹோட்டல் உணவுப் பொதியில் மட்டத்தேள்

வவுனியா, ஓக. 16
வவுனியாவில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றினால் வழங்கப்பட்ட உணவுப் பொதியில் விசப்பூச்சியான மட்டத்தேள் இறந்த நிலையில் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது,
வவுனியாவில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் கடந்த வியாழக்கிழமை உணவுப் பொதியைப் பெற்ற ஒருவர் அதனை வீட்டில் சென்று பிரித்து சாப்பிட்ட போது அதனுள் விசப்பூச்சியான மட்டத்தேள் இறந்த நிலையில் காணப்பட்டமையை கண்டுள்ளார்.
இதனையடுத்து சுகாதார பரிசோதகர்களிடம் தெரியப்படுத்தியதையடுத்து குறித்த ஹோட்டல் சோதனை செய்யப்பட்டதுடன், ஹோட்டலுக்கு எதிராக நேற்றுமுன்தினம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது. (த)


### மரண அறிவித்தல்

**விநாசித்தம்பி தெய்வநாதன் (தேவன்)**



மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி தெய்வநாதன் கடந்த 13.08.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் விநாசித்தம்பி - கமலாம்பிகை தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், தமிழினியின் அன்புக் கணவரும், சோபனா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தேனுகா (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி),யசிந்தன் (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன் (பிரான்ஸ்), கருணாகரன் (நோர்வே), மோகனதாசன் (பிரான்ஸ்), கோணேஸ்வரி (வ/புதுக்குளம் மகாவித்தியாலயம் - ஆசிரியை), புஸ்பராசன்,(மன்/புனித சவேரியர் பெண்கள் கல்லூரி - ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு, மீசாலை,
077493 9439

(60578) (45 3.7)

தகவல்:
குடும்பத்தினர்.



### மரண அறிவித்தல்

மலர்வு
1928
01
01

உதிர்வு
2015
08
13



**ஞானப்பிரகாசம் சூசைமுத்து**

(முல்லைத்தீவை பிறப்பிடமாகவும், மன்னார் சின்னக்கடையை வதிவிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் சூசைமுத்து அவர்கள் 2015.08.13 அன்று வியாழக்கிழமை காலமானார்)

அன்னார் காலஞ்சென்ற ரோசம்மாவின் அன்புக் கணவரும், அல்பிரட் ஞானராஜா (கனடா), திரு. ஜோசப் ஞானராஜா (கொழும்பு), திருமதி யோசப்பின் (கனடா), திருமதி மரிஸ்ரெலா (கனடா), திருமதி மேரிமெற்றில்டா (கனடா), திருமதி. புனிதசீலி (மன்னார்), சிசிலியா செல்வராணி (கனடா), மரினா ஜெயமணி (மன்னார்), பற்றிக் ஞானராஜா (சுவிஸ்), ஜான்சி றெஜினா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இருதயமேரி, றோகினி, நவப்ராஜா, செல்வநாயகம், பூபாலராஜா, காலஞ்சென்ற ரெட்ணதுரை, பாரதிதாசன், கணேசலிங்கம், சுகந்தி, விஜயரெட்ணம் ஆகியோரின் மாமனாரும், ஜிதேந்திரா, விஜித்திரா, சொபியா, விணோத்ராஜ், றொசானி, மிதுர்ஷன், ஜென்சன், அல்லி, டொறின், ஜெறின், ஷைசன், றுக்ஷன், ஷர்மி, சிந்தியா, சிந்துஜா, றினோஜா, ஜெரோம், றுசீஸ், ஹரீஸ், கனிஸ்ரா, பவித்திரா, நிக்சன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 17.08.2015 திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித செபஸ்தியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மன்னார் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: யோசப் ஞானராஜா (மகன்) - 077 770 3391
புனிதசீலி (மகள்) - 023 225 0711

தகவல்
குடும்பத்தினர்.


# அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள் இறக்குமதியை நிறுத்த ஆராய்வு

### ஜனாதிபதி தகவல்

கொழும்பு, ஓக. 16
2018 ஆம் ஆண்டிற்குப் பின்னர் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளை இறக்குமதி செய்வதை முழுமையாக நிறுத்துவதற்கு அமைச்சரவையுடன் ஆலோசனை செய்து முடிவு செய்யவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள் ளார்.
நாட்டு மக்களின் சுகாதார ஆரோக்கிய நிலைமைகள் தொடர்பாகக் கவனத்திற் கொண்டு இந்தத் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். ஒத்துழைப்புடன் அபிவிருத்தியை நோக்கி என்ற கருப்பொருளின் கீழ் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற மட்பாண்ட மற்றும் கண்ணாடி கைத்தொழிலாளர்களது மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் தனது உரையில்,
மக்களின் ஆரோக்கியத்திற்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாகவுள்ள எஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளை இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்குத் நான் சுகாதார அமைச்சராக இருந்தபோது பல முன்மொழிவுகளை முன்வைத்த போதும் உயர் மட்டத்தில் அதற்கு ஆதரவு கிடைக்காமையினால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் போனது.
எவ்வாறான போதும் எமது நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமானவற்றை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வருபவர்களை மகிழ்விக்கும் வகையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தற்போதைய அரசாங்கம் தயாராக இல்லை.
தெளிவான ஒரு தேசியக் கொள்கையின் அடிப்படையில் தேசிய கைத்தொழிலைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
எமது நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமாகவிருந்தும் அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரியை அதிகரித்து கட்டுப்பாடுகளை விதிக்க நடவடிக்கை எடுத்து, தேசிய உற்பத்தியாளர்களைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் சூழ்நிலை யில், உயர் தரத்துடனான உற்பத்திகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுத்து தமது கடமையை நிறைவேற்ற வேண்டியது தேசிய உற்பத்தியாளர்களின் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (த)

# வாக்காளர்களையும் ஆதரவாளர்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை அவசியம்

### மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 16
வாக்காளர்களையும் கட்சி ஆதரவாளர்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.
நாளை நடைபெறவுள்ள தேர்தலில் வாக்காளர்கள் பாதுகாப்பாக வாக்களிப்பதற்கு தேவையான பின்னணி உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் வலியுறுத்தியுள்ளார்.
தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக உள்நாட்டு கண்காணிப்புக் குழுக்கள் குற்றம் சுமத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
வாக்காளர்கள், வேட்பாளர்கள் மீது அழுத்தங்கள் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ள அவர், கடந்த காலங்களில் இலங்கையில் தேர்தல்களின் போது பல்வேறு அடக்குமுறைகள் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (த)

## 8 கோடி பெறுமதியான போதைப் பொருளுடன் பெண் கைது



கொழும்பு, ஓக. 16
கட்டுநாயக்க விமான நிலையத்தில்வைத்து டுபாயில் இருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட ஒரு தொகை கொக்கெயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 8 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான 5 கிலோ 578 கிராம் கொக்கெயின் போதைப் பொருளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.
விமான நிலைய சுங்க அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# 810 வன்முறைகள் குறித்து முறைப்பாடு

கொழும்பு, ஓக. 16
நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் தொடர்பிலான அறிவிப்பு வெளியாகிய காலப்பகுதியிலிருந்து நேற்று மாலை 3.30 மணி வரையிலான காலப்பகுதியில் 810 தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.
கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி முதல் நேற்று 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே இந்த வன்முறைச்சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.
இதன்போது,143பெரிய வன்முறைச் சம்பவங்களும், 667 சிறு வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்–
பெரிய சம்பவங்கள்–143, சிறு சம்பவங்கள்–667, துப்பாக்கிப் பிரயோகம்–12, என 810 வன்முறைச் சம்பவங்களில் கொலை 04 காயம்–5, படுகாயம்–3, தாக்குதல்–46, மிரட்டலும் பயமுறுத்தலும்–8, அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில்–47,கொள்ளை–1, தீ வைப்பு –16, கடத்தல்–2, சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல்–10, இலஞ்சம்–1 என பெரிய சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் வசதிக்காக தகவல் கருமபீடம்

கொழும்பு, ஓக. 16
நாளை நடைபெறும் பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் வசதிக்காக த்கவல் கருமபீடமொன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளில் காலை 9.30 முதல் பிற்பகல் 3.30 மணி வரை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்த தகவல் கருமபீடம் நடத்தப்படும் என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.
இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதனால், இந்த நாட்களில் தவறாமல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகை தருமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அத்துடன் புதிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைக்கு புகைப்படம் எடுக்கும் நடவடிக்கையும் அன்றைய தினம் இடம்பெறும் எனவும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிடப்பட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் மற்றும் குறுந்தகவல் பரப்புரைகளைத் தவிருங்கள்

### தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தல்

கொழும்பு, ஓக. 16
எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு முகநூல் மற்றும் மின்னஞ்சல் ஊடாக தேர்தல் பரப்புரைகளைத் தவிர்க்குமாறு தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.
தேர்தலுக்கான பிரதான பரப்புரைகள் நிறைவடைந்துள்ள போதிலும், இணையத்தளம் ஊடான பரப்புரைகள் தொடர்ந்து இடம்பெறுவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.
குறிப்பாக கையடக்கத் தொலைபேசியூடாக குறுந்தகவல் மூலம் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு இணையத்தளம் ஊடான பரப்புரைகளை தவிர்க்குமாறு தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ரசாங்க ஹரிஸ் சந்திர குறிப்பிட்டுள்ளார்.
நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகள் யாவும் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்துள்ள போதிலும், தேர்தலுக்கு முன்னரான சூனிய காலப்பகுதியான 48 மணித் தியாலங்களுக்கு இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்களின் மூலமும் சட்டவிரோத பிரசாரங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
தேர்தல் சூனிய காலப்பகுதியான இந்த இரண்டு நாட்களிலும் வாக்காளர்கள் தமது வாக்குரிமை குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்கு இடமளிக்கும் வகையில் குறுந்தகவல் மற்றும் இணையத்தளம் ஊடான பரப்புரைகளை நிறுத்திக்கொள்ள வேண்டுமென பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கேட்டுக்கொண்டுள்ளார். (த)

# சுதந்திரமாகவும் நீதியாகவும் தேர்தல் நடைபெற ஏற்பாடு ஜனாதிபதி உறுதி



கொழும்பு, ஓக. 16
நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் மற்றும் நீதியானதாகவும் நடைபெறுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
நாளை நடைபெறவுள்ள தேர்தலுக்கான கண்காணிப்பு பணிகளுக்கு இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இந்த சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது–
தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் அவர்களின் கடமைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.
கடந்த ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டின் ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் பாரிய பிரச்சினைகள் காணப்பட்டன. அந்தப் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதுடன் நீதியையும் ஜனநாயகத்தையும் கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.
பொதுத் தேர்தலின் பின்னர் நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் ஏனைய அதிகாரங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சிறுமியை வன்புணர்ந்தவருக்கு ஏழு வருடங்கள் கடூழியச் சிறை

### யாழ்.மேல்நீதிமன்று தீர்ப்பு



யாழ்ப்பாணம், ஓக. 16
பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்ந்தவருக்கு யாழ்.மேல்நீதிமன்று 7 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.
காரைநகரில் 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் திகதி குறித்த வன்புணர்வுச் சம்பவம் இடம்பெற்றது. சிறுமியின் வீட்டில் சிறுமி தவிர்ந்த யாரும் இல்லாத நேரம் பார்த்து அங்கு சென்ற குறித்த இளைஞன் சிறுமியை வன்புணர்ந்துவிட்டுச் சென்றுள்ளார்.
அது தொடர்பில் சிறுமி பெற்றோருக்குத் தெரிவித்து பின்னர் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் பிணையில் வந்திருந்தார்.
அவர் தொடர்பான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டு யாழ்.மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. அது தொடர்பான வழக்கு விசாரணை நீதிபதி திருமதி கனகாம்பிகைமலர் சிவபாதசுந்தரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வந்தது. 1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையின் 364 (2) உ பிரிவின் கீழ் அவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டது.
அந்த வழக்கு விசாரணையின் பின்னர் வழக்கின் தீர்ப்பை நீதிபதி அறிவித்தார்.
குறித்த எதிரி வன்புணர்ந்தார் என்பதனை அரச தரப்பு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபித்துள்ளார்கள். எனவே குறித்த நபர் வன்புணர்ந்த குற்றத்துக்காக 7 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது மேல்நீதிமன்று. தவிர 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்றும் அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் நீதிபதி தெரிவித்துள்ளார். (த–4–ரி3)

## அதிவேகப் பாதையில் இலவசமாக பயணிக்கலாம்

கொழும்பு, ஓக.16
நாளை தெற்கு அதிவேகப் பாதை உட்பட அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளிலும் இலவசமாக பயணிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நாளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை அதிவேக நெடுஞ்சாலைகளில் இலவசமாக பயணிக்கலாம்.
வாக்காளர்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் டி.சீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (த)

# ஆறு விடுதலைப் புலிகள் கொல்கத்தாவில் கைது

### இந்திய ஊடகம் செய்தி

டில்லி, ஓக. 16
இந்தியாவின் கொல்கத்தா நகரின் மத்திய பகுதியில் உள்ள சாந்னிசௌக் பகுதியில், விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆறு பேர், சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.
கைது செய்யப்பட்ட ஆறு பேரும் இலங்கைத் தமிழர்கள் என்றும், இவர்கள் சென்னையில் இருந்து நான்கு நாட்களுக்கு முன்னர் கொல்கத்தா வந்ததாகவும், அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.
இந்தியாவின் சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்ற வேளையில் இவர்கள் ஏன் கொல்கத்தா வந்தனர் என்பது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கைது செய்யப்பட்டவர்களில், குணசேகரன் மற்றும் பாலசிங்கம் ஆகியோர் விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த தலைவர்கள் என்றும் இவர்கள் ஏதாவது நடவடிக்கைக்காக அல்லது வேவு பார்ப்பதற்காக வந்துள்ளனரா என்பது குறித்து விசாரணை செய்யப்படுவதாக, கொல்கத்தா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மேலும், இவர்கள் இந்தியாவில் செயற்படும் இடதுசாரி மாவோ இயக்கத்தினருடன் தொடர்புடையவர்களா என்று விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது. (த)

# பதவி மோகத்தை கைவிடேல் மஹிந்த சிறை வைக்கப்படுவார்

### மேர்வின் சில்வா கூறுகிறார்



கொழும்பு, ஓக. 16
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவி மோகத்தை கைவிட்டு தேர்தலிலிருந்து விலகி சிரேஷ்ட உறுப்பினர் ஒருவருக்கு வாய்ப்பளிக்க வேண்டும். இல்லாவிட்டால் தேர்தலின் பின் அவர் சிறையில் அடைக்கப்படுவார் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
மேலும் வேட்புமனுத் தாக்கலின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமைத்துவ அதிகாரத்துடன் செயற்பட்டிருந்தால் கட்சி பிளவுபட்டிருக்கும் எனவும் தெரிவித்தார். நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து கூறுகையில்–
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய கடிதம் மிகவும் நுட்பமான முறையில் எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜனாதிபதியின் சாணக்கியத்தை தெரிந்து கொள்ளலாம்.
வேட்புமனுத்தாக்கலின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைமைத்துவ அதிகாரத்துடன் செயற்பட்டிருந்தால் இந்தக் சுதந்திரக் கட்சி பிளவு பட்டிருக்கும். கட்சி மீது அவருக்கு ஆதரவு இருந்தமையால்தான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளித்தார் என அவரே குறிப்பிட்டுள்ளார்.
இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தியது மஹிந்தவின் ஆட்சியாகும். என்றாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புத்தியுடன் செயற்பட்டதால் கட்சி பாதுகாக்கப்பட்டது என்றும் கூறியுள்ளார். (த)


**காணி விற்பனைக்கு**
பலாலி வீதி, தபால் பெட்டி சந்திக்கருகில் நி.பர 2 குளி 12.37 விஸ்தீரணங் கொண்ட காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 977 3375

**வீட்டுப் பணிப்பெண் தேவை**
யாழ் நகரில் சிறு குடும்பமொன்றிற்கு வீட்டுப் பராமரிப்பு பணிகளுக்கு அனுபவம் வாய்ந்த நற்பண்புடைய 45 வயதுக்குட்பட்ட தங்கி நின்று பணியாற்றக்கூடிய பெண்மணி தேவைப் படுகின்றார். வெளிநாட்டில் பணியாற்றிய அனுபவம் இருப்பின் நன்று. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு : 077 413 7763

**தையல்**
இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீனமுறையில் தைத்துக்கொடுக்கப்படும். இடம் :-குமாரசாமி வீதி (யாழ்.பல்கலைக்கழகம் அருகில்)
076 639 9277

**தேவை**
கனகர வாகன சாரதியும், கிளினரும் உடன் தேவை.
கொழும்பு - யாழ்ப்பாணம்
தொடர்பு : 077 023 7366

**பணியாளர்கள் தேவை**
விற்பனையாளர்
காசாளர்
கணினி தரவு பதியுநர்
தொடர்பு : 077 847 3222

**வேலையாள்கள் தேவை**
திருநெல்வேலியிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
1. விற்பனையாளர்கள்
2. சிட்டை எழுதுநர்கள்
தொடர்பு : 021 222 6013
021 4921 185
077 711 0075


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது மிகக் கடுமையான அறிக்கை ஐ.நா.வில் சமர்ப்பிக்கப்படும்

***சிங்கள ஊடகம் கூறுகிறது***

கொழும்பு ஓக. 16

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான அறிக்கையானது இஸ்ரேலுக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டு அறிக்கையினை விட மோசமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. இதன்போது குறித்த ஊடகத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்தியில்– இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணை அறிக்கை அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இஸ்ரேலுக்கு எதிராக சுமத்தப்பட்ட போர்க்குற்றச்செயல்கள் தொடர்பிலான அறிக்கையை விடவும் நான்கு மடங்கு மோசமான அளவில் இலங்கைக்கு எதிரான அறிக்கை காணப்படுகின்றது.

அறிக்கையின் பிரகாரம் வன்னிப் போரை நேரில் பார்த்த 50க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகள் சாட்சியமளித்துள்ளனர்.

போர்க் குற்றச்செயல்களில் ஈடுபட்ட உலகின் வேறு எந்த நாட்டுக்கும் இவ்வாறான ஓர் அறிக்கை வெளியிடப்படவில்லை என ஜெனீவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

சாட்சியம் வழங்கியவர்கள் உண்மை சொல்கின்றார்களா அல்லது இல்லையா என்பது பற்றி ஆராயப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு நாள் தோறும் வரும் புலம்பெயர் புலி ஆதரவாளர்கள் போர்க்குற்றச் செயல்களை நேரில் பார்த்ததாக கூறும் நபர்களை அழைத்து வந்து சாட்சியமளிக்கச் செய்வதாகவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (த)

# மருத்துபீட மாணவி கொலையா? விசாரணைக்கு நீதிமன்று பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மருத்துவ ஆய்வு விஞ்ஞானப் பிரிவில் பயிலும் 3 ஆம் வருட மாணவியின் உயிரிழப்பு கொலையாக இருக்கலாம் என்று மாணவியின் பெற்றோரால் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இது பற்றிய முழுமை யான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த லோறன்ஸ் அனா எட்சிபா (வயது 24) என்ற மாணவியே தீக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த மாதம் 9 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவர் யாழ்.திருநெல்வெலியில் வீடு ஒன்றில் தங்கியிருந்து கற்றலை மேற்கொண்டு வந்திருந்தார். அவரும், அவரைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டவரும் மருத்துவ பீடத்தில் பயின்றுவரும் போது ஒருவரையொருவர் விரும்பியிருந் துள்ளனர். 2013 ஆம் ஆண்டு இருவரும் பதிவுத் திருமணம் செய்துள்ளனர். தற்போது அவர் பல்கலையிலிருந்து வெளியேறிவிட்டார். யுவதி பல்கலையில் கற்றுக்கொண்டிருக்கிறார். மாணவியைப் பதிவுத் திருமணம் செய்தவர் மருத்துவ பீடத்தில் விரிவுரையாளர் என்று கூறப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்றதையடுத்து மாணவி எரிகாயங்களுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரின் முன்புறம் பெரியளவில் எரியவில்லை. உள்ளாடைகளும் பெரியளவில் எரியவில்லை. வைத்தியசாலையில் அவரின் தலைமயிர் வெட்டப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் இருக்கும்போது மாணவி தன்னுடன் உரையாடுவதற்கு இடம் வழங்கப்படாத அளவுக்கு மயக்கம் தெளியும் போதெல்லாம் அவருக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டுள்ளது என்று மாணவியின் தாயார் கூறியுள்ள விடயம் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனித நாயகம் மூலமாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நீதிமன்றில் நேற்று முன்தினம் மாணவியின் மரண விசாரணை இடம்பெற்றபோது குறித்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. அத்துடன் பொலிஸாராலும் உரிய முறையில் விசாரணை முன்னெடுக்கப்படவில்லை என்றும் நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டது.

அவற்றைப் பரிசீலித்த நீதிவான் சம்பவம் தொடர்பான பூரண விசாரணையை நடத்தி எதிர்வரும் செப்ரம்பரில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-4)

# இந்திய, இலங்கை உறவு வலுப் பெற்று வருகிறது

***யாழ். துணைத்தூதுவர் தெரிவிப்பு***

இந்தியா, இலங்கைக்கு இடையில் அதிகமான உயர்மட்ட பயணங்கள் நடந்துள்ளமையால் இரு நாடுகளுடைய உறவுகளும் வலுப் பெற்று வருவதாக, யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆ. நடராஜன் தெவித்தார்.

யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 69 ஆவது குடியரசு தினம் நேற்று யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள துணைத் தூதுவருடைய உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தியா பெற்றிருக்கும் ஓரிரு சாதனைகள் பற்றியும் சில குறிப்புகள் பற்றியும் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். நாம் மகாத்மா காந்தி, ரவீந்திரநாத் தாகூர், சுபாஸ் சந்திரபோஸ், சுப்பிரமணிய பாரதியார், டாக்டர் அம்பேர்கார், டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் போன்ற மாமனிதர் பிறந்த மண்ணில் நாமும் பிறந்திருக்கின்றோம் என்று நினைக்கும் போது மிகவும் பெருமையாக உள்ளது.

பல வகையான கலாசாரங்களைக் கொண்ட நாடு இந்தியா. இந்துக்கள்,இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், சமணர்கள் பாரசீகர்கள் போன்ற வேறுபட்ட மதங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றுபட்டு வாழும் நாடு தான் இந்தியா. கல்வி அறிவியல் தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு, விவசாயம், மற்றும் தொழில் மயமாக்கல் போன்ற துறைகளில் இந்தியா சிறந்த வழியில் வளர்ச்சியடைந்து செல்கின்றது. கல்வியைப் பொறுத்தவரையில் இந்தியா மிக சிறப்பாக அமைகின்றது.

குறிப்பாக சுதந்திரம் அடைவதற்கு முன்னால் இந்தியாவில் 77 பல்கலைக்கழகங்கள் தான் இருந்தன . ஆனால் இன்று 8 ஆயிரத்து 407 பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோன்று தான் 578 கல்லூரிகள் தான் அப்போது இருந்தது. ஆனால் இப்போது 37 ஆயிரத்து 407 கல்லூரிகள் உருவாக்கப்பட்டு அதில் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை கணனி மென்பொருளில் உலகத்தின் முன்னிலையில் உள்ளது. உலகத்தின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அங்கே இந்தியாவின் பொருட்களையும் பொறியியலாளர்களையும் காணலாம். இதனால் தான் ஜப்பான், ஜேர்மனி , நாடுகளைப் பின்தள்ளி இன்று பொருளாதார ரீதியில் 3 ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. இந்தியா பல புரட்சிகளையும் செய்துள்ளது. ஆனால் அது அரசியல் புரட்சி இல்லை. அந்தப் புரட்சிகள் வேறுபட்டது.

இந்தியாவில் உள்ள மக்களின் தேவைக்கு அதிகமான தானியக் களஞ்சியங்கள் அங்கு உள்ளது. பால் உற்பத்தியும், தேவைக்கு அதிகமாக செய்யப்படுகின்றது. இப்படி வேறு பட்ட பல புரட்சிகளை செய்துள்ளது. இந்தியா.

இந்த வருட ஆரம்பத்தில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குப் பயணம் செய்திருந்தார். வடமாகாணத்திற்கு ஒரு பாரதப் பிரதமர் காலடி எடுத்து வைத்தது அதுவே முதல் தடவை. இந்தியா இலங்கைக்கு இடையில் அதிகமான உயர்மட்ட பயணங்கள் நடந்துள்ளது. இதனூடான இரு நாடுகளும் தங்களுடைய உறவினை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி வலுப்படுத்தி வருகின்றன.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.இதன்படி தமிழ் மக்களுக்கான யோகாப் பயிற்சியை தொடர்ச்சியாக நடத்தப் போகின்றோம். நடனக் கலையை வளர்க்கும் பொருட்டு பயிற்சி வகுப்புக்களையும் செம்ரெம்பர் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கவுள்ளோம். இப் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பிப்பதற்காக ஆசியர்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# 1,682 தேர்தல் வன்முறைகள்

கொழும்பு, ஓக. 16

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்று வரை மொத்தமாக 1,682 வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தேர்தலைக்கண்காணிக்கும் அமைப்பான கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் இம்முறை பல்வேறு பட்ட சர்வதேச அமைப்புகளும், உள்நாட்டு அமைப்புகளும் ஈடுபட் டுள்ளன.

இதன்படி நேற்றுவரை பதிவான வன்முறைகளின் பட்டியலை கபே அமைப்பு வெளி யிட்டுள்ளது.

இதில் கொழும்பில் 354, கம்பஹாவில் 114, களுத்துறையில் 58, கண்டியில் 70, மாத்தளையில் 39 , நுவரெலியாவில் 33, காலி யில் 74, மாத்தறையில் 65, அம்பாந்தோட்டையில் 89, யாழ்ப் பாணத்தில் 35, வன்னியில் 21, மட்டக்களப்பில் 33, அம்பாறையில் 31 திருகோணமலையில் 34, குருநாகலையில் 117, புத்தளத்தில் 31, அநுராதபுரத்தில் 43, பொலனறுவையில் 14, பதுளையில் 89, மொனரா கலையில் 18, இரத்தினபுரியில் 75, கேகாலையில் 44 வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன் பொதுவாக 201 வன்முறைச் சம்பவங்களும் என பதிவாகியுள்ளன.

இந்த வன்முறைகளில் மூன்று கொலைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

நாளைய தினம் அமைதியான தேர்தலை நடத்த அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும் என்பதுடன் தூய்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டியது மக்களின் பிரதான கடமையாகும் என்றும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது. (த)

# போர் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைக்கு புதிய கதவு திறக்கும்

***வெளிநாட்டு இணையத்தளம் செய்தி***

கொழும்பு, ஓக. 16

இலங்கை நாடாளுமன்ற தேர்தலின் முடிவுகள் உள்நாட்டு போரின் போது நடைபெற்ற போர் குற்றங்கள் குறித்தான முழுமையான விசாரணைகளுக்கு புதிய கதவுகளை திறக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்படுத்தியுள்ளதென வெளிநாட்டு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த உள்நாட்டுப் போரில் பலரும் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காணாமல் போயினர்.

அவர்களது புகைப்படங்களை மட்டுமே வைத்துக்கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த அவர்களது குடும்பத்தினர் நம்பிக்கையுடன் காத்துக் கிடக்கின்றனர். ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கு குடும்பத்தினர் தங்களின் உறவுகளைத் தொலைத்துத் தேடி அலைவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் தற்போது இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தலின் முடிவுகள் மூலம் தங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று காணாமற் போனவர்களின் குடும்பத்தினர் எதிர்ப்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

இதேவேளை காணாமற் போனவர்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆலோசனைகள் நடத்தி வருவதாக சில அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போரின் போது நடைபெற்ற குற்றங்கள் குறித்தான ஐநாவின் மனித உரிமைகள் சபையின் அறிக்கைகள் விரைவில் வெளியாகவுள்ளது. அதன் பிரதி இம்மாத இறுதியில் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

மைத்திரிபால சிறிசேன அரசானது காணாமற் போனவர்கள் தொடர்பான விடயத்தில் நேர்மையாக செயல்படுவார் என்று பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர் எனவும் அதில் குறிப்பிடப்பட் டுள்ளது. (த)

# சட்டவிதிமுறைகளை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

***பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு***

கொழும்பு, ஓக. 16

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தேர்தல் சட்டவிதிமுறைகளை மீறிச் செயற்படுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் மா அதிபர் எம்.கே. இலங்ககோன் அறிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில்,

நாளை 17ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது இடம்பெறும் தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தேர்தல் முடியும் வரை பொலிஸ் திணைக்களம் கூடுதல் விழிப்புணர்வுடன் செயற்படும்.

எவர் தவறிழைத்தாலும் அவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கையெடுக்கப்படும். நாடு தழுவிய ரீதியில் பொலிஸார் சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றனர். பொலிஸாருக்கு யாரும் ஆணை பிறப்பிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்



கனவில் உருவெடுத்து ஆடும் நாயகியே...என்ற பக்திய பாடல் இறுவட்டு ஓமந்தை ஸ்ரீநாகபூசனி அம்மன் ஆலயபரிபாலன சபைத்தலைவரும் பிரதேசசெயலாளருமாகிய சி.குணபாலன் தலைமையில் வெளியிடப்பட்டது. விழாவில் பிரதம விருந்தினராக தமிழருவி த.சிவகுமாரன் கலந்து கொண்டார். இதன் போது இறுவட்டில் பங்காற்றிய வர்கள் ஆலய பரிபாலனசபையால் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-402)




தாவடி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையின் 140 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தாவடி இந்து என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. பாடசாலையின் அதிபர் நா.தன பாலசிங்கம் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் பிரதம விருந் தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளை யாட்டு மற்றும் இளைஞர் விவ கார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் நூலை வெளியிட்டு வைக்க பழைய மாணவனும் ஐக்கிய ராஜ்ஜியத்தின் வைத்திய கலாநிதியுமான பொ.ஆறுமுக ராசா பெற்றுக் கொண்டார். (ஐ-86)



இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல் கலாமின் நினைவு அஞ்சலி எழுத்தாளர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது. அதன்போது மாமனிதர் அப்துல் கலாமின் உருவப்படத்துக்கு ஈகச் சுடர் ஏற்றி மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-56)



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் மாணவர்களின். இளைஞர்களின் கனவு நாயகனுமான அப்துல் கலாமின் நினைவு நிகழ்வு அவரது நாமம் தாங்கி செயற்படும் அப்துல் கலாம் இளைஞர் முன்னேற்ற கழகத்தால் கிளிநொச்சி கனகபுரத்தில் கழக மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் நூற்றுக் கணக்கான மாணவர்கள்.இளைஞர்கள் கலந்து கொண்டனர். (ஐ)



வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் தமிழ்த்தினவிழா வவுனியா தெற்கு கல்விவலயத்தின் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெற்றது. விழாவின் இறுதியில் வவுனியா தெற்கு கல்விவலயத்தினால் நடத்தப்பட்ட தமிழ் தினப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-402)



காரைநகர் அரசடிக்காடு கதிர்காம வேலா யுத சுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற தீமிதிப்பு நிகழ்வில் பக்தர்கள் தீமிதித்து தங்களது நேர்த்திக் கடன்களை நிறை வேற்றினர். (ஐ250)



மறைந்த கலைஞர் எம் .எஸ் விஸ்வநாதனுக்கு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் எற்ப்பாட்டில் அஞ் சலி நிகழ்வு இடம் பெற்றது. நிகழ்வுக்கு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் தமிழ் மணி அக ளங்கன் தலைமை தாங்குவதையும் பேச்சாளார் எஸ்.எஸ். வாசன் உரையாற்றுவதையும் ஈழத்து சௌந்தராஜன் கே.ஆர்.சிவசோதி இசை அஞ்சலி செய்வதையும் படத்தில் காணலாம். (ஐ-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு உதவிய சரியோ



படல்கமயில் அமைந்துள்ள முன்னணி ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனமான சிரியோ லிமிடெட், மாபெரும் சமூக பொறுப்புணர்வு செயற்திட்டமொன்றை அண்மையில் முன்னெடுத்திருந்தது. மேல் மற்றும் வடமேல் மாகாணங்களைச் சேர்ந்த 28 சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு ஒரே நாளில் விஜயம் செய்து அவற்றில் வதிவோருக்கு அவசியமான பொருள்கள் மற்றும் களியாட்ட ஏற்பாடுகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர்.

சிரியோ லிமிடெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஃபீலிக்ஸ் பெர்னான்டோவினால் இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த திட்டத்துக்காக 20 சிறுவர் இல்லங்களையும், 8 முதியோர் இல்லங்களையும் கம்பஹா, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலிருந்து கம்பனி தெரிவு செய்திருந்தது. இந்த செயற்திட்டத்தை முன்னெடுக்கும் முன்பாக இந்தபகுதிகளில்காணப்படும்தேவைகள் குறித்து சிரியோ நிறுவனத்தின் ஊழியர்கள் தன்னார்வ அடிப்படையில் முன்வந்து ஆய்வுகள் மூலமாக கண்டறிந்திருந்தனர்.

தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கமைய, உலர் உணவுப் பொருள்கள், இனிப்புப் பண்டங்கள், ஆடைகள், சிறுவர் ஆடைகள், கட்டில் மேலுறைகள், காகிதாதிகள், பாடசாலைப் புத்தகங்கள், மருந்துகள், நீர் வடிகட்டிகள், வாசிப்புச் சாதனங்கள், விளையாட்டு உபகரணங்கள், போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரங்கள், இரும்பு அலுமாரிகள், குடைகள், தூய்மையாக்கல் பொருள்கள், காஸ் அடுப்புகள், பேர்ஃபியும்கள் மற்றும் பண உதவிகள் போன்றன சிரியோ லிமிடெட் நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்தன.

மேலும், இரு முதியோர் இல்லங்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கமைய, நிறுவனத்தினால் தலவில புனித. அந்தோனியார் தேவாலயத்துக்கு தலயாத்திரிகை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. மேலும், சிரியோ கம்பனியினால் இந்த இல்லங்களுக்கு வர்ணம் பூசுதல், அவர்களின் தோட்டப்பகுதிகளை தூய்மையாக்கல் மற்றும் ஆடைகளை கழுவிக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கம்பனியின் ஊழியர்கள் இந்த செயற்பாடுகளில் பெருமளவு ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிரியோ நிறுவனத்தில் பணியாற்றும் 1200 வரையிலான ஊழியர்கள் இந்த செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் இந்த சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களில் வசிப்போருடன் தமது பொழுதைச் செலவிட்டிருந்தனர். தமது சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்திருந்த அன்பளிப்புகளையும் இவர்களுக்கு வழங்கியிருந்தனர். அத்துடன், சகலருக்கும் மதிய உணவு மற்றும் தேநீர் ஆகியவற்றையும் சிரியோ வழங்கியிருந்தது.

சிரியோ லிமிடெட் நிறுவனத்தின் பராமரிப்பு பொறியியலாளர் மஞ்சு அபேதீர கருத்து தெரிவிக்கையில், 'இடங்களை தெரிவு செய்வதற்காக கம்பனியின் ஊழியர்கள் தம்மை அர்ப்பணித்திருந்ததுடன், அதன் காரணமாக இந்த திட்டத்தை ஆரம்பிக்க முடிந்தது. எமது ஊழியர்கள் வசிக்கும் பிரதேசங்களை அண்மித்து இந்த சில இல்லங்கள் அமைந்துள்ளன. இந்த இல்லங்களுக்கு அவர்கள் விஜயம் செய்திருந்த போது கிடைத்திருந்த வரவேற்பு என்பது மிகவும் உருக்கமானதாக அமைந்திருந்தது. இந்த சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களில் வசிப்போர், நன்கொடைகளை வழங்குவோர் அவற்றை வழங்கி விட்டு விரைவில் காணாமல் போய் விடுவர் என்று கூறினார்கள்' என்றார். (த)

# செலான் வங்கி 43 வீத இலாப அதிகரிப்பை பதிவு செய்கின்றது



செலான் வங்கியானது 2015 ஜூன் 30ஆம் திகதி முடிவடைந்த 6 மாதங்களில் வருமான வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 2,579 மில்லியனை பெற்றுக் கொண்டதன் மூலம், அரையாண்டு காலப் பகுதியில் சிறப்பான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருக்கின்றது. இந்த அரையாண்டு காலப்பகுதியில் வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 1,740 மில்லியனாக காணப்பட்டது. 2014ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,212 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது 43% அதிகரிப்பாக காணப்படுகின்றது.

காலாண்டுக்கான (2015 இன் 2ஆம் காலாண்டுக்கான) வரிக்குப் பின்னரான இலாபமானது, ரூபா 1,089 மில்லியனாக பதிவு செய்யப்பட்டதுடன், கடந்த வருடத்தின் இதே 3 காலப் பகுதியில் செலான் வங்கி பெற்றுக் கொண்ட ரூபா 698 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 56% அதிகரிப்பாகவும் காணப்படுகின்றது.

30 ஜூன் 2015 இல் முடிவடைந்த 6 மாத காலப்பகுதியில் செலான் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 5.16 பில்லியனில் இருந்து ரூபா 5.83 பில்லியனாக 13% இனால் அதிகரித்துள்ளது. ரூபா 1,055 மில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் ரூபா 1,191 மில்லியனாக 13% இனால் அதிகரித்திருக்கின்றது. கடந்த சில வருடங்களாக செலான் வங்கி அடையப் பெற்ற திடமான வளர்ச்சிப் போக்கின் தொடர்ச்சியான தன்மையை வெளிப்படுத்துவதாக இது காணப்படுகின்றது.

ரூபா 155 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த செலான் வங்கியின் தேறிய முற்பண தளத்தின் பெறுமதியானது 2015இன் முதலாவது அரையாண்டு காலப்பகுதியில் ரூபா 162.7 பில்லியனாக அதிகரித்தது. அதேவேளை வைப்புத் தளமானது ரூபா 185.9 பில்லியனில் இருந்து, ரூபா 190.5 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2015 ஜூன் மாத இறுதியில் செலான் வங்கியின் குறைந்த செலவிலான வைப்புத் தளமானது 38% ஆக உயர்ந்த நிலையில் காணப்பட்டது.

செயற்றிறன் வாய்ந்த மீள் அறவீடு மற்றும் மறுசீரமைப்பு முயற்சிகளின் பயனாக, தனது சொத்துத் தரத்தை மேம்படுத்துவதற்கு வங்கியினால் முடிந்துள்ளது. இதன் காரணமாக, 2014 இன் டிசம்பரில் 7.69% ஆக காணப்பட்ட தேறிய செயற்படா சொத்துக்களின் பெறுமதியை , 2015 ஜூன் மாத இறுதியில் 6.53% ஆக குறைப்பதற்கு செலான் வங்கிக்கு இயலுமாகியுள்ளது. 2009ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுத்த - மையப்படுத்தப்பட்ட, நிலைபேறான மற்றும் செயற்றிறன் வாய்ந்த மீள் அறவீட்டு முயற்சிகளின் ஊடாக தன்னுடைய சொத்து தரத்தை தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்வதற்கு செலான் வங்கியினால் முடிந்திருக்கின்றது.

செலான் வங்கி தனது 4 வருட (2012 2016) 'மூலோபாய திட்டத்தை' அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இத்திட்டமானது முற்பணம்/ வைப்பு அதிகரிப்பு, கிளை விரிவாக்கம், வாடிக்கையாளர் சேவை மேம்படுத்தல், ஊழியர் அபிவிருத்தி, செயற்படா சொத்துக்களை (NPA) குறைத்தல், கிர யக் கட்டுப்பாடு, புதிய உற்பத்தி அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, பங்குதாரர்களின் பெறுமதி போன்ற பல விடயங்களில் குறிப்பிடத்தக்க கவனத்தை செலுத்துகின்றது. வசதி குறைந்த பாடசாலைகளில் 100 நூலகங்களை திறந்து வைப்பதையும் இந்த மூலோபாய திட்டம் குறித்துரைத்துள்ளது. அந்தவகையில் 2013ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வங்கியினால் இவ்வாறான 70 பாடசாலை நூலகங்கள் திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றன.

வாடிக்கையாளர்களின் சேவை அனுபவத்தை மேலும் மேம்படுத்தும் நோக்கில், கிளை இடம் மாற்றம் மற்றும் புதுப்பொலிவூட்டல் செயற்றிட்டமும் 2015இன் முதலாம் அரையாண்டு காலப்பகுதியில் முழு முயற்சியில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. 2015 ஜூன் மாத இறுதியில் இருந்தபடி, வங்கியின் 75% ஆன கிளை வலையமைப்பு புதுப்பொலிவூட்டப்பட்டுள்ளது. 2015 ஜூன் 30ஆம் திகதியன்று இருந்தபடி செலான் வங்கியின் சேவை நிலைய வலையமைப்பானது 159 கிளைகள், 181 ஏரிஎம் மையங்கள் மற்றும் 93 மாணவர் சேமிப்பு நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

செலான் வங்கி இவ்வாறான சிறந்த தொழிற்பாடுகளை மேற்கொண்டதன் பயனாக, 2015 இன் இரண்டாம் காலாண்டில் பங்கொன்றிற்கான உழைப்பு ரூபா 5.04 ஆக காணப்பட்டதுடன், (வரிக்கு முன்னரான இலாபத்தில்) சொத்துக்கள் மீதான வருமானம் மற்றும் பங்குரிமை மீதான வருமானம் ஆகியவை முறையே 2.03% ஆகவும் 14.52% ஆகவும் உயர்ந்த மட்டத்தில் பதிவாகியது. அதேவேளை, 2015 ஜூன் 30ஆம் திகதி இருந்தபடி செலான் வங்கியின் பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதியானது ரூபா 71.48 ஆக (குழுமம் ரூபா 74.88) காணப்பட்டது.

(த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவியை ஏற்பதற்குத் தயார்

## பௌசி நேற்று அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஒக. 16

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றால் சிரேஷ்ட உறுப்பினர்கள் 7 பேரில் ஒருவருக்கே பிரதமர் பதவி வழங்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தலில் எனது பெயரை உள்வாங்கியுள்ளமையானது சிறுபான்மை சமூகத்தையே அவர் கௌரவித்துள்ளார் என்பதனை வெளிக்காட்டியுள்ளது.

இவ்வாறு முன்னாள் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

அதன் காரணமாகவே அப்பதவியை நான் புறக்கணிக்கவில்லை. அப்பதவியை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொதுத் தேர்தலில் 113 ஆசனங்களுக்கு அதிகம் பெற்று ஆட்சி அமைத்தாலும் பிரதமர் பதவி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்படமாட்டாது என்று கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அறிவித்திருந்தார். அத்துடன் ஐ.ம.சு.மு. பிரதமர் பதவி சிரேஷ்ட உறுப்பினர்களான அதாவுத செனவிரட்ன, ஜோன் செனவிரட்ன, சுசில் பிரேமஜயந்த, அநுர பிரயதர்ஷன யாப்பா, நிமல் சிறிபால டி சில்வா, சமல் ராஜபக்ஷ மற்றும் ஏ.எச்.எம். பௌசி ஆகியோரில் ஒருவருக்கே வழங்கப்படும் என்றும் கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தார்.

எனினும், மறுநாள் குறித்த 7 பேரில் பௌசி தவிர்ந்த 6 பேரும் மஹிந்தவுக்கே பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டும் என்றும், தமக்கு அந்தப் பதவி வேண்டாம் என்றும் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தனர்.

இது தொடர்பில் ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக உள்வாங்கப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியிடம் நேற்று 'உதயன்' வினவியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்றால் பிரதமர் பதவிக்கு மஹிந்த ராஜபக்ஷவை நியமிக்காது சிரேஷ்ட உறுப்பினர்களையே நியமிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்துள்ளார். இதில் எனது பெயரை உள்வாங்கியமையானது இந்நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகத்தினர் அனைவரையும் கௌரவிக்கும் செயற்பாடாகும். சிறுபான்மை மக்களுக்கு இந்நாட்டில் அதிகாரம் இல்லை எனத் தெரிவிக்கும் பேரின வாதிகளுக்கு சாட்டையடியாக இந்த அறிவிப்பு உள்ளது.

எமக்கும் இந்நாட்டில் உயர் பதவியை வகிக்க அதிகாரம் உள்ளதை ஜனாதிபதி மைத்திரி பால எடுத்துக் காட்டியுள்ளார். இந்த அறிவிப்பானது கட்சிக்காக நான் ஆற்றிய சேவைகளுக்கு கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரமாகும்.

இந்தப் பதவியை நான் விரும்பவில்லை. என்றாலும் ஜனாதிபதி இப்பதவியை தருவாராயின் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராகவே உள்ளேன். சிறுபான்மை மக் களைக் கௌரவித்த தலைவரின் தீர்மானத்துக்கு எதிராக நான் செயற்பட முடியாது. அவரே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர். அவரது தீர்மானங் களுக்கு நாங்கள் செவிசாய்க்க வேண்டும்.

மற்றைய உறுப்பினர்கள் மறுப்புக் கடிதம் அனுப்பினார்கள் என்பதற்காக என்னால் அவ்வாறு செய்ய முடியாது. நான் எனது மனச்சாட்டிப்படியே செயற்படுகின்றேன்.

நாங்கள் தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை வெற்றிகொள்வோம். பிரதமர் யார் என்பதனை ஜனாதிபதியே தீர்மானிப்பார். அவருக்கு அந்த அதிகாரம் உள்ளது. மஹிந்த ராஜபக்ஷ இந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் எதிர்ப்பாகவே இருந்தேன். ஜனாதிபதி பதவி வகித்த ஒருவர் பிரதமர் பதவி வகிப்பது என்பது நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்றாகும் –என்றார். (த–சி)

# ஜனநாயக ரீதியான பண்புகள் இலங்கையில் முன்னேற்றம்

## குடியரசுத் தினத்தில் இந்தியத் தூதுவர் கருத்து

கொழும்பு, ஒக. 16



இலங்கையில் ஜனநாயக ரீதியான பண்புகள் பாரிய அளவில் வளர்ச்சியடைந்து வருகின்றன. இதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா தெரிவித்தார்.

கொழும்பு – 03 இல் அமைந்துள்ள இந்தியன் மாளிகையில் நேற்று இடம்பெற்ற 69ஆவது இந்திய சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலவின் முதலாவது வெளிநாட்டு விஜயமான இந்திய விஜயத்தாலும் இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைப் பயணத்தாலும் இலங்கை – இந்தியாவுக்கிடை யேயான உறவு புத்துயிர் பெற்றுள்ளது. அத்துடன் பொருளாதாரமும் வலுப்பெற்றுள்ளது. இதற்குக் காரணம், இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றமாகும்.

இலங்கை மற்றும் இந்திய உறவைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல இந்தியத் தூதரகம் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற் கொள்ளும்.

இந்தியாவின் நன்கொடையில் கட்டப்படும் 50 ஆயிரம் வீடுகள் விரைவில் கட்டிமுடிக்கப்படும். இதுவரை மலையகத்தின் பதுளை, நுவரெலியா ஆகியா மாவட்டங்களில் நான்காயிரம் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. அவை விரையில் உரிய முறையில் கையளிக்கப்படும்.

இலங்கை – இந்திய நாடுகளுக்கிடையில் சுற்றுலா விசா வசதி நீடிப்பது தொடர்பில் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதுதொடர்பில் பேசித் தீர்மானிக் கப்படும்.

நாளைமறுதினம் (நாளை) நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரும் இலங்கை – இந்தியாவுக்கிடையில் ஜனநாயக ரீதியான பண்புகளை முன்நோக்கிச் கொண்டு செல்ல வேண்டும் – என்றார். (த–சி)

### ஐ.தே.கவின்

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டில் அவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

அவ்விடத்தில் மறைந்து நின்ற இனந்தெரியாத இளைஞர் ஒருவர் தன்னிடமிருந்த துப்பாக்கியால் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிதாரியைக் கைது செய்யும் பொருட்டுப் பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர். இந்தச் சம்பவத்தின் பின்னணி தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த–10)

### முறைப்பாடுகள்

தெரிவித்துள்ளார்.

இம்முறை பல்வேறுப்பட்ட சர்வதேச அமைப்புகளும், உள்நாட்டு அமைப்புகளும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. தேர்தல் தொடர்பில் முறைபாடுகள் ஏதும் ஏற்படின் அதனை மேற் குறிப்பிட்ட இலக்கத்தை தவிர்த்து கபே அமைப்பிலும் பதிவு செய்யலாம் என கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக் கோன் தெரிவித்துள்ளார்.

அத்துடன அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலும் முரண் பாடுகளை பதிவுசெய்ய லாம் என ஏற்கனவே தேர்தல் ஆணை யகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

### முக்கிய

போட்டியாக இந்தத் தேர்தல் அமைந்திருக்கிறது.

அதேவேளை – தெற்கிலும் கடும் போட்டி நிலவுகிறது. தெற்கில் போட்டியிடும் பிரதான அணிகள் இரண்டும் ஆரம்பம் முதலே கடுமையாக மோதிக்கொண்டன. இரு தரப்புக்கும் இடையிலான பெரும் பலப் பரீட்சையாக இந்தத் தேர்தல் அமையப்போகிறது என அரசியல் விமர்சகர்கள் கூறியுள்னளர். தெற்கில் போட்டியிடும் இரு பிரதான அணிகளுக்கும் மிக நெருக்கமான முடிவுகளே கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அந்த இரு அணிகளில் யார் ஆட்சி அமைப்பதென்றாலும் அதற்கு சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு இம்முறை கட்டாயம் தேவைப்படும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால் வடக்கிலும் தெற்கிலும் கடுமையான போட்டி இம்முறை ஏற்பட்டிருக்கிறது.

இந்த 8ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் வாக்களிப்பதற்குத் தகுதிபெற்றுள்ளனர்.

இவர்களின் வாக்குகள் மூலம் 196 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்படவுள்ளனர். அதேவேளை, தேசியப்பட்டியல் ஊடாக 29 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். கட்சிகள் பெறும் வாக்கு களின் அடிப்படையில் நாடாளுமன்றத்திற்கான தேசியப்பட்டியல் பகிர்வு இடம்பெறவுள்ளது.

அந்தவகையில், நாடாளுமன்றில் 225 ஆசனங்களுக்காக அரசியல் கட்சிகளின் சார்பில் 3 ஆயிரத்து 653 உறுப்பினர்களும், சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 2 ஆயிரத்து 468 உறுப் பினர்களுமென மொத்தமாக 6 ஆயிரத்து 151 பேர் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். (த)

### வாக்காளர்

பெற்றுக் கொள்ளமுடியும் என்று யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் நா. வேதநாயகன் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

இடம்பெயர்வு காரணமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ உங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காவிடின் உங்கள் பகுதி அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்று உங்கள் ஆள் அடையாளத்தை நிரூபித்து வாக்காளர் அட்டையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அவ்வாறு உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டை இல்லாவிடினும் உங்கள் பெயர் வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டிருப்பின் நீங்கள் உரிய ஆவணங்களுடன் உங்கள் வாக்கெடுப்பு நிலையத்துக்குச் சென்று உங்கள் வாக்கைச் செலுத்தலாம் என்று அறிவுறுத்தியுள்ளார். (த–4)

### ஆளடையாளத்தை

டுக்கான வாக்காளர் பெயர் பட்டியலே, நாளைய தேர்தலிலும் பயன்படுத்தப்படவுள்ளது. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்திருந்தவர்கள், தமக்கான வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாவிட்டாலும், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியும். வாக்களிப்பதற்கு, ஆளடையாளத்தை நிரூபிக்க கூடிய, தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், தேர்தல்கள் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை உள்ளிட்டவற்றை எடுத்துச் செல்ல முடியும். (த–5)

### இடம்பெயர்ந்தோர்

சென்று அங்கிருந்து தெல்லிப்பழை வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைவிட கரவெட்டிப் பிரதேச செயலகம், கோப்பாய் பிரதேச செயலகம், பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திலிருந்து 2 வழிகளிலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து 2 வழிகளிலும் வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்வதற்கான பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. காலை 7.30 மணியிலிருந்து பிற்பகல் வரை இந்த பஸ்கள் பணியில் ஈடுபடும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

### அச்சப்படாமல்

முடியும் என்று மக்கள் மத்தியில் சிலர் பொய்யான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதனூடாக வாக்காளர்களை அச்சுறுத்தியும் வருகின்றனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், யாருக்கு வாக்களிக்கப்பட்டது என்பதை யாராலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் கண்டுபிடிக்க முடியாது. எனவே பொதுமக்கள் அச்சமின்றி தமது வாக்குகளைச் செலுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார். (த–5)

### இரு

தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

தொகுதி வாரியான தேர்தல் முடிவுகள் நாளை மறு நாள் அதிகாலை முதல் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–5)

### நாளை

வுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலிருந்து நேற்றையதினம் வாக்குப் பெட்டிகள் யாழ்.மத்திய கல்லூரிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மரத்திலான வாக்குப் பெட்டிகளே இந்தத் தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு மத்திய கல்லூரிக்குக் கொண்டுவரப்பட்ட வாக்குப் பெட்டிகள் பொலிஸாரால் நேற்று மாலை சோதனையிடப்பட்டது. இன்று காலை 7.30 மணி தொடக்கம், மத்திய கல்லூரியிலிருந்து வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. இதன் காரணமாக மத்திய கல்லூரி முன்பாகவுள்ள வீதி மூடப்படவுள்ளது. மேலும் தேர்தல்கள் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக மேலதிக தேர்தல் ஆணையாளர் மொஹமட் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

இன்று காலை முதல், நாளை மாலை 3 மணிவரை, வாக்களிப்பை ஊக்குவிப்புச் செய்யுமுகமாக, தேர்தல்கள் திணைக்களத்தினால் ஒலிபெருக்கி ஊடாக அறிவிப்புச் செய்யப்படவுள்ளது.

இதேவேளை, வாக்குரிமை உள்ள ஒவ்வொருவரும் நாளை காலை நேரத்துடனேயே, தமது வாக்குகளைச் செலுத்துமாறு அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (த–5)

### சர்வதேச

லகம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, பவ்ரல் அமைப்பின் அழைப்பின் பேரில், சர்வதேச கண்காணிப்பாளர்கள் 15 பேரும், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் அழைப்பின் பேரில் 30 சர்வதேச கண்காணிப்பாளர்களும் இலங்கை வந்துள்ளனர் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

இந்த சர்வதேச கண்காணிப்பாளர்கள் நாட்டின் அனைத்து தேர்தல் தொகுதிகளுக்கும் சென்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவுள்ளனர்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் சர்வதேச கண்காணிப் பாளர்களால் தேர்தல் தொடர்பான முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டு தேர்தல்கள் ஆணையாளரிடமும் தமக்கு அழைப்பு விடுத்துள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளிடமும் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தல் பணிகளுக்காக சுமார் 1,25,000 அரச ஊழியர்களை ஈடுபடுத்தவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வாக்குகளை எண்ணும் பணிகளில் மாத்திரம் சுமார் 70 ஆயிரம் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த தேர்தல் செயலகம் திட்ட மிட்டுள்ளது. (த

### மாவையின்

ராசாவின் வீட்டின் மீது நேற்று இரவு குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலால் அவரது வீட்டின் கேற் சேதமடைந் துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு 11.30 மணியளவில் யாழ்.மாட்டீன் வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மாட்டீன் வீதி வழியாக வந்த இனந்தெரியாதோர் அவரது வீட்டின் மீது வெடிகுண்டு ஒன்றை வீசிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இதனால் தனது வீட்டின் கேற் சேதமடைந்துள்ளதாக மாவை சேனாதிராசா நேற்று இரவு 'உதயனுக்கு'த் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு வேட்பாளரான என்.ஸ்ரீகாந்தாவின் வீடு மீதும் நேற்று இரவு குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனைப்பந்திப் பகுதியில் அமைந்துள்ள அவரது வீடு மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது குறித்து வேட்பாளர் ஸ்ரீகாந்தா யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றேஞ்சர்ஸ், நவஜீவன்ஸ் அணிகளுக்கு வெற்றி



கரணவாய், ஓக. 16

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றி பெற்றன.

***றேஞ்சர்ஸ் எதிர் சென்சேவியர்***

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடைபெற்று வரும் இந்தத்தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் பதின்ம நிமிடங்களில் றேஞ்சர்ஸ் சார்பாக அடுத்தடுத்து இரு கோல்களை அடித்து அணியைப் பலப்படுத்தினார் ரவிவர்மன். வேறெந்த கோலும் பதியப்படாத நிலையில் 2:0 என்று நிறைவடைந்தது றேஞ்சர்ஸின் ஆட்டம்.

இரண்டாம் பாதியில் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் றேஞ்சர்ஸ். பழிதீர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் சென்.சேவியர். றேஞ்சர்ஸிற்கு அதிகப்படியான வாய்ப்புக்கள் அமைந்த போதிலும் நழுவ விடப்பட்டன. சேவியரால் கோல் கணக்கு தொடங்கப்படாத வரையில் றேஞ்சர்ஸின் நிலைமை பாதுகாப்பானதுதான். இருப்பினும் 38 ஆவது நிமிடத்தில் சுதாவும் 44 ஆவது நிமிடத்தில் கௌதமனும் றேஞ்சர்ஸின் இருப்பைப் பலப்படுத்த கிட்டத்தட்ட அந்த அணியின் வெற்றி உறுதியாகியது. ஆட்டம் முடிய 4 நிமிடங்கள் இருந்த வேளையில் சென்.சேவியர் தமது முதல் மற்றும் ஒரே கோலைப் பதிவுசெய்ய 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது றேஞ்சர்ஸ்.

***நவஜீவன்ஸ் எதிர் யங் கம்பன்ஸ்***

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த நவஜீவன்ஸ் யங்கம்பன்ஸ் கோல் போடுவதனை தடுத்து நிறுத்தியதுடன் தமது கோல்கணக்கையும் ஆரம்பித்தனர். அவ்வணியின் முன்களவீரர் ஈசானந் 2 ஆவது மற் றும் 17 ஆவது நிமிடங்களில்கோல்விளாச 2:0 என்றநிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதியிலும் நவஜீவன்ஸின் ஆதிக்கம் தொடரவே செய்தது. இரண்டாம் பாதியின் 7 ஆவது 18 ஆவது நிமிடங்களில் கௌதமனும் 14 ஆவது நிமிடத்தில் ரவிசாந்தும் கோல் பதிய தற்பொழுது நவஜீவன்ஸ் 5:0. யங்கம்பன்ஸ் சார்பாக படாதபாடுபட்டு 19ஆவது நிமிடத்தில் பார்த்தீபன் ஒரு கோலை அடித்தார். முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நவஜீவன்ஸ் அணி. (ம-108)

# இன்றைய மோதல்கள்

***ஜொலிஸ்ரார் வி.க.தொடர்***

யாழ்ப்பாணம், ஓக. 16

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட் டங்கள் யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸரார் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது. மதியம் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன் அணியை எதிர்த்து விக்ரோறியன்ஸ் அணி மோதவுள்ளது.

***விக்னேஸ்வரா வி.கழகத் தொடர்***

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற் றுக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து சென்.மைக்கல் அணி மோதவுள்ளது. (ம-23)



# அரையிறுதியில் சாய்னா

சமீப காலமாக நடைபெற்றுவரும் உலக பூப்பந்தாட்டத் தொடரில் சீன வீராங்கனையை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான சாய்னா நேவால். இதன் மூலம் தற்போதைக்கு சாய்னாவுக்கு வெண்கலப்பதக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சீன வீராங்கனை வாங் இயான் என்பவரை 21-15, 19-21, 21-19 என்ற செட்களில் கடினமாக போராடி வீழ்த்தினார் சாய்னா. 72 நிமிடங்கள் நீடித்த இந்தக் காலிறுதி ஆட்டத்தில் உடற்தகுதி சிறப்பாக இல்லாமல் சாய்னா வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. அரையிறுதியில் இந்தோனேசிய வீராங்கனை லிண்டாவெனி பனேட்ரி என்பவரை சாய்னா எதிர்கொள்கிறார். (ம)

# யங் ஹென்றிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதிக்கொண்டது. இதில் யங்ஹென்றிஸ் அணி, 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# உதயசூரியன் அணியின் காலிறுதி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 16

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்டத் தொடரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டங்களின் முடிவுகள்.

சக்கோட்டை சென்.சேவியர் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதிக் கொண்ட முதலாவது காலிறுதியாட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

செந்தமிழ் அணிக்கும், கொற்றவத்தை றேஞ்சஸ் அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோல்களைப் பெற்றதினால் ஆட்டம்சமநிலையில் முடிவடைந்து. சமநிலைத் தகர்ப்பு உதைகளில் றேஞ்சர்ஸ் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்த்திற்கு தகுதி பெற்றது.

கட்டைக்காடு சென்.மேரிஸ் அணிக்கும் நவிண்டில் கலைமதி அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது. (ம-23)

# மொன்றியேல் மாஸ்டர்ஸ் தொடர் அடுத்த சுற்றில் நடால், முர்ரே





கனடாவின் மொன்றியேல் நகரில் நடைபெற்றுவரும் மொன்றியேல் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே மற்றும் ஸ்பெயினின் ரபேல் நடால்.

குறித்த தொடரின் தரவரிசையில் இரண்டாவது இடத்திலிருக்கும் முர்ரே 6-4, 7-5 என்ற நேர் செட்களில் ஸ்பெயினின் டாமி ராபர்ட்டோவை தோற்கடித்தார். முர்ரே தனது காலிறுதிக்கு முந்தைய சுற்றில் லக்ஸம்பர்க்கின் ஜில்ஸ் முல்லரை சந்திக்கவுள்ளார்.

மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபேல் நடால் 7-6, 6-3 என்ற நேர் செட்களில் உக்ரைனின் செர்ஜி ஸ்டக்கோவ்ஸ்கியை தோற்கடித்தார். நடால் தனது காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரஷ்யாவின் மிக்கேல் யூஸ்னியை சந்திக்கிறார். மொன்றியேல் மாஸ்டர்ஸ் தொடரில் 2013ஆம் ஆண்டில் கிண்ணம் வென்ற நடால், அதன்பிறகு இப்போதுதான் கனடாவில் விளையாடுகிறார். இங்கு 52 ஆட்டங்களில் விளையாடியுள்ள நடாலுக்கு இது 40ஆவது வெற்றியாகும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினத்தில் வீழ்ந்தது இந்தியா

## இங்கிலாந்திடம் அல்ல; இம்முறை இலங்கையிடம்






இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இலங்கை 63 ஓட்டங்களால் வெற்றிபெற்று 1–0 என்ற அடிப்படையில் தொடரில் முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 183 ஓட்டங்களில் சுருண்டது. பந்து வீச்சில் இந்தியா சார்பாக அஸ்வின் 6 இலக்குகளையும் மிஷ்ரா 2 இலக்குகளையும் சர்மா மற்றும் ஆரோன் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

184 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலைபெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இந்திய அணி 375 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக கௌசல் 5 இலக்குகளையும் பிரதீப் 3 இலக்குகளையும் மத்தியூஸ், பிரசாத் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 192 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை சந்திமாலின் சதத்தினால் மீண்டு 367 ஓட்டங்களைக் குவித்தது. அதிரடியில் மிரட்டிக்கொண்டிருந்த சந்திமால் 162 ஓட்டங்களைக் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் இந்தியா சார்பாக அஸ்வின் 4 இலக்குகளையும் மிஷ்ரா 3 இலக்குகளையும் ஹர்பஜன் சிங், ஆரோன், இஷாந் சர்மா மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

176 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா மூன்றாம் நாள் முடிவில் 23–1 என்ற நிலையில் இருந்தது. ஆட்டத்தின் நான்காம் நாளும் இந்தியாவின் சுதந்திர தினமுமான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாட களமிறங்கியது இந்தியா. சொதப்பல் சர்மாவிடம் இருந்து ஆரம்பமாகியது. காலி மைதானத்துக்கு உரிய பாணியில் ஹெரத்தின் பந்து வித்தை காட்டியது. 30 பாகை திசையை மிக இலகுவாகத் திரும்பியது. திணறினார்கள் இந்தியத் வீரர்கள். சொல்லிக்கொள்ளும் படியாக விளையாடியவர் ரஹானே மட்டுமே. ரோகித் 4, கோக்லி 3, சாகா 2, ஹர்பஜன் 1 என்று பெறுபேறுகள் குறைந்துகொண்டே சென்றன. ரஹானே 36 ஓட்டங்க்ளுடன் ஒன்பதாவதாக ஆட்டமிழக்க முடிவில் 112 ஓட்டங்களில் சுருண்டு 63 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இந்தியா. பந்து வீச்சில் ஹேரத் 7 இலக்குகளையும் கௌசல் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். 162 ஓட்டங்களை விளாசிய சந்திமால் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

## நியூஸிலாந்தை வீழ்த்தியது தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்கா நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ரி–20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி 6 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத் தடுப்பைத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக களத்தில் குப்தில் மற்றும் வில்லியம்சன். வில்லியம்சன் அடித்து ஆடினாலும் குப்திலின் ஆட்டம் ரி–20 முறைமைக்கு ஏற்ற வகையில் இல்லை. ஆன்போதிலும் ஐந்தே பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களை எட்டியது நியூஸிலாந்து. இணைப்பாட்டமாக 68 ஓட்டங்கள் பெறப்பட்டிருக்கையில் 42 ஓட்டங்களுடன் விடைபெற்றால் வில்லியம்சன். மேலும் நிதானித்தார் குப்தில். குப்திலின் பாணியில் வோர்க்கரும்– சராசரி ஸ்தம்பிதமானது. நீண்ட இழுத்தடிப்புக்குப் பின்னர் ஆட்டமிழந்தார் குப்தில். அடுத்த பந்திலேயே வந்த வேகத்தில் விடைபெற்றார் முன்ரோ. எலியாட், ரோஞ்சி தலா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பின்வரிசை வீரர்கள் டெஸ்ட் பாணியில் ஆடிக்கொண்டிருந்தனர். முடிவில் நியூஸிலாந்து 151–8.

தென்னாபிரிக்காவை வீழ்த்த நிச்சயமாக இந்த இலக்குப் போதாது. ஆனால் வில்லியர்ஸ், அம்லா இருவரையும் வீழ்த்தி விட்டால் ஏனையோரை ஓரளவு சமாளித்து விடலாம். ஆரம்ப வீரர்களாக களத்தில் வான் வைக் மற்றும் அம்லா. மிகவும் நிதானித்தார் வைக். நியூஸிலாந்தின் ஆரம்பத்தின் பாதிகூட இல்லை தென்னாபிரிக்காவின் ஆரம்பத்தில். ஆறாவது பந்துப்பரி மாற்றத்தில்தான் 30 ஓட்டங்கள் எட்டப்பட்டது. 19 ஓட்டங்களுடன் பீவிலியன் திரும்பினார் வைக். தொடர்ந்தும் நிலைத்துநின்றார் அம்லா. பவுண்டரியுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் வில்லியர்ஸ். 150இற்கும் அதிகமானசராசரியில்வெளுத்து வாங்கினார். 48 ஓட்டங்களுடன் அரைச்சதத்தை தவறவிட்டார் அம்லா. சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்து நியூஸிலாந்தை விழி பிதுங்க வைத்தார் ரொஸ்சொவ். இருவரினதும் மிரட்டல்கைகொடுக்க நியூஸிலாந்தை 6 இலக்குகளால் வீழ்த்தியது தென்னாபிரிக்கா. (ம)

## கிளார்க்குக்கு கோக்லி பாராட்டு



ஆஷஸ் தொடருக்கு பின்னர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடைபெறும் ஆஸ்திரேலிய அணித்தலைவர் கிளார்க்குக்கு விராட் கோக்லி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடரில் சமீபத்தில் முடிந்த 4ஆவது டெஸ்ட்டில் கிளார்க் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி மிக மோசமான முறையில் தோல்வியடைந்து தொடரை 3–1 என்ற கணக்கில் பறிகொடுத்தது. இந்த படுதோல்விக்கு பொறுப்பேற்கும் விதமாக ஆஷஸ் தொடருக்கு பின்னர் டெஸ்ட் தொடரிலிருந்தும் இருந்து ஓய்வு பெறுவதாக கிளார்க் அறிவித்தார்.

இந்நிலையில் இந்திய டெஸ்ட் அணித்தலைவர் விராட் கோக்லி, சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து விடைபெறும் கிளார்க்குக்கு தனது ருவிட்டர் பக்கத்தில் கிரிக்கெட் பயணத்தில் ஆஸ்திரேலிய அணியின் தலைவராக செயல்பட்டதுடன், பல சாதனைகளை குவித்துள்ளீர்கள். உங்களுக்கு வாழ்த்துக்கள். என்று குறிப்பிட்டுள்ளார். கோக்லிக்கு நன்றி தெரிவித்த கிளார்க். இந்திய அணி வருங்காலத்தில் சிறப்பாக செயல்பட வாழ்த்துக்கள் என்று பதிலுக்கு ருவீட் செய்துள்ளார். (ம)



## இடம்கொடுக்குமா இலங்கை?

இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2–1 என்ற கணக்கில் கைப்பற்றும் பட்சத்தில் இந்திய அணி தரவரிசையில் 3வது இடத்திற்கு முன்னேறும்.

இறுதியாக வெளியான டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி 97 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளது. இலங்கை 92 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளது. தென்னாபிரிக்கா 125 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், ஆஸ்திரேலியா 111 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் பாகிஸ்தான் 101 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், நியூஸிலாந்து 99 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் உள்ளன. இந்நிலையில் ஐந்தாவது இடத்தில் இருக்கும் இந்தியா இலங்கைக்கு எதிரான தொடரை 2–1 எனக் கைப்பற்றி, அதே சமயம் ஆஷஸ் தொடரின் கடைசி ஆட்டத்திலும் ஆஸ்திரேலியா தோல்வியடைந்தால் இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடிக்கும். அதே சமயம், 7வது இடத்தில் இருக்கும் இலங்கை அணி இந்தியாவை 3–0 என்று தோற்கடித்தால் 100 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திற்கு முன்னேறும். இந்தியா 7வது இடத்திற்கு தள்ளப்படும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை சிறந்த வீரராக மாற்றியவர் ராவிட்தான்

*-யுனிஸ்கான்*

நான் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக திகழ்வதற்கு தற்பொழுது இந்திய 'ஏ' அணியின் பயிற்சியாளராக உள்ள ராவிட் டின் ஆலோசனைகள் பெரிதும் உதவியதாக பாகிஸ்தானின் மூத்த வீரர் யூனிஸ்கான் தெரிவித்துள்ளார்.

தனது துடுப்பாட்டம் தொடர்பாகவும் ராவிட் தொடர்பாகவும் யுனிஸ்கான் தெரிவித்ததாவது ஆரம்ப காலத்தில் ராவிட்டின் ஆலோசனைகள் எனக்கு பெரிதும் உதவியது. அவர் அளித்த அறிவுரைகள் தான் என்னை முன்னணி துடுப்பாட்டக்காரராக மாற்றியுள்ளது. ராவிட் கிரிக்கெட் விளையாடிய காலத்தில் தன்னுடன் இணைந்து விளையாடிய வீரர்களுக்கே ஆலோசனை வழங்கும் அளவுக்கு திறன் படைத்திருந்தவர். தற்போதைய இந்திய 'ஏ' அணி அவரைப் பயிற்சியாளராகப் பெறுவதுக்கு கொடுத்து வைத்துள்ளது–என்றார். (ம)

# வோஷிங்டன் ரென்னிஸ் தொடர் கிண்ணம் வென்றார் நிஷிகோரி




அமெரிக்க ரென்னிஸ் தொடருக்கான பயிற்சி ஆட்டமான வோஷிங்டன் ரென்னிஸ் தொடரில் ஜப்பானின் கெய் நிஷிகோரி கிண்ணம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். இறுதியாட்டத்தில் அமெரிக்காவின் இஸ்னரை எதிர்கொண்ட நிஷிகோரி 4-6, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் இஸ்னரை தோற்கடித்து கிண்ணம் வென்றார். அமெரிக்க ரென்னிஸ் தொடர் தொடங்க இன்னும் 3 வாரங்களே உள்ள நிலையில் நிஷிகோரி பெற்றுள்ள இந்த அதிரடி வெற்றி, மற்ற வீரர்களுக்கு எச்சரிக்கை மணியாக அமைந்துள்ளது. 47 ஆண்டுகால வோஷிங்டன் ரென்னிஸ் வரலாற்றில் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்ற முதல் ஆசியர் நிஷிகோரி என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# மெஸ்ஸியின் இடத்துக்கு நெய்மர் நெய்மரின் இடத்துக்கு மெஸ்ஸி




ஆட்டத்தில் வெற்றிபெறவேண்டு மாயின் அடுத்த சில ஆட்டங்களுக்கு நெய்மரின் இடத்தில் நானும் எனது இடத்தில் நெய்மரும் விளை யாட வேண்டும் என்று ஆர்ஜென்ரினா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

ஆர்ஜென்ரினா நாட்டின் நட்சத்திர கால்பந்து வீரரும் அணித்தலைவருமான மெஸ்ஸி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார். சமீபகாலமாக மெஸ்ஸியின் ஆட்டத்தில் தொய்வு காணப்படுகிறது. இதனால் மெஸ்ஸியின் மீது தொடர்ச்சியாக விமர்சனங்கள் குவிந்த வண்ணம் உள்ளது. ஆனால் பார்சிலோனா வின் நெய்மர் சிறப்பாக செயல் பட்டு வருகின்றார்.

இந்த நிலையில் தனது போர்ம் தொடர்பாக மெஸ்ஸி தெரிவித்ததாவது அணியின் வெற்றிக்கு உதவும் என்றால் நான் எந்தவொரு இடத்திலும் (பின்களம், நடுக்களம், முன்களம்) களமிறங்க தயாராக இருக்கிறேன். குறிப்பாக நெய்மரின் நடுக் களத்துக்கு நானும் எனது முன் களத்துக்கு நெய்மரும் இறங்கினால் அணியில் தாக்கம் இருக்காது. நானும் என்மீதான அழுத்தங்களில் இருந்து ஓரளவு விடுபட்டு சுதந்திரமாக விளையாட முடியும். ஒவ்வொரு வீரரின் ஓய்வு பெறும் நேரம் திருப்திதரும் வகையில் அமையாது. எனக்கும் இது பொருந்தும் என்றார். (ம)

## ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுக்கு
# சானியா மிர்ஷா தகுதி

இந்தியாவில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுக்கு இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஷாவை தேர்வு செய்துள்ளது விருதுக் குழு. லியாண்டர் பயஸுக்குப் பிறகு இந்த விருதைப் பெறவுள்ள 2ஆவது ரென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஷா ஆவார். 1996இல் அட்லாண்டா ஒலிம்பிக் தொடரில் ஒற்றையர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றதற்காக பயஸுக்கு ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது வழங்கப்பட்டது. சர்வதேச மகளிர் இரட்டையர் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் சானியா மிர்ஷா, கடந்த மாதம் நடந்த விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸுடன் இணைந்து கிண்ணம் வென்றார். இதையடுத்து அவருடைய பெயர் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த விருதுக்கு சானியா தற்பொழுது தகுதியானவர் என்று தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ராஜீவ் காந்தி கேல் ரத்னாவிருதைப்பெறவுள்ளஇரண்டாவது ரென்னிஸ்வீராங்கனைசானியா என்பது குறிப்பிடத்தக்கது. (ம)





**வேலைவாய்ப்பு**


யாழ். நல்லூர் புத்தகக்கடைக்கு பணியாளர் தேவை.
★ போட்டோ பிரதி செய்யக் கூடியவர் தேவை.
(63721) (10.6) தொடர்பு: 077 2769930

**மணமகள் தேவை**

தீவுப்பகுதியின் கரம்பொனை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட 1985 இல் பிறந்த, றோமன் கத்தோலிக்க கௌரவ குடும்ப மணமகனுக்கு அதே சமயத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. மணமகள் பிள்ளைகளற்ற விதவையாக இருந்தாலும் விரும்பத்தக்கது. மணமகன் காட்வெயர் கடையில் பணியாற்றுகிறார்.

தொடர்பு:
077 899 8147

விரைவான வேலை ! நிறைவான இலாபம் !!
**சிறந்த வியாபாரத்திற்கு முறையான தெரிவு**
**ஜூஸ் பக்கெட் மெசின்**



தமிழில் தொடர்பு கொள்ள
**077 391 8870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af **பிரெஞ்சு மொழி**

பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். யாழ். வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.

வகுப்பு சனி,ஞாயிறு 11-1 pm உடன் பதியுங்கள்
021 222 8093 61


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 16.08.2015




# பரபரப்பான
# கிளைமாக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்பான கிளைமாக்ஸ்

ராஜ்குமார்

தேர்தல் திரைப்படம் கிளைமாக்ஸை எட்டிக்கொண்டிருக்கிறது. நாளையுடன் திரைப்படம் முடிந்து வணக்கம் விழுந்து விடும். இந்தத் திரைப்படத்தில் ரணில் கதாநாயகனாகவும் மஹிந்த தரப்பு வில்லன் குழுவாகவும் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். கதாநாயகர்கள் வென்று நீதி நிலைநாட்டப் படுமா? அல்லது வில்லன் குழுவென்று மீண்டும் அநீதி அரங்கேறுமா என்பது நாளை அல்லது நாளை மறுநாள் தெற்கில் தெரிந்துவிடும்.

தென்பகுதியைப் பொறுத்தமட்டிலே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கருத்துக் கணிப்புக்கள் வெளியாகியபடியே உள்ளன.

இவை யெல்லாம் அநேகமாக ஐக்கிய தேசிய முன்னணிக்கே அதிக ஆசனங்கள் கிடைக்கும், மஹிந்த தரப்புக்குக் கொஞ்சம் மட்டம்தான் என்றே குறிப்பிடுகின்றன. ஆயினும் மஹிந்தவோ இன்னமும் தமது பிடியில் விடாப்பிடியாக அடுத்த பிரதமர் தானே அதற்கு அடுத்த ஜனாதிபதியும் தானே என்று அடம்பிடித்தபடி இருக்கிறார். இதற்கு முன்னெல்லாம் தனக்கு 116 ஆசனங்கள் கிடைக்கும் என்று அழிச்சாட்டியம் பண்ணியவர். இப்போ எந்த 'கல்கு லேட்டரில்' எப்படிக் கணக்கு பார்த்தாரோ தெரியவில்லை 117 என்று உறுமித் தள்ளுகிறார். ஆனால் அவரது கட்சி யின் செயலாளரான சுசில் பிரேம ஜயந்த அடக்கமாக அப்படியெல்லாம் இல்லை. ஒரு 110 கிடைக்கும் என்கிறார். (மறுபடி யும் மஹிந்தவிடம் கன்னத்தைச் பொத்தி வாங்காமல் இருந்தால் சரி) இப்படி அவர்களுக்குள்ளேயே இன்னமும் உறுதியான நிலைப்பாடு இல்லாத நிலையில் கருத்துக் கணிப்புக்கள் என்ன சொல்கின்றன என்பதைப் பார்ப்போம்.

இறுதியாக வெளியான கருத்துக் கணிப்பின்படி ஐக்கிய தேசிய முன்னணி 90–100 ஆசனங்களைப் பெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் ஐக்கிய முன்னணி 80 – 90 ஆசனங்களைப் பெறும் என்றும் – ஜே.வி.பி. 15 வரையான ஆசனங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 15 முதல் 18 வரையான ஆசனங்களையும் பெறும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. முடிவுகள் வரும்போது இந்தக் கணிப்புகளில் இருந்து ஆசனங்களில் சில கூடுதலாகலாம், அல்லது குறையலாம் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆயினும் மஹிந்தவோ அல்லது கட்சியினரோ கூறுவது போல் 110 – 116 என்பதெல்லாம் கிடைக்காதெனவே கருத்துக் கணிப்புக்கள் பலவும் கணக்கிட்டிருக்கின்றன.

இதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் எமக்கு கூட்டுத் தேவையில்லை. தனித்தே ஆட்சியமைப்போம் என்று காட்டுக் கத்தல் கத்தினாலும் அவர்களைப் பொறுத்த வரையில் ஆட்சியமைக்க ஏனைய கட்சிகளிடம் மண்டியிட வேண்டிய நிலை ஏற்படத்தான் செய்யும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஆனாலும் அவர்கள் கேட்கும்போது ஓடிச் சென்று அவர்களுக்கு முகம்கொடுக்க யார் முன் வருவார்கள் என்பது மில்லியன் டொலர் கேள்வியாகும். கோடுபோட இடம் கிடைத்தால்போதும் அதை வைத்துக்கொண்டே ரோட்டுப் போடக் கூடியவர் மஹிந்த. புள்ளி வைத்தால் கோலமே போடுவார்... அடுத்த கட்சிகளைப் பார்த்து ஆரம்பத்திலே அதனைத் தருவேன், இதனைத் தருவேன் என்று கூறி ஆட்சியமைத்து விட்டு அதன் பின் அடுத்த கட்சிக்காரர்களை எல்லாம் இழுத்துக் கொண்டு... ஆரம்பத்திலே ஆதரவு தந்தவர்களை அடித்துத் துரத்தும் தன்மை கொண்டவர். இதே அனுபவம் ஏற்கனவே ஜே.வி. பிக்கு உண்டு. தனது பதவிக்காகவும் வெற்றிக்காகவும் ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு 2005இல் முதன் முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வென்றார். ஆனால் அதன் பின்னர் ஜே.வி.பியை உடைத்து விமல் வீரவன்ஸவை தம்பக்கம் இழுத்துக் கொண்டவர். ஆகவே மஹிந்தவுக்கு ஆட்சியமைக்க 10 – 20 ஆசனங்கள் தேவைப்பட்டால்கூட அதனை வழங்க யார் முன்வருவார்கள் என்பது கேள்விக்குறி தான்.

ஜே.வி.பியோ, கூட்டமைப்போ நிச்சயமாக மஹிந்த பக்கம் சாயவே சாயாது. ஆறுமுகன் தொண்டமான், ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் தவிர வேறொரு வரும் மஹிந்த பக்கம் தலை வைத்தும் படுக்கமாட்டார்கள். வேலியிலே போகும் ஓணானை எடுத்து வேட்டியிலே விடவோ அல்லது வழியிலே இருக்கும் சூணியை எடுத்து வாயிலே போடவோ யாரும் தயாராக இல்லை.

மஹிந்தவும் அவரது ஆதரவாளர்களும் எவ்வளவுதான் சுழற்றிச் சுழற்றிச் சுண்ணாம்பு அடித்தாலும் அடுத்த ஆட்சி அமைப்பது என்ற லிஸ்டில் அவர்களது பெயர் இருப்பதாகவே தெரியவில்லை.

இந்த நிலையில் அடுத்து வருவது ஐக்கிய தேசிய முன்னணி. இவர்களைப் பொறுத்த வரையில் நாங்களே தனித்து ஆட்சி, கூட்டு இல்லை – குழம்பு இல்லை என்றெல்லாம் தம்பட்டம் அடிக்காமல் கமுக்கமாக இருக்கிறார்கள். எவ்வளவு வந்தாலும் தேசிய அரசு என்ற விடயத்தில் இறுக்கமாகவே இருக்கிறார்கள். இப்படியான போதிலும் காணாமல் இருக்கும் மிச்ச சொச்சங்களுக்கு – மஹிந்தவுக்கு ஆட்சி அமைக்கும் அதிகாரம் கிடைக்காமற்போகும் பட்சத்தில் – அங்கிருந்து சிலர் அறுத்துக்கொண்டு ஓடி வரும் நிலை ஏற்படும். அப்போது அவர்களுக்கெல்லாம் ஒரு வலையைப் போட்டு வளைத்துப் பிடித்து தமது பட்டி யிலே கட்டி வைத்து விடலாம் என்பதுதான் திட்டமாக இருந்தபோதிலும், அவ்வாறு தப்பி வருபவர்களை வைத்து தாக்காட்டுவது என்பது கஷ்டமான விடயமாகவே ஐ.தே. முன்னணிக்கு இருக்கும்.

எவ்வளவு போட்டாலும் திருப்தியடையாத நிலையிலேதான் மஹிந்த தரப்பினர் இருப்பது வழக்கம்.

எனவே இங்கே வந்துவிட்டுப் பின்னர் இவர்களை மிரட்டி அதைத் தா, இதைத் தா இல்லாவிட்டால் அறுத்துக் கொண்டு ஓடிவிடுவோம் என்று மிரட்டும் நிலை ஏற்படும். இதனால் தொங்கு நாடாளுமன்றம் ஒன்று ஏற்பட்டு நித்திய கண்டம் அற்ப ஆயுசு என்ற நிலைமை ஏற்படும். இதனால் ஒழுங்காகச் சட்டங்களை நிறைவேற்ற முடியாமல்... அபிவிருத் திகளை மேற்கொள்ள முடியாமல் கடந்த 170 நாள் ஆட்சியில் எந்த நிலையில் ஐ.தே.க. அரசு இருந்ததோ அதே நிலைமை தொடரக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இந்த நிலையிலேதான் தமிழ்க் கூட்டமைப்பின் தேவையும் – மகிமையும் ஆளுங் கட்சிக்கு தேவைப்படும். அதாவது நிலையான – உறுதியான ஆட்சிக்கு தமிழ்க் கூட்டமைப்புப் போன்ற சில உறுதியான நேர்மையான கட்சிகளுடன் சகவாசம் வைத்துக்கொள்ளவே ஆட்சியாளர்கள் விரும்புவார்கள். ஏனென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் ஐ.தே.க. முன்னணியுடன் கோபித்துக் கொண்டு அடுத்த கட்சியான மஹிந்த கட்சியுடன் இணைந்து கொண்டு ஆட்சியை மாற்றி யமைக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ரணில் தரப்பு உறுதியாகவே நம்பு கிறது. தொண்டமானின் இ.தொ.கா.

**தனித்தே ஆட்சியமைப்போம் என்று காட்டுக் கத்தல் கத்தினாலும் அவர்களைப் பொறுத்த வரையில் ஆட்சியமைக்க ஏனைய கட்சிகளிடம் மண்டியிட வேண்டிய நிலை ஏற்படத்தான் செய்யும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஆனாலும் அவர்கள் கேட்கும்போது ஓடிச் சென்று அவர்களுக்கு முகம் கொடுக்க யார் முன்வருவார்கள் என்பது மில்லியன் டொலர் கேள்வியாகும்.**

ஹக்கீ மின் முஸ்லிம் காங்கிரஸ் என்பன அப்படிச் செய்யும் தன்மை கொண்டவை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இவ்வா றான நேர்மை தென்பகுதிக் கட்சிகள் பலவற்றினாலும் மரியா தைக்கு உரியதாகவே இருக்கிறது. இதையே தான் அண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரான பசீர் சேகுதாவூத்தும் ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறியி ருந்தார்.

"பதவிக்காக பல்லிளிக்கும் கட்சியல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு... இனவிடுதலை, இனப்பிரச்சினைத் தீர்வு என்ற உடன்பாட் டோடு – பேரம் பேசும் சக்தியாக அடுத்த அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கும்'' என்று அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையில் அடுத்த அரசுக்கு ஆட்சியமைக்க நிபந்தனைகளுடன்கூடிய ஆதரவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்குமாயின் இது பலருக்கு நன்றிக் கடன் பட வேண்டிய நிலையை ஏற்படுத்தும். ஆனாலும் கூட்டமைப்பு எதிர்க்கட்சியிலேயே இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்து ஆட்சியமைக்க உதவினால் ரணிலும், ஏற்கனவே ஜனாதிபதியாக வருவதற்கு உதவியதால் ஜனாதிபதி மைத்திரியும் என்று பல பெரிய தலைகளும் தமிழர்களுக்கும் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பிரதியுபகாரம் செய்யவேண்டிய தவிர்க்க முடியாத நிலை காலத்தின் கட்டாயமாகும்.

அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழு, அரை அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து அமுக்கிப் போடலாம் என்பதும் முடியாத காரியம் என்று ரணில் தரப்புக்குத் தெரியும். எனவே அவர்களது சிந்தனை என்பது இனப்பிரச்சினைத் தீர்வு, மீள்குடியேற்றம், கைதிகள் விடுதலை என்ற ரீதியிலேயே இருக்கப்போகிறதே ஒழிய – இரண்டு அமைச்சர் – 4 பிரதியமைச்சர் என்ற பாணியிலே இருக்கப் போவதில்லை. எனவே இனியும் இவர்களை ஏமாற்றமுடியாது என்ற நிலையிலே இவர்களின் ஆதரவைப் பெற ரணில் முயற்சிக்கலாம். அவ்வாறு ஆட்சி அமைக்கும் நிலையில் வெளிநாடுகளின் கழுகுப் பார்வையிலிருந்தும் ரணில் தரப்பு தப்பிவிட முடியாது. எனவே தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவில் ஆட்சி அமைத்தால் அவர்கள் கேட்பதைக் கொடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை பிரதமர் ரணில் – ஜனாதிபதி மைத்திரி ஆகியோருக்கு ஏற்படும்.

இவ்வாறான ஓர் இக்கட்டான நிலையையே இந்தத் தேர்தல் ஏற்படுத்தி வைத்திருக்கிறது. இந்த நிலையில் தமிழ்க் கூட்டமைப்பு எதிர்பார்க்கும் 20 ஆசனங்கள் என்ற ஆசை – பேராசையாக பலராலும் விமர்சிக்கப்பட்டாலும் – அது ஒரு நியாயமான ஆசை என்றே கருதப்படுகிறது.

இவ்வாறான ஒரு நிலை தமிழர் தரப்புக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே பெரும்பான்மையான தமிழ் கூட்டமைப்புக்காரர்கள் நாடாளுமன்றம் சென்று விடக்கூடாது என்ற காரணத்துக் காக கிங் மேக்கேர்ஸ் (King makers) என்ற பட்டம் தமிழ்க் கூட்டமைப்புக்குக் கிடைக்கக் கூடாது என்ற காரணத்தால் சும்மா இருந்தவர்களை எல்லாம் உசுப்பேற்றி தேர் தலில் போட்டியிடவைத்து – கூட்டமைப்பு வாக்கு வங்கியை உடைக்கவென பல முகம் தெரியாதோர் முயன்று வருகின்றனர். இதற்கெனவே 20க்கு மேற்பட்ட கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் வடக்கிலே போட்டியிட இறக்கி விடப்பட்டுள்ளன என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

எல்லா வற்றுக்குமான விடையையும் தமிழ் மக்கள் நாளைச் சொல்லிவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ அதிரன்

# எமது இனத்தின் தேசிய ஒற்றுமையை மீண்டும் நிரூபிப்போம்

இலங்கையில் போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் நடக்கும் நாளைய நாடாளுமன்றத் தேர்தலில் பல தரப்பட்ட கொள்கைகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. தேர்தல் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி இவற்றின் எண்ணிக்கை 64 ஆகும்.

அதேநேரம், தமிழர் தரப்பில் ஐக்கியம், தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை, சமத்துவம் போன்ற கொள்கைகளை முன்வைத்து பல்வேறு தமிழ்கட்சிகள் போட்டியிடுகின்றன. அத்துடன் பெரும்பான்மையினக் கட்சிகளும் தமிழர் பிரதேசங்களில் போட்டியிடுகின்றன.

எனினும், தமிழர்தரப்பைப் பொறுத்தவரையில் வடக்கில் கடந்த காலங்களில் இருந்த பிரதிநிதித்துவத்தில் இரண்டை இழந்து நிற்கிறது. முன்னர் 9 ஆக இருந்த பிரதிநிதித்துவம் தற்போது 7ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்குக் காரணமாக அமைந்தது வாக்காளர்கள் எண்ணிக்கையாகும்.

போர் நடைபெற்ற காலகட்டத்தில் வடக்கிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் புலம் பெயர்ந்தமையும் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளமையும் இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் கடந்த காலங்களில் போரின்போதும், ஏனைய அரசியல் நடவடிக்கைகளின்போதும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தமது தாக்கங்களைச் செலுத்திவருகின்றனர். குறிப்பாகத் தமிழ்மக்களின் வாக்களிப்பை நெறிப்படுத்தும் சக்தியாகவும் அவர்கள் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறித்து மக்கள் கவனம் கொள்ளவேண்டும். நாம் வழங்கும் வாக்கு தகுதியான வேட்பாளருக்கு இடப்படுகின்றதா என்பதை முதலில் சிந்திக்க வேண்டும்.

தமிழர்களின் கட்சி அரசியல் என்பது படித்தவர்கள், திறமைசாலிகள், மக்களின் உணர்வுகளை அறிந்து செயற்படுபவர்கள், இனப்பற்றாளர்கள் எனப் பல தகைமைகளைக் கொண்ட அரசியல் தலைவர்களால் கட்டியெழுப்பப்பட்டு வழி நடத்தப்பட்டு வந்துள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்பின் ஊடாக கடந்த காலங்களில் பலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக குரல் கொடுத்துப் போராடி வந்துள்ளனர். இந்த வகையில் இனிவரும் காலங்களில் எம்மால் தெரிவுசெய்யப்படுபவர்கள் இந்த மாட்சிமையை நிலைநிறுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டியது முக்கியமானது அல்லவா?

எனவே, வாக்களிப்பில் நாம் முதலில் கவனம் கொள்ளும் அதேநேரத்தில் தகுதியான வேட்பாளர் யார் என்பதை அறிந்து கொண்டு எமது விருப்பு வாக்குகளை அளிக்கவேண்டும்.

> எமது இனத்தின் தேசிய ஒற்றுமையை மீண்டும் ஒருமுறை உலகுக்கு நிரூபிப்பதற்காக வாக்குகளை வழங்குவோம்.

நாம் அளிக்கும் வாக்கு எமது இனத்தின் மேம்பாட்டுக்கும் வாழ்வியல் வளத்தின் உயர்வுக்கும் சமத்துவமிக்க உரிமைக் கோட்பாட்டுக்கும் உந்துசக்தி அளிக்கக் கூடியதாக இருக்கவேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

எமது ஜனநாயகக் கடமையை நாம் சரிவரச் செய்திருக்கின்றோம் என்ற ஆத்ம திருப்தி ஏற்படும் வகையில் தமிழ் மக்களின் எதிர்கால ஒற்றுமைக்காகவும் விடிவுக்காகவும், நிரந்தரத் தீர்வை அடையவும் இதனைச் சரியாகப் பயன்படுத்துவோம்.

எமது இனத்தின் தேசிய ஒற்றுமையை மீண்டும் ஒருமுறை உலகுக்கு நிரூபிப்பதற்காக வாக்குகளை வழங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




“ ஆன்மாக்களின் விடியலுக்கான குரல் வானவர்களின் குறை தீர்த்த, கலங்காத கண்களை கலங்க வைத்த, புன்னகையின் நாயகன் தமிழ் தெய்வமான கந்தனை நோக்கி ஒலிக்கின்றது. ஒலிகளின் ரீங்காரம் ஆறுமுகனை இசையால் இன்புறச் செய்து தமிழர்களின் வாழ்வில் இருளகற்ற வேண்டும். அவர்கள் வாழ்வில் புதியதோர் விடிவு புத்தொளியாய் பிறக்க வேண்டும்.

# தமிழர்களே எழுமின்...! விழிமின்...!

செ.உமாசுதன்

இலங்கையில் தமிழர்களின் ஜனநாயகப் பிரதிநிதித்துவம் வலுவான நிலையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை இந்தத் தேர்தல் சுட்டிநிற்கின்றது.

30 வருடங்களுக்கு மேலான தமிழர்களின் இலட்சியப் பயணத்தின் பாதைகள் சீரானதாக இருக்கவில்லை. அஹிம்சை வழியிலே இடப்பட்ட பாதைகள் பேரின வாதத்தின் இரும்புக் கரங்கொண்டு பெயர்த்தெடுக் கப்பட்டன. உரிமையின் குரல்கள் நசுக்கப்பட்டு குழிதோண்டி புதைக்கப்பட்டன. குண்டும் குழியுமான பாதையில் இலட்சிய ஆன்மாக்களின் சீரான பயணம் கதிகலங்கியது.

உரிமை மீதான பற்றுதலும் விடுதலை மீதான வேட் கையும் புதைக்கப்பட்ட குண்டும் குழியுமான பாதை யில் இருந்து மீண்டும் கூரிய ஆயுதங்களாக வெளிக்கிளம்பின. இனவாதம் கலந்த தார்க் கலவையை உகந்ததாக்கவும் இலட்சியப் பாதையை மீண்டும் சரி செய்து விடுதலையை உரிமை எனும் கலவை கொண்டு செப்பனிடவும் தரப்படுத்தலில் இருந்து கிளர்ந்தெழுந்த விடுதலையின் தாகம் கொண்ட ஆன்மாக்கள் புதிதாய்ப் புறப்பட்டன. புதுக்கலவைகள் இலட்சியப் பாதையைச் சீராகச் செப்பனிட்டன. இலங்கையின் இனவாதக் கலவை களும், அதற்கு முண்டு கொடுத்த மேற்குலக கலவை களும் தமிழர்களின் சீரான செப்பனிடப்பட்ட பாதை களைக் கண்டு வியந்தன. செப்பனிடலில் இருந்த மதிநுட்பமான மூன்று படைகளையும் கண்டு பயந்தன. சமனிலை தர, பல சந்திகளில் சந்திப்புக்களை மேற் கொண்டன. சந்திப்புக்கள் நல்லெண்ண சமிக் ஞை களை தருவதுபோல் இருந்தன. ஆனால் அவை நேரான இலட்சியப் பாதையை துண்டாடும் குறுக்கு வீதிகளாக வும் விபத்துக்களை விரைந்து தரும், நிரந்தரமான தீர்வைத் தராத தரிப்பிடங்களாகவும் தொடர்ந்தன.

சீரான பாதை 2009ஆம் ஆண்டு மே மாதத்துடன் சிதைக்கப்பட்டது. மீண்டும் கிளறு சல்லிகளாக பிரித் தெடுக்கப்பட்டன. பாதைகள் புதை குழிகளாகின. ஆன்மாக்கள் அடைக்கலம் இன்றி குழிகளில் அடங்கிப் போயின. விடுதலையின் மூச்சுக்கள் அடங்கவில்லை. மீண்டும் புரையேறி இலட்சியப்பாதையைச் செப்பனிட எத்தனிக்கின்றன. இதற்கு இப்போது மேற்குலகக் கலவைகள் புது உத்வேகம் தந்துள்ளன. விரைவில் செப்பனிட்டவை செயலுருவம் பெறவேண்டும்.

இந்த செப்பனிடல் சிறந்து புதுவிடிவு பிறக்க வேண்டும் எனில் தமிழர்கள் ஒற்றுமையாய் நின்று அதனைச் சாதிக்கவேண்டும்.

நல்லைக்கந்தன், நல்வரங்களை நல்குபவன். தமிழ் மக்களின் உரிமைக்காக பசித் தீ வளர்த்த உத்தமர்களை தன் சரணங்களில் மோட்சமடையச் செய்தவன். எமைக் காக்க மீண்டும் அவன் எழுந்தருள வேண்டும். தமிழ் மக்கள் இதனையே கந்தனிடம் வேண்டி நிற்கின்றனர்.

ஓர் ஆன்மாவின் உச்சரிப்பு ஆறுமுகனை இவ்வாறு அலங் கரிக்கின்றது.

தேரில் ஏறினாய் தினமும் தீர்த்தமாடினாய்...
தமிழ் மக்கள் துன்பம் தீரவென்று மயிலில் ஏறுவாய் முருகா.........!
நாம் அழுத கண் மழையால் வீதி எங்கும் வெள்ளம் நாயகனே!
ஏன் இரங்கவில்லை உந்தன் உள்ளம்....
வானவர்கள் குறை தீர்க்க வந்த மயில் எங்கே
நீ வா முருகா இங்கு தமிழ் மக்கள் துன்பம் தீர்ப்பாய்...
நீ வா முருகா இங்கு தமிழ் ஈழமதைச் சேர்ப்பாய்....

இன்னோர் ஆன்மா இவ்வாறு புகழ்பாடுகிறது.

அலங்கார கந்தனுக்குஅணிமுடிஅலங்காரம்
அவன் அங்கங்கள் குளிரும் வரை பன்னீரால் அபிஷேகம்...
கலங்காத கண்களெல்லாம் கலங்கி நிற்கும்
நல்லைக் கந்தனவன் தங்க முகம் துலங்கி நிற்கும்...

தீர்வின் தீர்க்க தரிசனம் வேண்டிய இன்னோர் ஆன்மா தமிழ்த் தெய்வமான கந்தனை இவ்வாறு வேண்டி நிற்கிறது.

செந்தமிழால் உந்தனுக்கு மாலை தொடுத்தேன்...
தமிழ்த் தெய்வமான கந்தனே உன்வீதி படுத்தேன்...
சிந்திடும் உன்புன்னகையைக் கண்டு மகிழ்ந்தேன்....
நல்லை தேரடியில் வந்துனது காலில் விழுந்தேன்...
நல்லூரின் வீதியெங்கும் உந்தன் விளையாட்டு....
எந்தன் நாயகனே கனவினிலே வந்து முகம் காட்டு...
தொல்லை துயர் சூழ்ந்ததையா நீதியை நிலைநாட்டு...
வந்த சூரர்களை ஓட்டுதற்கு வேலை எடுத்தாட்டு....

ஆக, ஆன்மாக்களின் விடியலுக்கான குரல் வானவர்களின் குறை தீர்த்த, கலங்காத கண்களை கலங்க வைத்த, புன்னகையின் நாயகன் தமிழ் தெய்வமான கந்தனை நோக்கி ஒலிக்கின்றது. ஒலிகளின் ரீங்காரம் ஆறுமுகனை இசையால் இன்புறச் செய்து தமிழர்களின் வாழ்வில் இருளகற்ற வேண்டும். அவர்கள் வாழ்வில் புதியதோர் விடிவு புத்தொளியாய் பிறக்க வேண்டும்.

எதிர் வருகின்ற பதினேழில் ஈர் மூன்று ஆறாகி ஆறுமுகன் திருவருளால் ஒன்றாகி அது ஏழாக எழ வேண்டும். எட்டு மீதான தமிழர்களின் நம்பிக்கை நிலைக்க வேண்டும். ஏழு என்பது எட்டிலிருந்து ஒன்றால் குறைந்தாலும் எழுந்து நின்று எழுச்சி தரும் எட்டின் தொடக்கம் போல ஏழின் தொடக்கமும் பலமாய் ஒலிக்கும் தமிழர்களுக்கு விடி வினை பெற்றுத் தரும் தர வேண்டும்.

தமிழர்களே எழுமின், விழிமின்.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வியல் கோட்பாடு ஒரு மாய வலை!

தேவிபரமலிங்கம்

நமது நாட்டில் மட்டும் என்றில்லா மல் உலகின் எல்லாப் பாகங்களிலும் முன்னேறிய நாடுகளில் இருந்தே நாகரிகப் பரிமாற்றங்கள் பரவிவந்துள்ளன. அவ்வாறே கல்வி, மருத்துவம், ஆய்வுகள் என்பனவும் கலை, இலக்கியம், திரைப்படம், இசை மட்டுமல்லாமல் ஆபரணம், உடை, உடல் சார்ந்த அழகியல் கலைகள்கூட மேற்குலக நாடுகள் ஊடாகக் காலக் கிரமங்களில் எமது குட்டி நாட்டுக்குள் நுழைந்துள்ளன.

அவை தலைநகர் கொழும்பில் இருந்து கிராமங்களுக்கு எடுத்து வரப்படுகின்றன. அவ்வாறே குடாநாடென வர்ணிக்கப்படுகின்ற எமது வடபகுதிக்கும் எடுத்து வரப்படுகின்றன. அதேவேளை பெண்களுக்கான கல்விப் பாரம்பரியம் எங்கள் குடாநாட்டில் இருந்தே இலங்கைத் தீவின் ஏனைய பிரதேசங்களுக்கு விஸ்தரிப்புக்கு உள்ளானதென அறியப்படும் போது, எமக்கெல்லாம் பெருமையாகத்தான் இருக்கின்றது.

கந்தபுராணக் கலாசாரத்துக்குள் மூழ்கிக் கிடந்த எமது பெண்களின் கல்வி முன்னேற்றத்துக்காக எம்மைக் கட்டி ஆண்ட வெள்ளையர்களால் உடுவிலில் ஆரம்பிக்கப்பட்ட மகளிர் கல்லூரியே இலங்கையில் முதன் முதலில் தொடங்கப்பட்ட பெண்கள் கல்விக் கூடமாகத் திகழ்கிறது.

இதுபோலவே அரசியல் சார்ந்த சிந்தனைப் பார்வைகளும் எங்கள் மத்தியில் தோன்றலாயின. அறுபதுகளுக்குச் சற்று முன்பின்னாக வடபகுதிக்கு கார்த்திகேயன் என்பவரால் மார்க்சிய சிந்தனைகளைக் கொண்ட முற்போக்குப் பரிமாணம் சிறுகச் சிறுக வரத் தொடங்கியது.

அதற்கு முன்பாக பிற்போக்கு சிந்தனைகளைக் கொண்ட சமயங்கள் சார்ந்த சிந்தனைகளே எம்மவர் மத்தியில் மிக நீண்ட காலமாக வாழையடி வாழையாக வேரூன்றி இருந்ததாக எம்மால் ஊகிக்கவும் முடிந்துள்ளது.

அதன் பின்பாகத் தமிழகத்தில் திராவிடக் கழகப் பெரியாரால் தோன்றிய சீர்திருத்தச் சிந்தனைகள் பரவலாக இங்கும் வளரத் தொடங்கின. பிற்காலத்தில் முற்போக்குவாதிகள் என்று இனங்காணப்பட்ட பலர் திராவிடக் கழகம் மற்றும் அறிஞர் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் சார்ந்த தீவிர சீர்திருத்தக் கருத்தைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்த கட்சி அரசியல்வாதிகள் தவிர்ந்த முற்போக்கு இலக்கியவாதிகள் பேராசிரியர் க.கைலாசபதியின் வருகையால் தோற்றம் பெற்றனர். கே.டானியல், டொமினிக் ஜீவா, இளங்கீரன் ஆகிய முற்போக்கு எழுத்தாளர்கள் ஆரம்பத்தில் திராவிட மற்றும் காந்திய சிந்தனைகளால் கவரப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் மாஸ்டர் என அழைக்கப்பட்டவர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்ததுடனும், தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களைக் கைது செய்யும் படலத்தால் தாமரை ஆசிரியர் ஸ.ஜீவானந்தம் என்பவர் யாழ்ப்பாணம் வந்து மறைந்து வாழ நேர்ந்த காரணிகளாலும் துளிர்விட ஆரம்பித்த மார்க்சிய கம்யூனிஸ்ட்டுகளின் முற்போக்குப் பார்வை தீவிரமாக வளர முடிந்தது.

1960ஆம் ஆண்டில் 'தினகரன்' நாளிதழின் ஆசிரியராகப் பணி ஏற்ற கைலாசபதி முற்போக்குச் சிந்தனையாளர்களின் படைப்புகளை ஏற்று 'தினகரன்' வார இதழ்களில் வெளியிடத் தொடங்கியதால் முற்போக்கு வாதம் கலை இலக்கிய உலகில் கொடிகட்டிப் பறந்தது என்றே குறிப்பிடவேண்டும்.

இதனிடையே பண்டிதர்களுக்கும் பாமர எழுத்தாளர்களுக்குமான மொழி வழக்கு இலக்கியம் சம்பந்தமான காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் நடந்தேறியதும் வரலாற்றுப் பதிவுகளாயின.

கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்த தென்பகுதி அரசியல்வாதிகள், இலக்கியக்காரர்களின் பாதிப்பு இங்கேயும் பரவலாகத் தோன்றி இருந்தன. இந்த மார்க்சிய சிந்தனைகளின் தாயகமாக இருந்த ரஷ்யாவின் அரசியல் மாற்றங்களால் இலங்கைத் தீவிலும் மாற்றங்கள் தோன்றின.

ரஷ்ய – சீன கம்யூனிஸ்ட் கட்சிகளெனப் பிளவுபட்டதால் ஒரே பாசறையில் இருந்த அரசியல் கட்சி உறுப்பினர்கள் என்றில்லாமல் மார்க்சிய சிந்தனைகள் முற்போக்கு இலக்கியம் படைத்தவர்கள் மத்தியிலும் பிளவுகளைத் தோற்றுவித்தன.

இந்த உடைவும், வெடிப்புக்களுமே காலப் போக்கில் முற்போக்குவாதிகளின் போக்குகளில் விரிசல்களை ஏற்படுத்தின. அதனிடையே எண்பதுகளில் வளர்ந்த தமிழீழ சிந்தனைகள் ஊடுருவி முற்போக்கு அணியில் இருந்த இலக்கியவாதிகளும், அரசியல் வாதிகளும் பாஸிசப் பாதைகளுக்கும் பிரிந்தனர்.

இதேநிலைமை தென்பகுதி மார்க்சியவாதிகளிடமும் காணப்பட்டது. என்.எம்.பெரேரா, கொல்வின் ஆ.டி.சில்வா போன்றவர்கள் பிற்காலங்களில் நாடாளுமன்றப் பதவிகளைப் பெற்றுத் தங்களை பாஸிசவாதிகளாக மாற்றிக்கொண்டனர்.

அவ்வாறே வடபகுதியிலும் மார்க்சியவாதிகள் மாறியதால் முற்போக்கு என்னும் சிந்தனை வட்டம் கேள்விக் குறியாகவும் நேர்ந்தது. இந்தக் கால கட்டங்களில் முற்போக்கு மார்க்சியச் செயற்பாடுகள் வெறும் சுலோகச் செயற்பாடுகளாக மாறி இருக்கின்றன.

புதிதாக மார்க்சிய சிந்தனைகளை உள்வாங்கும் இளைய சமுதாயம் நல்லிரத்தம் இருக்கும்வரை சுலோகங்களைச் சொல்லிக் கூப்பாடு போட்டு ஓய்வதையே பார்த்து வருகின்றோம். ஆயினும் மார்க்சிய கோட்பாடுகள் மனித சமுதாயத்தின் சாபக்கேடுகளைக் களைந்து வாழ்க்கையையும் நிமிர்ந்து நிற்க வைக்கும் வல்லமையைக் கொண்டதென்றால், அது பிழையான கூற்றாக இருக்க முடியாது.

மிலேனியம் எனப்பட்ட இரண்டாயிரமாம் ஆண்டுக்குப் பின்பாகக் கட்டுக்கடங்காத புதிய புதிய நாகரிக அலைகள் தோன்றி நின்று நிலைக்க முடியாமல் நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான்களாக அழிந்து போவதையும் காணமுடிகிறது.

பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற காலங்களில் வரிந்து கட்டிக்கொள்ளும் இமேஜ் போலவே முற்போக்கு நாகரிகம் மலினப்பட்டுள்ளது. முற்போக்கு சிந்தனைகள் மட்டும் என்றில்லாமல் உலகில் தோன்றிய அத்தனை நாகரிகங்களும் காலாவதியாகி வந்த வரலாறு பதிவாகியுள்ளன.

அத்தனை நாகரிகங்களும் மனிதனை திரிவுவாத வலைகளில் சிக்க வைத்த வேடிக்கையாகவே பார்க்க முடியும். எனினும் முற்போக்கு சிந்தனை மற்றும் வாழ்வியலை வழங்கக்கூடிய மார்க்சியக் கோட்பாட்டை நின்று நிலைக்கவிடாமல் ஏகாதிபத்திய முதலாளித்துவ ஆதிக்கம் நிர் மூலமாக்கிக் கொண்டிருப்பதும் சிந்திக்க வேண்டியதே!

## சிந்தித்து வாக்களியுங்கள்



தமிழினமே தன் நிலையுணர்ந்து வாக்களியுங்கள்
தலைநிமிர்ந்து வாழச் சிந்தித்து வாக்களியுங்கள்
இன விடுதலை நோக்கி உணர்ந்து வாக்களியுங்கள்
காட்டிக் கொடுக்கும் எட்டப்பரைக் கை கழுவுங்கள்

நந்திக் கடலோரம் நடந்த நாசத்தை நினையுங்கள்
மனிதாபிமானப் போர் என்ற போர்வையில்
மாக்கள் செய்த இனப்படுகொலையை நினையுங்கள்
தன் மானத்தோடு தமிழன் தலை நிமிர்ந்து வாழ வாக்களியுங்கள்

அறுபத்தைந்தாண்டல்ல அறுநூறாண்டானாலும்
இனப்பிரச்சினைத் தீர்வின்றி இலங்கையில் அமைதியில்லை
ஓரணியாகத் திரண்டு ஓங்கிக் குரல் கொடுங்கள்
தன்மானத்தோடு [illegible] வாக்களியுங்கள்

சிறந்த தீர்மானத்துடன் சிந்தித்து வாக்கிடுங்கள்
அற்ப சலுகைகளுக்காகச் சோரம் போகாதீர்கள்
ஆண்டாண்டு காலமாய் ஆண்ட தமிழினம்
அடிமைப்பட்டுக் கிடப்பதை எண்ணி வாக்களியுங்கள்

13+ என்ற பம்மாத்துக் காட்டும் சிங்கள தேசம்
எதையுமே தராமல் ஏமாற்றும் நாடகம்
மஹிந்த போயென்ன மைத்திரி வந்தென்ன
பேரினவாதக் குட்டையில் ஊறிய மட்டைகள்

எத்தனை குழுக்கள் எத்தனை குழுக்கள்
காட்டிக் கொடுக்கும் கருங்காலிக் கூட்டம்
எத்தனை காலம் நாம் ஏமாந்து போனோம்
அத்தனை துன்பத்தையும் எண்ணி வாக்களியுங்கள்

கந்த பேரின்பம், தீவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டி வீரன்



இரண்டு ஊர்களுக்கிடையே இருக்கும் பகை. ஒரு சிலரின் சுயநலத்தால் குடி நீருக்கு வரும் சோதனை ஆகியவற்றோடு, ஒரு காதல் கதையை இணைத்துச் சொல்ல முயன் றிருக்கிறார் இயக்குநர் சற்குணம்.

தமிழகம் தஞ்சை மாவட்டத்தின் அருகருகே உள்ள இரண்டு கிராமங்கள்தான் கதைக் களம். சிங்கப் பூரிலிருந்து ஊர் திரும்பும் பொறுப்பில்லாத இளைஞர் அதர்வா. இங்கேயும் அப்படியே இருக்கிறார். பிழைக்கும் வழியைப் பார்ப்பதைவிட, அந்த ஊரில் அரிசி ஆலை நடத்தும் லாலின் மகள் ஆனந்தியைக் காதலிப்பதிலேயே அதிக ஆர்வம் காட்டுகிறார். ஆனந்தியும் காதலுக்குப் பச்சைக்கொடி காட்டுகிறார். இந்த நேரத்தில்தான் பக்கத்து ஊர் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை எந்தளவுக்கு அவர்களைப் பாதித்து இருக்கிறது என்பதையும், அதற்கு முக்கிய காரணம் தன் காதலியின் தந்தை லால் கொண்டி ருக்கும் வன்மம்தான் என்பதையும் அறிகிறார் அதர்வா. பக்கத்து ஊருக்கு நல்லது செய்ய வேண்டும் என்று நினைக்கும் அதர்வாவைத் தன் விரோதியாகப் பார்க்கிறார் லால். போதாக்குறைக்கு தனது மகளின் காதல் விவகாரமும் தெரியவர கொதித்துப்போகிறார். குளத்துப் பிரச்சினை இரு ஊர்களுக்கும் இடையே கலவரமாக வெடிக்கும் சூழல் உருவாகிறது. அதைத் தடுத்து நிறுத்த அதர்வா என்ன செய்கிறார்? அவர் காதல் கைகூடியதா? படம் பாருங்கள் நேரம் இருந்தால்.

சிங்கப்பூர் சிறையில் மொட்டை அடிக்கப் பட்ட நாயகன் பீதியூட்டும் பின்னணி இசையுடன் கட்டி இழுத்து வரப்படுகிறார். அவருக்குப் பிரம்படி தரப்படுகிறது. நாயகன் மீது அனுதாபம் ஏற்படுத்தும் இந்தக் காட்சி நாயகன் ஊருக்குத் திரும்பியதும் படு பயங்கரமான கேலிக்கு உள்ளாகிறது. சிங்கப்பூரில் சட்டவிரோதமாகத் தங்கி அடி வாங்கிக்கொண்டு வருவது அந்த ஊருக்குப் பழக்கம்தான் என்பது மிக சகஜமாக காட்சிகளில் வெளிப்படுகிறது.

சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கி றார்கள். பிட்சுக்குப் பக்கத்தில் இரண்டு குச்சிகள் நடப்பட்டுள்ளன. அவற்றுக்குக் குறுக்கே இன்னும் இரண்டு குச்சிகள் கட்டப்பட்டிருக்கின்றன..அதில் ஒரு மொபைல் போன் பொருத்தப்பட்டிருக்கிறது. அதில் வீடியோ கேமரா ஓடிக்கொண்டிருக்கிறது. பக்கத்தில் மூன்றாம் நடுவர் என்று எழுதப்பட்டிருக்கிறது.

கிராமங்கள் தங்கள் சுயத்தை இழந்து, கிரிக்கெட், மொபைல் போன் உட்பட நகர நாகரிகத்தின் சகல அடையாளம் மற்றும் அவசரங்களுடனும் மாறிப் போயிருப்பதை நுட்பமாகப் பதிவுசெய்வதில் தன் தேர்ச்சியை மீண்டும் நிரூபித்திருக்கிறார் சற்குணம். வயல்காட்டு வோட்டர் பம்பில் குளிக்கும்போது பெண்கள் பேசிக்கொள்வது, ஊரில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகள் என்று பல காட்சிகளில், கிராமங்களின் மாறாத தன்மைகளும் உயிர்ப்போடு இருக்கின்றன. படம் முழுவதும்வியப்புகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார். ஆனால் ஆதார அம்சத்தில் கூடுதல் வலு சேர்க்கத் தவறியிருக் கிறார்.

ஓர் ஊரின் மக்கள் பக்கத்து ஊருக்கு எதிராக இவ்வளவு மோசமாக நடந்துகொள்கிறார் கள் என்றால் அது மிகுந்த நம்பகத் தன்மையோடு சித்தரிக்கப்படவேண்டாமா? இரண்டு கிராமங்களும் இந்தியப் பெருங்கடலின் நடுவே இருக்கும் தீவுகளா என்ன? உள்ளாட்சி அமைப்புகளைத் தாண்டி மாவட்ட நிர்வாகம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ஊடகங்கள் என்று எதுவுமே இல்லையா, இதைத் தட்டிக் கேட்பதற்கு? அப் படியே தட்டிக் கேட்க ஒரு பொலிஸ் அதிகாரி வந்தாலும், அவரை இத்தனை அலட்சியத்தோடு காயப்படுத்தி, பயமுறுத்தி அனுப்பிவிட முடியுமா? (ஆனாலும், பொலிஸ் ஜீப்பை ஊர்க்காரர்கள் உருட்டி தண்ணீருக்குள் தள்ளுவது சரியான திடுக்!)

திரைக்கதை ஈர்க்கவே செய்கிறது. காதல் காட்சிகள், வாழ்வியல் பதிவுகளில் புதுமையான பார்வையும் ஈர்க்கிறது. மோதலுக்கான முஸ்தீபுகளும், அவற்றை முறிய டிக்க அதர்வா மேற்கொள்ளும் முயற்சிகளும் விறுவிறுப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. முகம் சுளிக்க வைக்கும் கவர்ச்சிக்கு இடம் தராதது இன்னொரு நல்ல விடயம்.

## கலகலப்பான வாழ்வியல் பதிவு

தஞ்சை கிராமங்களின் வாழ்வையும், பேச்சு வழக்கை யும் அச்சு அசலாகச் சித்தரிக்கும் இயக்குநர், வன்முறைப் போக்கை இத்தனை விவரமாகக் காட்டி இருக்க வேண்டுமா? அதர்வாவையும் அவரது நண்பரையும் தவிர கிராமத்தின் மற்ற ஆண்கள் எல்லோரையுமே, வாய்ப்பு வந்தால் அரிவாளும், நாட்டு வெடிகுண்டும் தூக்குபவர்களாகக் காட்டியிருக்கிறார். அதோடு, ஊரே கலவரத்துக்குத் தயாராகிக்கொண்டிருக்க, அது நன்றாகத் தெரிந்திருந்தும் காதலர்களை நடு ராத்திரியில் பாட்டுப்பாட வைத்திருப்பது பொருந்தாத கற்பனை.

அதர்வா மிகையில்லாமல் நடித்திருக்கிறார். காதல், விளையாட்டுத் தனம், பக்கத்து ஊரின் பிரச்சி னைக்காகக் களம் இறங்கும் தீவிரம் என்று துறுதுறு.. ஆனந் தியின் தோற்றமும் குறும்புத் தனமான நடிப்பும் மென் சாரல்கள். லால் காட்டும் உக் கிர நடிப்பும் பலே காரம். என் றாலும் பல படங்களில் அவரை இதேபோல் பார்த்தாகி விட்டது. புதுமுகம் அருணகிரியின் இசை யில் மூன்று பாடல்களும் கேட்க நன்றாக உள்ளன. தாய்ப் பாலும் தண்ணீரும் என்ற பாடல் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

வாழ்வாதாரப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு, அதை யொட்டிய பதற்றத்தையும் பரிதாபத்தையும் பார்ப்பவர் கள் மனதுக்குள் பதிய வைப் பதில் கொஞ்சம் தடுமாறி இருந்தாலும்... கலகலப்பிலும் வாழ்வியல் பதிவுகளிலும் படத்தைக் காப்பாற்றி இருக் கிறார் சற்குணம். சும்மா ஒரு தடவை பார்க்கலாம்.



“ஆனந்தியின் தோற்றமும் குறும்புத் தனமான நடிப்பும் மென் சாரல்கள். லால் காட்டும் உக்கிர நடிப்பும் பலேகாரம். என்றாலும் பல படங்களில் அவரை இதேபோல் பார்த்தாகி விட்டது. புதுமுகம் அருணகிரியின் இசையில் மூன்று பாடல்களும் கேட்க நன்றாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆறாத துயரங்கள் தீர்த்தருளும் அன்னதானக் கந்தனின் மகோற்சவம்

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக் கேயராலும் பின்பு ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்ட இந்த ஆலயம் ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் மருதர் கதிர்காமர் என்ற முருக பக்தரால் மீண்டும் அமைக்கப்பட்டது.

காரை எம்.பி.அருளானந்தன்

இலங்கைத் திருநாட்டின் வட பகுதியில் உள்ள தொண்டமானாற்றங் கரையில் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது. இது மிகப் பெரும் வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது. வீரபாகுதேவர் சூரபத்மனிடம் தூது சென்றபோது தனது காலடியைக் கல்லோடை என்ற இடத்தில் பதித்துச் சென்றார். பின்பு திரும்பும் வேளை சந்திக்காலப் பூசை செய்ய வேண்டி இருந்ததால் வல்லி ஆற்றங்கரையில் பூவரசமர நிழலில் வேல் ஒன்றை வைத்துச் சந்திக் காலப் பூசை செய்து வழிபாட்டை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து அந்த இடத்தில் சித்தர்களும், யோகிகளும், முனிவர்களும் தவம் செய்து முத்தியடைந்தனர் எனக் கருதப் படுகின்றது.

தேவலோக கந்தர்வனான ஐராவசு வியாழ பகவானுடைய சாபத்தால் யானையாகக் கதிர்காமக் காட்டில் மதம் கொண்டு அலைந்து திரிந்தான். கதிர்காமக் கந்தனை வேண்டித் தவம் செய்து கொண்டிருந்த சிகண்டி முனிவரை இந்த யானை தாக்க வந்தபோது, சிகண்டி முனிவர் தனது கையில் இருந்த வெற்றிலையின் நுனியைக் கிள்ளி கதிர்காமக் கந்தனை நினைத்து யானை மீது வீசினார்.

அந்த வெற்றிலை நுனி வேலாக மாறி யானையைத் தாக்க அந்த யானை துடி துடித்து வீழ்ந்தது. கந்தர்வனாக உருவெடுத்துத் தனக்கு முத்தி தர வேண்டும் என வேண்டி நிற்க சிகண்டி முனிவரும் நீ வடபால் சென்று வல்லியாற்றங்கரையில் உள்ள கல்லோடைப் பகுதியில் தவம் செய்து முத்தியடைவாயாக எனப் பணித்தார்.

ஐராவசுவும் சிகண்டி முனிவர் கூறியவாறு வல்லியாற்றங் கரையில் உள்ள கல்லோடைப் பகுதியில் பூவரசமர நிழலில் தவம் செய்து சமாதியானார். இந்த இடத்தில் அமைக்கப்பட்ட இந்தக் கோயில் பலநூறு வருடங்களாகப் புகழ்பெற்ற வணக்கத் தலமாக இருந்து வருகின்றது. பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயராலும் பின்பு ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்ட இந்த ஆலயம் ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் மருதர் கதிர்காமர் என்ற முருக பக்தரால் மீண்டும் அமைக்கப்பட்டது. முருகப் பெருமான் ஆற்றங்கரையில் ஆடு மேய்க்கும் சிறுவனாகக் காட்சி கொடுத்து நான் அறுபத்து மூவருடன் இங்கு வந்து எழுந்தருளியுள்ளேன். எனக்கு இந்த இடத்தில் ஆலயம் அமைத்து 65 ஆலம் இலைகளில் அமுது படைத்து, என்னை வழிபட்டு வருபவர்களுக்கு அவ்வமுதை வழங்குவீராக எனக் கூறினார்.

இதைக்கேட்டு ஆச்சரியமடைந்த கதிர்காமர் எனக்கு மந்திரமோ, பூசை முறைகளோ தெரியாது. நான் எவ்வாறு தங்களுக்குப் பூஜைசெய்வேன்? என்று கூற அவரைக் கணப்பொழுதில் கதிர்காமம் அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூசை முறைகளைக் காட்டி, வாய் கட்டிப் பூசை செய்யுமாறு கூறி வேல் ஒன்றையும் வழங்கினார் என ஆலய புராணம் கூறுகிறது.

செல்வச் சந்நிதி ஆலயத்தின் தல விருட்சமாக பூவரசமரம் அமைந்துள்ளது. இன்று இந்த ஆலயம் அமைந்துள்ள இடத்தில் இருந்த ஒரு பூவரச மர நிழலிலேயே வீரவாகு தேவர் வேல் ஒன்றை வைத்து சந்திகாலப் பூசை செய்தார். முருகப் பெருமானும் கதிர்காமருக்கு முதலில் காட்சி கொடுத்தது பூவர மரத்தின் கீழேயே எனக் கொள்ளப்படுகிறது.

அன்னதானக் கந்தன் என அன்பாக அழைக்கப்படும் முருகப் பெருமானுக்கு ஆவணி மாதத்தில் வரும் பூரணையில் தீர்த்தம் நடைபெறும். அதற்கு முன்வரும் அமாவாசை அற்றுப் போகும் தினத்தில் கோயில் கிணற்றுக்கு அருகே வள்ளிக்கொடி முளைப்பதோடு கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகிறது.

செல்வச் சந்நிதியில் முருகப் பெருமான் மூலஸ்தானத்தில் வேல் உருவிலேயே எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.

திருவிழாக் காலத்தில் வேலவன் வேல் உருவிலேயே வீதி வலம் வருகிறார். இந்த வேலில் சிகண்டி முனிவன் தன்னைத் தாக்க வந்த யானைக்கு வெற்றிலையைக் கிள்ளி வீசியபோது அது வேலாக மாறி யானையைத் தாக்கியதை எடுத்துக் காட்டும் முகமாக வெற்றிலையின் நுனி பதிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

செல்வச் சந்நிதி ஆலயம் கல்லோடை என்ற பகுதியில் அமைந்திருப்பதனால் கல்லோடைக் கந்தன் எனவும், பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் காவடி எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதால் காவடிக் கந்தன் எனவும், ஆற்றங்கரையில் எழுந்தருளி அருள்பாலிப்பதால் ஆற்றங்கரையான் எனவும் சந்நிதி முருகன் அழைக்கப்படுகின்றார்.

இந்த வருடம் வழமைபோல் மகோற்சவம் 15.08.2015 அன்று இரவு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எம்பெருமானின் மகோற்சவப் பெருவிழா ஈழத்தமிழ் மக்களுக்கு நல்லதோர் விடிவைத் தரும் என்ற நம்பிக்கையோடு அன்னதானக் கந்தனின் தாள் பணிவோமாக.

(கட்டுரையாளர் சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகத்தின் பணிப்பாளர் மற்றும் சைவ ஆர்வலர், செயற்பாட்டாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல் மேடைகளில் தலைவர் பிரபாகரன்

சந்திரசேகர ஆசாத்

தென்னிலங்கையில் தேர்தல் பரப்புரைகள் மெல்ல மெல்ல சூடு பிடித்துக் கொதி நிலையை அடைந்து விட்டன. பெரும் பரப்புரைக் கூட்டங்கள் வேட்பாளர்களின் வர்ணக் 'கட் அவுட்கள்', சுவரொட்டிகள் என வழமையான ஆர்ப்பாட்டங்கள் சட்டபூர்வமாகவும் சட்டத்துக்கு விரோதமாகவும் இடம்பெற்றன. அத்தோடு வன்முறைகள் தாக்குதல்கள், கொலைகள் என அமோகமாக நடந்தன. பாதாள உலகக் கோஷ்டியினரும் களம் இறங்கியிருந்தனர் என்றும் குற்றம் சுமத்தப்படுகிறது.

ஆயிரக்கணக்கான பொலிஸாரும் அதிரடிப் படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டபோதும் சட்டவிரோத நடவடிக்கைகளை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. தேர்தல் மேடைகளிலும்கூட, இத்தகைய அநாகரிகங்கள் எவ்வித குறைவுமின்றி உலவ விடப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியினர் மஹிந்த ஆட்சியின் ஊழல், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றை அம்பலப்படுத்த, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தம் மீது பொய்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தாங்கள் பழிவாங்கப்படுவதாக ஒப்பாரி வைத்தது. அதேவேளையில் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியும்கூடத் தனது குறுகிய ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டது எனக் குற்றஞ்சாட்டினர்.

தென்னிலங்கைக் கட்சிகளின் இந்த ஊழல் மோசடிச் சண்டைக்கு இடையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரும் இழுத்து விடப்பட்டது. இதன் மூலம் குற்றச்சாட்டுகளுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுக்க முயற்சிக்கப்பட்டது. அதாவது, சிங்கள மக்களிடம் பிரபாகரனைக் காட்டி அச்சுறுத்தி வாக்குச் சேகரிப்பதில் இரு தரப்பினருமே தீவிரம் காட்டியிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தையே பிரபாகரன் புராணத்துடன்தான் ஆரம்பித்தார். அநுராதபுரத்தில் நடந்த அவரின் முதலாவது பரப்புரைக் கூட்டத்திலேயே புதிய அரசு இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்ய இராணுவ முகாம்களை அகற்றி வருகிறது எனவும், அதனால் புலிகள் மீண்டும் அணிதிரள வாய்ப்பு ஏற்படுகிறது எனவும் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டதாகவும் பரப்புரையை ஆரம்பித்தார். படையினர் உயிரைக்கொடுத்துப் பெற்றுக்கொண்ட சுதந்திரம் பறிபோகப் போகிறது என ஒப்பாரி வைத்தார்.

அவர் சிங்கள மக்களுக்கு இனவெறியூட்டி அவர்களின் வாக்குகளைப் பெறும் நோக்கத்துடன் மட்டுமன்றி, தேசிய பாதுகாப்புக்கு அபாயம் என்ற மாயையை உருவாக்கி அதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை உருவாக்கவும் முயற்சித்தார். தமிழ் மக்களின் மீள்குடியமர்வு, வட பகுதியிலிருந்து இராணுவம் அகற்றப்படல் போன்ற விடயங்களுக்கு எதிரான மனப்பான்மையை நிலைநிறுத்துவதிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு வருகிறார். பிரபாகரன் இறந்துவிட்டார் எனக் கூறிய அவரே இன்று பிரபாகரன் பெயரைத் தன் பரப்புரை மேடைகளில் ஏற்றி சிங்கள மக்களை அச்சுறுத்தி வருகிறார்.

அவர் பிரபாகரன் நாமத்தைப் பயன்படுத்தி வாக்கு வேட்டையாட முயன்று வருகையில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் அதே ஆயுதத்தை எடுத்து அவர் மீது எறிய ஆரம்பித்து விட்டனர்.

2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிரபாகரனுக்கு மஹிந்த பணம் கொடுத்து தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிப்பது அவர் மூலம் தடுக்கப்பட்டது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. ஏற்கனவே சுனாமி நிவாரணத்துக்கென வெளிநாடுகளால் வழங்கப்பட்ட நிதி ராடா நிறுவனம் மூலம் மஹிந்த குழுவினரால் மோசடி செய்யப்பட்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டது. இந்தப் பிரச்சினை தொடர்பாக ராடா நிறுவனத் தலைமை அதிகாரி ஏற்கனவே ஊழல் மோசடித் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவை வெற்றி பெற வைப்பதற்காக ராடாவின் பணம் பயன்படுத்தப்பட்டதுஎன்று ஐ.தே.க. கூறுகின்றது. தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிப்பதைத் தடுப்பதற்காக, மோசடி செய்யப்பட்ட பணம் பிரபாகரனுக்கு வழங்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி பரப்புரைத்தது.

ஏற்கனவே முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, சூரியாராச்சி ஆகிய இருவரும் மஹிந்த, பிரபாகரனுக்கு 300 மில்லியன் வழங்கினார் எனப் பல வருடங்களுக்கு முன்பே குற்றஞ்சாட்டினர். முன்னாள் அமைச்சர் சூரியாராச்சி வாகன விபத்தில் இறந்ததை அடுத்து அந்தக் கதை அப்படியே அமுங்கிப்போய்விட்டது. அந்த விபத்துத் தொடர்பான சந்தேகம் இன்னும் பலருக்கும் உண்டு. பிரபாகரன் பணம் வாங்கினாரா இல்லையா என்பது வேறுவிடயம்.

ஆனால் 2005 தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்தமைக்கு அடிப்படையான காரணம் உண்டு. ஒரு புறம் சமாதானப் பேச்சுகளை நடத்திக்கொண்டு மறுபுறம் கருணா மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பிளவுபடுத்த சதி செய்த ரணிலை தமிழ் மக்கள் நிராகரித்தனர். அதே வேளை பச்சை இனவாதியான மஹிந்தவை எமது மக்கள் வெறுத்தனர். எனவேதான் அவர்கள் எவருக்கும் வாக்களிக்காது தேர்தலைப் புறக்கணித்தனர்.

தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிக்க வைத்தது மஹிந்தவின் பணம் அல்ல. ரணில் விக்கிரமசிங்கவின் கழுத்தறுப்பு நடவடிக்கையே. இப்படியாக மஹிந்த விடுதலைப் புலிகளின் தலைவருக்கு பணம் வழங்கினாரென ஐக்கிய தேசியக் கட்சி பரப்புரை மேற்கொண்டுவரும் வேளையில் அதே வகையான ஓர் ஆயுதத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கையில் எடுத்துள்ளது. அதாவது இலங்கையில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த போது முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பிரபாகரனுக்கு நிதியும் ஆயுதங்களும் வழங்கினார் என்பதுதான் அது.

ரணசிங்க பிரேமதாஸவைப் பொறுத்தவரையில் அவர் உண்மையாகவே சிங்கள மக்களையும் சிங்கள தேசத்தையும் நேசித்த ஒரு தேசியவாதி. அடிமட்ட மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து அவர்களுக்குச் சேவை செய்வதில் தீவிர அக்கறை காட்டியவர். அவர் இலங்கையில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருப்பதை விரும்பவில்லை. அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றவே விரும்பினார். அதேவேளையில் இந்திய அமைதிப்படைக்கு எதிராக கடுமையான அரசியல் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார். எனவே விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்வதன் மூலம் இந்தியப் படையை வெளியேற்ற முடியும்

> எப்படியிருந்தாலும் பிரபாகரனின் பெயர் இல்லாமல் இலங்கையின் அரசியல் இல்லை என்பது மட்டும் தெளிவான உண்மையாகி இருக்கிறது இந்தத் தேர்தலில். சிலர் வரலாற்றில் பதியப்படுகின்றனர். தலைவர் பிரபாகரன் புதிய வரலாற்றை உருவாக்கியவர்.

எனப் பிரேமதாஸ நம்பினார். ஒரு நோக்கத்தை நிறைவேற்ற இருதரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்தனர். இந்திய இராணுவம் வெளியேறிய பின்பு, இருதரப்பினருக்கும் இடையே பேச்சு முறிவடைந்து மீண்டும் போர் ஆரம்பிக்கப்பட்டது வரலாறு.

எது எப்படி இருப்பினும், ஐக்கிய தேசிய முன்னணி என்றால் என்ன? ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்றால் என்ன? எதிர்த்தரப்பினர் விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கினர் எனவும் அது ஒரு மாபெரும் குற்றம் எனவும் சிங்கள மக்கள் மத்தியில் ஓர் அடிப்படை மனப்பாங்கை விதைத்துள்ளனர்.

தேர்தல் மேடைகளில் லஞ்சம், ஊழல் மோசடி, அதிகார துஷ்பிரயோகம் என்பன இரு தரப்பினராலும், மறுதரப்பினர் மீது முன்வைக்கப்பட்ட போதிலும் அவற்றை பிரபாகரனின் பெயரைப் பயன்படுத்துவதன் மூலம் வலுப்படுத்தும் முயற்சி இம்முறை அதிகளவில் இடம்பெற்றுள்ளது.

எப்படியிருப்பினும் போர் முடிவுக்கு வந்து 6 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் கூட பிரபாகரனின் பெயர் பயன்படுத்தப்படாமல் சிங்கள அரசியல் இல்லை என்ற நிலையே இன்னும் நிலவி வருகிறது.

இப்படித் தென்னிலங்கைத் தேர்தல் மேடையில் பிரபாகரனின் பெயர் எதிரும் புதிருமாகக் உருட்டப்படும்போது வட இலங்கையிலும் அதேவிடயம் மேடையேற்றப்பட்டது. அவரின் பெயர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலோ அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியாலோ பயன்படுத்தப்பட்டது கூடப் பரவாயில்லை, ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்களும் புலிகளை ஒழிக்கப் பாடுபட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்களாலும் கூடப் பயன்படுத்தப்பட்டமைதான் தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கிறது.

தெற்கில் மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் ஆதரவாளர்களும் புலிப் பயம் காட்டி சிங்கள மக்களைப் பயமுறுத்தி வாக்குக் கேட்க அவர்களின் கட்சியைச் சேர்ந்த அங்கஜன் இராமநாதன் பிரபாகரனைத் தான் பின்பற்றுவதாகக் கூறி வடக்கில் வாக்குக் கேட்டார்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையே சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்டபோது பிரபாகரன் முதலில் மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்பட வேண்டும் எனத்தான் கோரினாராம். எனவே தான் வெற்றி பெற்றால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவாராம் அவர்.

பிரபாகரன் கோரியது வேலை வாய்ப்புக்களையல்ல. பொருளாதாரத்தடை, எரிபொருள் தடை, மீள்குடியமர அனுமதிக்கப்படாமை போன்ற நெருக்கடிகள் நீக்கப்பட்டு மக்கள் இயல்பு வாழ்வு திரும்ப வேண்டும் என்பவற்றையே.

அவையே தலைவர் அன்று வைத்த நிபந்தனைகளாகும்.

எப்படியிருந்தாலும் பிரபாகரனின் பெயர் இல்லாமல் இலங்கையின் அரசியல் இல்லை என்பது மட்டும் தெளிவான உண்மையாகி இருக்கிறது இந்தத் தேர்தலில். சிலர் வரலாற்றில் பதியப்படுகின்றனர். தலைவர் பிரபாகரன் புதிய வரலாற்றை உருவாக்கியவர். எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் அவரின் நாமம் நிலைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09
16.08.2015
சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்

# கோவா பேஷியல்

முகத்தின் அழகைப் பராமரிக்கக் கண்ட கண்ட கிரீம்களை பயன்படுத்தாமல் இயற்கையாக கிடைக்கும் பழங்கள், காய்கறிகளை பயன்படுத்தலாம். கோவாவில்; பலவித மான சத்துக்கள் உள்ளன. மேலும் முட்டைகோஸை வைத்து முகத்தின் அழகை ஜொலிக்க வைக்கலாம்.

காய்கறியைக் கொண்டு பேஷியல் செய்வதற்கு முன்பாக சருமத்தை நன்றாகத் தூய்மைப்படுத்த வேண்டும். காய்கறி பேஷியலுக்கும் முதலில் காய்ச்சாத பாலால் முகத்தை நன்றாக அழுத்தித் துடைக்கவும். பின்னர் கோவாவைப் பச்சையாக அரைக்கவும். பின்னர் அரைத்த விழுதில் சிறிது தண்ணீர் சேர்த்து நன்றாகப் பிழிந்து வடிகட்டி சாறு எடுத்து தனியாக வைக்கவும்.. கோவா மசித்ததைக் கொண்டு முகத்துக்கு மசாஜ் செய்யவும். இடையிடையே கோவாச் சாறை விரல்களில் தொட்டுக் கொள்ளவும். இருபது நிமிடங்கள் கழித்து ஈரமான பஞ்சால் முகத்தைத் துடைத்து விடவும். கோவா விழுது, பால் ஒரு கரண்டி, மற்றும் தேன் ஒரு கரண்டியைச் சேர்த்து நன்றாகக் கலந்து முகத்துக்கு பேக் போடவும்.

20 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ முகம் பளிச் தோற்றத்துடன் ஜொலிக்கும். இந்தப் பேஷியலை பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை செய்து கொள்ளலாம். பருக்கள் இல்லாதவர்கள் என்றால் பத்து நாட்களுக்கொரு முறையும் செய்து கொள்ளலாம்.



# பிஸ்தா ஐஸ்கிரீம்



## தேவையான பொருள்கள்

பிஸ்தா ஐஸ்கிரீம்
பால் – 3 கப்,
சர்க்கரை – முக்கால் கப்,
கோர்ன்ப்ளார் – 5 மேசைக்கரண்டி
கலர் – ஒரு சிட்டிகை,
கிறீம் – ஒரு கப்
பிஸ்தா பருப்பு – 2 மேசைக்கரண்டி

## செய்முறை:

பிஸ்தாப் பருப்பை பொடியாக உடைத்துக் கொள்ளவும். ஒரு கனமான பாத்திரத்தில் பாலை ஊற்றிக் காய்ச்சவும். 5 நிமிடம் கழித்து கார்ன்ப்ளாரை சிறிதளவு தண்ணீரில் கரைத்துக் கொதிக்கும் பாலில் சேர்த்து, கெட்டியாகும் வரை கொதிக்கவிடவும். பின்னர் சர்க்கரையையும் சேர்த்துக் கரையும் வரை கொதிக்கவிட்டு, அடுப்பில் வைத்து இறக்கி நன்றாக ஆறவிடவும். எசன்ஸும் கலரும் சேர்க்கவும். இந்தக் கலவையை, முட்டை அடிக்கும் கருவியால் நன்றாக அடித்து, கிறீமைச் சேர்க்கவும். பின்னர் இந்தக் கலவையை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். ஒரு மணி நேரம் கழித்து, வெளியே எடுத்து மறுபடியும் பீட் செய்யவும். உடைத்த பிஸ்தாப் பருப்புகளை சேர்க்கவும். கலவையை ஒரு தட்டில் ஊற்றி மீண்டும் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். ஐஸ் பதத்துக்கு வந்த பின்னர் பரிமாறவும்.

# முகப்பருக்களை போக்கும் வேப்பிலை

சிலருக்கு கன்னம் முழுவதும் பருக்கள் இருக்கும், கைபட்டாலே எரிச்சலும், முகத்தை பார்த்தாலே வேதனை மட்டும் தான் மிஞ்சும். இவர்களுக்கு ஏற்ற அருமையான பொருள் தான் வேப்பிலை.

ஒரு கொத்து வேப்பிலையை 1 லீற்றர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து ஆவி பிடியுங்கள். பின்னர், பருக்களின் மீது ஐஸ் கட்டிகளை வைத்து ஒத்தி எடுங்கள்.

வேப்பிலையைக் கொதிக்கும் தண்ணீரில் போட்டு, தண்ணீரின் நிறம் மாறும் வரை ஊற வைத்து, நீரை வடித்து ஒரு போத்தலில் ஊற்றி வைத்துக் கொள்ளுங்கள். இதனைத் தினமும் குளிக்கும் போது, குளிக்கும் நீரில் சிறிது ஊற்றி, குளித்தால் சருமத்தில் ஏற்படும் முகப்பரு மற்றும் வெள்ளை புள்ளிகள் நீங்கிவிடும்.

இந்த வேப்பிலை நீரை துணியில் நனைத்து, தினமும் இரவில் படுக்கும் போது துடைத்து வந்தால் முகப்பரு, கரும்புள்ளிகள் போன்றவை போய்விடும். அதே போன்று அந்த நீரைத் தலைக்கு ஊற்றினால், தலையில் இருக்கும் பொடுகு மற்றும் அதிகமான கூந்தல் உதிர்தல் சரியாகிவிடும்.

வேப்பிலை மற்றும் ஒரேஞ்சுத் தோல் சிறிது எடுத்துக் கொண்டு அதனைக் கொதிக்கும் நீரில் போட்டு, சிறிது நேரம் ஊற வைத்து அரைத்து, அத்துடன் தேன், தயிர் மற்றும் சோயாப் பால் சேர்த்து பேஸ்ட் போன்று செய்து கொள்ள வேண்டும். இதனை முகத்தில் தடவி ஊற வைத்து கழுவி வந்தால், பருக்கள், வெள்ளைப் புள்ளிகள், கரும்புள்ளிகள், தழும்புகள் போன்றவை நீங்கிவிடும். இதனை மாதத்துக்கு ஒரு முறை செய்து வந்தால் நல்லது.



# சருமத்தில் சேரும் அழுக்குகளை நீக்க

வெயில் அதிக அளவில் இருப்பதால், வியர்வை அதிகம் வெளியேறி, அதனால் சருமத்துளைகள் திறந்து, அதனுள் அழுக்குகள் புகுந்து, முகம் பொலிவிழந்து சோர்வுடன் காணப்படும். அதுமட்டுமின்றி, சருமத்துளைகளில் அழுக்குகள் அதிகம் இருந்தால், அவை சருமத்தை கருமையாக வெளிக்காட்டும். ஆகவே நீங்கள் வெள்ளையாகக் காட்சியளிக்க தினமும் பேஷியல் செய்ய வேண்டும். அதிலும் வீட்டுச் சமையலறையில் உள்ள பொருள்களைக் கொண்டே அன்றாடம் பேஷியல் செய்து வந்தால், முகம் பொலிவோடு பிரகாசமாக மின்னும். தேயிலைத் தூளில் சிறிது ஒலிவ் ஓயில் மற்றும் தேன் சேர்த்து கலந்து, அதனை முகத்தில் தடவி மென்மையாக 15 நிமிடம் மசாஜ் செய்து, பின் முகத்தை கழுவ வேண்டும். இப்படி அவ்வப்போது செய்து வர முகத்தில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியேறிவிடும்.

பப்பாளியை மசித்து, அதில் சிறிது தேன் மற்றும் சர்க்கரை சேர்த்து கலந்து, விரலால் மென்மையாக முகத்தை ஸ்கரப் செய்து, சிறிது நேரம் ஊற வைத்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

தக்காளியை மசித்து, அதில் சிறிது சர்க்கரை சேர்த்து கலந்து, அதனைக் கொண்டு தினமும் முகத்தை ஸ்கரப் செய்து வந்தால், முகம் பொலிவோடு இருக்கும்.

பற்பசையில் சிறிது உப்பு சேர்த்து கலந்து, அதனை பிம்பிள் அல்லது முகப்பரு உள்ள இடங்களில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், பருக்கள் அனைத்தும் மறையும்.

தயிரில் சர்க்கரை சேர்த்து கலந்து, முகத்தில் தடவி ஸ்கரப் செய்து கழுவினால், அதில் உள்ள விற்றமின்கள் சருமத்தை அழகாக வைத்துக் கொள்ள உதவும். மேலும் தயிர் சருமத்தில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.



# மூக்குத்தியின் இரகசியம்


பெண்கள் இடப்பக்கம் தான் மூக்குத்தி அணிய வேண்டும். மூக்கு குத்துவது, காது குத்துவது துளையிடுவது உடலில் உள்ள வாயுவை (காற்றை) வெளியேற்றுவதற்கு. ஆண்களுக்கு வலப் புறமும் பெண்களுக்கு இடப் புறமும் பலமான, வலுவான பகுதிகளாகும். பெண்ணின் மூக்கில் இடது பக்கத்தில் குத்தக்கூடிய மூக்குத்தி வலது பக்க மூளையை நன்றாக செயல் படவைக்கும். பெண்கள் மூக்குத்தி அணியும்போது, முன் நெற்றிப் பகுதியில் இருந்து ஆலம் விழுதுகள் போல்சில நரம்புகள் நாசி துவாரத்தில் இறங்கி கீழே வரும். இவ்வாறு விழுதுகள் மூக்குப் பகுதியிலும், ஜவ்வு போல மெல்லிய துவாரங்களாக இருக்கும். ஆலம் விழுதுகள் போல உள்ள மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்த துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால், அந்த தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும். அதுமட்டுமல்ல, மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும். மூக்கு குத்துவதால் பெண்களுக்கு ஏற்படக்கூடிய சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறு சரி செய்யப்படுகின்றன. இடப்பக்கம்தான் பெண்கள் மூக்குத்தி அணியவேண்டும். இடது பக்கம் குத்துவதால் சில மாற்றங்கள் ஏற்படும். சிந்தனா சக்தியை ஒரு நிலைப்படுத்துகிறது. மனதை அமைதிப் படுத்துகிறது. தியானம், பிரார்த்தனையில் ஈடுபட உதவுகிறது.



cmyk
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேட்டு நிலத்து ஊற்று

தேவி பரமலிங்கம்




பெற்றவர்களை விட்டு காதலனோடு பிள்ளை ஓடிவிட்டால், உடனே ஏற்படும் வைராக்கியம் காலகெதியில் எந்தளவுக்கு மாறிவிடுகிறது?

இளமைத்துடிப்பில் ஏற்படுகின்ற காதல் உணர்வில் உந்தப்பட்டு பெற்றவர்களை மறந்து கிளம்பி விட்டாலும் அவர்களின் தொடர்பே இல்லாமல் வாழ நேர்கை யில் பிள்ளைக்கும் எத்தனை பாசச்சுமை நெஞ்சில் அழுத்திக்கொண்டிருக்கும்.

கந்தையர் தம்பதி, பாமா தங்களை மீறி ஒருவனுடன் சென்றுவிட்டாலும் அவளது சுவடுகஷ்வி வீட்டிலும், இதயங்களிலும் இருந்து வீசி விட இயலாமல் துயரால் வாடிய நாள்கள் எத்தனை?

பாமாவுக்கும் புதிய உறவுகளுக்குள் அகப்பட்டாலும், பெற்றோருடன் வாழ்ந்து பழகிப்போன ஈர்ப்பு, அவளது எண்ணங்களில் எத் தனை தடவை வேதனை வலியோடு நகர்ந்திருக்கின்றன?

கணேசனுடன் பாமா ஓடிப்போய் மாதங்கள் உருண்டோடி விட்டாலும், அவள் இல்லாதது வீட்டில் அனைவரையும் பாதித்திருந்தது. ஒரே உடன்பிறப்புக்கும் நிரப்பமுடியாத இடைவெளியையே அனுபவிக்கவும் கூடிவிட்டது.

"அம்மா...! அக்கா எங்கை...?"

வேறெதையுமே புரிந்து கொள்ள முடியாது விட்டாலும்கூட, இருந்த ஒருத்தி இல்லாமல் போய்விட்டதைப் புரிய முடிந்திருந்தது. ராஜனுக்கு; அதையே தாயிடம் விசாரித்தான்.

மகளின் செய்கை வெறுக்கத்தக்கதானாலும், விசாலாட்சியால் எப்படி அவளை இதயத்தால் எறிந்து விடமுடியும்? செய்தால் தாய்மைக்கு என்ன மதிப்பு? தாய்மை இரக்க சுபாவம் கொண்டதுதானே!

விசாலாட்சியின் இதயம் மகளது செய்கையை வெறுத்தது; மகளை வெறுக்கவில்லை.

"அக்கா... எங்களோடை கோவிச்சுப் போய்விட்டாளடா..."

ராஜனின் கேள்விக்கு அவளுக்கு இப்படித்தான் சொல்ல வாய்வந்தது. இந்தப் பதில் அவனுடைய கேள்விக்கு எவ்வித திருப்தியைக் கொடுத்திருக்கும்? குழந்தைப் பருவத்தில் இருந்த அவன் ஆளாகும்வரை இருந்த பழக்க தோஷமும், உள்ளுணர்வும், சகோதர பாசமுமே கேட்கவும் ஆளாக்கிற்று.

தாயின் பதில் எதிர்பார்ப்புக்குப் போதாமையால், அதே வார்த்தையை அம்மா என்பதை அப்பா ஆக்கித் தந்தையிடம் கேட்டான்.

"அவள் செத்துப் போனாளடா... செத்துப் போனாள்!"

அவர் எடுத்த வீச்சுக்குச் சொன்ன வார்த்தை ராஜனுக்கு எந்தளவு திருப்தியைக் கொடுத்திருக்கும்? கந்தையர் சொன்னதற்கும் உள்ளீடான அக்கறையால் தோன்றிய உணர்ச்சியே காரணம் என்பதை ஆறு வயது நிரம்பாத ராஜனால் அறிய இயலுமா?

கணேசனுடன் பாமா சென்றிருந்த நாள்களில் கந்தையருக்கு இருந்த மன அழுத்தத்தில் இப்பொழுது எவ்வளவு மாற்றம்?

"அவள் இனி எனக்கு மகளில்லை இந்த ஜென்மத்தில் இருந்த மகள் செத்துப் போனாளெண்டு நினைச்சுக் கொள்றன்... அவள் போன இடத்தில் நல்லா இருக்கட்டும்..."

அவளுடைய இன்றைய நிலையை செத்துவிட்டாள் என்று வாயால் கூறினாலும், அவளும் உயிருடன் உலகில் எங்கோ வாழ்ந்து கொண்டிருக்கிறாள் எனப் புரிந்தும் இடைக்கிடை நினைத்து உருகவும் செய்கிறார்.

சுயகௌரவம் விழித்துக் கொள்கையில், பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவதாக அமைந்து விடுகிறது. நெஞ்சழுத்தம்!

கந்தையர் விரும்பமாட்டார் என்றபோதிலும் வேலுப்பிள்ளை மாஸ்டர், பாமாவைப் பற்றிய சங்கதிகளைக் கடிதத்தில் தெரிவித்துக் கொண்டே இருந்தார்.

திருமண விடயங்கள், வகித்த பங்குபோன்ற இன்னோரன்ன விடயங்களை மாஸ்டர் கந்தையர் குடும்பத்துக்கு தெரியப்படுத்துவதில் பின் நிற்கவில்லை.

"என்னப்பா...! புள்ளை கொழும்பிலதானே குடி வந்திருக்கிறாளாம்... போய்ப் பாத்துக்கொண்டு வந்தா என்ன... நீங்க வராட்டிலும் என்னையாகில் அனுப்புங்கோவன்...!"

கணவர் சந்தோசமாக இருக்கின்ற நேரமாப் பாத்து, விசாலாட்சி ஒருநாள் கேட்டு வைத்தாள்.

"விசாலாட்சி நீ என்ன கதைக்கிறாய்...? இவ்வளவு காலமா உனக்கு என்ன சொல்லிக்கொண்டாறன். திரும்பவும் எனக்கு விசரைக் கிளப்பாமல் வேறையேதன் கதையைக் கதை..."

அவர் இரைந்ததைக் கேட்டு அடங்கிவிட்டாள் விசாலாட்சி. அவளுடைய தாய்மை உணர்வு சிலவேளைகளில் அவளையும் மீறிச் சிந்திக்க வைத்து விடுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

மனைவியின் ஆசாபாசங்களை கண்டிப்பான வார்த்தைகளால், மட்டுப்படுத்திக் கொண்டாலும் கந்தையர் மகளை போக்கு வரவு வீதிகளிலோ, வேறெங்குமோ காணக்கிடைக்காதா என்று அங்கலாய்த்துத் தவித்தே விடுவார்.

ஒருவர் மாறி ஒருவராக பாசப்பிணைப்புகளால் உழன்ற கந்தையர், விசாலாட்சி, ராஜன் ஆகியயோரின் நாள்கள் நகர்ந்து கொண்டிருந்தன. கந்தையரின் நிலை மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் இருந்ததை அவரைத் தவிர வேறுயார்தான் அறிவர்?

ஆசாபாசங்களுக்காக சுயகௌரவத்தை விட்டுக்கொடுத்து நடந்தால், சமுதாய நிராகரிப்புக்கு உட்பட நேர்கின்றதை ஏற்கும் திராணியற்று தவிர்த்துக் கொள்கின்றனர்!

சமுதாய அமைப்புக்கு நடக்க வேண்டும் என்பதற்காக, பெற்ற பிள்ளை உயிருடன் இருக்கையில் தந்தை இறந்து விட்டதாகக் கருத வேண்டிய சூழல்! இல்லாமல் பிள்ளை இறந்து விட்டதாகத் தந்தையின் உள்ளம் நினைக்க நியாயம் இல்லையல்லவா?

அத்தகைய பாதிப்புக்குத்தான் கந்தையரின் மனமும் உள்ளாகி இருந்தது. இந்தச் சமுதாய அமைப்புக்குள் அவரும் வாழ்வதால் எஞ்சி இருக்கும் கொஞ்சச் சுயகௌரவமே ஆட்டிப்படைக்கிறது.

"இந்த ஜென்மத்தில எனக்கிருந்த ஒரே மகளும் செத்துப் போனாளெண்டு நினைச்சுக் கொள்றன்...."

கணேசனுடன் பாமா ஓடிவிட்டதை அறிந்து வந்த கந்தையரிடம், தங்கை கனகம் கேட்ட கதைக்கு சூளுரைத்த அவர், இந்தநாள் வரை அவ்வுணர்விலே நாள்களை ஓட்டிவிட்டார்.

அந்தச் சம்பவம் நிகழ்ந்து வருடம்கூட நிறையாத ஒன்பது, பத்தாவது மாதத்தில் அவருடைய நெஞ்சழுத்தம் பலவீனம் ஆகிவருவதை அவராலே உணர முடிகிறது. இன்னமும் சில நாள்களுக்கு நடிக்கும் தென்பும் இருப்பதை அவர் உணராமலும் இல்லை!

(தொடரும்)

"விசாலாட்சி நீ என்ன கதைக்கிறாய்...? இவ்வளவு காலமா உனக்கு என்ன சொல்லிக்கொண்டாறன். திரும்பவும் எனக்கு விசரைக் கிளப்பாமல் வேறை யேதன் கதையைக் கதை..." அவர் இரைந்ததைக் கேட்டு அடங்கிவிட் டாள் விசாலாட்சி. அவளுடைய தாய்மை உணர்வு சிலவேளைகளில் அவளையும் மீறிச் சிந்திக்க வைத்து விடுவதை அவ ளால் தவிர்க்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவுமில்லை என்றானபின்



முன்னொரு நாளில்
குறுகிய எல்லைக்குள்
குந்தியிருந்தது ஊரின் நிம்மதி!
இன்று வெட்டை வெளிகளெங்கும்
அசுத்தக் காற்றின் ஆக்கிரமிப்பு.

இவைகளை
கண்டும் காணாதவனாய்
காலற நடக்கும்
பாதரட்சைகளின் வழியிலே
சென்று..... பின் தொடரும்படி
செப்புகின்ற வாய்களுக்கும்
நிச்சயமாய் தெரியுதில்லை
இப்போதைய நிதர்சனம்.

வாழ்வாதாரமற்ற சோடனைக்குள்
வலம்வர
நிர்ப்பந்திக்கப்படும் பொழுதில்
உளத்தாக்கங்கள்
உச்சம் பெறுகின்றன
உயிர் தப்பிய பிணங்களுக்கு!

போர் வென்ற காலம்
போனபின்பும்
போர் தின்ற எச்சங்களுக்கு
புலப்படுவதாயில்லை
இன்னமும் இருட்பொழுதுகள்.

யார் கண்டார் இப்படியாகுமென்ற
எண்ணக் கனதிகள்

எந்நாளும்
ஊதிப் பெருத்தனவாய்.....
அந்நாளைய நினைவுகளை
இதயத்துள்
அகல இரைமீட்டபடி.....
கண்ணீரில் நனைகின்றன
மனதின் ஊமைக் காயங்கள்.

மேய்ப்பதற்கு சக்தியற்றவர்கள்
சதையற்ற எலும்புகளுக்கு
நாயாய் மாறும்
நலிநிலைகண்டு
இன்னும்
உப்பிப் பெருக்கின்றன
உள் மனக்குமைச்சல்கள்.

*அலெக்ஸ் பரந்தாமன்,*
*புதுக்குடியிருப்பு*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 382

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ✿ | 4 | | 5 |
| | ✿ | 6 | | | | ✿ | |
| 7 | 8 | | | ✿ | 9 | 10 | |
| 11 | | | ✿ | 12 | | | |
| ✿ | | ✿ | 13 | | ✿ | | ✿ |
| 14 | | 15 | | ✿ | 16 | | 17 |
| | ✿ | 18 | | 19 | | ✿ | |
| 20 | | | ✿ | 21 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................
பூரணமான தபால் விலாசம்: ..........................................
..........................................
கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1.சதத்தில் அரைவாசி
4.தேர்தலில் அளிக்கப்படுவது
6.சுக்கு, மிளகுடன் இதுவும் சேர்ந்தால் திரிகடுகம்
7. வேறுபடுத்தல்
9.அர்த்தம்
11. சிராய்
12. கவரும் தன்மை
13. வழங்கு
14.தோடு
16. பாடல்
18. தலைமை வகிப்பவன்
20.நாள்
21. உடம்பை முன்புறம் சாய்த்தல்

### மேலிருந்து கீழ்

1. ஒரு தமிழ் மாதம்
2. அச்சு வாகனம் ஏற்றுதல்
3. உமிழ் நீர் சொரி
4. யுவர்
5. கேலி செய்யும் நோக்கில் தொல்லை கொடுத்தல்
8.சுப காரியங்களின் போது வீட்டு வாசலில் வைப்பது
10. தப்பச் செய்
12. அடகு
13. பின்புறத்தில் அமைந்திருக்கும் இடம்
14. வெட்ட உதவும் கருவி
15. சமயம்
16. திருமணமாகாத பெண்
17. இவளும் பெண்ணே
19. பிரி

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 380 இற்கான
சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சாகசம் (4)அதிக (7) தவம் (8) முகராசி (9) கலைமகள் (11) வித (12) தரு (13) கடல் (14) சிம்மாசனம் (16)முன் (17) திடல் (19) கனவு (20) சளி (21) தாம் (22) ஆகு பெயர்

### மேலிருந்து கீழ்

(1) சாதகம் (2)கவலை (3)சம்மதம் (4)அக (5)திராவிடம் (6) கசிதல் (8)முள் (10) கருமாதி (13) கனல் (14)சின்னம் (15) சடங்கு (16) முகதா (18) குளிர் (20) சய

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.382
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(26.08.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.382 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 30.08.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 380 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
A.C. றெட்ணாதரன்,
இல 98/17 பெரிய கமம்,
எழுத்தூர், மன்னார்.

**2 ஆம் பரிசு**
அ.அலோசியஸ்,
இல.13, அண்ணாநகர் பிரதான வீதி,
வவுனியா.

**3 ஆம் பரிசு**
தம்பித்துரை மதி,
சடச்சப்பை, கொல்லன்கட்டி,
தெல்லிப்பழை.

**4 ஆம் பரிசு**
செ.சந்தனராசா
இல.42 பழைய பொலிஸ்நிலைய வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு**
ம.மதூசன்
இல.31. உப்பள வீதி, பெரியகடை,
மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

அ.அன்பரசி
சன்னதி வீதி, இடைக்காடு,
அச்சுவேலி

ரா.உஷாந்தினி
'சாருஜா' சிவன்கோவில் வீதி,
புத்தூர்

ஜெ.சாரதா
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

சொற்சிலம்பம் போட்டி 380 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

cmyk

12
16.08.2015
சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்

# facebook வலைப் பக்கம்

**சௌம்யா** Aug 9
'வரப்ப எதுனா வாங்கிட்டு வா' வில் நிறைவடைகிறது குழந்தைகளின் வழி அனுப்பல்கள்
RETWEETS 13 FAVORITES 15

**நித்து** Aug 8
பிற மனிதர்கள் மீது நிறைய சந்தேகங்கள் வந்து தொலைகிறதா... வெட்டியாய் இருக்கிறீர்கள் என பொருள்

**வந்தியத்தேவன்** 6 Aug
எவ்வளவு மோசமானவராய் இருந்தாலும் சரி உங்கள் மீது அன்பு செலுத்துபவர்களை முழுதாய் நிராகரித்து விடாதீர்கள். அது ஒரு குழந்தையைக் கொல்வதற்கு ஈடானது

**பகியவன்**
மதுவிலக்கு போராட்டத்துக்கு வர்றீங்களா?
குவாட்டர் வாங்கித் தந்தா எந்த போராட்டத்துக்கும் வருவோம்.



## சிரிக்கலாம் வாங்க...







❋ கணவன் : உனக்குத்தான் 2 கண்ணும் நல்லா இருக்கே, ஒழுங்கா அரிசில இருந்து கல்லைப் பொறுக்க மாட்டியா?
மனைவி : உங்களுடைய 32 பல்லும் நல்லாதானே இருக்கு. 2,3 கல்லை கடிச்சு சாப்பிட முடியாதா?
கணவன் : ????

❋ கணவன் : நேத்து நம்ம வீட்டுக்கு வந்த திருடனை உங்கப்பாதான் அனுப்பியிருப்பாரோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு.
மனைவி : ஏங்க வீணா அவர்மேல பழியைப் போடுறீங்க.. ?
கணவன் : பின்ன என்ன.. வரதட்சணையா வாங்கின ஐம்பதாயிரத்தை எடுன்னு திருடன் கரெக்ட கேட்டானே.
மனைவி : ????

❋ நண்பர் 1 : தெரியாத்தனமா, பூசணிக்காய் வியாபாரம் செய்யறவர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போயிட்டேன்.
நண்பர் 2 : சமையல்ல பூசணிக்காயா ?
நண்பர் 1 : அதில்ல. தாம்பூலப் பையில் ஆளுக்கொரு பூசணிக்காய்.. .தூக்கிட்டு வந்ததில் ரெண்டு கையும் செம வலி
நண்பர் 1 : ?????

❋ லாட்டரி காரர் : சார்.. . இன்னைக்குக் குலுக்கலை வாங்கிட்டுப் போங்க.. காலையிலே யோகலட்சுமி வீட்டுக் கதவைத் தட்டப்போறா!
ஒருவன் : யோவ். .. போனவாரம் நான் தனலட்சுமி வீட்டுக் கதைவைத்தட்ன விவகாரமே இன்னமும் தீரலை..
லாட்டரி காரர் : ????






## ஐய்யயோ... ஐய்யயோ...

சென்னையில் இருந்து டில்லிக்கு ரயில் வண்டியில் ஒரு சர்தார்ஜி சென்று கொண்டு இருந்தார்.அவரோடு fashion design செய்யும் ஒருவரும் பயணம் செய்தார். இருவரும் ஒரே கூபேயில் பயணம் செய்தனர்.சர்தார்ஜி தூங்க செல்லும் போது இந்த ஆசாமியிடம் காலையில் 6 மணிக்கு என்னை எழிப்பி விடவும் என்று கேட்டு கொண்டார்.
இரவு முழுதும் சர்தார்ஜி விட்ட குறட்டையில் fashion design ஆசாமியால் தூங்க முடியவில்லை. பொறுத்து பொறுத்து பார்த்து சர்தார் ஜியின் தாடியை வெட்டி விட்டார். முடியை நவ நாகரீமான ஸ்டைலில் மாற்றி விட்டார். அசந்த தூக்கி கொண்டு இருந்த சர்தார்ஜிக்கு சுத்தமாக தெரியவில்லை.
காலையில் சார்தார்ஜியை எழுப்பி விட்டார். சர்தார்ஜி டாய்லெட்டிற்க்கு சென்றார் அங்கு இருக்கும் கண்ணாடியை பார்த்தார்.. உள்ளே சென்றவர் அலறி அடித்து கொண்டு வெளியே ஓடி வந்தார்.
இந்த இந்தியன் ரயில்வேயே சுத்த மோசம். பாதுகாப்பே இல்லை நான் டாய்லேட் உள்ளே போனதும் ஒருத்தன் ஜன்னல் வழியா எட்டி பாக்குறான் என்றார்.

**சர்தார்ஜியின் மகன்:** அப்பா! நாளையிலிருந்து நாம பணக்காரர் ஆகிவிடலாம்

**சர்தார்ஜி:** எப்படிடா?

**சர்தார்ஜியின் மகன்:** நாளைக்கு எங்க கணக்கு டீச்சர், பைசாவை ரூபாயா மாத்தறது எப்படின்னு சொல்லித் தரப்போறாங்களாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமண பந்தம்

இனியவள்

எதையுமே எதிர்பார்க்காதவர்கள், வாழ்க்கையில் எப்போதுமே ஏமாற்றங்களைச் சந்திப்பதில்லை என்பது சான்றோர் வாக்கு. இந்தத் தத்துவம், நம் எல்லோருக்கும், எல்லாக் காலகட்டங்களிலும், எல்லா விடயங்களுக்கும் பொருந்தும். குறிப்பாகத் திருமண உறவில் அடியெடுத்து வைப்போருக்கு!

திருமண பந்தத்தினுள் நுழையும்போது, நாம் ஒரு புதிய மனிதரைப் பார்க்கிறோம். அந்த நபர் நமக்குப் பொருத்தமானவர் என்றும், நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் நிறைவேற்றுவார் என்றும் ஆழ்மனதில் நமக்குள் ஒரு எதிர்பார்ப்பு பதிந்துவிடுகிறது. எனக்கு எதிர்பார்ப்புகளே இல்லை என வெளியே சொல்லிக் கொண்டாலும், எல்லா மனிதர்களுக்குள்ளும் நிச்சயம் அது இருக்கும். நம்மைச் சார்ந்தவர்கள் எல்லோரும், அது வாழ்க்கைத்துணையோ, குழந்தைகளோ, நண்பர்களோ யாராகினும், அவர்கள் நம்மைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும், எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது எனச் சில பல எதிர்பார்ப்புகளை உருவாக்கிக் கொள்கிறோம். ஏதேனும் பிரச்சினை வந்தால், தவறு நம் மீதே இருந்தாலும், நம்மைச் சார்ந்தவர்கள் நமக்குச் சார்பாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம். இன்னும் அன்றாட வாழ்க்கையில் இவ்வாறு ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எதிர்பார்ப்புகளே இல்லாத வாழ்க்கை சாத்தியமில்லைத்தான். ஆனால், அது அளவோடு இருந்தால் பரவாயில்லை. எல்லா விடயங்களிலும் எதிர்பார்ப்புகள் கூடும்போது, நம்மையும் அறியாமல் எதிராளியை நாம் கட்டுப்படுத்துகிறோம் என்பதை உணர்வதில்லை. எதிர்பார்ப்புகள் கூடக்கூட, ஒவ்வொரு செயலிலும் அனுபவிக்க வேண்டிய வியப்பை நாம் தவற விடுகிறோம். எதிர்பார்க்காமல் நடக்கும் விடயத்தில் கிடைக்கும் சந்தோஷமும் சுவாரஸ்யமும் ஈடு இணையற்றது. நினைத்தது நினைத்த மாதிரியே நடந்தது எனும் திருப்தியைத் தவிர, எதிர்பார்ப்பு வேறெதையும் நமக்குக் கொடுப்பதில்லை. திருமண வாழ்க்கையில் இத்தகைய எதிர்பார்ப்புகள்தான் உறவுகள் சிதையவும், திருமணத்தைத் தோல்வியடையச் செய்யவும் காரணமாகின்றன. திருமணத்துக்குப் பின்னர் கணவனோ, மனைவியோ தனக்குக் கட்டுப்பட்டு, தனது விருப்பப்படி வாழ வேண்டும் என நினைப்பதே மிகப்பெரிய எதிர்பார்ப்புதான். அதன் பின்னணியில் மறைந்திருப்பது கட்டுப்பாடன்றி வேறில்லை. எதிர்பார்க்கும் உங்கள் குணத்தால், துணையின் திறமைகள் அனைத்துக்கும் கதவடைக்கப்படுகிறது. எதிர்பார்ப்புகள் குறைவதால், அங்கே அன்பும் காதலும் அதிகமாகிறது. உறவுகள் உயிர்ப்புடன் இருக்கின்றன. எதிர்பார்ப்புகளில் மறைந்திருக்கும் அடுத்த ஆபத்து, குறை கண்டுபிடிப்பதும், திட்டுவதும், விமர்சனம் செய்வதும்.

உங்கள் துணையின் செயல்கள் உங்களுக்குக் கோபத்தையோ, ஏமாற்றத்தையோ உண்டாக்கும் ஒவ்வொரு முறையும், உடனே உணர்ச்சி வசப்பட்டு கத்துவதையோ, திட்டுவதையோ, கடுமையாக விமர்சனம் செய்வதையோ தவிருங்கள். உங்களுடைய கோபம் எதிர்பார்ப்பின் விளைவாக உண்டானதா என ஒரு நிமிடம் யோசியுங்கள். மனைவி என்பவள், கணவனின் தேவையறிந்து பணிவிடைகள் செய்யக் கடமைப்பட்டவள் தானே என்று காலங்காலமாக ஆண்கள் மனதில் பதிந்து போன எதிர்பார்ப்பின் வெளிப்பாடுதானே இது? எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாத போது, நம்மையும் அறியாமல் எதிராளியிடம் கடுமையாக நடந்து கொள்கிறோம். எதிராளி அமைதியானவர் என்றால் அடங்கிப் போவார். அப்படியில்லாத பட்சத்தில், தனது பங்குக்கு திருப்பி வார்த்தைகளைக் கக்குவார். இருவருக்குமான வாக்குவாதம் முற்றும். அன்யோன்யம் கெடும்.

எதிர்பார்ப்புகளைக் கையாள்வது என்பது கணவன் – மனைவி இருவருக்குமே அவசியம் தெரிந்திருக்க வேண்டிய ஒரு கலை. அது வாழ்க்கையில் மிகப்பெரிய சவாலும்கூட. வாழ்நாள் முழுவதும் அந்தச் சவாலை எதிர்கொள்ளப் பயிற்சி எடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். எதிர்பார்ப்புகளை அழைப்புகளாக மாற்றுவது இந்தப் பிரச்னைக்கான அருமையான தீர்வு. எதிர்பார்க்கும் போது, எதிராளி அதைச் செய்தே ஆக வேண்டும் என்கிற மறைமுகக் கட்டுப்பாட்டையும் வைக்கிறோம். ஆனால், செய்வதும் செய்யாமல் தவிர்ப்பதும் துணையின் தனிப்பட்ட விருப்பம். அழைப்பில் ஒரு விடயத்தைச் செய்தாக வேண்டிய அழுத்தமோ, மிரட்டலோ, பயமுறுத்தலோ இருப்பதில்லை. நம்மைப் போலவே நமது துணைக்கும் எதிர்பார்ப்புகள் இருக்கும். துணையாகிய நீங்கள் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் எனும் விருப்பம் அவருக்கும் இருக்கும் என யோசித்தாலே நமது தவறு நமக்குப் புரிந்து விடும். முதல் கட்டமாக நம்மை மாற்றிக் கொள்ளவும் முனைவோம். எதிர்பார்ப்புகள் அழைப்புகளாக மாறும் போது, உங்களுக்கு நிறைய சம்மதங்கள் கிடைக்கும்.

நான் அன்பானவள்... நான் எனது துணையை அளவுகடந்து நேசிக்கிறேன்... காலத்துக்கும் காதலுடன் வாழ விரும்புகிறேன்... என நீங்கள் விரும்பும் மாற்றத்தை வாய்விட்டுப் பல முறை சொல்லிக்கொண்டே இருங்கள். குளிக்கும் போது, தனிமையில் இருக்கும்போது... இப்படி எப்போது வேண்டுமானாலும், எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டே இருக்கலாம். இந்தப் பழையன கழிதல் விடயம் நிச்சயம் உங்கள் சிந்தனைகளை மட்டுமின்றி, உங்களுக்கும் துணைக்குமான அன்யோன்யத்தை, அணுகுமுறையை சாதகமாக மாற்றும்.

# மதிக்கப்பட வேண்டியவள் பெண்

நமது சமூகத்தில் பெண்கள் எவ்வாறு நோக்கப்படுகிறார்கள். அவர்கள் மனதை புரிந்து நாம் செயற்படுகிறோமா? பெற்ற தாயை மதிக்கிறோம் அவள் நம்மை பத்து மாதம் சுமந்து பெற்றதால், சகோதரிகளை மதிக்கிறோம் நம்முடன் கூடப்பிறந்தவள் என்பதால், மனைவியை மதிக்கிறோம் நம்முடனே கூடவே வாழ்பவள் என்பதால். மற்ற பெண்கள் விடயத்தில் நமது பார்வை எவ்வாறிருக்கிறது. பெண்களைக் காமப்பொருளாகவே பார்க்காதீர்கள், அதையும் தாண்டி அவர்களிடம் ஓர் புனிதம் இருக்கிறது! அதுதான் தாய்மை. அதை மதிக்காவிட்டாலும் களங்கம் செய்யாமல் இருக்கலாமே. பெண்களின்றி இவ்வுலகில் இன்பமேது, அழகேது, நாமேது. அவர்களையும் சாதாரண மானவர்களாகவே பாருங்கள். ஆண்களைப் போலவே அவர்களுக்குள்ளும் உணர்வுகள் உண்டு, ஆசைகள் உண்டு குடும்பத்தை வழிநடத்தும் காப்பாற்றும் கடமையும் உண்டு. அதை மதியுங்கள் போற்றுங்கள். அவர்களுக்குரிய பாதுகாப்பை வழங்குங்கள். ஆண்களிடத்தில் வேறுபாடிருந்தும் அவர்கள் பெரிதாய் தெரியப்படுத்தில்லை!



நமது வாழ்க்கையின் ஒவ்வொரு கால கட்டத்திலும் பெண்களுடனே ஒன்றித்து வாழ்கிறோம்.

பிறந்ததும் தாய் மடி வளர்கையில் சகோதரிகள் அரவணைப்பு. வளர்ந்து மணந்தபின் மனைவியின் பாசம். வயதானவுடன் பிள்ளைகள் பேரக் குழந்தைகள் அன்பு.

பெண் தொடர்பில்லாமல் நமது வாழ்க்கை நினைத்தும் பார்க்க முடியாதது.. எல்லோரையும் தாயாக, சகோதரியாக பார்க்க வேண்டுமென்பதில்லை.. அது சாத்தியமுமில்லை.. ஒரு சக மனிதராக மனுசியாக மதித்தாலே போதும்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எறும்பு



சின்னச் சின்ன எறும்பே
சிங்கார எறும்பே!

உன்னைப் போல நானுமே
உழைத்திடவே வேணுமே!

ஒன்றின் பின்னே ஒன்றாய்
ஊர்ந்து போவீர் நன்றாய்!

நன்றாய் உம்மைக் கண்டே
நடந்தால் நன்மை உண்டே.

செ.நியந்தரி, தரம் 3சி,
வ/ சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை.

## தெரிந்து கொள்வோம்


- ஐ.நா. சபை சின்னத்தில் பூமி உருண்டையுடன் உள்ள இலை ஒலிவ் இலை.
- உயர் வெப்பநிலையை அளக்க உதவும் கருவி – பைரோ மீற்றர்
- உலகிலேயே உயரமான பீடபூமி எது? – பாமீர், திபெத்
- கனவுக்கோபுர நகரம் எது? – ஒக்ஸ்போர்ட், இங்கிலாந்து.
- முதன் முதலில் போரில் ரொக்கெட்டுகளைப் பயன்படுத்தியவர் – திப்புசுல்தான்
- நமது உடலைச் சுற்றி வர ஒரு துளி இரத்தத்துக்கு சுமார் ஒரு நிமிடம் முதல் இரண்டு நிமிடம் வரை ஆகிறது.
- சதுர வடிவில் ரூபாய் நோட்டை வெளியிடும் நாடு, தாய்லாந்து.
- கழுகு, மனிதனை விட 8 மடங்கு கூர்மையான பார்வைத்திறன் கொண்டது.
- நைல் நதியின் நீளம், 6 ஆயிரத்து 650 கிலோமீற்றர்.
- 13 நாடுகளின் எல்லையைக் கொண்ட ஒரே நாடு, சீனா.
- உலக நாடுகளின் தேசியக் கொடிகளில் அதிகம் இடம்பெற்ற நிறம் – சிவப்பு
- கடல் குதிரை என்று சொல்லப்படும் மீன் இனத்தில் ஆண் மீன்களே கர்ப்பமாகின்றன.
- லிங் இன மீன் இடும் முட்டையின் எண்ணிக்கை 16 கோடிகள்.
- நாய் மனிதர்களைப் போலவே கனவு காண்கிறது.

## கவிதை



பொய்யைச் சொல்லாதே புலாலை உண்ணாதே
கள்ளைக் குடியாதே களவை நினையாதே
காமம் கொள்ளாதே, கொலையைச் செய்யாதே
சூதை விரும்பாதே சினம் கொள்ளாதே
புறங்கூறாதே, பொறாமையடையாதே

பா.தாட்சாயினி,
தரம் 6 ஈ,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



ற.சாய்சரன்,
தரம்–3பி
யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்.



ப.அனோஜா,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# மலைப்பாம்பும் மான் குட்டியும்

விதுசன்

குறட்டி என்ற பெயர் கேட்டால் மஞ்சளாறுக் காட்டில் சிறுத்தைகளும், புலிகளும் கூடப் பயப்படும். இருபது அடிக்கும் நீளமாக மரங்களின் கிளைகளில் படர்ந்து இருக்கும் அழகிய உடம்பும், கரும்புள்ளிகளும் அதற்கு பெருமையாக இருந்தன. கரும்பழுப்பு, பழுப்பு என்று பல நிறங்களில் மலைப்பாம்புகள் இருக்குமே தவிர லட்சணமான கரும்புள்ளிகளுடன் பார்ப்பது மிகவும் அரிது.

மலைப்பாம்புகள் பொதுவாக பறவைகள், முயல் போன்ற சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணும். சில சமயம் மான் போன்ற சற்றுப் பெரிய விலங்குகளைக் கூடத் தாக்கும்.

ஆனால் குறட்டி சற்று வித்தியாசமானது. காட்டெருமைக்கன்று, சிறுத்தை போன்றவற்றைக் கூட தனது குறட்டிப்பிடியில் நொறுக்கி எடுத்துவிடும். அதனால் அதற்கு குறட்டி என்று பெயர் வழங்கி வந்தது. ஒரு நாள் குறட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது.

மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் மிளா மான் குட்டி அதன் கண்ணில்பட்டது. நீண்டிருந்த தனது உடலை வேகமாக தன்னை நோக்கி இழுத்தது. அநேகமாக அந்த மான்குட்டி மிகவும் குறுகலாக ஓடும், அந்த ஆற்றைக் கடந்தும் வரலாம். அப்படிக் கடந்து வந்தால் குறட்டி இருக்கும் வழியாகத் தான் வர வேண்டும். அந்த மிளா மான்குட்டி ஆற்றில் இறங்கியது. குறட்டியின் வாயில் நீர் சுரந்தது. குறட்டி தனது உடலைக் கிளையில் சுற்றி தனது தலையை மட்டும் தொங்க வைத்தபடி அசையாமல் இருந்தது. பார்வை மட்டும் ஆற்றில் இறங்கிய மான் குட்டி மீது இருந்தது. ஆற்றில் மான்குட்டி நீந்தியது. அதே மரத்திலிருந்துதான் குறட்டி ஒரு நாள் ஒரு சிறுத்தையை மடக்கிப் பிடித்தது. இறப்பர் போன்ற தனது உடம்பைக் கயிறு போல் பாவித்து இறுக்கிய வேகத்தில் சிறுத்தையின் எலும்புகள் மடமட வென்று முறிந்தன. மான் கரையேறி விட்டது. குறட்டி அசையாமல் இருந்தது. அந்த மரத்துக்கு அருகில் வந்த பாதையில் சுற்றிப் பார்த்தபடி நடந்து வந்த அந்த மான் குட்டி சொல்லி வைத்ததுபோல் அந்த மரத்தடியில் வந்து நின்றது. குறட்டி மான்குட்டியின் கழுத்தில் மாலை யாய் விழுந்தது.

அம்மா என்று கதறியது மான்குட்டி. எதிர் பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அப்படி இப்படிக் கூட அசையாமல் நின்றது. குறட்டிக்குக் கூட மிகவும் ஆச்சரியமாக இருந்தது. குறட்டி மானின் முகத்தைப் பார்த்தது. அதற்குள் குறட்டி இறப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றிது. மான் குட்டி தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது. குறட்டி இவ்வாறு திடீர்த் தாக்குதல் நடத்தும் போது எந்த ஒரு மிருகமும் அதனிடம் தப்பிக்கப் போராட்டம் நடத்துமே தவிர இவ்வாறு அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது. ஆமாம்.... ஏன் அழுகிறாய் என்றது குறட்டி. மான்குட்டி தனது அழுகையை நிறுத்திவிட்டு உறுதியான குரலில் இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம் என்றது. நான் எப்படி உதவ முடியும்? என்றது. மொட்டச்சி அம்மன் பாறைக் குச் சென்று நாவல் பழங்களை எடுத்து எனது அம்மாவுக்கு கொடுத்துவிட்டு மீண்டும் இங்கு வந்து சேருகிறேன். பின்னர் உனது இஷ்டப்படி என்னைக் கொன்று சாப்பிடு என்றது மான்குட்டி. நீ மீண்டும் என்னிடம் திரும்பி வருவாய் என்பதற்கு என்ன உத்தரவாதம்? என்றது குறட்டி.

நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீ என் கூடவே வா.. நாவல் பழங்களை எனது தாயிடம் சேர்த்ததும் நீ என்னைக் கொன்று சாப்பிடு என்றது மான்குட்டி உன்னை விட்டால் என்னால் பிடிக்க முடியாது? உனது வேகம் என்ன, எனது வேகம் என்ன? என்றது குறட்டி. என் மீது நம் பிக்கை இல்லை என்றால் நீ என்ன சொல்கிறாயோ அதற்கு நான் கட்டுப்படுகிறேன் என்றது மான் குட்டி. நான் உனது உடலைச் சுற்றியபடியே இருப்பேன். என்னைச் சுமந்த படியே செல்ல வேண்டும் என்று சொன்னது குறட்டி. மான் அதற்கு ஒத்துக் கொண்டது. குறட்டியைச் சுமந்தபடியே சென்றது மான். மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்று நாவல் பழங்களைச் சேகரித்துக் கொண்டது. மலைப் பாம்பு தனது உடலைச் சுற்றி யிருக்கவே உற்சாகத்துடன் நடந்தது மான் குட்டி.

தனது அம்மாவுக்காக தன்னுடைய உயிரைக் கொடுக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது அதற்கு சந்தோஷமாகவே இருந்தது.

மான் தனது இருப்பிடத்துக்கு அருகாமையில் வந்தது. தனது இருப்பிடத்தையும் படுத்துக்கிடக்கும் அம்மாவையும் காட்டியது. குறட்டி அதன் உடம்பிலிருந்து மெல்ல இறங்கியது.

நாவல் பழங்களைக் கொடுத்துவிட்டு தப்பிக்கலாம் என்று நினைத்தால், நோய் வாய்ப்பட்டிருக்கும் உனது அம்மா எனக்கு உணவாக நேரிடும் என்றது குறட்டி.

நீ செய்த உதவியை ஒரு நாளும் மறக்க மாட்டேன். எனது வார்த்தையை ஒரு போதும் மீறமாட்டேன் என்று சொல்லி விட்டு துள்ளி ஓடியது மான் குட்டி. குறட்டி மெல்ல ஊர்ந்து மரங்களின் ஊடே மறைந்து கொண்டது. அங்கு அதற்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு பதினைந்து இருபது



மான்கள் உடல் நலம் விசாரித்தபடி இருந்தன. அதில் இரண்டு மூன்று மான்கள் ஒன்று சேர்ந்தால் கூட அவற்றின் கொம்புகளால் தனது தலையைக் குத்திக் கிழித்து விட முடியும். இவ்வாறு தான் சென்ற வாரம் ஒரு மலைப்பாம்பை இரண்டு பெரிய மிளா மான்கள் கொம்பினால் நசுக்கி எடுத்துவிட்டன. அந்த மாலைப் பாம்பு அங்கேயே உயிரை விட்டது. பயம் என்றால் என்னவென்று தெரியாத குறட்டிக்குக் கூட கொஞ்சம் நடுக்கமாக இருந்தது.

கையில் கிடைத்ததை விட்டு விட்டோமே? என்று கூட ஆதங்கமாக இருந்தது. குறட்டி தனது பெரிய உடலை வளைத்து நெளிந்தபடி மறைவிடம் நோக்கி நகர ஏதோ சத்தம் கேட்டது. அதே மான்குட்டி தனியாக வந்தது.

எனது கடமை முடிந்தது... எனது வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன்.....உனக்கு எனது நன்றி என்று கூறியவாறு குறட்டியின் முன்னால் வந்து நின்றது மான்குட்டி. குறட்டியின் முரட்டுத் தோலையும் மீறி அதன் உடல் புல்லரித்தது.

என்னைப் பற்றியா சொன்னாய் என்றது குறட்டி. இல்லை எனக்கு உதவி செய்த உன்னை காட்டிக் கொடுக்க மாட்டேன் என்றது மான். உன்னைக் கொன்று தின்னப் போகும் நான் எப்படி உனக்கு உதவியவன் ஆவேன்? என்றது குறட்டி.

நீ சொன்னது சரிதான்.. ஆனால் நீ உதவா விட்டால் எனது அம்மாவைக் காப்பாற்ற முடியாது போயிருக்கும். பெற்றோருக்காகத் தனது உயிரைத் தருவதைவிட பெருமை தரக்கூடிய விடயம் உலகத்தில் வேறு என்ன தான் இருக்க முடியும்? என்றது மான்.

குறட்டி தனது தலையை மெல்ல உயர்த்தி மான் குட்டியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தது. தாய்க்காக உனது உயிரைத் தரத்துணிந்த உன்னை வணங்கினாலே.... எனக்குப் பெருமை என்று சொல்லியபடி குறட்டி அதனை உயிரோடு விட்டுச் சென்றது. மான்குட்டி குறட்டியை ஆச்சரியமாகப் பார்த்து. குறட்டி மரக் கிளைகளில் தவழ அதன் உடம்பின் கரும்புள்ளிகள் வைரமாக மின்னின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

## 16.08.2015 முதல் 22.08.2015 வரை

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

ராகு, சுக்கிரன், குருவின் அமர்வு நன்மை தரும். புத்துணர்வுடன் பணிபுரிவீர்கள் திட்டங்கள் சிறப்பாக நிறைவேறும். பொது இடங்களில் நிதானமாகப் பேசுவதால், சிரமம் தவிர்க்கலாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள், நண்பர்கள் போல் உங்களிடம் சுமுக உறவு கொள்வர். கடன்களை செலுத்துவீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். மனைவியின் அன்பும், பாசமும் மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும். மாணவர்கள், படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். மாரியம்மன் வழிபாடு, நன்மை தரும்.

### இடபம்

குரு, ராகு, தவிர ஏனைய கிரகங்கள் சிறப்பான பலன் தருவர். தடைப்பட்ட செயல்கள் நிறைவேறும். இளைய சகோதரர்களின் உதவி கிடைக்கும். உறவினர்களின் வருகை, மகிழ்ச்சி தரும். புத்திரர்களின் நற்செயல்களால், பெருமை அடைவீர்கள். வம்பு, வழக்கு அணுகாத சுமுக வாழ்வு பெறுவீர்கள். வாழ்க்கைத் துணை, குடும்ப நலன் கருதி திட்டங்களை மாற்றி அமைப்பார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி மேற்கொள்வீர்கள். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். பணியாளர்கள் பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்கள், குடும்ப அமைதியைப் பேணிக் காப்பர். மாணவர்கள், நண்பர்களின் உதவியால் நன்மை பெறுவர். மகாலட்சுமி வழிபாடு, செல்வ வளம் தரும்.

### கடகம்

குரு, சுக்கிரன், ராகு அதிக நன்மை தருவர். பேச்சில் சத்தியம், வசீகரம் இருக்கும். எதிர்கொள்ளும் நிகழ்வு இனிதாக அமையும். உடன் பிறந்தவர்கள் செய்யும் செயலைக் குறை சொல்ல வேண்டாம். புத்திரர்களின் எதிர்காலம் வளமாக அமைய உதவுவீர்கள். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத் துணை, உங்களின் கௌரவம் அதிகரிக்கும் வகையில் செயல்படுவார். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கலாம். பணியாளர்கள், வேலையில் குளறுபடி வராமல் செயல்பட வேண்டும். பெண்கள், வீட்டுச்செலவுக்கு சற்றுத் திண்டாடலாம். மாணவர்கள், படிப்பில் அதிக கவனம் கொள்வர். முருகன் வழிபாடு, தொழிலில் வளர்ச்சி தரும்.

### மிதுனம்

சுக்கிரன், சந்திரன் மட்டும் ஓரளவு நன்மை தருவர். மற்றவர்கள் விடயத்தில் தலையிட்டால், பிரச்சினை வரலாம். பணவரவு குறையலாம் என்பதால், அதற்கேற்ப செலவைத் திட்டமிடவும். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர்கள் அறிவுத்திறனில் மேம்பட உதவுவீர்கள். பாதுகாப்பு குறைந்த இடங்களுக்குச் செல்ல வேண்டாம். மனைவி வழி உறவினர்கள், உதவி செய்ய முன்வருவர். தொழில், வியாபாரத்தில் ஓரளவே இலாபம் உண்டு. பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்க தாமதமாகும். பெண்கள், வீட்டுச்செலவுக்கு சிறிது திண்டாடலாம். தட்சிணாமூர்த்தி வழிபாடு, கஷ்டங்களை போக்கும்.

### சிங்கம்

சுக்கிரன், சனியின் அமர்வு சிறப்பான இடங்களில் உள்ளது. செயல்பாடுகள் சிறப்பாக அமையும். புதியவர்களின் அன்பு, உதவி கிடைக்கும். வீட்டில் மங்கள நிகழ்வு ஏற்படும். புத்திரர்கள் நல்ல முறையில் நடந்து பெருமை தேடித் தருவர். வழக்கு, விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். இல்லறத் துணை இணக்கமான போக்குடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு, சலுகைகள் கிடைக்கும். பெண்கள், பிறர் விடயத்தில் தலையிட வேண்டாம். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர். வைரவர் வழிபாடு, மனதுக்கு மகிழ்ச்சி தரும்.

### கன்னி

சூரியன், செவ்வாய், சுக்கிரன், அனுகூல அமர்வில் உள்ளனர். சவால் நிறைந்த பணிகளை, இனிய அணுகு முறையால் நிறைவேற்றி விடுவீர்கள். வாகனப் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சீரான ஓய்வு, உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றினால், பிரச்னைகளில் இருந்து தப்பலாம். பெண்கள், புண்ணியத் தலங்களுக்கு சென்று வருவர். மாணவர்கள் படிப்பில் இருக்கும் குறைகளை நிவர்த்தி செய்வர். ஆஞ்சநேயர் வழிபாடு, செயலில் வெற்றி தரும்.

### துலாம்

சனி, ராகு, செவ்வாய் தவிர மற்ற கிரகங்களால், அதிக நன்மை உண்டாகும். ஞானமும், செல்வமும் அதிகம் பெறுவீர்கள். தர்ம காரியங்களில் ஈடுபாடு வளரும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பூர்வீகச் சொத்தில் வரும் பணவரவு கூடும். புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடப்பர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணை நல்ல ஆலோசனை கூறி முன்னேற உதவுவார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிகள் நிறைவேறும். பணியாளர்கள் நிறைந்த சலுகை பெறுவர். பெண்கள், உறவினர் வீட்டின் மங்கள நிகழ்வுக்கு உதவுவர். மாணவர்கள் புரிந்து படித்து அதிக புள்ளிகள் பெறுவர். லட்சுமி நரசிம்மரை வழிபடுவதால் பொன், பொருள் சேரும்.

### தனுசு

குரு, சுக்கிரன், சனி பகவான் அனுகூல அமர்வில் உள்ளனர். வாழ்வில் முன்னேறப் புதிய பாதை கண்ணில் படும். மனதில் நம்பிக்கை கூடும். உடன் பிறந்தவர்களுக்கு ஓரளவு உதவுவீர்கள். வீடு, வாகனப் பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். புத்திரர்களின் குறையை கண்டிப்பதில் இதமான அணுகுமுறையைப் பின்பற்றவும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி, அதீத அன்புடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழிக்கத், தேவையான திட்டங்களை நல்லமுறையில் செயல்படுத்துவீர்கள். பணியாளர்களுக்கு, வேலைப்பளு கூடும். மாணவர்கள், சிறப்பாகப் படிப்பர். விநாயகரை வழிபடுவதால், கஷ்டம் தீரும்.

### விருச்சிகம்

சந்திரன், புதன், ராகுவினால் ஓரளவு நன்மை கிடைக்கும். உறவினர், நண்பர்கள் உங்களை நன்கு உபசரிப்பர். கடந்த கால கஷ்டங்களுக்கு தீர்வு கிடைக்கும். பயணத்தின் போது, உரிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றவும். புத்திரர்களின் நல்ல சிந்தனைகளைச் செயல்படுத்த வழி காட்டுவீர்கள். இல்லறத் துணையுடன் கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்துச் செல்லவும். எதிர்ப்பாளர்கள் விலகுவர். தொழில், வியாபாரத்தில் அளவான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் தொழில் நுட்பங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். பெண்கள் நகை இரவல் கொடுக்கவோ, வாங்கவோ வேண்டாம். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

### மகரம்

கேது, புதன், சுக்கிரன் நற்பலன் தருவர். பசு, பால் பாக்ய யோகத்தால், பலவித நன்மைகள் கிடைக்கும். பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள். வாகனப் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர்கள், சிந்தனை மற்றும் செயலில் சிறந்து விளங்குவர். உடல்நிலையில் பின்னடைவு நிலை தொடர வாய்ப்புண்டு. மனைவியின் ஒவ்வொரு செயலும், மனதுக்கு நிம்மதி தரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு, வேலைப்பளு அதிகரிக்கும். பெண்களுக்கு, தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள், தவறுகளை உணர்ந்து திருத்திக் கொள்வர். நந்தீஸ்வரர் வழிபாடு, செல்வம், புகழ் தரும்.

### மீனம்

சந்திரன், புதனால் ஓரளவு நன்மை உண்டாகும். தேவையற்றதைப் பேசுவோரிடம் இருந்து விலகவும். தகுதிக்கு மீறிய வாக்குறுதி எதுவும் தர வேண்டாம். உடல்நலம் பேணுவதில் உரிய கவனம் வேண்டும். தாய்வழி உறவினர்கள், கருணை மனதுடன் உதவுவர். புத்திரர்கள், நல்லபடியாக நடந்து கொள்வர். இல்லறத் துணையின் அன்பால், மகிழ்ச்சியடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், தங்கள் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். பெண்கள் சகிப்புத் தன்மையுடன் நடந்து, குடும்ப நலம் பேணுவர். மாணவர்கள், ஆர்வமுடன் படிப்பர். தனவந்திரி வழிபாடு, உடலுக்கு ஆரோக்கியம் தரும்.

### கும்பம்

செவ்வாய், சூரியன், குரு அதிக நன்மை தருவர். ஆடம்பர செலவுகளைத் தவிர்க்கவும். எதிர்ப்பு விலகி, பணிகளில் முன்னேற்றம் உருவாகும். கடன் கொடுத்த பணம்கிடைக்கும். தெய்வத் திருப்பணிக்கு உதவுவீர்கள். புத்திரர்கள், பிடிவாதக் குணத்துடன் நடந்து கொள்வர். நோய் தொந்தரவு குறைந்து, உடல்நிலை பலம் பெறும். இல்லறத் துணையின் மனதில், உங்கள் மீதான நம்பிக்கை வளரும் வகையில் நடந்து கொள்ளுங்கள். தொழில், வியாபாரம் வியத்தகு முன்னேற்றம் பெறும். பணியாளர்கள், அதிக சலுகை பெறுவர். பெண்கள், பிறர் விடயத்தில் தலையிட வேண்டாம். மாணவர்களுக்குப் படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். சிவனை வழிபடுவதால், குடும்ப ஒற்றுமை சீராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்



# நீங்கள் நல்லா இருக்கனும் நாடு முன்னேற..!

தொல்புரம்
சி.கதிர்காமநாதன்

காலையில் எழுந்து கேற்றினைத் திறந்து வெளியில் வர தென்றல் அலைவரிசையில் "நீங்க நல்லா இருக்கனும் நாடு முன்னேற...... இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற...." எனத் தொடங்கி, "என்றும் நல்லவங்க எல்லாரும் உங்க பின்னாலே, நீங்க நினைச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே...." என்ற பாட்டு காதை ஊடுருவியது. ஆகா....... எவ்வளவு ஆனந்தமான காலை. "நல்லவங்க எல்லாரும் உங்க பின்னாலே...." திரும்பிப் பார்த்தேன் யாராவது நிக்கிறாங்களா என்று..... ம்.... ஒருவருமில்லை. வீட்டு நாய்தான் வாலை ஆட்டியபடி நின்றது.

"நீங்க நினைச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னால ....." அட உண்மைதான். வெளியே எதிர்வளவு மதில் சுவரில் நேற்று மாலை வரை காணப்படாத அங்கஜன் – இராமநாதன் இப்போது என்னைப் பார்த்தபடி இருந்தார். அதற்கு முன்னரே திருமதி விஜயகலா மகேஸ்வரன், சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா..... வேறு பல அரசியல் கட்சி வேட்பாளர்கள் சுவரில் இடம் பிடித்துவிட்டார்கள். அட...... சற்றுத் தள்ளி சுமந்திரன் ஐயாவும் கூப்பிய கைகளுடன் சிரித்தபடி நின்றார். இந்தச் சுவரில் இன்னும் பலர் வர இருக்கலாம். தேர்தல் காலங்களில் இப்படியாக மதில்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. இப்பதான் ஞாபகம் வருகுது. சமீபத்தில் வெளியாகி வெற்றி பெற்ற 'மெட்ராஸ்' படத்தின் பிரதான பாத்திரம் உந்தச் சுவர்தான்.

நான் எல்லாரையும் வாஞ்சையோடு பார்த்தேன். எல்லோரும் தமிழர்கள், சகோதரர்கள், எங்களுக்காகப் பாடுபடுபவர்கள். இன்னும் பாடுபடப் போகிறார்கள். அதற்கான அனுமதியை மறுபடியும் நாடி எம்மிடம் வந்து நிக்கிறார்கள். யாருக்கு நாங்கள் அனுமதி கொடுப்பது? எந்தப் பெறுபேறுகளை வைத்துத் தீர்மானிக்கப் போகிறோம். யாரை வெறுப்பது?

மீண்டும் பத்திரிகைகளில் இது தமிழ் மக்களுக்கு முக்கியமான தேர்தல் என்று பழைய பாடலை போடத் தொடங்கி விட்டார்களே? ஆரம்பக் கூட்டமே ஆங்கிலப் படம் போல் மோதலும் தொடங்கிவிட்டது. "நான்தான் துன்ப காலத்தில் உங்களைத் தாங்கிப் பிடித்தேன்", "இல்லை, நான்தான் உங்களைத் தூக்கிக் கொண்டிருந்தேன்", "இல்லை..... எங்கள் ஆட்சியில்தான் உணவுண்டு நீங்கள் மெத்தையில் படுத்தீர்கள்", "நாங்கள்தான் புலிகளை அழித்து உங்களை மீட்டெடுத்தோம்". இது மட்டுமா? "தமிழ் மக்கள் முகம் கழுவியது, பல்விளக்கியது, சட்டை போட்டது எல்லாம் எங்களால்தான். இவையெல்லாம் நாங்கள் சொல்லாமல் செய்திருக்க மாட்டியள்." பாவம் தமிழ் மக்கள், இவ்வளவு சீக்கிரம் தலையைப் பிய்த்துக் கொள்கிற அளவுக்கு தேர்தல் சீக்கிரமாய் வருவதை விரும்பியிருக்க மாட்டார்கள்.

இனியென்ன? ஒவ்வொரு இலங்கைத் தமிழனும் முன்பள்ளி போவதை விரும்பாத சிறுசுகள் நிலைதான். அடம்பிடித்தாலும் விடமாட்டார்கள். சோப்பு போடுவார்கள், குளிப்பாட்டுவார்கள், பவுடர் போட்டு சட்டை மாற்றி, சப்பாத்துப் போட்டு, கேட்டதெல்லாம் வாங்கித் தந்து........ கிறீம் பணிஸ் தொடங்கி 100 கிராம்..... மிக்ஷர் வரை.... இழுத்துக் கொண்டு போய் வாங்கில் உட்கார வைக்கும் நிலைதான். காதில் சொல்லுவார்கள். "யாருக்கு வோட்டப் போடுறது தெரியும்தானே. நான் சொன்ன மாதிரி அதுக்கு நேர புள்ளடியை போட்டிடு.... மறந்து போகாத..."

22 மாவட்டங்களிலிருந்து நாடாளுமன்றத்துக்கு 196 பேரும், தேசிய பட்டியல் மூலம் 29 பேரும் ஆக மொத்தம் 225 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். தெரிவு செய்யப்படும் வேட்பாளர்களைவிட, போட்டியிடும் வேட்பாளர்கள் தொகை பாகுபலி படத்தை விட பிரமாண்டமானதாக உள்ளது. தற்போது ஆட்சியிலிருக்கும் அரசியல்வாதிகளும், ஆட்சியைப் பெற்று மக்களுக்கு நல்லாட்சியைக் கொடுக்க நினைக்கும் கட்சிகளும், தத்தமது கட்சி விளக்கங்களுடன், வாக்கு வேட்டைக்கு சந்திரமுகி வேட்டையன் போல் கிளம்பிவிட்டார்கள்.

ஏற்கனவே சூரிய பகவானின் அக்கினி வேறு. தற்போது தேர்தல் சூடு என்றால் மக்கள் தான் என்ன செய்வார்கள்? இதைவிட போட்டியிடும் வேட்பாளர்கள் என்றால் சும்மாவா..... பரப்புரை பீரங்கிகள்தான். குண்டுபோட்டு இந்த முறையும் வேட்பாளர்கள் எப்படி மக்களைத் தம் வழிக்குக் கொண்டுவரப் போகிறார்கள். கடந்த தேர்தல் காலங்களில் சொன்ன அல்லது பாடிய பாடல்களைத் தூசுதட்டி இப்போது வேறு வடிவத்தில் பாடல் வரிகளைச் சேர்த்து இசையும் அமைத்து மக்களிடம் கொண்டு செல்லப்போகிறார்களா? என்ன விதமாகவோ தமிழ் மக்களை ஒரு வழிக்குக் கொண்டு வரத் தான் போகிறார்கள்.

இப்போதே பழைய பாடல்கள் தெருவெங்கும் ஒலிக்கத் தொடங்கி விட்டன. அதுவும் நிலைமைக்கு ஏற்ற பாடலைத் தேடிப் பிடித்து விடுவார்கள்.

"அச்சம் என்பது மடமையடா......"

"எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்......"

"வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்......"

"நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா......"

நாங்கள் கேட்கத்தான் வேணும். வேறு வழியில்லை. தோசைக் கல் எடுத்தாகி விட்டது. அடுப்பும் மூட்டியாகிவிட்டது. தோசைமாவும் கரைந்து புளித்தாகிவிட்டது. இனியென்ன? தோசைக் கல்லில் ஊற்றவேண்டியதுதான் பாக்கி.

இன்றுவரை தமிழ் மக்களுக்குக் கிடைத்த ஒட்டு மொத்தத் தீர்வுதான் என்ன?

தமிழ் மக்கள் இழந்தவற்றையெல்லாம் பெற்றுக் கொண்டுவிட்டார்களா?

நிலம், உரிமை, தொலைந்துபோன உறவு, சுதந்திரம், அச்சமின்மை...... எல்லாம்.

தமிழ் மக்கள் இனியும் யோசித்துக் கொண்டு இருக்கப் போகிறீர்களா? வேட்பாளர்களும் உங்களைக் கவர எப்படியெல்லாம் யோசிக்கப் போகிறார்கள். ஆனால் யோசிக்காமல் இருப்பவர் ஒருவர்தான். அவர்தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவர் சென்ற முறை தேர்தலில் தோல்வியுற்று ஊர் திரும்பியவுடனேயே முதலாவது தேர்தல் பரப்புரையை அன்றே தொடங்கிவிட்டார். சிங்கள மக்களும் அவரது ஆதரவாளர்களும் அவரது பேச்சைக் கேட்டு கொதித்துப் போயிருப்பார்கள். அவர் அப்படி என்னதான் சொன்னார்?

"நான் தமிழ் மக்களால் தோற்றுப் போய் விட்டேன்" பெரும்பான்மையான சிங்கள மக்களின் மனங்களில் ஆழப் பதிந்த செய்தி இது. "அட ...... புத்த பெருமானே! பிரபாகரனை அழித்து தாய் நாட்டை மீட்டெடுத்த எமது மன்னர் முடியிழந்தது. இந்த சிறுபான்மை தமிழ் மக்களாலா?" மஹிந்த ராஜபக்ஷ, ஓர் உண்மையான அரசியல்வாதி. மறுபடியும் அவருக்குப் போட்டியிட அனுமதி கிடைத்து வெளியில் வந்து என்ன சொல்கிறார்?

"நான் கஸ்ரப்பட்டு மீட்டெடுத்த நாடு பறிபோய்க் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணம் இப்போது புலிகள் இருந்த காலம் போல் இருக்கிறது."

நாங்களோ ஆளுக்காள் வசைபாடிக் கொண்டு, கொழுவுப்பட்டுக் கொண்டு ஒற்றுமைப்படாமல் இருக்கிறோம். நாள்களை எண்ணிக்கொண்டு இருக்கிறோம். அடுத்தமாதம் 14ஆம் திகதி சந்நிதி கொடியேற்றம், 17ஆம் திகதி எலக்ஷன், 19 ஆம் திகதி நல்லூர் கொடியேற்றம்.

பத்திரிகைகளில் [illegible] செய்திகளை [illegible] தேர்தல் செய்திகள் முன்னுக்கு பெரிதாக வரத் தொடங்கிவிட்டன. இந்த ஆரவாரம் அமளியான நேரத்தில், கிழக்கிலிருந்து முன்னாள் அமைச்சர் ஒருவர் போராடிக் களைத்து பின் முன்னாள் அரசில் இணைந்தவர். இப்போது தான் வருத்தமடைவதாக சொல்கிறார். புலிகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் அவர்தான் சூப்பர் ஸ்ரார். பத்திரிகை, தொலைக்காட்சியில் அவர் பேர்தான் தொடர்ந்து அடிபடும். இலங்கை நாட்டுக்கு முக்கியமான தியாகியாகக் காணப்பட்டார். அப்படிப்பட்டவர் வருத்தமடைகின்ற அளவுக்கு நடந்தது என்ன?

"எனக்கு தேசியப்பட்டியலில் இடம் தராமல் என்னை ஏமாற்றிவிட்டார்கள்." எனக்கு இதைக் கேட்டு கையும் ஓடலை..... காலும் ஓடலை...... 785 /1 இலக்க பேருந்து மட்டும் யாழ்ப்பாணம் நோக்கி ஓடியது. இந்தச் செய்தியைக் கேட்ட தமிழ் மக்கள் நிலைமை தான் என்ன? அவராக ஆளும் கட்சியில் சேர்ந்தார். இருக்கும் வரை கட்சி கறைபடாமல் பார்த்துக் கொண்டார்....... இப்போ தன்னை ஏமாற்றிவிட்டார்கள் என்று சொல்வது...... தலை சுத்துற விடயம்

இதில் தமிழ் மக்களின் குழப்பம் என்னவென்றால்.....?

யார்..... யாரை.... ஏமாற்றியது?

முன்னாள் பிரதி அமைச்சர் (தமிழர்) அந்த நேரம் தமிழ் மக்களை ஏமாற்றினாரா.....? அல்லது தமிழ் மக்கள் அவரை ஏமாற்றினார்களா.......? இப்ப அவர் நம்பிய கட்சி அவரை ஏமாற்றி விட்டுதாம்.

அவர் மேலும் என்ன சொல்கிறார்.....

போர் முக்கியமான கட்டடத்தை எட்டியிருந்த போது பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் உள்ளிட்டோர் அரசாங்கத்துக்கு உதவ வேண்டுமென்று என்னிடம் உதவி கோரினார். (தமிழ் மக்களுக்கு அல்ல)

இனிவரும் விடயம்தான் உச்சமோ உச்சம். நான் நாட்டுக்காக அந்த நேரத்தில் மிகவும் ஆபத்தான முடிவை எடுத்தேன். (சண்டை நேரத்தில் நாட்டைக் காக்க வெடியை எடுக்கப் போனாரோ) அதாலை தமிழ் மக்கள் என்னை [illegible] தொடங்கி விட்டார்கள்.

எனக்கும் உங்களுக்கும் மறுபடியும் குழப்பமோ....... குழப்பம்.

(கமலஹாசனின் உத்தம வில்லன் போல்)

அப்ப நான் நாட்டுக்காக அந்த முடிவை எடுத்தேன். என்றால்..........

அதற்கு முன் காடு, மேடு, மலை என்று தோழர்களோடு சுற்றித் திரிந்து போராடியது. எந்த நாட்டுக்காக......?

சுவிஸ்.... பிரான்ஸ்..... ஜேர்மனி இதில் ஏதாவது ஒரு நாட்டுக்காகவா.........?

இப்போதும் இன்றும் பல உண்மைகள் வெளி வரும் என்று சொல்கிறாரே....

தமிழ் மக்களே! நீங்கள் யாரை ஏமாற்றினீர்கள்? யாரையும் ஏமாற்றவில்லை. எல்லாரையும் நம்பினீர்கள். இப்போதும் நம்பிக்கொண்டு இருக்கிறீர்கள்.

இப்போது பல தெரிந்த முகங்களோடு....... பல புதிய முகங்களும் உங்களை நோக்கி வரத் தொடங்கிவிட்டார்கள்.

பெரும்பான்மை இனத்தில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நாங்கள் கேட்பதை ஒருபோதும் கொடுக்க மாட்டார்கள்.

பிரதி அமைச்சர் அஜித் பெரேரா (ஐ.தே.க.) என்ன சொல்கிறார்? இலங்கையில் தனியொரு நாட்டை அமைக்கவோ அல்லது சமஷ்டி முறையிலான தீர்வுக்கோ இடமில்லை. சம்பந்தர் மட்டும் கனவு காணலாம். எனவே இலங்கைத் திருநாட்டில் வாழும் தமிழ் தலைவர்களும், தமிழ் மக்களும் கனவு மட்டுமே காணலாம். என்ற உரிமையை பெரும்பான்மை சமூகம் கொடுத்துள்ளது. கனவில் மட்டும் உங்கள் இலட்சியங்களைக் கண்டு கொள்ளுங்கள்...... அட இப்பதான் விளங்குது. (இதனை அறிந்துதான் முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் கனவு காணுங்கள் என்று சொன்னாரோ?)

சரி........ நீங்கள் கனவு காண நித்திரைக்குப் போக முன் ஒரு விடயம். சமீபத்தில் நான் படித்தது.

அமெரிக்காவின் பிரபல ஊக்கப்படுத்துகைப் பேச்சாளரும் எழுத்தாளருமான அன்டி றொபின்ஸ் தெரிவித்த கருத்து.

எப்போதும் நீங்கள் செய்தவற்றையே தொடர்ந்தும் செய்து கொண்டிருந்தால், நீங்கள் பெற்றுக் கொண்ட விளைவுகளையே தொடர்ந்தும் பெற்றுக் கொண்டு இருப்பீர்கள்......

*யாவும் சிந்தனை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஒன்றும் புதிதல்ல





■ ஸ்டோ ஸ்வாமி

சம்பவம் 1–விவிலியத்திலிருந்து
தாவீது என்னும் அரசனிடம் நாத்தான் என்னும் இறைவாக்கினரை அனுப்பிய கடவுள், பின்வருவது போன்ற கதையை அவருக்குக் கூறச்செய்தார். ஒரு நகரில் பணக்காரன் ஒருவனும் ஏழை ஒருவனும் வசித்து வந்தார்கள். பணக்காரனிடம் ஏராளமான ஆடு மாடுகள் இருந்தன. அந்த ஏழையிடமோ ஒரேயொரு ஆட்டுக்குட்டி மட்டுமேயிருந்தது. பணக்காரனிடம் வழிப்போக்கன் ஒருவன் வந்திருந்தான். வந்த வழிப்போக்கனை உபசரிப்பதற்காக அந்த பணக்காரன், தன்னுடைய கால்நடைகள் எவற்றிலும் கைவைக்காமல், அந்த ஏழையினுடைய ஆட்டுக்குட்டியை கறி சமைத்திருந்தான். நாத்தான் கூறிய கதையை கேட்ட தாவீது வெகுண்டெழுந்து, இது பெரிய அநியாயம், இதை செய்த மனிதன் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும் என்றான். நாத்தான் மிக அமைதியாக அது வேறொருவருமில்லை, நீதான் அது என்றான். தாவீது அதிர்ந்து நின்றான்.

முன்னதாக, தாவீது அரசன் தனது படையில் போர்வீரராக இருக்கும் உரியாவின் மனைவி பத்சேபா மீது மையல் கொண்டிருந்தான். அந்த மாதினை அடைவதற்காக தாவீது தந்திரமான ஒரு வழியினைக் கையாண்டிருந்தான். போர்முனையில் கட்டளைத் தளபதியாக இருந்த யோவாபுவிற்கு உரியா மூலமாக ஒரு கடிதத்தினை கொடுத்தனுப்பியிருந்தான். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயம் யாதெனில், உக்கிரமான போர் நடக்கும் முன்னரங்கில் உரியாவை நிறுத்துவதன் மூலம் அவனை சாகடிக்க வேண்டும் என்பதாகும். அதனை சூசகமாகத் தெரிவித்திருந்தார். உரியாவை கொல்வதன் மூலம் அவனின் மனைவியான பத்சேபாவை தன்னுடமை யாக்குவதே தாவீதின் திட்டமாக இருந்தது.

**சம்பவம் 2- வடபுலத்திலிருந்து**

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷியன், 2013ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இது தொடர்பில் றெக்ஷியனின் மனைவி அனித்தா அளித்த வாக்கு மூலத்தில், அது ஒரு தற்கொலை சம்பவம் எனவும் அதுவும் விசமருந்தியே அந்த தற்கொலை நடந்திருந்ததாகவும் தெரிவித்திருந்தார். ஆனால், றெக்ஷியனின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையின்படி 9 மில்லிமீற்றர் வகை கைத்துப்பாக்கியை கொண்டே இந்தக் கொலை நடந்துள்ளதெனவும் துப்பாக்கிச் சன்னத்தின் சிதறல்கள் றெக்ஷியனின் மூளையிலிருந்து மீட்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பொலிஸ் மா அதிபரின் பணிப்பின்பேரில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உதவியுடன் விசாரணைகளை ஆரம்பித்த காவல்துறையினர் நாலாபுறமும் விசாரணையை முடுக்கிவிட்டனர். விரிவாக்கப்பட்ட விசாரணைகளில் டானியலின் கொலை தொடர்பில் அவரின் மனைவி அனித்தா ஏற்கெனவே அறிந்து வைத்திருந்தமை தெரியவந்தது. பின்னர் மேற்படி கொலையின் மீதான சந்தேகத்தின் பேரில் வடமாகாணசபை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன், றெக்ஷியனின் மனைவி அனித்தா மற்றும் கமலேந்திரனின் உதவியாளரான லண்டன் சசீந்திரன் ஆகியோர் கைதாகினர். அனித்தா மீதான கமலேந்திரனின் முறையற்ற தொடர்பு நிலையே இந்தக் கொலைக்குப் பின்னணி எனும் சந்தேகத்தின் பேரிலேயே தொடர்ந்தும் இந்த வழக்கு நடைபெற்று வருகிறது.



மேலே சொல்லப்பட்ட இரு சம்பவங்களையும் அடிப்படையில் ஒத்ததாக சந்தேகிக்கப்படும் விவகாரமொன்றின் தொடர்ச்சி, கடந்த திங்கட்கிழமையை பரபரப்பாக்கியிருந்தது. வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்டார் என மிக எளிமையாக முடிக்கப்பட்டு ...ப்பட்டிருந்த பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வஸீம் தாஜுதீனின் மர்ம இறப்பு விவகாரம் அது. நடந்தது விபத்தல்ல, கொலை என்று தாம் சந்தேகிப்பதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவானுக்கு அறிக்கை, சமர்ப்பித்ததைத் தொடர்ந்து இந்த விவகாரம் சூடு பிடித்திருந்தது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கோரிக்கையினை யடுத்து நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த திங்கட்கிழமை சட்டவைத்திய அதிகாரிகளின் முன்னிலையில் அவரது புதைகுழி தோண்டப்பட்டது. வெறும் ஒரு ரக்பி வீரரின் சாவு, அரசியல் வட்டாரங்களில் ஆழ்ந்த அகன்ற சலசலப்பை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்தது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புத்திரர்களுக்கு இந்த விவகாரத்தோடு இருப்பதாக கருதப்படும் தொடுசலாகும்!

ஹவலொக் விளையாட்டுக்கழக அணித்தலைவரான வஸீம் தாஜுதீன் கடந்த 2012ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17ஆம் திகதி கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். காவல்துறையினரின் அறிக்கைப்படி, விமான நிலையம் நோக்கி அவர் காரைச் செலுத்திக்கொண்டிருந்தபோது, கார் கட்டுப்பாட்டினை இழந்து ஷாலிகா மைதான மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. மோதிய கார், சில கணங்களுக்குள்ளேயே வெடித்து தீப்பிடித்துக் கருகியிருந்தது. பின்னர் அந்தக் காரிலிருந்து தாஜுதீன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அப்போதைய ஆட்சியமைப்பின் கீழ் மேற்சொன்னவாறான சம்பவ சித்தரிப்பிற்கு தகுந்த மாதிரியான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நபர்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றிருந்தன. கடந்த மாசி மாதம் மேற்படி சம்பவத்தின் மீதான விசாரணை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. தாஜுதீன் விவகார அரச இரசாயன பகுப்பாளரின் அறிக்கை, உடற்கூற்று பரிசோதனை அறிக்கையிலிருந்து வேறுபட்ட முடிவுகளை காண்பித்து நிற்கவே மேலதிக பரிசோதனைகளுக்காக கடந்த திங்கட்கிழமை தாஜுதீனின் புதைகுழி தோண்டப்பட்டது.

தாஜுதீனின் இறப்பிற்குப் பின்னால் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவின் கையே இருப்பதாக பலமாக நம்பப்படுகிறது. யஷாரா அபேநாயக்க என்னும் மங்கை, சி.எஸ்.என். தொலைக்காட்சி அலைவரிசையின் பணிப்பாளராக இருந்தவர். தாஜுதீனின் நண்பியான இவர் மீது யோஷித ராஜபக்ஷவும் மையல் வைத்திருந்ததார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த விவகாரத்தின் தொடர்ச்சியாகவே இந்தக் கொலை நடைபெற்றிருக்கலாமென நம்பப்படுகிறது. கொலையென சந்தேகிக்கப்படும் இந்த விடயத்தில் ஷிரந்தி அம்மையாரின் வாகனம் ஒன்றும் சம்பந்தப்பட்டிருப்பது தொடர்பிலும் விசாரிக்கப்பட்டு வருகிறது.

எதிரும் புதிருமான கருத்துக்கள் தாஜுதீனின் இறப்புத் தொடர்பில் வெளியிடப்பட்டு வரும் வேளையில், நாளைய தேர்தலைத் தொடரந்து முன்னெடுக்கப்படும் விசாரணைகள் உண்மையை அம்பலமாக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றத்துடன் விடைபெறுகிறார் சங்கா



## மனம் திறந்தார் மக்ஸ்வெல்

**ஐ.பி.எல்.** தொடரில் அதிரடியை ஆரம்பித்து இன்று ஆஸ்திரேலியாவின் நம்பிக்கை வீரர்களில் ஒருவராக வளர்ந்திருக்கும் மக்ஸ்வெல் தன்னைப் பற்றிய பல்வேறு விடயங்களை ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றினூடாக ரசிகர்களுடன் பகிர்ந்துள்ளார்.

இதன்படி தான் அதிரடி வீரராக உருவெடுக்க தனது காதலியான ஜெனி எஞ்பெர்க்தான் காரணம் என்று தெரிவித்துள்ளார் மக்ஸ்வெல். இவர் சிறப்பாக ஆட அவருக்கு அவரது காதலி பல ஆலோசனைகள் வழங்குவாரம். இதுவே அவரின் அதிரடிக்கும் காரணமாக விளங்குகிற தாம். இவர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் திருமணம் செய்துக் கொள்ள முடிவெடுத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

என்னதான் ஆஸ்திரேலியா வீரராக இருந்தாலும் தனக்கு பிடித்தமான கிரிக்கெட் வீரராக கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படும் சச்சினை குறிப்பிட்ட மக்ஸ்வெல், இரண்டாவது இடத்தில் ஆஸ்திரேலியாவின் தங்க மகன் என்று அழைக்கப்படும் பொண்டிங்கையும், மூன்றாவது இடத்தில் கிரிக்கெட்டின் பிதாமகன் என்று அழைக்கப்படும் பிராட்மன்னையும் பெயரிட்டுள்ளார்.

எல்லாத்தையும் விட பிரதான விடயமாக அமைந்துள்ளது மக்ஸ்வெல்லுக்கு பிடித்தமான விளையாட்டுத்தான். கிரிக்கெட்டுக்கு அடுத்ததாக எந்த விளையாட்டில் ஆர்வம் என்ற கேள்விக்குபதிலளித்தமக்ஸ்வெல், கிரிக்கெட்டையும் விட உதைபந்தாட்டம்தான் பிடிக்கும் என்று தெரிவித்துள்ளார். (ம)

**உ**லகக்கிண்ணத் தொடரோடு ஒருநாள் கிரிக்கெட்டுக்கு முழுக்கு போட்ட சங்கக்கரா, ற்போது டெஸ்ட் தொடர்களிலிருந்தும் ஓய்வு பெறு வதால் அவருடைய சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வருகிறது. இலங்கைக்கிரிக்கெட் பார்த்த வீரர்களில் சிறப்பான ஒரு வீரராக சங்கா இருந்தாலும் சர்வதேச அளவில் ஏனைய வீரர்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கின்ற பொழுது அவர் அவ்வளவு சாதிக்கவில்லை என்றே தோன்றுகிறது.

சச்சின், பொண்டிங், கில்கிறிஸ்ட், ஹைடன், ஹின் வோர்ண் போன்ற வீரர்கள் உலகக்கிண்ணத் தொடரைக் கைப்பற்றி சம்பியன்கள் என்ற அந்தஸ்துடனேயே விடைபெற்றனர். ஆனால் சங்காவுக்கு அவ்வாறான வாய்ப்பு கிடைக்கவில்லை. ரி-20 உலகக்கிண்ணமே சங்கா பார்த்த அதிச டிய பெறுபேறாகும். தவிர சொந்த மண்ணில் எந்த அ ரியும் இலகுவில் டெஸ்ட் தொடரை இழக்காது. ஒரு அணி அன்னிய மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றினால் மிகப்பெரும் கௌரவமாக அது கருதப்படும். பாகிஸ்தான், சிம்பாப்வே, பங்களாதேஷ், நியூஸிலாந்து, தீவுகள், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுடன் அன்னிய மண்ணில் நடைபெற்ற ஆட்டங்களில் தொடரைக் கைப்பற்றிய இலங்கைக்கு இந்தியா, ஆஸ்திரேலியா நாடுகளுக்கு எதிராக அந்த நாடுகளின் மைதானங்களில் வைத்து இன்னமும் ஒரு தொடரையேனும் கைப்பற்ற முடியவில்லை. இலங்கைக் கிரிக்கெட் வரலாற்றில் சாத்தியப்படாத இந்த வெற்றி சங்காவின் காலத்திலும் சாத்தியப்படவில்லை.

பொதுவாக ஒருவீரர் ஓய்வுபெறும் பொழுது குறித்த அணியின் முன்னாள் வீரர்கள் சக வீரர்கள் அனைவரும் அவரை வாழ்த்தி வழியனுப்புவது அறிந்ததே. ஆனால் சங்காவைப் பொறுத்த மட்டில் இது மாறி நடைபெற்றுள்ளது. ஒருவர் ஓய்வை அறிவிக்கிறதாயின் தொடருக்கு முன்னதாக அறிவிக்க வேண்டும். அல்லது தொடரை முடித்துவிட்டு ஓய்வினை அறிவிக்க வேண்டும். பாதியில் விடைபெறக்கூடாது. இந்தியாவுடன் பாதியில் வடைபெறும் சங்காவின் ஓய்வுமுடிவு சுயநலமாக அமைந்துள்ளது என்று விமர்சித்துள்ளார் உலகக்கிண்ணம் வென்று இலங்கைக் கிரிக்கெட்டை இமயத்தின் உச்சிக்கு கொண்டுசென்ற ரணதுங்க. மொத்தத்தில் தனது ஓய்விலும் சங்காவுக்கு ஏமாற்றமே எஞ்சியுள்ளது.

கிரிக்கெட்டின் பிதாமகன் என்று போற்றப்படும் பிராட்மனின் இரட்டைச்சதச் சாதனையை சமன்செய்ய இன்னமும் ஒரேயொரு இரட்டைச்சதம் மட்டுமே சங்காவுக்குத் தேவை. இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் முதல் இன்னிங்ஸில் 5 ஓட்டங்களுடனும் இரண்டாவது டெஸ்ட்டில் 40 ஓட்டங்களுடனுமாக ஏமாற்றிய சங்கா தான் இறுதியாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தப்போகும் இரண்டு இன்னிங்ஸில் ஒன்றில் இரட்டைச்சதம் விளாசி சரித்திரம் படைப்பாரா அல்லது இதிலும் ஏமாற்றுவாரா.



## ஆக 570 கோடி!

**உ**லகிலேயே அதிகம் சம்பாதிக்கும் வீராங்கனைகள் பட்டியலில் நடப்பு வருடத்திலும் முதலிடம் பிடித்துள்ளார் ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனையான மரிய ஜரபோவா.

ஒரு வருடத்தின் ஜூன் மாதத்தில் இருந்து அடுத்த வருடத்தின் ஜூன் மாதம் வரையான ஒரு வருட காலப்பகுதியில் விளையாட்டுத்துறையைச் சேர்ந்த பிரபலங்கள் சம்பாதிக்கும் தொகையை கணக்கிட்டு வெளியிட்டு வருகிறது போர்பஸ் பத்திரிகை.

இதன்படி குறித்த பத்திரிகையின் வீராங்கனைகளுக்கான பட்டியலில் கடந்த பத்து வருடங்களைப்போல் இந்த வருடத்திலும் முதலிடம் பிடித்துள்ளார் ஜரபோவா. இதன்படி ஜரபோவா கடந்த ஒரு வருடத்தில் சம்பாதித்த தொகையாக இலங்கை மதிப்பில் 570 கோடிகள் என்று மதிப் பிடப்பட்டுள்ளன.

இரண்டாம் இடத்தில் அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் 480 கோடிகளுடன் உள்ளார்.

மூன்றாம் இடத்தில் மற்றொரு ரென்னிஸ் வீராங்கனையான டென்மார்க்கைச் சேர்ந்த வோஸ்னியாக்கி 282 கோடிகளுடன் உள்ளார்.

அதிகம் சம்பாதிக்கும் முதல் பத்து வீராங்கனைகளில் 7 பேர் ரென்னிஸ் வீராங்கனைகள் என்பது குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை போட ஒரு விடயம்



ரம்யன்

தேர்தல் பரப்புரைகள் யாவும் முடிவுற்ற நிலையில் களத்தில் இறங்கியுள்ள பிரதான இரு கட்சிகளும் அறுதிப் பெரும்பான்மை பெற்று அரசு அமைக்கும் நிலையில் இருப்பதாக உரத்த குரலில் பறைசாற்றிக் கொண்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள குருநாகல் தொகுதியில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது தரப்பில் 117 ஆசனங்கள் வெல்லப்படும் என்ற வகையில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதே விதமாகவே தமது கட்சியும் அதிக பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிக்கு வரும் என்று ஐ.தே.கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். ஆனால் எத்தனை



# பிரதான கட்சிகள் இரண்டும் வெற்றியில் நம்பிக்கை

ஆசனங்களைத் தம் கட்சி தனதாக்கிக் கொள்ளும் என்று அவர் எதுவும் கூறியிருப்பதாகத் தெரியவில்லை.

**சந்திரிகா விடுத்துள்ள முக்கிய அறிக்கை**

வெளிநாடு சென்று திரும்பிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரரணதுங்க தமது மௌனத்தைக் கலைத்துவிட்டு ஓர் அறிக்கையைக் கடந்த வாரம் வெளியிட்டிருந்தார். ஜனவரி 8ஆம் திகதி மக்களால் சிறிசேனவுக்கு வழங்கப்பட்ட ஆணையைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்கு உதவக்கூடிய கண்ணியமானவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புமாறு அவர் அந்த அறிக்கையில் மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். நல்லாட்சிக்கான ஒரு கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் கட்சியைவிட நாட்டை முன்னிலைப்படுத்திச் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

ஜனவரி 8 ஆம் திகதி மௌனமான புரட்சியொன்று நாட்டில் ஏற்படுத்தப்பட்டது, உண்மையாக ஜனநாயகத்துக்கு அன்று வெற்றி கிடைத்தது என்று அவர் கூறியிருந்தார். தனது நிலைப்பாட்டுக்கு விளக்கமளிக்க வேண்டியது தமது கடமை என்று கூறிய சந்திரிகா அம்மையார் மேலும் கூறுகையில்;

அன்று நடந்தேறிய வன்முறையற்ற போராட்டத்தின்போது தேசப்பற்றுள்ள குடிமக்கள், சுதந்திரத்துக்கும், ஜனநாயகத்துக்கும் மதிப்பளித்தவர்கள் ராஜபக்ஷ அரசின் கொடுங்கோன்மைக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தார்கள். வாக்குப் பலத்தைப் பிரயோகித்து அந்த ஒடுக்குமுறை அரசை அவர்களால் பதவியிலிருந்து தூக்கி எறிய முடிந்தது. அந்தத் தேர்தலின்போது அப்போதைய ஜனாதிபதி அரச வளங்கள் அனைத்தையும் பயன்படுத்திக்கொண்டார். ஆயுதப் படைகளையும் பயன்படுத்திக் கொண்டார்.

இனவாதத்தை ராஜபக்ஷ கிளப்பிவிட்டு பயனடைய முயன்று வருகிறார் என்று குற்றஞ்சாட்டிய சந்திரிகா குமாரரணதுங்க அரசியல் வெற்றிகளைப் பெறுவதற்காக மஹிந்த சமயத்தை ஓர் அடித்தளமாகப் பாவிக்கத் தொடங்கியுள்ளார் என்றும் கூறினார்.

**மக்கள் கோரிக்கைக்கு மதிப்பளிக்க விருப்பம்**

சிறி லங்கா சுதந்திரக்கட்சி ஜனநாயகக் கொள்கைகளின் மீது கட்டியெழுப்பப்பட்டது என்று நினைவுபடுத்தியுள்ள சந்திரிகா, மக்கள் நட்பு அரசு ஒன்றை உருவாக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

பல அரசியல் தலைவர்களும் சிவில் சமூக அமைப்புக்களும் விடுத்துள்ள கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்க நான் தீர்மானித்திருக்கிறேன். என் தலைமையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த சிலர் விரும்புகிறார்கள். ஆனால் நான் தொடர்ந்து அரசியல் நடத்த விரும்பவில்லை. மிக உயர்ந்த நிலையில் இருந்துவிட்டு இன்னும் அரசியலில் இருக்க விரும்புவது கேவலமாகும். துரதிர்ஷ்டசமாகத் தோற்கடிக்கப்பட்ட ஒருவர் அரசியலில் ஏற்பட்டுள்ள சீரமைப்புக்களை சீர்குலைக்க சந்தர்ப்பம் தேடிநிற்கின்றார்.

**யார் பக்கம் நிற்பது என்பது ஒரு போராட்டம்**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்தவர்கள் கீழ் நிலைக்குச் சென்றிருப்பதைக் காண கவலையளிக்கின்றது. எனது நிலையை சுதந்திரக் கட்சியினருக்கு நான் விளக்கியாக வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மிக உன்னதமான கொள்கைகளைச் சிதறடித்துக் கொண்டிருப்பவர்களுடன் சேர்ந்திருப்பதா என்பது எனக்கு ஒரு போராட்டமாகவே இருந்துள்ளது. அவர்களுடன் சேர்ந்திருப்பதா அல்லது நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கான ஒரு தொலைநோக்குடன் செயற்படுபவர்களுடன் இணைந்து கொள்வதா என்று தீர்மானிக்க வேண்டிய நிலை எனக்கிருந்தது.

கடுமையாகவும் ஆழமாகவும் சிந்தித்ததன் பின்னர் கட்சியை விட நாடு முக்கியம் என்ற முடிவுக்கு வந்தேன். அதுவே ஜனவரி 8ஆம் திகதி கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு உதவுவதாய் இருக்கும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீது எனக்கிருக்கும் அன்பும் பாசமும் ஒருபோதும் என்னை விட்டுப்போய்விடாது. அதன் கொள்கைகளை நிலைநாட்டுவதில் எனக்கு அர்ப்பணிப்பான ஆசை உண்டு. அதன் மூலம் ஒரு விழிப்பும் தெளிவுமுள்ள ஆட்சியை நிறுவுவோம் என்று குமாரரணதுங்க கூறியிருக்கிறார்.

**கொழும்பில் போட்டியிடும் சம்பிக்க ரணவக்க**

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கொழும்பு மாவட்டத்தின் ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிட்டாலும் ஐ.தே.கவினர் அவருக்கு ஆதரவாக அங்கு விருப்பு வாக்கு எதையும் வழங்கமாட்டார்கள் என்பதாகச் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். கொழும்பு மிரர் பத்திரிகையில் ஜே.றிச்சர்ட் ஜெயவர்த்தனா என்பவர் எழுதியுள்ள கட்டுரையில் அவர் தெரிவித்துள்ள கருத்து;

ரணவக்க ஐ.தே.கட்சிக்கும் அதன் தலைவர் விக்கிரமசிங்கவுக்கும் முன்னர் செய்த பாதிப்புக்களை நினைவில் வைத்து அவருக்குக் கொடுக்க வேண்டியதை கொடுக்கும் சந்தர்ப்பம் இப்போது கொழும்பு ஐ.தே.கவினருக்கு வாய்த்துள்ளது. அவர்கள் தமது விருப்பு வாக்குகளை அவருக்கு வழங்குவதற்கு அவர்கள் முட்டாள்கள் அல்லர். கட்சிக்கு அவர் முழுமையான அன்னியர். ஐ.தே.கட்சியினர் தங்கள் வேட்பாளர்களாக டாக்டர் ஹர்ஷ டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ, ஏரான் விக்கிரமரட்ண, ரோஸி சேனாநாயக்க போன்றவர்களையே அவர்கள் தெரிவு செய்வார்கள். ரணவக்கவுக்கு வாக்களித்தால் அவர்கள் பின்னர் கவலைப்படவேண்டிவரும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற அவர் அந்தக் கட்சிக்குத் துரோகம் இழைத்தார். அதேவிதமாக ஐ.தே.கவுக்கும் செய்யமாட்டார் என்பது என்ன உத்தரவாதம்? நிறமாற்றம் கொள்ளும் ஓணான்களைப் போன்ற அரசியல்வாதிகள் கடைசியில் அரசியல் வனாந்தரத்தில்தான் முடிவார்கள் என்று அவர் எழுதியுள்ளார்.

**சிறிசேனவை பதவி நீக்கும் தந்திரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தோன்றியுள்ள முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டவேண்டும் என்று அந்தக் கட்சியிலுள்ள முக்கியதலைவர்கள்சிலர்முயன்று வரும் நிலையில் ஓகஸ்ட் 24ஆம் திகதிக்கு முன்னர் மத்திய குழு வைக்கூட்ட முடியாதபடி நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மத்திய குழுவைக் கூட்டுவதன் மூலம் அதில் மஹிந்த சார்பானவர்கள் பெரும்பான்மையாக இருப்ப தால் அவர்களைக் கொண்டு கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மைத்திரிபால சிறிசேனவை நீக்கிவிட்டு மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை அந்தப் பதவியில் அமர்த்த எடுக்கப்பட்ட முயற்சியை சிறிசேன சாணக்கியமாக நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று முறியடித் திருப்பதாக இப்போது விடயம் அறிந்தவர்கள் கூறுகின் றார்கள்.

கடந்த வாரம் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால பத்திரிகையாளர் கூட்டமொன்றை நடத்தி சகல சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் பிரதி அமைச்சர்களும் பதவி விலகப் போகிறார்கள் என்று அறிவிக்கவிருந்தார். ஆனால், அந்த நிலைப்பாட்டை சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் மஹிந்த அமரவீர, மஹிந்த சமரசிங்க மற்றும் மூவர் மறுதலித்து விட்டனர். மத்திய குழுத் தீர்மானம் ஒன்றின் மூலமே அவர்கள் அமைச்சர் பதவிகளை ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். அதனால் அவர்களின் பதவி துறப்பு தொடர் பாக முடிவெடுக்க மத்திய குழு கூடித்தான் ஆக வேண்டும். அதனால் மத்திய குழு கூட்டப்படத்தான்வேண்டும் என்று சுமதிபால பின்னர் கூறினார். ஆனால் அதனை எதிர்த்தவர்கள் சிறிசேனவைக் கட்சித் தலைவர் பதவியிலிருந்து இறக்குவதற்கான மேலும் ஒரு தந்திர முயற்சியாகும் இது என்று கருதினார்கள். அரசமைப்பினர் மூலம் கிடைத்துள்ள அதிகாரத்தின்படியே ஜனாதிபதி அமைச்சர்களை நியமிக்கின்றார். அரசியல் கட்சிகள் அதில் எதுவித தலையீடும் செய்ய முடியாது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அதனால் அமைச்சர்கள் விரும்பினால் தங்கள் பதவி விலகலை சமர்ப்பிப்பதற்கு உரிமையுண்டு என்கிறார்கள் அவர்கள்.

**நிதி குற்றப் பிரிவு குறித்து தீர்மானிக்கப்படும் : மஹிந்த**

வரும் தேர்தலில் 117 ஆசனங்களை தமது தரப்பு வெல்லப் போவதாக அறிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாம் பிரதமராகப் பதவி ஏற்றால் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நிறுவப்பட்டுள்ள நிதிக் குற்றங்களை விசாரிப்பதற்கான பொலிஸ் பிரிவு குறித்து அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றை எடுப்பார் என்று அறிவித்துள்ளார்.

கடந்த அரசின் காலத்தில் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் புரிந்துள்ளனர் எனக் கூறப்படும் நிதிக்குற்றங்கள் தொடர்பாக இந்தப் பிரிவு இப்போது புலன்விசாரணைகளை நடத்தி வருகின்றது. இதில் அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் பலரும் விசாரிக்கப்பட்டுள்ளனர். குற்றம் புரிந்துள்ளார்கள் என்ற வகையில் ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள பலர் தேர்தல் காலம் என்பதால் கைது செய்யப்படாமல் இருந்து வருகிறார்கள்.

இந்த நிதிக்குற்றப் பிரிவை ராஜபக்ஷ தரப்பினர் கடுமையாக விமர்சித்து வருவதுடன் தங்கள் தரப்பினரை வேண்டுமென்றே தேடிப்பிடித்து விசாரிக்க முயற்சிப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், ஐ.தே.கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் நிதிக்குற்றப் பிரிவுக்கு இன்னும் வலுச் சேர்க்கும் விதத்தில் சட்டம் இயற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# அமெரிக்காவில் தமிழன் படைத்த வரலாற்றுச் சாதனை



■ எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

அமெரிக்க லொஸ்ஏஞ்சல்ஸில் ஜுலை மாதம் நடைபெற்ற சர்வதேச விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய யாழ்ப்பாண மாணவர்கள் பதக்கங்களைப் பெற்றுள்ளமை தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும். செல்வன் ஜெயச்சந்திரன் மனோஜன் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை யும், செல்வன் அரசகுலசூரியர் மயூரன் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

இந்த மாணவர்கள் விசேட தேவையுள்ளவர்களுக்கான அமைப்பாக இயங்கி வரும் சிவபூமி என்ற அறக்கட்டளையின் பாடசாலையில் பயில்பவர்கள். அவர்களை ஆசிர்வதித்து வழியனுப்பிய வைபவம் கடந்த மாதம் 16ஆம் திகதி சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையில் நடைபெற்றது.

சிவபூமிப் பாடசாலையில் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அங்கு விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் மிகுந்த அர்ப்பணிப்போடு பணியாற்றி வருகின்றனர். சிவபூமிப் பாடாசாலையைச் சேர்ந்த மாணவர்கள் ஒலிம்பிக் போட்டிகளுக் காக வெளிநாடு சென்றது இது மூன்றாவது தடவையாகும். முதன் முதலாக 2011ஆம் ஆண்டு சிவராஜா துஸ்யந்தன் கிறிஸ் நாட்டில் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இந்த முறை அமெரிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய இந்த மாணவர்கள் இருவரும் இலங்கையில் நடைபெற்ற தேசியப் போட்டியில் சாதனை படைத்ததன் மூலம் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றத் தகுதி பெற்றார்கள். இந்த முறை இவர்கள் தங்கம் வென்று நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று வழியனுப்பும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் ஆசிகூறி வாழ்த்தினார்கள். இரு மாணவர்களும் இந்தப் பாடசாலை அதிபர் திருமதி குகதாசன் மற்றும் கண் வைத்திய நிபுணர் குகதாசன் ஆகியோரால் மேடையில் வைத்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். மாணவர்கள் அதிபரிடமும், ஆசிரியர்களிடமும், பெற்றோரிடமும் ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்டனர். அதைவிட மேலான மதிப்பளிப்பும் வரவேற்பும் அவர்கள் வென்று திரும்பியபோதும் அளிக்கப்பட்டன.

பாடசாலை ஆசிரியையின் இறை வணக்கத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வுக்கு அருளாசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கினார். வரவேற்புரை நிகழ்த்திய சிவபூமி அறக் கட்டளையின் உபதலைவரும் ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான க.சிவாஜி, சிவபூமி உருவாக்கப்பட்டதே ஒரு வரலாற்றுச் சாதனை என்று வழியனுப்பு நிகழ்வில் குறிப்பிட்டமையை மாணவர்கள் நிரூபித்து வரலாற்று படைத்திருக்கிறார்கள்.

ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய முதல் தமிழர் கலாநிதி நா. எதிர்வீரசிங்கம். வழியனுப்பு நிகழ்வில் கலந்து கொண்டு அவரும் மாணவர்களை வாழ்த்தியிருந்தார். அவர் தனதுரையில், எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு திறன் உண்டு. அதை நாம் தட்டிக்கொடுக்க வேண்டும். விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கும் சம உரிமை இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

இந்தப் பாடசாலையின் சிற்பி கலாநிதி ஆறு.திருமுருகன் தனது தலைமையுரையில் பாடசாலையின் வரலாற்றை சிறப்பாக எடுத்துரைத்தார். அவர் தனதுரையில், இற்றைக்கு பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாட சாலை இன்று பெரிய பாடசாலையாக வளர்ச்சி பெற்றுள்ளது. நான் சிங்கப்பூர் சென்றபோது ஒரு மனவிருத்திப் பாடசாலையைப் பார்வையிட்டேன். அந்தப் பாடசாலையின் அளவுக்கு எமது பாடசாலை எப்போது வளர்ச்சி பெறும் என்று எண்ணினேன். இரக்கத்தின் பால் நாம் பற்று வைத்தால் இறைவன் அதற்கு அப்பால் கொடுப்பான் என்பதற்கு இன்று சர்வதேச அளவில் சிவபூமியின் பெயர் ஒலிப்பது ஓர் உதாரணமாகும். இந்த மாணவர்களுக்கான பயிற்சிகள் கொழும்பு, காலி, ஹிக்கடுவை ஓடு பாதைகளில் நடைபெற்றிருக்கின்றன. இது ஈழத் தமிழர்கள் பெற்ற மாபெரும் சாதனையாகும். இவர்கள் இருவரும் சுத்த சைவ போசனத்தைக் கடைப்பிடிக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். அமெரிக்காவில் இப்போது தூயசைவ உணவுக்கு கிராக்கி அதிகம். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான கலாநிதி நா. எதிர்வீரசிங்கம் ஒலிம்பிக்கில் உயரம் பாய்தலில் பங்கு பற்றினார். கீரிமலையிலுள்ள சிவ்பூமி அருங்காட்சியகத்தில் யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்ட பழைமையான ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்தியுள்ளோம். ஒலிம்பிக் வீரர் எதிர்வீரசிங்கம் போட்டிகளில் பங்குபற்றிவிட்டு புகையிரதத்தில் வந்து இறங்கும் ஒளிப்படமும் அந்த ஒளிப்படங்கள் வரிசையிலே இடம்பெற்றுள்ளது'' என்றார் ஆறு.திருமுருகன். மாணவர்கள் திரும்பி வந்தபோது அவர்களுக்கு வழங்கப்பட்ட வரவேற்பின் படமும் இனிமேல் அந்த வரிசையில் நிச்சயம் இடம்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

"வடமாகாணத்தில் இருந்து ஒலிம்பிக் போட்டியில் பங்குபெறுவது சாதாரண விடயம் அல்ல. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்டிருந்தாலும்கூட இந்த மாணவர்கள் ஒலிம்பிக் போட்டிக்குச் செல்வது சாதனை. இதற்குக் காரணம் சிவபூமிப் பாடசாலையாகும். தனது வாழ்வையே துறந்து ஒவ்வொரு மணித்துளியையும் சமூகத்தின் நன்மைக்காகச் செலவு செய்பவர் ஆறு. திருமுருகன். விசேட தேவையுள்ள குழந்தைகளை நாம் பாதுகாக்க வேண்டும். அவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்க வேண்டும். அதற்கு ஒத்தாசை, ஒத்துழைப்பு நாம் கொடுக்க வேண்டும். இந்த மாணவர்கள் திரும்பி வரும்போது பதக்கங்களோடுதான் வருவார்கள் என்பது எமது நம்பிக்கையாகும்'' என்று வழியனுப்பு நிகழ்வில் உரையாற்றிய இந்தியத் துணைத் தூதரின் கருத்தை மாணவர்கள் எள்ளளவும் பிசகாமல் நிரூபித்திருக்கிறார்கள்.

மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி வாய்ப்பு உலக ரீதியில் வளர்ச்சி பெற்றிருக்கின்றது. இவர்களுக்கான கல்வி பல்கலைக்கழகம் வரை திறந்திருக்கின்றது. அந்த சந்தர்ப்பத்தையும் இவர்கள் பயன்படுத்த வேண் டும் என்று வாழ்த்துக் கூறினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தரும் வணிக முகாமைத்துவ பீடாதிபதியுமான பேராசிரியர் தி.வேல்நம்பி சிவபூமி சிறுவர், முதியோருக்கு அபயம் அளித்து வருகின்றது. மாற்றுத்திறனாளிகள் மிகச்சிறந்த ஆற்றல்களைக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாணவர்களுக்கு சிவபூமி பாடசாலை சிறந்த பயிற்சிகளை வழங்கி வருகின்றது என்று பாராட்டிப் பேசினார் யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா.

வடமாகாண விசேட ஒலிம்பிக் பணிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு விரிவுரையாளருமான மா.இளம்பிறையனும் இந்த நிகழ்வில் உரையாற்றினர். நிகழ்வின் நன்றி உரையை சிவபூமி அறக்கட்டளைச் செயலர் பு.ஸ்ரீ விக்கினேஸ்வரன் நிகழ்த்தினார்.

அவர்கள் சொல்லியவற்றை எல்லாம் நிறைவேற்றி, தமது பாடசாலைக்கும், யாழ்ப்பாண மண்ணுக்கும் ஏன் உலகத் தமிழனுக்கும் புகழ் சேர்த்திருக்கிறார்கள் மாணவர்கள் இருவரும்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற வாக்கியத்தைத் தனது மகுடவாசகமாகக் கொண்டுள்ள சிவபூமிப் பாடசாலை மாற்றுத் திறனாளிகளுக்கும் சிறப்பான ஒரு வாழ்வை அமைத்துக் கொடுப்பதை தனது நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இணையத்தில் பாலியல் படங்களைத் தேடுகிறவர்களில் பெரும்பாலானோர் சிறுவயதினரைக் குறிக்கும் வார்த்தைகளை உள்ளிட்டே தேடுவதை ஆய்வுகள் சுட்டிக்காட்டு கின்றன. இதில் நடிக்க வைக்கப்படும் பெண்கள் பலர் வற்புறுத்தியும் மிரட்டப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் போதை மருந்து அளிக்கப்பட்டும் இந்தப் படங்களில் நடிக்க வைக்கப்படுகிறார்கள்.**

# தனிநபர் சுதந்திரத்தின் எல்லை எது?

மனுஷ்ய புத்திரன்.

என் நண்பர் ஒருவர் சொன்னார், இந்திய சினிமாவின் பாடல் காட்சிகளில் ஒலியைக் குறைத்துவிட்டுப் பார்த்தால் பெரும்பாலானவை 'ஹார்ட் கோர் போர்னோக்ரபி' (பாலியல் படங்கள்) என்று. பாலியல் வறட்சியும் ஒடுக்குமுறையும்கொண்ட ஒரு சமூகத்தில், பாலியல் படங்கள் ஒரு அடிப்படைத் தேவையாக இருப்பதில் ஆச்சரியமில்லை.

பொதுவாக, பாலியல் படங்களைப் பார்ப்பதற்கான உரிமை கோருகிறவர்களுடைய வாதம், தனி அறையில் ஒரு மனிதர் செய்யக்கூடிய காரியங்களைக் கேள்வி கேட்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்பதில் தொடங்கும். அதோடு மட்டுமல்ல, பாலியலைப் பற்றி பல்வேறு மனத் தடைகள் நிலவுகிற ஒரு சமூகத்தில், பாலியல் சார்ந்த உணர்வுகளைப் புரிந்துகொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் பாலியல் படங்கள் பெரிதும் உதவியாக இருக்கின்றன. அவை பாலியல் உறவுகளை மேம்படுத்துகின்றன, வடிகாலாக இருக்கின்றன என்றும் வாதிடுகிறார்கள்.

பாலியல் படங்களைப் பண்பாட்டுக் காரணங்களுக்காக எதிர்ப்பவர்கள் இந்தியப் பண்பாட்டில் காமம்; இலக்கியப் பிரதிகளிலும், சிற்பக் கலைகளிலும் மிக வெளிப்படையாக விவாதிக்கப்பட்டிருப்பதை மறந்துவிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது. மேலும் பாலியல் படங்கள், பாலியல் குற்றங்களை அதிகரிக்கச் செய்கிறது என்கிற குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். இவையெல்லாமே ஒரு எல்லை வரைக்கும் உண்மைதான். ஆனால், இது ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே. அதன் இன்னொரு பக்கத்தை நாம் பார்க்க மறுப்பதன் மூலமாகத் தனி மனித சுதந்திரத்தை ஒரு சமூகப் பார்வையற்ற நிலையில் முன்வைக்கிறோமோ என்கிற அச்சம் மேலிடுகிறது.

**சர்வதேச வர்த்தகம்**

பாலியல் படங்களைப் பார்க்கக்கூடிய யாருக்கும் எழக்கூடிய, எழ வேண்டிய ஒரு தார்மீகமான கேள்வி இருக்கிறது. இந்தப் படங்களில் நடிப்பவர்கள் யார்? இந்தப் படங்கள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்ற கேள்வியை நாம் கேட்டுக்கொள்ளாமல் தனிநபர் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுவது அர்த்தமற்றது.

பாலியல் படங்களில் நடிக்கக்கூடிய சர்வதேசப் புகழ்பெற்ற நடிகர்களும் நடிகைகளும் இருக்கிறார் கள். அவர்கள் ஒரு மணி நேரத்துக் குப் பல லட்சம் சம்பளம் வாங்கக்கூடிய நட்சத்திரங்கள். ஆனால், அவர்களைப் போன்றவர்களால் மட்டும்தான் இந்தப் பாலியல் படங்கள் தயாரிக்கப்படுகின்றனவா? நிச்சயமாக இல்லை. இன்று இணையத்தில் கோடிக்கணக்கான பாலியல் படங்கள் கொட்டிக்கிடக்கின்றன. சர்வதேச அளவில் அது இன்று மிகப் பெரிய வர்த்தகம். பல்லாயிரம்கோடி ரூபாய் இதில் புழங்குகிறது. இணைய செயல்பாடுகளில் 30 சதவீதத்துக்கு மேல் பாலியல் படங்கள் தொடர்பானவை என்று ஆய்வுகள் சொல்கின்றன. இந்தப் பிரம்மாண்டமான தொழிலுக்கான உள்ளடக்கம் எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது?

பாலியல் படங்கள், பாலியல் தொழிலோடும் மனிதக் கடத்தலோடும் நேரடியாக சம்பந்தமுடைய ஒன்று. ஏமாற்றியோ கடத்தப்பட்டோ பாலியல் தொழிலுக்குள் கொண்டுவரப்படும் பல்லாயிரக்கணக்கான பெண்கள் இந்த பாலியல் படங்களில் நடிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். குறிப்பாக, மிக இளம்வயதுப் பெண்கள், சிறுமிகள் சார்ந்த பாலியல் படங்கள்தான் வர்த்தகத்தின் பெரும் பகுதியாக இருக்கின்றன.

இணையத்தில் பாலியல் படங்களைத் தேடுகிறவர்களில் பெரும்பாலானோர் சிறுவயதினரைக் குறிக்கும் வார்த்தைகளை உள்ளிட்டே தேடுவதை ஆய்வுகள் சுட்டிக்காட்டு கின்றன. இதில் நடிக்க வைக்கப்படும் பெண்கள் பலர் வற்புறுத்தியும் மிரட்டப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் போதை மருந்து அளிக்கப்பட்டும் இந்தப் படங்களில் நடிக்க வைக்கப்படுகிறார்கள். இன்னொருபுறம் பாலியல் அடிமைகளாகப் பாலியல் விடுதிகளுக்குக் கொண்டுவரப்படும் இளம் பெண்களும் சிறுமிகளும் அந்தத் தொழிலில் ஈடுபட மறுக்கும்போது, இதுபோன்ற படங்களை மணிக்கணக்கில் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

**மிகைப்படுத்திய காட்சிகள்**

இது உடலியல் வன்முறைக்கு முந்தைய உளவியல் வன்முறை. ஒருபுறம் அந்தப் பெண்கள் பாலியல் தொழிலுக்கு இணங்கி வரும்வரை பலராலும் கூட்டாகப் பாலுறவுக்கு ஆட்படுத்தப்படுவது, இன்னொருபுறம் அதை இயல்பாக அவர்கள் மனதை ஒப்பச்செய்வதற்குப் பாலியல் படங்களைப் பயன்படுத்துவது. மேலும், பாலியல் தொழிலாளிகளைத் தேடிவரும் ஆண்கள் அதீதமான, வன்முறை சார்ந்த பாலியல் படங்களை அவர்களிடம் காட்டி, அதுபோன்ற செயல்களில் ஈடுபடுமாறு அவர்களை வற்புறுத்துகின்றனர். இது மிகப் பெரிய மானுட அவலம் மட்டுமல்ல, எந்த நிலையிலும் சகித்துக்கொள்ளமுடியாத கொடூரமான குற்றச்செயல். இதைப் பற்றிய தார்மீகக் கேள்விகளை நாம் எழுப்பாமல், அந்தப் படங்களைப் பார்ப்பதற்கான சுதந்திரத்தை மட்டும் நாம் கோர முடியுமா?

பாலியல் படங்களைப் பார்ப்பவர்கள் எத்தகைய உளவியல் விளைவுகளுக்கு ஆளாகிறார்கள் என்பது ஒரு சிக்கலான கேள்வி. இதற்கு நாம் பொதுப்படையான பதில்களை அளிக்க முடியாது. ஒருவருடைய உடல்–மன இயல்புகள், அவர் யாருடன் பாலுறவு கொள்கிறார் என்பதைப் பொறுத்து, பாலியல் படங்கள் அவருடைய வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் மாறுபடலாம். சிலருக்கு வெகுசகஜமாக இருக்கக்கூடிய இந்தப் படங்கள், வேறு சிலருக்கு மிகக் கடுமையான பாலியல் சார்ந்த மனநோய்களைக்கூட ஏற்படுத்தலாம். பொதுவாக, பாலியல் படங்களில் காட்டப்படும் காட்சிகள் மிகையானவை. 90 வீதமானவை வன்முறையோடு இணைந்தவை.

**பாலுறவின் இன்பத்தை வன்முறையோடு இணைப்பது என்பது மிக ஆபத்தான ஒன்று.**

இந்த மிகைப்படுத்தப்பட்ட கற்பனைக் காட்சிகளை அல்லது போலித் தோற்றங்களை உண்மை வாழ்க்கையில் முயற்சித்துப் பார்க்கிறவர்கள், பல சமயங்களில் கடும் தோல்வியைச் சந்திக்க நேரிடலாம். ஓர் இயல்பான பாலுறவின் மேல் அவர்கள் ஆர்வமிழந்து போகலாம். மேலும், இந்த வன்முறை சார்ந்த பாலியல் காட்சிகளைத் தொடர்ந்து பார்க்கிறவர்கள், சமூகத்தில் நடக்கும் பாலியல் குற்றங்கள் தொடர்பாக குற்றவுணர்வற்றவர்களாக மாறிவிடுகிறார்கள். பாலியல் இன்பத்துக்காக வன்முறையைப் பயன்படுத்துவது இயல்பான ஒன்று என்ற மனநிலை தொடர்ந்து கட்டமைக்கப்படுகிறது.

பாலுறவில் சமத்துவமும் ஜனநாயகமும் அற்ற இந்தியா போன்ற நாடுகளில், பெண்களின் உடல் ஆண்களால் கடும் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதில் இந்தப் பாலியல் படங்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. இன்னொரு கொடூரம், இணையத்தில் கொட்டிக் கிடக்கும் பாலியல் படங்களில் கணிசமான பகுதி, பிறருடைய அந்தரங்கங்களை அவர்களுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக எடுக்கப்பட்ட படங்கள். எல்லாவற்றையும்விடத் தலையாய பிரச்சினை சிறு குழந்தைகள் தொடர்பான பாலியல் படங்கள். குழந்தைகள் வாழத் தகுதியற்ற இடமாக நாடுகள் மாற்றப்பட்டுக்கொண்டிருப்பதில் இந்தப் பாலியல் படங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு.

பாலியல் படங்களின் வழியே புழங்கும் பெரும் பணமும் சர்வதேசக் குற்ற வலைப்பின்னலும் இன்று பெரும் அபாயமாக உருவெடுத்திருக்கின்றன. யார் வேண்டுமானாலும், எந்த நேரத்திலும் இந்த அபாயத்துக்குப் பலியாகலாம். பாலியல் படங்கள் மனிதக் கடத்தல், கட்டாய பாலியல் தொழில், குழந்தைகளுக்கு எதிரான வன்முறை, பிறருடைய அந்தரங்கத்தைத் திருடுவது முதலான மிகக் கொடூரமான குற்றங்களோடு தொடர்புடையதாக இருக்கிறபோது, இதன் வழியாகக் கிடைக்கும் பாலியல் இன்பத்தை நாம் வெறும் தனிநபர் சுதந்திரமாக மட்டுமே பார்க்கப்போகிறோமா?

தனிநபர் சுதந்திரம் என்பது, பிற மனிதர்களின் சுதந்திரத்தோடும் பாதுகாப்போடும் கவுரவத்தோடும் தொடர்புடைய ஒன்று இல்லையா? பாலியல் படங்களைத் தடுக்க முடியுமா, முடியாதா என்பதல்ல பிரச்சினை. ஆனால், நான் பாலியல் படங்களைப் பார்க்க மாட்டேன் என்று சொல்வதற்கு ஒழுக்கவியல் சார்ந்த காரணங்களைவிட, மானுட நீதி சார்ந்த காரணங்கள் ஏராளமாக இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாறாதது எதுவோ அதுவே நித்தியமானது

மருத்துவர் இ. சிவசங்கர்

எது நிரந்தரமோ அதுவே நித்தியம். எது வந்ததோ அது போகும். கண்ணுக்குத் தெரிபவை மாறிக் கொண்டிருக்கின்றன. கண்ணுக்குத் தெரியாத ஆதிமூலம் மாற்றம் அற்றது. நிரந்தரமானது. மாற்றமே உலகில் மாறாதது என்பது கண்ணுக்கு தெரிபவைகளுக்கு மட்டுமே உரியதாகும். மாறுகின்றவைகள் நிரந்தரமற்றவை. நிரந்தரமற்றவைகளை நிரந்தரமானவையாகக் கருதுவதே மாயை, அறியாமை ஆகும். மாற்றமில்லாத நித்திய பொருளுடன் ஒன்றித்திருத்தலே அறிவுக்குரியதாகவும் அதுவே மோட்சப் பேறையும் தரவல்லது. இதுவே ஆன்மிக அறிவு எமக்கு புகட்டுகின்ற பாடமாகும்.

ஒரு மாற்றத்தைத் தாருங்கள் என்போர், தாம் இடம்மாறி வந்தவர்கள் என்பதையும் நாளை வேறு நிலைக்குமாறிப் போய்விடுவார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றனர்.

ஏனெனில் மாற்றத்துக்குரியவை தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கும். அது அவர்களின் தவிர்க்கமுடியாத தன்மையாகிவிடும். மாற்றமற்ற பொருள்களே (நபர்களே) நிரந்தர மானவை என்பதை ஆழ்ந்த அறிவு தெளிவிக்கின்றது.

மாற்றத்தை எமது விருப்பமாக எடுத்துக்கொண்டால் பின்னர் நாம் தொடர்ந்து மாறிக்கொண்டேயிருப்பவர்களாக வாழவேண்டியிருக்கும். இது எமது நிலையான நோக்கத்திலிருந்து எம்மைத் திசை மாற்றி, தடம்மாற்றி, இறுதியில் எங்குமே போய்ச்செல்லாத பயணமாகிவிடும். முடிவில் எம்மைச் சீரழித்துக் கொண்டவர்களாவோம். மாயமானுக்குப் பின்னால் போகும் மதியற்ற நிலையாகும் இந்தத் தெரிவு. அறியாமையின் வசப்பட்டவர்களே இதில் வசப்பட்டு அகப்பட்டு அழிந்து போவர்.

அறிவின் நிலைப்பாடு யாதெனில் மாற்றமற்ற நித்திய பொருளுடன் ஒன்றியிருத்தலேயாகும். அதுவே கதி மோட்சத்துக்கு இட்டுச்செல்லும் என்பதாகும். இந்த ஆன்மிக அறிவு உலகியலுக்கும் பொருந்தும். இதுவரை காலமும் மாற்றம் அற்று இருந்தவர்களே இனிவரும் காலங்களிலும் மாற்றம் அற்று இருப்பர் என்பதே உறுதி. அவர்களுடன் இணைந்து பயணிப்பதே இலக்கு நோக்கிய பயணத்துக்கு வழிவகுக்கும். தடம் மாறாத வாகனங்களே இலக்குக்கு எம்மை அழைத்துச் செல்லும்.

மாற்றத்துக்கு அறைகூவல் விடுப்போர் எதைக்கூறி நிற்கின்றனர்?

மாற்றத்தை வேண்டி நிற்போர் வெறுமனே அந்தக் கோசத்தை முன்வைக்கவேண்டிய கட்டாயத் தேவை ஏன் அவர்களுக்கு ஏற்பட்டது என்பதைக் கவனிப்போம். மாற வேண்டியவர்கள் என்று அவர்கள் கருதுவோர் நிரந்தரமாகத் தம்மைவிட்டு வேறு ஒன்றுடன் இணைந்துள்ளார்கள் என்பதை அவர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். மக்கள் நிரந்தரமாக இணைந்திருப்பதன் மீது தவறைக் காட்டமுடியவில்லை. தம் செயல் மீதான நியாயத்தையும் விளக்க முடியவில்லை. எனவேதான் வெறுமனே ஒரு மாற்றம் வேண்டும் என்கின்றனர். நித்தியம் அற்ற மாற்றத்தை தெரிவு செய்யவேண்டிய தேவை பற்றி அவர்கள் தெளிவு படுத்துவதில்லை.

எந்தக் காரணத்தையும் கூறாமல் ஒரு மாற்றத்துக்காக கணவனை அல்லது மனைவியை மாற்றி எம்மை திருமணம் செய்யுங்கள் என்று கேட்டு நிற்பவர்களின் நிலைதான் என்ன? இத்தகையவர்களை யார்தான் திருமணம் செய்து கொள்வர்? ஒரு மாற்றத்துக்காக எந்தப் புத்திசாலியும் உறவை மாற்றிக் கொள்வதில்லை. ஒரு மாற்றத்துக்காக திருமண உறவை மாற்றிக் கொள்வோர் பல தடவை மாறி மாறி பலரைத் திருமணம் செய்து ஈற்றில் ஓய்ந்து போவார்கள்.

ஒரு கட்டத்தில் அவர்கள் விரும்பிய மாற்றத்தை அவர்களே கைவிட்டு போவதையும், பின்னர் தனித்து நடுவீதியில் நிற்பதையுமே காணலாம். ஒரு மாற்றத்துக்காகப் புதிதாக ஒன்றைத் தெரிவு செய்வது அதைத் தெரிவு செய்பவர்களையும் நடு வீதிக்குக் கொண்டு வந்துவிடும் என்பது இதன் மூலம் புலனாகின்றது.

மாற்றம் வேண்டும் என்று நினைப்பவர்கள் எல்லோரும் நித்தியத்தில் கலந்துள்ளவர்களின் நிலையைக் கொஞ்சம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். ஒருவன் நித்தியமான – மாற்றமற்ற – ஆன்மாவில் லயித்து நிற்கும்போது, அவர்களின் அபிலாசைகள் என்ன என்பதை அவர்கள் வெளிப்படுத்தி விட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

# ஓகஸ்ட்-14

ஓரிரு நாள்களல்ல
ஒன்பதாண்டுகள் ஓடிவிட்டன
ஓயவில்லை நம் கண்ணீர்
ஓடுகிறது உதிரமாய்.......

பள்ளி மாணாக்கர் சிதைக்கப்பட்ட
வள்ளிபுன படுகொலை நினைவுகள்
தலைமைத்துவப் பயிற்சியில்
தலைகளை வீழ்த்தியிருந்தது
விமானத் தாக்குதல்

பரீட்சை எடுக்க வேண்டிய வயதில்
பரீட்சித்துப் பார்த்திருந்தது
தேர்வெய்த வேண்டிய உயிர்களை
தரைமட்டமாக்கியது
அறியா வயதில் - உயிர்கள்
அநியாயமாக்கப்பட்டது

அறுபத்தொரு உயிர்கள்
அடியோடு வேரறுந்தது
எஞ்சிய விழுதுகளும்
இன்றோ? நாளையோ?


மாறா வடுக்களாய்
மனதில் ஊன்றிய தடயங்கள்
கொதித்த எண்ணெயில்
கொந்தளிக்கின்றன
கண்டது கனவென்று
கரைத்துவிட முடியாது
நின்றது உயிரென்று
மறந்துவிட முடியாது

பல பண்டிகைக்கு மண்டியிட்ட
காலம் தாண்டி - இன்று
நீங்கா நினைவுகளுக்கு
வற்றிய கண்ணில்
நீர்தேடி.........

விளைந்த வெள்ளை முத்துக்களை
வதைத்தது என்னமோ
சிதைந்த உடல்களை கறை நிறத்தில் ........
எதிர்காலச் சின்னங்களை
சின்னாபின்னமாக்கிய அந்த நாள்
என்று வரைக்கும் நம் மனதில்?

விடை காண இந்தப் புதிரில்
விடை என்னவோ?

விசுவமடு அபிக்குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25
16.08.2015
சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்

# அமெரிக்காவில் கறுப்பு இன வெறுப்பு இன்னும் தீரவில்லை

## பேர் குசன் நகர ஆர்ப்பாட்டத்தில் மீண்டும் சூடு: அவசர காலம் நடைமுறை



கறுப்பு இன வழி வந்தவரான பராக் ஒபாமாவை தங்கள் ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாகவும் அமெரிக்க மக்கள் தெரிவு செய்து கொண்ட போதிலும் அங்கு கறுப்பு இன மக்களுக்கு எதிரான வெள்ளையர்களின் செயற்பாடுகள் அவ்வப்போது ஆங்காங்கே தலைதூக்கவும் செய்கின்றன.

கடந்த ஆண்டு அங்கு மிசோரி மாகாணத்தில் பேர்குசன் நகரின் ஒரு பகுதியான சென்லூயிஸ் பிரிவில் ஆயுதம் தரிக்காத கறுப்பு இன இளைஞர் கொல்லப்பட்ட சம்பவம் கறுப்பு வெள்ளை இன வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் வெளிக்கொண்டு வந்திருந்தன. அந்த நிகழ்வின் நினைவுதினம் அந்தப் பகுதியில் இந்தமுறை கொண்டாடப்பட்ட போது மீண்டும் அங்கு கலவரம் வெடித்து ஊரடங்கும் நடைமுறைக்கு வந்துள்ளது.

அமெரிக்காவில் மிசோரி மாகாணத்தில் பேர்குசன் வீதியில் சென்லூயிஸ் பகுதியில் கறுப்பு இன 18 வயது இளைஞன் ஒருவன் பொலிஸார் சுட்டதனால் கொல்லப்பட்டதன் நினைவு தினத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்த ஆர்ப்பாட்டம் வன்முறையாக வெடித்ததில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அதனால் அந்தப் பகுதியில் அவசரகால நிலைமை பிரகடனம் செய் யப்பட்டது.

பேர்குசன் வீதியில் சென்லூயிஸ் பகுதியிலும் சுற்றாடலிலும் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் துப்பாக்கிச் சூடு நடந்ததாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவில் பொலிஸார் சுட்டதில் ஒருவர் படுகாயம் அடைந்தார் எனவும் பொலிஸார் அறிவித்தனர்.

கடந்த வருடம் இதே காலப் பகுதியில் ஆயுதம் தரிக்காத மைக்கல் பிரவுன் என்ற கறுப்பு இன இளைஞன், வெள்ளையரான பொலிஸ்காரர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதனால் நாடு முழுவதும் கறுப்பு இன மக்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார்கள். அந்த நிகழ்வின் நினைவு தினம் கொண்டாடப்பட்டபோது இந்தமுறையும் ஆர்ப்பாட்டங்கள் முதலில் அமைதியாக ஆரம்பித்து பின்னர் வன்முறையாக மாறின. அதனால் பொலிஸ் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் அரசு அங்கு அவசரகாலத்தைப் பிரகடனப்படுத்தியது. திங்கட்கிழமை ஒன்பதுபேர் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் வீதிகளைத் தடை செய்தனர் என்று கூறப்பட்டது. ஆனால் பின்னர் ஆர்ப்பாட்டங்கள் அமைதியாக நடைபெற்றன.

சமயத் தலைவர்களும் சிவில் உரிமைச் செயற்பாட்டாளர்களும் தொடர்ச்சியாக பல ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். ஒரு ...ட்டத்தில் சென்லூயிஸ் நீதிமன்றத்தில் நடந்த போராட்ட ஆர்ப்பாட்டத்தின்போது 60பேர் கைது செய்யப்பட்டார்கள். பின்னர் போக்குவரத்து அதிகரித்த சமயம் வீதிகளில் தடைகளை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் டசின் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று மனித உரிமை செயற்பாட்டாளர் ஒருவர் கூறினார். இளைஞன் பிரவுன் வாழ்ந்த பகுதியைச் சேர்ந்த 17 வயது ஆர்ப்பாட்டப் பெண் ஒருவர் கூறுகையில், தங்கள் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் பொலிஸாரின் நடத்தையால்தான் மோச மடைந்தன என்றார். "எங்களை அவர்கள் கொலை செய்துவிட்டு தப்பிவிடுகிறார்கள். இது பைத்தியக்காரத் தனமாக இருக்கிறது" என்றார்.

### அமைதியைக் குலைக்க வெள்ளையர் முயற்சி

மிசோரி, பேர்குசன் பகுதியில் கறுப்பு இன மக்கள் தங்களில் ஆயுதம் ஏந்தாத ஓர் இளைஞர் கடந்த வருடம் வெள்ளை இன பொலிஸ்காரர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை நினைவுகூர்ந்து நடத்திய ஆர்ப்பாட்டங்கள் கலவரமாக மாறி பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் அவசரகாலப் பிரகடனம் செய்தும் நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்கும் நிலையில் அந்தப் பகுதியில் நான்கு வெள்ளை இனத்தவர்கள் இராணுவப் பாணியில் றைபிள்களும் வேறு ஆயுதங்களும் ஏந்தியபடி நடமாடியிருப்பது கலவர நிலையை மேலும் மோசமடையச் செய்திருப்பதாக அதிகாரிகள் கூறினார்கள். இது கலவரத்தை மேலும் தூண்டிவிடும் செயற்பாடு என்று பொலிஸார் கண்டித்தனர்.

சத்தியத்தின் காவலர்கள் (Oath keepers) என்று அவர்கள் தங்களை அழைத்துக் கொண்டனர். கடந்த செவ்வாய்க்கிழமை விடியற்காலையில் அவர்கள் பேர்குசன் வீதிகளில் காணப்பட்டனர். இவர்கள் இன்னாள் மற்றும் முன்னாள் இராணுவம் மற்றும்பொலிஸ் தரப்புக்களைச் சேர்ந்த பக்கம் சாரா அமைப்பு ஒன்றின் உறுப்பினர்கள் என்று விளக்கம் அளித்துள்ளனர். தாம் அமெரிக்க அரசமைப்பைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டவர்கள் என்றும் கூறிக்கொண்டனர்.

பேர்குசன் வீதியில் அவர்கள் ஊடகவியலாளர்களிடம் பேசியபோது, தாங்கள் ஊடக நிறுவனம் ஒன்றைப் பாதுகாக்க வந்திருக்கிறார்கள் எனவும் கூறிக்கொண்டார்கள். கறுப்பு இன மக்களே அதிகமாக வாழ்கின்ற பகுதியில் அவர்கள் தோன்றியதால் உடனடியாகப் பரபரப்பு ஏற்பட்டது. பலர் கவனத்தையும் ஈர்த்தது.

சிவில் உரிமை நிறுவனமான தெற்கு ஏழ்மை மையம் (Southern Poverty Centre) கூறுகையில், சத்தியத்தின் காவலர்கள் என்ற அமைப்பு அரசுக்கு எதிரான ஒரு பயங்கரமான அமைப்பு என்று வர்ணித்துள்ளது. அவர்கள் பேர்குசன் பகுதிக்கு வந்தமையை சென்லூயிஸ் பகுதி பொலிஸ் அதிபர் பெல்மர் கடுமையாகக் கண்டித்துள்ளார். அவர்கள் சட்டத்தை மீறியுள்ளார்களா என்பது ஆராயப்படும் என்றும் அவர் கூறினார்.

தாங்கள் ஆயுதம் வைத்திருப்பதற்கு உரிமம் பெற்றிருக்கின்றனர் எனவும் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார்கள். 2014ஆம் ஆண்டு அரசமைப்புத் திருத்தம் ஒன்றின்படி உரிமம் பெற்ற சுடுகலன்களை எவரும் கொண்டு செல்ல முடியும். ஆனால் அவைகளை அச்சுறுத்தும் வகையில் பயன்படுத்தலாகாது என்று சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள்.

### வடதென்கொரிய எல்லையில் முறுகல்

தென்கொரியாவின் வடகொரியாவுடனான எல்லையில் நிலக்கண்ணி வெடியொன்று வெடித்ததையடுத்து அந்தப் பகுதியில் கெடுபிடி நிலையொன்று தோன்றியுள்ளது. தென்கொரியா, குண்டு வெடிப்புக்கு வட கொரியாவை குற்றம் சாட்டியுள்ளது. இந்தச் சம்பவத்துக்கு வடகொரியா மன்னிப்புக் கோர வேண்டும் என்று சியோலில் உள்ள அதிபர் மாளிகை செய்தியொன்று கூறியது.

வடகொரிய இராணுவத்தினர் எல்லைப் பகுதியில் திருட்டுத்தனமாக ஊடுருவி நிலக்கண்ணிகளைப் புதைத்து விடுகிறார்கள் என்று தெரிவித்துள்ள தென்கொரிய இராணுவத்தினர், கடந்த செவ்வாயன்று சில தென்கொரியப் படையினர் நடந்து செல்கையில் கண்ணி வெடியில் சிக்கி, ஒருவரின் கால்கள் இரண்டு வெட்டி அகற்றப்பட நேர்ந்தது என்று கூறினர். இன்னொருவ[illegible] அகற்றப்பட்டது என்றும் கூறப்பட்டது. சம்பவத்தையடுத்து தென்கொரிய எல்லைப் பகுதியிலிருந்து ஒலிபெருக்கிகள் மூலம் வடகொரியாவுக்கு எல்லையில் பதற்றத்தைத் தோற்றுவிப்பதாக கடும் தொனியில் அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டன.




### ஈரானுடனான அணு ஒப்பந்தம் செயற்பட தொடங்கினால் ஆதரவுபெருகும்: ஒபாமா

ஈரானுடன் அணுசக்தி பாவனை தொடர்பாக செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் குறித்து அமெரிக்காவிலும் வேறு நாடுகளிலும் சந்தேகங்களும் எதிர்ப்புக்களும் தோன்றியுள்ள நிலையில், அந்த ஒப்பந்தம் செயற்படத் தொடங்கியதும் எதிர்ப்புக்கள் மறைந்து விடும், மக்கள் பாராட்டத் தொடங்கி விடுவார்கள் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கருதுகிறார்.

ஒப்பந்தம் செயற்படத் தொடங்கியதும் மக்களின் பாராட்டு அதிகரிக்கும் என்று ஒபாமா பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார். ஒப்பந்தம் முறையாகச் செயற்படத் தொடங்கியதும் ஈரான் அதன் கருத்துப்படி தன் செயல்களை முன்னெடுப்பதை மக்கள் உணர்வார்கள். அப்போது அனைவரின் போக்கிலும் மாற்றம் தோன்றும் என்று ஒபாமா கூறினார். கடந்த மாதம் உலக நாடுகள் ஈரானுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் ஐ.நாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் அதனை ஏற்றுக் கொள்வதா நிராகரிப்பதா என்ற வகையில் அமெரிக்க காங்கிரஸ் சபையில் அடுத்த மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கின்றது.

காங்கிரஸ் சபையிலுள்ள பல குடியரசுப் பிரதிநிதிகளும் சில ஜனநாயகக் கட்சிகளின் பிரபலமான உறுப்பினர்களும் தாங்கள் ஒப்பந்தத்துக்கு எதிராக வாக்களிக்கப் போகின்றனர் என்று அறிவித்திருக்கிறார்கள்.

### சமஷ்டிக்கு எதிராக நேபாளத்தில் போராட்டம்.

நேபாளத்தில் சமஷ்டி ஆட்சி ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்புக்கு எதிராக அந்த நாட்டின் மேற்குப் பகுதியில் ஆர்ப்பாட்டங்களும் கலவரங்களும் தொடர்ந்து நடைபெற்றுள்ளன.

புதிய அரசமைப்பின்படி நாட்டின் மத்திய மேற்குப் பகுதியை இரண்டு மாகாணங்களாக பிரித்து சமஷ்டி அமைப்பை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதனால் மேற்குப் பிரதேசத்தில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றதை அடுத்து கலவரங்கள் மூண்டன. பொலிஸ் சுட்டதில் இரண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து நிலைமை மேலும் மோசமடைந்ததால் அங்கு மேலதிகப் பொலிஸ் படைகள் அனுப்பப்பட்டுள்ளன.

அங்குள்ள சுர்கெட் என்ற நகரில் உள்ளூர் சட்டசபை உறுப்பினர் ஒருவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து நிலைமையை சமாளிக்க பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

### பௌத்த கோயிலில் ஆபாச நடனம்

தாய்லாந்தில் பேர்போன பௌத்த கோயில் ஒன்றில் ஆபாச நடனம் ஆடிப் படம் எடுத்த இரண்டு பெண்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. குட்டையான சிவப்பு உடைகளையும் குதி உயர்ந்த காலணிகளையும் அணிந்து கொண்டு புனிதமான வட்சயிவத்தனராம என்ற அந்த கோயில் உள்சுற்றுப் பிரகாரத்தில் இந்தப் பெண்கள் நடனமாடி படம் எடுத்தது அதிகாரிகளை ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளது. இந்த புகழ் பெற்ற தாய்லாந்து பௌத்த கோயில் யுனெஸ்கோவின் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித இடங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகும்.

தாய்லாந்தில் ஆயுத்தயா என்ற பகுதியில் இந்தப் புனித தலம் அமைந்துள்ளது. அது அந்த நாட்டில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்து வரும் இடங்களில் ஒன்றாகவும் கருதப்படு கின்றது. அந்த நகரின் உதவி ஆளுநர் [illegible] பிரசோங் கூறுகையில், இந்தப் பெண்கள் தலத்தின் புனிதத் தன்மையைக் கெடுத்துவிட்டார்கள் என்றார்.

### முல்லா ஒமார் இறந்தது எங்கே?

ஆப்கான் தலிபான்களின் தலைவர் முல்லா ஒமார் எங்கே இறந்தார் என்பதில் ஆப்கான், பாகிஸ்தான் அரசுகளுக்கிடையில் கருத்து முரண்பாடு தோன்றியுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலிபான் அமைப்பின் தலைவர் முல்லா ஒமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பாகிஸ்தானிலுள்ள கராச்சியில் இறந்தார் என்று கடந்த மாதம் ஆப்கானிஸ்தான் அறிவித்திருக்கின்றது. ஆனால் பாகிஸ்தான் அமைச்சர் ஒருவர் இப்போது அதை மறுத்துள்ளார். கடந்த வாரம் வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் தேசிய சபையில் பேசுகையில், பாதுகாப்பு அமைச்சர் காவாஜா மொகமட் அசிப், தலிபான் தலைவர் முல்லா ஒமார் பாகிஸ்தானில் இறக்கவுமில்லை அவர் இங்கு அடக்கம் செய்யப்படவுமில்லை என்று கூறினார். ஆப்கான் தலிபான் தலைவர் குவெட்டாவில் வாழவுமில்லை, கராச்சியில் இறக்கவுமில்லை என்றார் அமைச்சர். தலிபான் தலைமைத்துவம் தொடர்பாக பாகிஸ்தான் சர்ச்சையில் இறங்க விரும்பவில்லை என்றும் அவர் கூறினார்.

முல்லா ஒமார் கராச்சி மருத்துவமனை எதிலும் சிகிச்சை பெறவில்லை என்று கூறிய அமைச்சர், ஒமாரின் குடும்ப உறுப்பினர்களின் கூற்றுப்படி அவர் ஆப்கானிஸ்தானில் தான் இறந்துள்ளார், அங்கேதான் அடக்கமும் செய்யப்பட்டுள்ளார் என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைக்கோடி சிறுவனுக்கும் கிடைக்க வேண்டும்

# கூகுள்

## தலைமை அதிகாரி சுந்தர் பிச்சை

கூகுள் நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரி, தமிழ் நாட்டின் தலைநகர் சென்னையைச் சேர்ந்த சுந்தர் பிச்சை. கூகுள் க்ரோம், கூகுள் டிரைவ், ஜி-மெயில் ஆப்ஸ், கூகுள் மேப்ஸ் ஆகியவற்றின் தயாரிப்பில் முக்கிய பங்கு வகித்த சுந்தர் பிச்சை, கூகுளின் தலைமைப் பீடத்தில் அமர்ந்ததன் மூலம், ஒட்டுமொத்த இந்தியாவின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறார்.

"எப்போதுமே ஒரு தரப்பினருக்கு மட்டுமான தொழில்நுட்பத்தை உருவாக்குவதல்ல கூகுளின் வேலை. கடைக்கோடியில் வசிக்கும் கிராமத்துச் சிறுவனுக்கும் சரி, ஹார்வர்டு பேராசிரியருக்கும் சரி, ஒரே மாதிரிதான் கூகுள் தேடுபொறி வேலை செய்யும். இதைத்தான் கூகுள் தொடர்ந்து செய்யவேண்டும் என்று நினைக்கிறேன். சமநிலையைச் சாத்தியப்படுத்தும் சக்தியாகவே கூகுளை நான் பார்க்கிறேன்" என்கிறார் பிச்சை.

ஒட்டுமொத்த உலகமும் தன்னுணர் செல்பேசிகளின் (ஸ்மார்ட் போன்) சூழ் உலகமாக மாறிவரும் சூழலில் – சுந்தர் பிச்சையின் யுகத்தில் கூகுளின் வணிக இலக்குகளிலும் தன்னுணர் பேசிகளுக்கு முக்கிய இடம் உண்டு – தொழில்நுட்பம், மனித வாழ்க்கை இரண்டுக்கும் இடையேயான எல்லைகள் எது என்பதைப் பற்றி மிகுந்த சுவாரஸ்யமாகப் பேசுகிறார் சுந்தர் பிச்சை.

*நாம் தன்னுணர் செல்பேசிகளின் சூழ் வாழ்க்கையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறோமா, அதாவது மொபைல் போன்களின் மோகம் பெருகியுள்ளதா?*

எனக்கு அப்படித் தோன்றவில்லை. நிச்சயமாக மனிதர்கள் வாழ்க்கையில் பேசிகள் முக்கிய இடம் பிடித்துள்ளன. அதனால், மக்கள் அதிக அளவில் பயனடைகிறார்கள். அதேபோல இடைஞ்சலும் அதிகரித்துள்ளது. ஆனால், இது ஆரம்ப காலக்கட்டத்தின் பலவீனம்தான். மிஞ்சிமிஞ்சிப்போனால் கடந்த ஐந்து, ஆறு வருடங்களாகத்தானே செல்லிடப்பேசிகளைப் பயன்படுத்துகிறோம். சொல்லப்போனால், மக்கள் தினசரி ஆறு மணி நேரம்வரை தொலைக்காட்சி பார்க்கின்றனர். அந்த மோகம் பேசிகளின் பக்கம் திரும்பியுள்ளது, அவ்வளவே!

*பயனாளரை மையப்படுத்திய சாதனங்கள் என நீங்கள் அடிக்கடி சொல்வதன் அர்த்தம் என்ன?*

எதை உருவாக்கினாலும் அதன் இலக்கு, பயனாளர்களின் சிக்கலுக்குத் தீர்வளித்து, வாழ்வை மேம்படுத்தி, மகிழ்ச்சி அளிக்க வேண்டும் என்பதே. இன்னும் சரியாகச் சொல்வதானால், கணவன் அல்லது மனைவியின் அழைப்பையும் பிறருடைய அழைப்பையும் வேறுபடுத்திக்காட்டும் அளவுக்குத் தொழில்நுட்பம் நுணுக்கமாக வடிவமைக்கப்பட வேண்டும் என முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

*பேசிகள் நமது வாழ்வை எளிமையாக்கியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. இருந்தாலும், இரவு உணவு சாப்பிடும் போதுகூட மின்னஞ்சலைப் பார்க்கும் பழக்கம் வந்துவிட்டதே, எந்த நேரமும் பேசிகளில் மூழ்கிக் கிடப்பதை மாற்ற கூகுள் ஏதேனும் முயற்சித்துள்ளதா?*

தொழில்நுட்பத்துக்குச் சிறிதும் தொடர்பற்ற கேள்வி இது. சாப்பிடும்போது எதற்காகக் குழந்தைகள் செல்லிடப்பேசிகளைப் பயன்படுத்த வேண்டும், எனக்குப் புரியவில்லை. குழந்தைகள் வளர்ப்பில் உள்ள சிக்கல் இது.

*நான் கேட்டது குழந்தைகளைப் பற்றி அல்ல பெற்றோர்களைப் பற்றி?*

பெற்றோர்கள் இரவு உணவின்போது தொலைக்காட்சி பார்க்கிறார்களே!

*ஒரு சந்திப்பு நடைபெறும்போது எத்தனை நபர்கள் பேசிகளைத் துழாவுகிறார்கள் என்பதை வைத்துக் கூட்டம் நடத்துபவரின் முக்கியத்துவத்தைச் சொல்லிவிடலாம் என்பார்கள். கூகுள் நிறுவனத்தின் உயர் அதிகாரியான நீங்கள், கூட்டங்கள் நடத்தும்போது பங்கேற்பாளர்கள் பேசிகளைத் துழாவக் கண்டதுண்டா?*

பேசிகள் வரத்துக்கு முன்பு அமெரிக்கக் 'கார்ப்பரேட்' நிறுவன ஊழியர்கள் கூட்டங்களின்போது மடிக்கணினிகளைத் துழாவுவது வழக்கம். அப்படி முக்கியக் கூட்டங்களுக்கு இடையில் மடிக் கணினியும் கையுமாக இருப்பவர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். இது பயன்படுத்தும் விதத்தைப் பொருத்ததே. நான் பகல் நேரங்களில் மின்னஞ்சல் அனுப்பவே மாட்டேன். நான் சதாவதானியும் அல்லன். கூட்டத்தில் சுறுசுறுப்பாகக் கலந்துகொள்ளும் அதேவேளையில், மின்னஞ்சலும் அனுப்பும் திறமை எனக்குக் கிடையாது. ஆனால், சிலர் இரண்டையும் சாதுரியமாகக் கையாள்கிறார்கள்.

*இரண்டு வருடங்களுக்கு முன்பு நீங்கள் முதல் அன்ட்ராய்டு வோட்ச் (கைக்கடிகாரம்) அறிமுகப்படுத்தியபோது, நீங்கள் இரவு உணவருந்தும்போதுகூட பேசியைப் பயன்படுத்தாமலேயே இந்தக் கடிகாரம் மூலம் மின்னஞ்சல் பார்க்கலாம் என விளம்பரம் கொடுத்தீர்களே?*

உங்களுக்குத் தேவைப்படும்போது தகவல்கள் கிடைக்கச் செய்வதுதான் என் நோக்கம்; இடைஞ்சல் தருவது அல்ல. உதாரணத்துக்கு, நீங்கள் வாகனம் ஓட்டும்போது பேசியைப் பயன்படுத்துவது அபாயகரமானது. அதற்காகத்தான் அண்ட்ராய்டு ஓட்டோ உருவாக்கினோம். இதன்மூலம் உங்கள் பேசியைத் தொடாமலேயே அழைப்புக்குப் பதிலளிக்கலாம். தேடும் தகவல்களைப் பெறலாம். இப்படி உங்களுக்குத் தேவையான பொருளைச் சரியான நேரத்தில் கொடுக்க நாங்கள் முயல்கிறோம். இன்றைய பயனாளர்களுக்குப் பல சுமைகள் உள்ளன. அந்தச் சுமைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

*எல்லாவற்றுக்கும் தொழில்நுட்பத்தை மக்கள் சார்ந்திருக்க வேண்டும் என்பது உங்கள் எண்ணமா? பித்துப் பிடித்தவர் போல எந்த நேரமும் மக்கள் மின்னஞ்சலைத் திறந்து பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். விருப்பப்பட்டுப் பார்ப்பது வேறு, அலுவலக உயர் அதிகாரிகளிடமிருந்து தகவல் வந்திருக்குமோ எனப் பதற்றத்தோடு பார்க்கும் காலம் வந்துவிட்டதே?*

ஜி-மெயில் வழங்கும் ப்ரயாரிட்டி இன்பாக்ஸ் ஆப்ஷனைக் (முன்னுரிமைப் பட்டியல்) கிளிக் செய்வதன் மூலம் முக்கிய மின்னஞ்சல்களை மட்டும் நீங்கள் பார்த்துக் கொள்ளலாமே! மோசமான பயன்பாடும் இருக்கத்தான் செய்கின்றன, மறுப்பதற்கில்லை. எதுவாக இருந்தாலும், மனிதர்களின் அறிவுத் திறன், விருப்பம், பயன்பாடு என அத்தனையும் மனதில்கொண்டுதான் தரத்தை மேம்படுத்த நாங்கள் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கிறோம்.

*கூகுள் காலண்டர் போன்ற அம்சங்கள் இருப்பதால் யாரும், எதையும் நினைவில் வைக்க முயற்சிப்பதில்லை. இப்படி எதையும் பொருட்படுத்தாத மக்களை உருவாக்க நினைக்கிறீர்களா?*

எவ்வளவு சிறப்பான சாதனமாக இருந்தாலும், சில வரையறைகள் வேண்டும். என் உடல் ஆரோக்கியத்தைப் பராமரிக்க ஃபிட்னஸ் ஆப்ஸ் உதவ முடியாது. அதேநேரம், என் குழந்தையின் பிறந்த நாளை நான் மறக்க நேரிட்டால், என்னைப் பார்த்து அலற ஒரு பேசி வேண்டும் என நான் நினைக்கிறேன்.

*எதற்காக பேசியைக் கையில் எடுத்தோம் என்பதே தெரியாமல் போனைச் சட்டெனக் காதில் வைத்ததுண்டா?*

பல முறை! தேவையே இன்றிப் பழக்க தோஷத்தில் பேசியை எடுப்பதுண்டு. காரணமே இல்லாமல் அதை வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பதும் உண்டு.

*வீட்டைச் சுற்றிச் சுற்றி நடந்தபடி பேசியில் கதைக்கக்கூடாது என நான்முடிவெடுத்துள்ளேன். இது [illegible] நேரம் என நீங்கள் [illegible]*

கூகுள் ஐ / ஓ தொடங்குவதற்கு முந்தைய நாள் இரவு, தலைமை உரை நிகழ்த்துவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பு, எங்கள் குழுவினர் பேசிகளை எல்லாம் ஒரு கூடையில் போட்டுவிட்டு எல்லோரும் மகிழ்ச்சியாக இரவு உணவு சாப்பிட்டோம்.

*பின்னணியில் கரைந்து போகும் தொழில்நுட்பத்தைத் தயாரிக்கிறோம் என நீங்களும் கூகுள் துணை நிறுவனர் லாரி பேஜும் சொல்வதன் பொருள் என்ன?*

தொழில்நுட்பத்தைப் பயனாளிகளிடம் கொண்டு சேர்ப்பதல்ல எங்கள் நோக்கம். அதை ஒரு அழகிய அனுபவமாக மாற்றுவதே! 'க்ரோம்' உருவாக்கியபோது கூடுமானவரை எந்தச் சிரமமும் இன்றிப் பயனாளிகள் இலகுவாகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தச் செயல்பட்டோம். நீங்கள் தேடும் தகவலைச் சரியாகக் கொண்டுவந்து சேர்க்க கூகுள் சர்ச்சை மிகக்கடினமான தொழில்நுட்பத்தைப் பிரயோகிக்கிறது. ஆனால், உங்களுக்குத் தேவை தகவல் மட்டுமே. ஆகையால், கரடுமுரடான தொழில்நுட்பம் பின்னணியில் மறைந்துபோகத்தான் விரும்புவீர்கள்.

*ஆனால், சில நேரங்களில் அனுபவமே இல்லாமல் போகும் நிலை உண்டாகின்றனவே?*

ஒரு நல்ல சாதனத்தை உருவாக்கும்போது இப்படி நிகழத்தான் செய்யும். ஏற்கெனவே சொன்ன மாதிரி, என் வாழ்வின் முக்கியத் தருணத்தை நான் இழக்க நேரிடும் போது என் போன் என்னைப் பார்த்து அலற வேண்டும் என நான் நினைப்பேன்.

ஒருவேளை, நான் முக்கிய வேலையில் ஈடுபட்டிருக்கும் போது பேசில் வேறு தகவல் வந்தால் புறக்கணிப்பேன், அவ்வளவுதான்! என்னைப் பொறுத்தவரை பயனாளர்களின் தேவையைச் சரியாகப் பூர்த்திசெய்ய வேண்டும். அது ஒரு தொடர் முயற்சி.

அந்தப் பயணத்தில் நாங்கள் உருவாக்கிய தொழில்நுட்பம் வழிமறிக்காமல் கண் காணாமல் மறைந்து போவதும் அவசியமாகிறது.

மூலம்:
தி நியூயோர்க் டைம்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org